திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஐந்திலக்கணக் கோட்பாடுகள்

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (Ph.D) பட்டத்திற்குப்
பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

ர. அதிசயம்

(பதிவு எண்.1311)

நெறியாளர்

பேராசிரியர் முனைவர் பீ.கா.நபிசாள் பீவி

தமிழ்த்துறை

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் 'A' மதிப்புப் பெற்றது)

காரைக்குடி - 630 003

தமிழ்நாடு

இந்தியா

ஜனவரி - 2010



முனைவர் பீ.கா.நபீசாள்பீவி,
பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்,
தமிழ்த்துறை,
தாசீம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி,
கீழக்கரை.

நாள்: 21-01-10

நெறியாளர் சான்றிதழ்

"திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஐந்திலக்கணக் கோட்பாடுகள்" என்னும் தலைப்பில் **ர.அதிசயம்** அவர்கள் தமிழ் முனைவர் பட்டத்திற்காகச் செய்த இந்த ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப் பெற்றது என்றும், இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

22/1/2010

துறைத் தலைவர்
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 630 003

(முனைவர் பீ.கா.நபீசாள்பீவி)

நெறியாளர்

முனைவர் : நபீசாள் பீவி,
எம்.ஏ. எம்.எட். எம்.பில். பி.எச்.டி.,
தலைவர் : தமிழ்த்துறை,
தாசிம் பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி
கீழக்கரை - 623 517

ர.அதிசயம்,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 3.

நாள்: 22-01-10

ஆய்வாளர் உறுதிமொழி

“திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஐந்திலக்கணக் கோட்பாடுகள்” என்னும் தலைப்பில் தமிழ் முனைவர் பட்டத்திற்காக எழுதப்பெற்ற இவ்வாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதாகும். இவ்வாய்வேடு இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்று உறுதியளிக்கிறேன்.

(ர.அதிசயம்)
ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம்

முனைவர் பீ.கா.நபீசாள்பீவி,
பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்,
தமிழ்த்துறை,
தாசீம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி,
கீழக்கரை.

முனைவர் : நபீசாள் பீவி,
எம்.ஏ. எம்.எட். எம்.பில். பி.எச்.டி,
தலைவர் : தமிழ்த்துறை,
தாஸிம் பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி
கீழக்கரை - 623 617

மனமார்ந்த நன்றி

1. **சோ.பா.ரெங்கநாதன்**, B.E., *தாளாளர்,*
   சோனை மீனாள் கலை அறிவியல் கல்லூரி, முதுகுளத்தூர்.

2. **பேரா.முனைவர் மு.பாண்டி,**
   கலைப்புல முதன்மையர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர்,
   அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி - 3.

3. **பேரா.முனைவர் பீ.கா.நபீசாள் பீவி,**
   தமிழ்த்துறைத்தலைவர்,
   தாசீம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி, கீழக்கரை.

4. *அம்மா* **ர.ஸ்டெல்லா**, *மனைவி* **அ.ஜெயா**, *சித்தப்பா* **ரா.எசேக்கியேல்**,
   தம்பி **ர.ஜேசுதாஸ்** *(காவல்துறை சார்பு ஆய்வாளர்)* - **மலர்ச்செல்வி**,
   அன்புக் குழந்தைகள் **இலக்கியா, அஜய், சபீன்** *மற்றும் உறவினர்கள்.*

5. *சோனை மீனாள் கலை அறிவியல் கல்லூரிப் பேராசிரியர்கள்,*
   முதுகுளத்தூர்.

6. *நிதிஷ்பிரபா கம்ப்யூட்டர்ஸ், காரைக்குடி-3.*

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	-	அகத்திணையியல்
இடை.	-	இடையியல்
இளம்.	-	இளம்பூரணர்
உயிர்.	-	உயிர் மயங்கியல்
உரி.	-	உரியியல்
உயிர்.	-	உயிரீற்றுப் புணரியியல்
உவம.	-	உவமயியல்
எச்சம்.	-	எச்சவியல்
எழுத்து.	-	எழுத்ததிகாரம்
காப்பியர்.	-	தொல்காப்பியர்
கிளவி.	-	கிளவியாக்கம்
கு.எண்.	-	குறள் எண்
குற்று.	-	குற்றியலுகரப் புணரியியல்
சூத்.	-	சூத்திரம்
செய்.	-	செய்யுள்
சொல்.	-	சொல்லதிகாரம்
தண்டி.	-	தண்டியலங்காரம்
தொல்.	-	தொல்காப்பியம்
நன்.	-	நன்னூல்
நூ.	-	நூற்பா
நேமி.	-	நேமிநாதம்
ப.	-	பக்கம்

பக்.	-	பக்கங்கள்
பதவி.	-	பதவியியல்
புள்ளி.	-	புள்ளிமயங்கியல்
புறம்.	-	புறத்திணையியல்
பு.வெ.மா.	-	புறப்பொருள் வெண்பாமாலை
பெருந்.	-	பெருந்தொகை
பொருள்.	-	பொருளதிகாரம்
மாறன்.	-	மாறனலங்காரம்
மெய்.	-	மெய்யீற்றுப் புணரியியல்
முத்து.	-	முத்துவீரியம்
வினை.	-	வினையியல்
வீரம்.	-	வீரசோழியம்
வேற்.	-	வேற்றுமை மயங்கியல்
யாப்பு.	-	யாப்பருங்கலக்காரிகை

பொருளடக்கம்

முன்னுரை

முன்னுரை

"ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தினோடு பகர்ந்தபின் - போயொருத்தர்
வாய்கேட்க நூலிலுள்ளவோ மன்னுதமிழ் புலவ
ராய்க் கேட்க வீற்றிருக்கலாம்"

என்று திருவள்ளுவமாலை பாராட்டுவதுபோல் திருக்குறளானது தமிழுக்கும் தமிழருக்கும் பெருமையும் வளமையும் சேர்த்த நூல். தமிழர்களின் வாழ்வியல் உண்மைகளை உணர்த்திய நூல். தன் தோற்றத்தால் தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்த்த நூல். இதனை உணர்ந்த பாரதியார்,

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

எனப் பாராட்டுகிறார்.

இத்தகைய சிறப்புடைய திருக்குறளுக்குப் பல்வேறு அறிஞர்களின் உரைகள் காணப்பட்டாலும், பரிமேலழகர் உரையில் உள்ள இலக்கணக் கூறுகளை மட்டும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வுத் தலைப்பு

திருக்குறளுக்குக் காலந்தோறும் பல்வேறு உரைகள் தோன்றிப் பல்கிப் பெருகி வருகின்றன. இவற்றில் பரிமேலழகர் உரையில் மட்டுமே பல்வேறு இலக்கணக் குறிப்புகளும், இலக்கண விளக்கங்களும் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் இலக்கண

நூல் கொண்டு விளக்கும் முகமாக '**திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஐந்திலக்கணக் கோட்பாடுகள்**' (Thirukkural Parimelazhakar Uraiyil Ainthilakkana Kodpadukal) என்னும் தலைப்பினை இவ்வாய்வுக்கு அமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

திருக்குறள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது எனக் கொண்டால், முதல் ஆயிரம் ஆண்டுகளில் இதற்கு உரை எழுதப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இல்லையென தெளிவுபடக் கூறலாம். கி.பி. 10ல் இருந்து 13-ஆம் நூற்றாண்டுக்குள் இன்றைய வழக்கிலுள்க பழைய உரைகள் எழுதப்பட்டன எனக் கொண்டால், இன்று நமக்குக் கிடைக்கின்ற திருக்குறள் உரைநூல்களுள் காலத்தால் முற்பட்டவற்றை 'பழைய உரைகள்', 'மரபுரைகள்' எனலாம்.

'தருமர் மணக்குடவர் தாமதத்தர் நச்சர்
பருதி பரிமேலழகர் - திருமலையார்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லை உரைசெய்தார் இவர்'

என்ற பாடல் வரிகள் மூலம் பழைய உரையாசிரியர்கள் பதின்மரை அறியமுடிகிறது. இப்பதின்மரில் மணக்குடவர், காலிங்கர், பரிப்பெருமாள், பருதியார், பரிமேழகர் ஆகிய ஐவரின் உரைநூல்கள் மட்டும் இன்று நமக்குக் கிடைக்கின்றன. இவற்றுள் காலத்தால் முந்தியது மணக்குடவர் உரை என்றும் காலத்தால்

பிந்தியது பரிமேழகர் உரை என்றும் கொள்வது ஆய்வாளர்கள் முடிவாகும்.

பழைய உரையாசிரியர்கள் பதின்மர் என்றாலும் பின்வந்தவர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. இவர்களின் உரைகளுள் பொருள் விளங்கும் வகையாலும், உரைகூறும் நயத்தாலும், மிகப்பலரால் அறியப்பட்டதும், எல்லோராலும் புகழப்படுவதும் பரிமேலழகர் உரையேயாகும்.

இப்படிப்பட்ட சிறப்புடைய பரிமேழகர் உரைக்குமுன் தோன்றிய ஒன்பது உரைகளும் ஐயுறவுடன் நையுற்று இருந்தன என்பதை,

"திறந்தெரிக் துரைத்த செவ்விமுப் பாலுக்கோர்
உரையின்றி ஒன்பது சென்றும்
ஐயுறவாக நையுறும் காலை"

என்ற பாடல் விளக்குகிறது.

பரிமேலழகர் உரையில் காணப்படும் பால்விளக்கம், இயல் விளக்கம், அதிகாரப் பெயர் விளக்கம், அதிகாரவைப்பு முறை விளக்கம், உவமை கூறி விளக்குதல், உரைவேறுபாடு காட்டல், பிறர் உரை மறுத்தல், சரியாயின் ஏற்றல், இலக்கண விளக்கம், கூறித்தம் கருத்தை இலக்கிய எடுத்துக்காட்டுடன் விளக்குதல், வடநூல் ஒப்புமை காட்டல் போன்றவை தனிச்சிறப்பாகும். இச்சிறப்பினை,

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ - நூலில்
பரித்தவுரை எல்லாம் பரிமே லழகன்
தெரித்த உரையாமோ தெளி"

என்ற பழைய வெண்பா விளக்குகிறது.

பரிமேலழகர் திருக்குறள் என்னும் இலக்கியத்திற்கு உரை எழுதினாலும்அவர்தம் உரையில் பல இடங்களில் இலக்கணக் குறிப்புகளும், இலக்கண விளக்கங்களும், இலக்கணத்தை நுணுகிப் பார்க்கும் அணுகுமுறையும் காணப்படுகின்றன. இவர் சுட்டுகின்ற இலக்கணக் குறிப்புகளை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, பிற இலக்கணக் கூறுகள் எனப் பகுத்து அவற்றை இலக்கண நூல்களின் வாயிலாக விளக்கி ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

ஆய்வு எல்லை

திருக்குறள் முழுமையும் இவ்வாய்வின் எல்லையாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்குப் பரிமேலழகரின் இலக்கணக் கோட்பாடுகள் ஆய்வுக்களமாகும்.

ஆய்வு அணுகுமுறை

பரிமேலழகர் கூறுகின்ற இலக்கணக் கூறுகள் அனைத்தையும் பகுத்துக் காண்பதால் பகுப்பாய்வு அணுகுமுறையும் (Analytical Approach), பரிமேலழகரின் இலக்கணக் கோட்பாடுகளை விளக்குமிடத்து விளக்கமுறை அணுகுமுறையும்

(Descriptive Approach), ஏற்புடைய இடங்களில் பரிமேலழகர் உரையைப்பிற உரைகளுடன் ஒப்பிட்டுக் காணும் முகமாக ஒப்பியல் அணுகுமுறையும் (Comparative Approach), பரிமேலழகருக்கு முற்பட்ட, பிற்பட்ட இலக்கண நூல்களைக் கண்டறியும் முறையில் வரலாற்றில் அணுகுமுறையும் (Historical Approach) இவ்வாய்விற்குரிய அணுகுமுறைகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

ஆய்விற்கான சான்றாதாரங்கள்

இந்த ஆய்விற்கு முதன்மைச் சான்றாதாரம், துணைமைச் சான்றாதாரம் என்ற இருநிலைச் சான்றாதாரங்கள் பின்பற்றப்படுகிறது.

முதன்மைச் சான்றாதாரம்

திருக்குறள் பரிமேலழகர் உரையில் உள்ள இலக்கணம் தொடர்பான கருத்துக்கள் மட்டுமே முதன்மைச் சான்றாக் கொள்ளப்பெறுகிறது.

துணைமைச் சான்றாதாரம்

திருக்குறள் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றுக்கான பல்வேறு உரையாசிரியர்கள் உரைகள், நன்னூல், எழுத்து, சொல் ஆகியவற்றுக்கான பல்வேறு உரையாசிரியர்கள் உரைகள், புறப்பொருள் வெண்பாமாலை, வீரசோழியம், நேமிநாதம், முத்து வீரியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், மாறனலங்காரம், இலக்கணக்கொத்து, இலக்கண

விளக்கம், பிரயோக விவேகம் ஆகிய இலக்கண நூல்கள் அவற்றின் உரைகள், பரிமேலழகர் உரை தழுவி எழுந்த திறனாய்வு நூல்கள், கலைக்களஞ்சியங்களுள் பல்வேறு அகராதிகள், திருக்குறள் இலக்கணம் தொடர்புடைய ஆய்வேடுகள், கட்டுரைகள் போன்றவை துணைமைச் சான்றுகளாகக் கொள்ளப் பெறுகின்றன.

ஆய்வுப் பகுப்பு

இந்த ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஆறு இயல்களாகப் பகுத்து ஆராயப்படுகின்றது. அவை,

திருக்குறள் பரிமேலழகர் உரையில்,

1. எழுத்திலக்கணக் கூறுகள்
2. சொல்லிலக்கணக் கூறுகள்
3. பொருள் இலக்கணக் கூறுகள்
4. யாப்பிலக்கணக் கூறுகள்
5. அணி இலக்கணக் கூறுகள்
6. பிற இலக்கணக் கூறுகள்

என்பனவாகும்.

முன்னுரை

இப்பகுதியில் ஆய்வு அறிமுகம், ஆய்வுத் தலைப்பு, ஆய்வுநோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறை, ஆய்விற்கான சான்றாதாரங்கள், ஆய்வுப்பகுப்பு முதலியவை இடம்பெறுகின்றன.

இயல் -1 திருக்குறள் பரிமேலழகர் உரையில் எழுத்திலக்கணக் கூறுகள்

இவ்வியலில் எழுத்திலக்கணக் கூறுகளாகச் சுட்டுக்கள், வினாக்கள், பகுதிப்பொருள் விகுதிகள், காலங்கள், சாரியைகள்,

தொழிற்பெயர்கள், செய்யுள் விகாரங்கள் ஆகியவற்றைப் பரிமேலழகர் அதிகமான இடங்களில் குறிப்பிடுகிறார். இவை தவிர இன்னும் சில இலக்கணக்கூறுகளும் குறைந்த அளவில் இடம் பெறுகின்றன. இவை அனைத்தும் தொல்காப்பியம் - நன்னூல் நூற்பாக்கள் சூத்திரங்களையொட்டியும், இவ்விரண்டிற்கும் உரை எழுதிய உரையாசிரியர்கள் கருத்தையொட்டியும், தேவைப்படும் இடங்களில் வேறு சில இலக்கண நூல்கள், திறனாய்வு நூல்களைப் பின்பற்றியும் விளக்கப்படுகிறது.

இயல் - 2 திருக்குறள் பரிமேலழகர் உரையில் சொல்லிலக்கணக்கூறுகள்

பரிமேலழகரால் குறிப்பிடப்படும் இலக்கணக் கூறுகளுள் மிகுதியான இடத்தைப் பெறுவது சொல்லிலக்கணம் ஆகும். அறுபதிற்கும் மேற்பட்ட சொல்லிலக்கணக் கூறுகள் இவ்வியலில் இடம்பெறுகின்றன. திணைகள், பெயர்கள், ஆகுபெயர்கள், வேற்றுமைகள், வினைச்சொற்கள், எச்சங்கள், இடைச்சொற்கள், உரிச்சொற்கள், அசைநிலைகள், தொகை நிலைத் தொடர்கள், குறிப்பு மொழிகள் ஆகியவை மிகுதியாகக் காணப்படுகின்றன. நன்னூலில் இடம் பெற்றுள்ள ஒரு பொருட்பன்மொழி, கொல் என்னும் அசைச்சொல் ஆகியவற்றைப் பரிமேலழகர் பயன்படுத்தி உள்ளதை அறியமுடிகிறது. இவ்வியல் முழுமையும் தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படுகிறது. தேவைப்படும் இடங்களில் உரையாசிரியர்கள் கருத்துக்களும் பிறநூல் செய்திகளும் எடுத்தாளப்படுகின்றன.

இயல் - 3 திருக்குறள் பரிமேலழகர் உரையில் பொருள் இலக்கணக் கூறுகள்

பரிமேலழகர் பொருள் விளக்கத்திற்காகத் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள அகத்திணையில், களவியல், செய்யுளியல் அகிய பகுதியில் இருந்து சில மேற்கோள்களைக் காட்டுகிறார். இவ்வியல் வஞ்சி, தும்பை, பாடாண், வாகை ஆகிய புறத்திணைக் கூறுகள் சில இடங்களில் சுட்டப்படுகின்றன. குறிப்பாக, படைமாட்சி, படைச்செருக்கு போன்ற அதிகாரங்களில் இக்கூறுகள் மிகுதியாக இடம்பெறுகின்றன. புறத்திணைக்கூறுகள் முழுவதும் புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியப் புறத்திணை இயல் ஆகியவற்றைப் பின்பற்றி அமைக்கப்பட்டு உள்ளது. தொல்காப்பியச் செய்யுளியலில் உள்ள யாப்பு, அணிகள் பற்றிய செய்திகள் பிற்கால இலக்கணப் பாகுபாட்டின்படி தனித்தனி இயல்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இயல் - 4 திருக்குறள் பரிமேலழகர் உரையில் யாப்பிலக்கணக் கூறுகள்

பரிமேலழகர் தம்முடைய உரையில் யாப்பிலக்கணக் கூறுகளைப் பற்றி ஓரிடத்தில் கூட குறிப்பிடவில்லை. திருக்குறள் முழுமையும் யாவருக்கும் தெரிந்த குறள் வெண்பா எனும் எளிமையான யாப்பினால் கட்டப்பட்ட காரணத்தால் இவற்றைச் சுட்டாமல் தவிர்த்திருக்கலாம் எனத் தெரியமுடிகிறது. எழுத்து, சொல், பொருள், அணி ஆகியவை தனித்தனி இயல்களாக அமைக்கபட்டுள்ளதால், இவ்வாய்வுத் தலைப்பினை உட்கொண்டு யாப்பிலக்கணத்திற்கும் தனி இயல் அமைக்கப்பட்டுள்ளது. யாப்பு

தொடர்பான செய்திகள் பெரும்பாலும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய நூல்களையொட்டியும், சில இடங்களில் தொல்காப்பியம் நன்னூல் நூற்பாக்களைப் பின்பற்றியும் அமைக்கப்பட்டுள்ளன.

இயல் - 5 திருக்குறள் பரிமேழலகர் உரையில் அணிஇலக்கணக் கூறுகள்

பரிமேலழகர் தமது உரையில் 13 வகையான அணிகளைக் குறிப்பிடுகிறார். 'அணி' என்பதற்குப் பதிலாக 'அலங்காரம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளமையை அறியமுடிகிறது. இவரால் சுட்டப்பெறும் எடுத்துக்காட்டு உவமை, ஏகதேச உருவகம், பிறிதுமொழிதல் ஆகியவை தண்டியலங்காரத்தில் வெவ்வேறு பெயர்களில் இடம் பெறுகின்றன. 'எடுத்துக்காட்டு உவமை' என்ற சொல்லாட்சியைப் பரிமேலழகர் முதன் முதலில் பயன்படுத்துகிறார் என்பதை இவ்வாய்வு வாயிலாக அறியமுடிகிறது. குறளில் வெளிப்படையாகத் தெரியும் அணிகளைப் பரிமேலழகர் குறிப்பிடவில்லை. இவ்வியல் முழுமையும் தண்டியலங்காரத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாறனலங்காரம், முத்துவீரியம் ஆகிய நூல் செய்திகளும், அணியிலக்கணம் தொடர்பான திறனாய்வு நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

இயல் - 6 திருக்குறள் பரிமேலழகர் உரையில் பிறஇலக்கணக் கூறுகள்

பரிமேலழகர் வடமொழியைப் பின்பற்றிச் சில இடங்களில் இலக்கண விளக்கம் தருகிறார். இவற்றை விளக்கும் முகமாகப் 'பிற

இலக்கணக் கூறுகள்' என்னும் தலைப்பில் இவ்வியல் அமைகிறது. 'பிரயோகவிவேகம்' என்னும் நூலைப்பின்பற்றி இவ்வியலானது அமைக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் 'இலக்கணக்கொத்து' என்னும் நூலின் செய்திகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. உபசார வழக்கு, இலக்கண வழக்கு ஆகியவை ஆகுபெயருக்கு மாற்றாக வடமொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை இவ்வியல் வாயிலாக அறியமுடிகிறது.

முடிவுரை

பரிமேலழகர் சுட்டிய இலக்கணக் கூறுகளில் கண்டெடுத்த முடிவுகள் தொகுப்பாக இப்பகுதியில் இடம்பெறுகின்றன. ஆய்வேட்டின் பிற்பகுதியில் பின்னிணைப்புகள் இடம் பெறுகின்றன.

'துணைநூற்பட்டியல்' என்னும் பகுதியில் ஆய்விற்கு உதவிய மூலநூல்கள், துணைநூல், அகராதிகள், ஆய்வேடுகள், இதழ்கள், கலைக்களஞ்சியங்கள் ஆகியவை இடம் பெறுகின்றன.

இயல் - 1

எழுத்திலக்கணக் கூறுகள்

இயல் - 1

திருக்குறள் பரிமேலழகர் உரையில் எழுத்திலக்கணக் கூறுகள்

முன்னுரை

திருக்குறளுக்கு மணக்குடவர், காலிங்கர், பரிப்பெருமாள், பருதியார், பரிமேலழகர் உள்ளிட்ட பதின்மர் உரை எழுதியுள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரையே சிறப்புடையதாகக் கொள்ளப்படுகிறது.

பரிமேலழகர் இலக்கிய, இலக்கண, வடமொழிப் புலமை பெற்றவர். இவை புலப்படும் வகையில் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார.

"தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கும் நூலெல்லாம் உள்ளதெனச் - செய்வித்தான்
தத்துவமெல் லாம்உடம்பிற் தந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழக னோர்ந்து" (பெருந்தொகை:1560)

என்ற பழைய வெண்பா மூலம் இவர்தம் உரைச்சிறப்பை அறியமுடிகிறது.

இவ்வியலில், பரிமேலழகர் காட்டும் இலக்கணக்கூறுகள்;

1. நூற்பாக்களை எடுத்தாளுதல் 2. இலக்கணக்குறிப்புத் தருதல். 3. இலக்கண மரபின்படி விரித்தெழுதி இன்ன இலக்கணமெனப் பெற வைத்தல் முதலான தன்மைகளுடன் காணப்படுகின்றன.

மேலும் இவ்வியலானது தொல்காப்பியம்-நன்னூல் நூற்பாக்களைத் தழுவியும், தொல்காப்பியம் - நன்னூலுக்கு உரை எழுதிய உரையாசிரியர்களின் கருத்தையொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் வேறுசில இலக்கண நூல்களின் கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

ஒரே இலக்கணக்கூறு பல இடங்களில வரும்போது சிலவற்றை மட்டும் இவ்வாய்வு எடுத்துக்காட்டியுள்ளது. திருக்குறளில் பரிமேலழகர் எழுத்திலக்கணக்கூறுகளாக;

சுட்டுக்கள்

சுட்டு நீண்டு வரல்

இகரச்சுட்டு வருவித்தல்

வினா எழுத்துக்கள்

எகர வினா

குற்றியலுகரம்

உயிர்த்தொடர் குற்றியலுகரம்

விகுதிகள்

அன்-விகுதி

அல் - விகுதி

ஐகார் - விகுதி

பகுதிப்பொருள் விகுதி

காலங்கள்

இறந்த காலம்

தொழிற்பெயர்கள்

முதனிலைத் தொழிற்பெயர்கள்

முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

செய்யுள் விகாரங்கள்

வலித்தல் விகாரம்

மெலித்தல் விகாரம்

தொகுத்தல் விகாரம்

இடைக்குறை விகாரம்

கடைக்குறை விகாரம்

சாரியைகள்

இன் - சாரியை நிற்க இரண்டானுருபு தொக்கல்

அல்வழிக்கண் இன் - சாரியை வலிந்து நிற்றல்

அல்வழிக்கண் அத்து - சாரியை வரல்

அத்து - சாரியை விகாரத்தால் தொக்கல்

அன் - சாரியை விகாரத்தால் தொக்கல்

உடம்படுமெய்

ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

இலக்கணக்கூறுகளை இயல் அடிப்படையில் பாகுபாடு செய்யாமல் தனித்தனி உட்தலைப்புகளாக இவ்வாய்வில் அமைக்கப்பட்டுள்ளன.

சுட்டெழுத்துக்கள்

ஒன்றினைச் சுட்டிக்கூறும் முறையில் அமைகின்ற எழுத்துக்களைச் சுட்டெழுத்துக்கள் என்பர். இவ்வெழுத்துக்களைப் பற்றித் தொல்காப்பியரும், நன்னூலாரும் ஒரே மாதிரியான

கருத்தைக் கொண்டுள்ளமையை அவர்தம் நூற்பாக்கள் வாயிலாக அறியமுடிகிறது.

"அஇஉ அம்மூன்றுஞ் சுட்டு"(1)

"அஇஉ ம்முதல் தனிவரில் சுட்டே"(2)

மேற்கண்ட நூற்பா மூலம் அ,இ,உ ஆகிய மூன்று எழுத்துக்களும் மொழிக்கு முதலில் தனித்து வந்து ஒரு பொருளைச் சுட்டினால் சுட்டெழுத்தாகும் என்பது புலனாகிறது. இவற்றில் அகரம் சேய்மைச்சுட்டாகவும், இகரம் அண்மைச்சுட்டாகவும் உகரம் இரண்டிற்கும் நடுவில் உள்ள பொருளைச் சுட்டவும் பயன்படும் என்பர். உகரச்சுட்டு இன்று பெரும்பாலும் வழக்கத்தில் இல்லை எனலாம்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் சுட்டெழுத்துக்கள் நீண்டு வருதலையும், வருவித்தலையும் குறிப்பிடுகிறார்.

சுட்டெழுத்து நீண்டு வரல்

சுட்டெழுத்துக்கள் மூன்றும் குறில் எழுத்துக்கள் ஆகும். இவை சில நேரங்களில் நெடிலாக மாறி ஒலிப்பதும் உண்டு. 'இதனைச்சுட்டு நீளுதல்' என்பர். திருக்குறளில் ஓரிடத்தில் அகரச்சுட்டானது நீண்டு வருதலைப் பரிமேலழர் இங்கே குறிப்பிடுகிறார்.

"வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை

அரஞர் உற்றன கண்" (கு.எண்.1179)

இக்குறளுரையில் 'ஆயிடை' எனச்சுட்டு நீண்டது என்கிறார் பரிமேலழகர். என் காதலர் வராவிட்டால் எப்போது வருவார் என்றும், வந்து விட்டால் எப்போது பிரிவார் என்றும்

அவ்விருவழிகளில் துன்பமுற்று தூங்காதிருக்கின்றன என்கண்கள் என்பது குறளின் கருத்து. இங்கு 'ஆயிடை' என்பது 'அவ்விருவழியும்' எனப் பொருள்படுகிறது. 'ஆயிடை' என்பது 'அயிடை' என வந்தாலும் ஒரே பொருளையே குறிக்கும். யாப்பமைதி நோக்கி அகரச் சுட்டானது நீண்டு வந்துள்ளமையால், சுட்டு நீண்டது என்கிறார் பரிமேலழகர்.

இகரச்சுட்டு வருவித்தல்

பரிமேலழகர் தம்முடைய உரையில் இகரச்சுட்டின் வருவித்துப் பொருள் கொள்வதனை ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து" (கு.எண்:1082)

இப்படிப்பட்ட அழகுடைய பெண் என்னை நோக்கினாள் நானும் நோக்கினேன். தனித்துப் பார்த்தாலே வலியை உண்டாக்கும் வல்லமையுடைய பெண் இப்போது பார்ப்பது துணைக்கு ஒரு சேனையை அழைத்துக் கொண்டு வந்தது போல் இருக்கிறது என்பது குறளின் கருத்து. இங்கு 'இகரச்சுட்டு' வருவிக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர். இதற்கு முந்தைய குறளில்,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" (கு.எண்:1081)

என்று கூறி, அதற்கடுத்த செய்யுளில் 'நோக்கினாள்' என்று கூறுவது அந்த மாதரையே சுட்டவல்லது என்ற கருத்தால், அதற்காக 'இப்படிப்பட்ட அழகான பெண்' என்று இகரச்சுட்டினை

வரவழைத்துப் பொருள் கூறுகிறார் பரிமேலழகர். இங்கு இகரச்சுட்டானது பொருள் கொள்வதற்காகவே வருவிக்கப் பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

வினா எழுத்துக்கள்

கேள்வி கேட்பதற்கு ஒரு எழுத்தானது பயன்படுமானால் அதனை 'வினா எழுத்து' எனலாம். தமிழில் ஒரு சில எழுத்துக்கள் மட்டுமே வினா எழுத்துக்களாக வருகின்றமையைத் தொல்காப்பியர்,

"ஆஏஓ அம்மூன்றும் வினா"(3)

என்கிறார். ஆனால் நன்னூலார் இவற்றோடு மேலும் இரண்டினைச் சேர்த்து,

"எயா முதலும் ஆஓ ஈற்றும்
ஏ இருவழியும் வினாவாகும்மே"(4)

என்கிறார். மேற்கண்ட நூற்பாக்கள் வாயிலாக எ,யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்து எழுத்துக்களும் வினாவாக வரும் என்பதனை அறியமுடிகிறது.

எகர வினா

எகரம் வினாவாக வருவதைப் பரிமேலழகர் இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறார்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு" (கு.எண்:211)

இக்குறளுரையில் 'என் ஆற்றும்' என்ற வினா 'யாதும் ஆற்றா' என்பது தோன்ற நிற்கிறது என்கிறார் பரிமேலழகர். தமக்கு நீர் தந்து உதவுகின்ற மேகங்களிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்கின்றன? எதுவும் செய்வதில்லை. அதைப்போன்று அம்மேகங்களைப் போல்வார் செய்யும் ஒப்பரவுகளும் கைம்மாறு கருதுவன அல்ல என்பது குறளின் கருத்து. இங்கு 'என் ஆற்றும்' என்பதில் எகரம் வினாவாக வந்துள்ளது. இவ்வாறு எகரம் வினாவாக வந்து 'யாதும் ஆற்றா' என்ற பதில் தோன்ற நின்றமையால் பரிமேழகர் மேற்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்

என்ன பயத்ததோ சால்பு" (கு.எண்:987)

இன்னாதவற்றைச் செய்தவர்களுக்கும் இனியவற்றைச் செய்யாவிட்டால் அச்சால்பினால் என்ன பயன் உண்டாகும் என்பது இக்குறளின் கருத்து. இங்கு வினா எதிர்மறைப் பொருட்டு என்கிறார் பரிமேலழகர். 'என்ன பயன் உண்டாகும்' என்பதில் எகரம் வினாவாக வந்து 'எந்தப் பயனும் இல' என்னும் பொருள்பட நிற்றலால், வினா எதிர்மறைப் பொருட்டு என்கிறார்.

குற்றியலுகரம்

வல்லெழுத்துக்கள் ஆறின் மீது ஏறிவருரம் உகரம் குற்றியலுகரம் என்பதைத் தொல்காப்பியர்,

"நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழி யீற்றுங்

குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே"(5)

என்கிறார். ஆனால் நன்னூலார் வல்லெழுத்தின் மீது ஏறிவரும் உகரம் குறுகிய ஓசை உடையது என்றும், குற்றியலுகரத்திற்குப் பக்கத்தில் 36 எழுத்துக்கள் மட்டுமே வரும் என்றும், இக்குற்றியலுகரம் ஆறுவகைப்படும் என்றும் குறிப்பிட்டுக் கீழ்க்கண்டவாறு நூற்பா அமைக்கிறார்.

"நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலி இடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே"(6)

தொல்காப்பியர் குற்றியலுகரம் என்ன என்பதை 'மொழி மரபில்' குறிப்பிட்டு அவற்றின் வகைகளைக் 'குற்றியலுகரப் புணரியலில்' கூறுகிறார்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் குற்றியலுகரத்தை ஓரிடத்தில் மட்டுமே சுட்டுகிறார்.

உயிர்த்தொடர் குற்றியலுகரம்

குற்றியலுகரத்திற்கு முன்னர் ஔகாரம் தவிர பதினோரு உயிர்எழுத்துக்களும் வருமானால் அதனை உயிர்த்தொடர் குற்றியலுகரம் எனலாம்.

"நாளென வொன்றுபோற் காட்டி உயிரீடும்
வாள துணர்வார்ப் பெறின்" (கு.எண்:334)

இக்குறளுரையில் 'வாளது' என்பதிலுள்ள 'அதுவைக்' குற்றியலுகரம் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அது' முற்றியலுகரமாக இருந்தால் அது+உணர்வார்=அதுவுணர்வார் என உடம்படு மெய் பெற்று வரல்

வேண்டும். அவ்வாறு வாராமல் 'அதுணர்வார்' என வந்தமையால் இது குற்றியலுகரம் ஆகிறது. ஏனெனில் இரண்டு உயிர்கள் இணையும் போது குற்றியலுகரத்திற்கு மட்டும் உடம்படுமெய் (ய்,வ்) வராது.

'அது' என்னும் சொல்லில் குற்றியலுகரத்திற்கு முன்னர் உயிர் எழுத்து வந்துள்ளமையால் இது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆயிற்று.

விகுதிகள்

எழுத்துக்கள் ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பொருள் தருவது பதம் எனப்படும். இவை பகுபதம், பகாப்பதம் என இரண்டு வகைப்படும். இவற்றுள் பகுபதம்,

"பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை"(7)

என்ற ஆறு உறுப்புகளை உடையது. மேற்கண்ட நூற்பாவில் கூறப்பட்ட ஆறு உறுப்புகளுள் விகுதியும் ஒன்றாகும். "விகுதி என்பது பகுதியின் பொருளை வேறுபடுத்துவதும் இறுதியில் நிற்பதும் ஆகும்"(8)

நன்னூலால் விகுதிகளாகக் கீழ்க்கண்ட முப்பத்தாறும் அதற்கு மேலும் வரும் என்கிறார்.

"அன், ஆன், அள், ஆள், அர், ஆர், பம், பார்
அ, ஆ, கு, டு, து, று, என், ஏன், அல், அன்

அம், ஆம், எம், ஏம், ஓமொடு, உம், ஊர்

கடதற, ஐ, ஆய், இம், மின், இர், ஈர்

ஈயர், க, யவும், என்பனவும் பிறவும்

வினையின் விகுதி பெயரினும் சிலவே"(9)

பரிமேலழகர், அன், அல், ஐகாரம் ஆகிய விகுதிகளைத் தம்முடைய உரையில் சுட்டுகிறார்.

அன்-விகுதி

"இலனென்று தீயவை செய்யற்க செய்யின்

இலனாகும் மற்றும் பெயர்த்து" (கு.எண்:205)

யான் வறியவன் என்று கருதி தீவினைகளைச் செய்யா தொழிக, செய்வானாயின் மீண்டும் வறியவனாக நேரிடும் என்பது குறளின் கருத்து. இக்குறளுரையில் 'அன்' விகுதி முன் தனித் தன்மையினும், பின் படர்க்கை ஒருமையிலும் வந்தது என்கிறார் பரிமேலழகர். முதலடியில் உள்ள 'இலன்' என்பது யான்வறியவன் என்னும் பொருளைத் தருவதால் 'இலன்' என்ற சொல்லில் உள்ள 'அன்' விகுதி தன்மை ஒருமையைக்குறிக்கிறது.

இரண்டாம் அடியில் உள்ள 'இலன்' என்பது 'வறியவன்' என்னும் பொருளைத் தருதலால், இச்சொல்லில் உள்ள 'அன்' விகுதி ஆண்பால் படர்க்கை ஒருமையைக் குறிக்கிறது. இதன் காரணமாகப் பரிமேலழகர் மேற்கண்டவாறு சுட்டுகிறார்.

அல்-விகுதி

"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தால்

அல்லார்முன் கோட்டி கொளல்" (கு.எண்:720)

இக்குறளுரையில் 'கொள்' என்னும் முதனிலைத் தொழிற்பெயர், எதிர்மறை 'அல்' விகுதியோடு கூடி 'மகனெனல்' என்பது போல நின்றது என்கிறார் பரிமேலழகர். 'அல்' விகுதி வியங்கோள் வினைமுற்றில் உடன்பாட்டுப் பொருளிலும், எதிர்மறைப் பொருளிலும் வரும் என்பர்.

"பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்

மக்கட் பதடி எனல்"

இக்குறட்பாவில் 'அல்' விகுதி முதலில் எதிர்மறையிலும், பின்னர் உடம்பாட்டுப் பொருளிலும் வந்துள்ளமையைப் பரிமேலழகர் மேற்கோளாகக் காட்டி, 'கொளல்' என்பது 'கொல்லற்க' என்னும் எதிர்மறைப் பொருள் தருகிறது.

ஐகார விகுதி

"புல்லா திராஅப் புலத்தை அவர்உறும்

அல்லல்நோய் காண்கம் சிறிது" (கு.எண்:1301)

இக்குறளுரையில் 'புலத்தை' என்புழி ஐகாரம், "கடம் பூண்டொரு கானீவந்தை" என்புழி போல முன்னிலை வினை விகுதி என்கிறார் பரிமேலழகர். மேற்கோள் பாடலில் உள்ள 'நீ வந்தை' என்பது 'நீ வருவாய்' எனப் பொருள் பட்டு முன்னிலை விகுதியாவது போல 'புலத்தை' என்பது 'புலப்பாய்' எனப் பொருள் பட்டு முன்னிலையில் உள்ளவரின் செயலைக் குறிப்பதால் முன்னிலை வினை விகுதி என்கிறார் பரிமேலழகர்.

பகுதிப்பொருள் விகுதி

ஒரு சொல்லின் முதலில் நிற்கும் உறுப்பு 'பகுதி' எனப்படும். இப்பகுதியானது பகாப்பதமாய் வரும் என்பதை நன்னூலார்,

“தத்தம்

பகாப்பதங்களே பகுதியாகும்”(10)

என்கிறார். பகாப்பதம் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும் என்பர்.

“தனக்கென வேறு பொருளின்றிப் பகுதியைச் சார்ந்து, பகுதி தரும் பொருளையே அன்றி வேறு பொருள் தராதது பகுதிப்பொருள் விகுதியாகும்”(11) என்கிறார் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்.

பரிமேலழகர் பகுதிப்பொருள் விகுதியை ஐந்து இடங்களில் சுட்டிக்காட்டுகிறார்.

“வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்

குறியெதிர்பை நீர துடைத்து” (கு.எண்:221)

இக்குறளுரையில் ‘நீரது’ என்புழி ‘அது’ என்பது பகுதிப் பொருள் விகுதி என்கிறார் பரிமேலழகர். இங்கு ‘அது’ என்பது தனக்கெனத் தனிப்பொருள் இன்றி, பகுதியின் பொருளாகிய ‘கொடுக்கும்’ என்பதையே உணர்த்துதலால் இது பகுதிப்பொருள் விகுதியாயிற்று.

“நத்தம்போல் கேடு உளதாகுஞ் சாக்காடும்

வித்தகர்க் கல்லா லரிது” (கு.எண்:235)

இக்குறளுரையில் ‘நத்தம்’ என்பதிலுள்ள ‘அம்’ பகுதிப்பொருள் விகுதி என்கிறார் பரிமேலழகர். இங்கு ‘அம்’ என்னும் விகுதி தனக்கெனப் பொருளின்றி ‘நந்து’ என்னும் பகுதியின் பொருளையே உணர்த்துவதால் இது பகுதிப்பொருள் விகுதியாயிற்று.

“வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்

வைத்தூறு போலக் கெடும்” (கு.எண்:435)

இக்குறளுரையில் 'முன்னர்' என்றதன் ஈற்றது பகுதிப்பொருள் விகுதி என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அர்' என்னும் விகுதி தனித்து நின்றால் பொருள் தராது. அது 'முன்' என்னும் பகுதியோடு சேர்ந்து 'முன்னர்' என்னும் பொருளைத் தருவதால் இது பகுதிப்பொருள் விகுதியாயிற்று.

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து

இயற்கை அறிந்த செயல்" (கு.எண்:637)

என்னும் குறளுரையில் 'கடைத்தும்' என்புழி 'து' பகுதிப்பொருள் விகுதி என்கிறார் பரிமேலழகர். இங்கு 'து' தனியே நின்றால் பொருள் தராது. 'கடை' என்னும் பகுதியோடு சேர்ந்து 'கடைத்து' எனப் பொருள் தருவதால் இது பகுதிப் பொருள் விகுதியாயிற்று.

"உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ

யாருழைச் சேறிஎன் நெஞ்சு" (கு.எண்:1249)

இக்குறளுரையில் 'உள்ளம்' என்புழி 'அம்' பகுதிப் பொருள் விகுதி என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அம்' என்னும் விகுதி தனித்து வந்தால் பொருள் தராது. அது 'உள்' என்னும் பகுதியோடு சேர்ந்து 'உள்ளம்' என்னும் பொருள்த் தருவதால் பகுதிப்பொருள் விகுதி ஆயிற்று.

காலங்கள்

வினைச்சொல்லானது காலம் காட்டும். அக்காலம் மூன்று வகைப்படும் என்பதைத் தொல்காப்பியர்,

"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா

அம்முக் காலமும் குறிப்போடு கொள்ளும்

மெய்நிலை உடைய தோன்ற லாறே"(12)

என்கிறார்.

நன்னூலார் இக்கருத்தை ஒப்புக் கொண்டு, மூன்று காலங்களுக்கும் தனித்தனி இடைநிலைகளைச் சுட்டுகிறார். காலங்கள் பற்றித் தொல்காப்பியர் சொல்லதிகார வினையியலில் கூறினாலும் நன்னூலார் எழுத்ததிகாரப் பதவியலில் அவற்றுக்கான இடைநிலைகளைக் கூறியுள்ளமையால், இவ்விலக்கணக் கூறானது எழுத்திலக்கணத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பரிமேலழகர் தம்முடைய உரையில் முக்காலங்களில் இறந்தகாலத்தை மட்டும் நான்கு இடங்களில் சுட்டுகிறார்.

1.6.1 இறந்த காலம்

நடந்து முடிந்த ஒரு செயலைக் குறிப்பதற்கு இறந்த காலமானது பயன்படும் எனலாம். இறந்தகால இடைநிலைகளாக நன்னூலார்,

"தடற ஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து

இறந்தகாலம் தரும் தொழில் இடைநிலை"(13)

என்கிறார். இந்நூற்பா வாயிலாக த்,ட்,ற்,இன் ஆகிய நான்கும் இறந்தகாலம் காட்டும் இடைநிலைகள் என்பதை அறியமுடிகிறது.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்" (கு.எண்.3)

என்பதில் 'ஏகினான்' இறந்தகாலம் என்கிறார் பரிமேலழகர். 'ஏகினான்' என்பது ஏற்கனவே நடந்த செயலைச் சுட்டுவதாலும் இறந்த கால இடைநிலை (ஏகு(ஏகி)+இன்+ஆன்) 'இன்' என்பது வருவதாலும் இதனை இறந்தகாலம் எனலாம்.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த

மக்கட்பே றல்ல பிற" (கு.எண்:61)

என்பதில் 'அறிந்த' இறந்தகாலம் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அறிந்த' என்பது ஏற்கனவே நடந்த செயலைக் குறிப்பதாலும் இறந்தகால இடைநிலை (அறி + த் (ந்) + த் + அ) 'த்' வந்துள்ளமையாலும் இதனை இறந்தகாலம் எனலாம்.

"மனத்துள் ளதுபோலக் காட்டி ஒருவற்கு

இனத்துள தாகும் அறிவு" (கு.எண்:454)

என்பதில் 'காட்டி' இறந்தகாலம் என்கிறார் பரிமேலழகர். 'காட்டி' என்பது ஏற்கனவே நடந்த செயலைக்குறிப்பதாலும் இறந்தகால இடைநிலை (காட்டு (காட்டி) + ட் + இ) 'ட்' என்பது வந்துள்ளமையாலும் இதனை இறந்தகாலம் எனலாம்.

"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த

தன்மையா னாளப் படும்" (கு.எண்:511)

என்பதில் 'புரிந்த' இறந்தகாலம் என்கிறார் பரிமேலழகர். 'புரிந்த' என்பது ஏற்கனவே நடந்த செயலைக் குறிப்பதாலும் இறந்தகால இடைநிலை (புரி+த்(ந்)+த்+அ) 'த்' என்பது வந்துள்ளமையாலும் இதனை இறந்தகாலம் எனக் கொள்ளலாம்.

தொழிற்பெயர்கள்

ஒன்றன் தொழிலைக்குறிக்கும் பெயர்களைத் தொழிற்பெயர்கள் எனலாம். இவை வினையடியில் இருந்து தோன்றுகின்றன. "நன்னூலார் தொழிற்பெயர் விகுதிகளாக, அல், தல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல், இல், அடம், மதி, மானம் என்பனவும் பிறவுமாம்"[14] என்று குறிப்பிடுகிறார்.

தொழிற்பெயர்களும் அவற்றின் வகைகளும் சொல் இலக்கணக் கூறுகள் என்றாலும் தொழிற்பெயர்களுக்கான விகுதிகள் நன்னூல் பதவியலில் இடம் பெறுவதால், ஆய்வில் இவை எழுத்திலக்கணக் கூறாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பரிமேலழகர் தம்முடைய உரையில் இரண்டு இடங்களில் தொழிற் பெயரைச் சுட்டுகிறார்.

"அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று" (கு.எண்:523)

என்னும் குறளுரையில் 'நிறைதல்' என்னும் இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'நிறைதல்' என்னும் தொழிற்பெயரில் நிறை-வினையடி, தல்-தொழிற்பெயர் விகுதி ஆகும்.

"கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்" (கு.எண்:1005)

என்னும் குறளுரையில் பரிமேலழகர் இன்பத்தினும் அறம்

சிறந்தமையின் 'கொடுத்தல்' தொழில் முற்கூறப்பட்டது என்கிறார். இங்கு 'கொடுத்தல்' என்னும் தொழிற்பெயரில் கொடு-வினையடி தல்-தொழிற்பெயர் விகுதி ஆகும்.

முதனிலைத் தொழிற்பெயர்கள்

"முதனிலைத் தொழிற்பெயராவது, தொழிற்பெயர் விகுதி குன்றி முதல்நிலை அளவில் நின்று தொழிற்பெயர்ப் பொருளைத் தருவது"(15) என்கிறார் நன்னூலார். இங்கு முதனிலை என்பது பகுதியைக் குறிக்கிறது. இது பகுபதங்களின் முதலில் நிற்பது ஆகும்.

அதாவது 'நடத்தல்' என்னும் சொல்லின் அடியாகிய 'நட' என்பது 'செய்' என்னும் ஏவல் வினைக்குப் பகுதியாகும். இப்பகுதியே முதனிலைத் தொழிற்பெயராக வரும் எனலாம்.

இங்ஙனம் "வினையடியை முதனிலைத் தொழிற் பெயராகக் கொண்டு அதனைத் 'தாது' எனவும் 'பிரகிருதி' எனவும்"(16) பிரயோக விவேகம் கூறுகிறது.

பரிமேலழகர் பதினாறு இடங்களில்(17) முதனிலைத் தொழிற்பெயரைச் சுட்டுகிறார்.

"கெடுவாக வையா துலக நடுவாக

நன்றிக்கட் தங்கியான் தாழ்வு" (கு.எண்:117)

என்பதில் 'கெடு' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கெடுதல்' என்னும் தொழிற் பெயரின் 'தல்' விகுதிகெட்டு, 'கெடு' என்ற முதனிலையே தொழிற் பெயரின்

பொருளை உணர்த்தியதால் 'கெடு' முதனிலைத் தொழிற்பெயராயிற்று.

"வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்" (கு.எண்:177)

என்பதில் 'விளை' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'விளைதல்' என்ற தொழிற் பெயரின் 'தல்' விகுதி கெட்டு, 'விளை' என்ற முதனிலையே தொழிற்பெயர்ப் பொருளை உணர்த்துவதால் 'விளை' முதனிலைத் தொழிற் பெயராயிற்று.

"இறைகடிய என்றுரைக்கு மின்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்" (கு.எண்:564)

இக்குறளுரையில் 'உறை' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். 'உறைதல்' என்னும் தொழிற்பெயரின் 'தல்' விகுதி கெட்டு 'உறை' என்ற முதனிலையே தொழிற்பெயர்ப் பொருளை உணர்த்துவதால் இது முதனிலைத் தொழிற்பெயர் ஆயிற்று.

"இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றில வர்" (கு.எண்:607)

இக்குறளுரையில் 'இடி' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். 'இடித்தல்' என்னும் தொழிற்பெயரின் 'தல்' விகுதி கெட்டு 'இடி' என்ற முதனிலையே தொழிற் பெயர்ப் பொருளை உணர்த்துவதால் 'இடி' முதனிலைத் தொழிற் பெயர் ஆயிற்று.

"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்" (கு.எண்:614)

இக்குறளுரையில் 'ஆள்' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். 'ஆளுதல்' என்னும் தொழிற்பெயரின் 'தல்' விகுதி கெட்டு 'ஆள்' என்னும் முதனிலையே தொழிற்பெயர்ப் பொருளை உணர்த்தினமையால் 'ஆள்' முதனிலைத் தொழிற்பெயராயிற்று.

"அறிகொன் றறியா எனினும் உறுதி

உழையிருந்தான் கூறல் கடன்" (கு.எண்:638)

இக்குறளுரையில் 'அறி' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். 'அறிவு' என்னும் தொழிற்பெயரின் 'உ' விகுதி கெட்டு 'அறி' என்னும் முதனிலையே தொழிற்பெயர்ப் பொருளை உணர்த்துவதால் 'அறி' முதனிலைத் தொழிற் பெயராயிற்று.

"உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க

அல்லற்க ஆற்றறுப்பார் நட்பு" (கு.எண்:798)

என்பதில் 'ஆற்று' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஆற்றுதல்' என்னும் தொழிற்பெயரின் 'தல்' விகுதி கெட்டு 'ஆற்று' என்னும் முதனிலையே தொழிற்பெயரின் பொருளை உணர்த்துவதால் 'ஆற்று' முதனிலைத் தொழிற்பெயராயிற்று.

"அழிவந்த செய்யினும் அன்பறா அன்பின்

வழிவந்த கேண்மை யவர்" (கு.எண்:807)

என்பதில் 'அழி' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அழிவு' என்னும் தொழிற்பெயரின் 'உ' விகுதி கெட்டு 'அழி' என்னும் முதனிலையே தொழிற்பெயரின் பொருளை உணர்த்துவதால் 'அழி' முதனிலைத் தொழிற்பெயராயிற்று.

"நோமவற்க நொந்த தறியார்க்கு மேவற்க

மென்மை பகைவ ரகத்து" (கு.எண்:877)

என்பதில் 'நோ' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'நோவு' என்னும் தொழிற்பெயரின் 'உ' விகுதி கெட்டு 'நோ' என்னும் முதனிலையே தொழிற்பெயரின் பொருளை உணர்த்துவதால் 'நோ' முதனிலைத் தொழிற் பெயர் ஆயிற்று.

"கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்

காட்டிய சூடினீ ரென்று" (கு.எண்:1313)

என்பதில் 'கோடு' முதனிலைத் தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கோடுதல்' என்னும் தொழிற்பெயரின் 'தல்' விகுதி கெட்டு 'கோடு' என்னுமட் முதனிலையே தொழிற்பெயரின் பொருளை உணர்த்துவதால் 'கோடு' முதனிலைத் தொழிற்பெயர் ஆயிற்று.

முதனிலைத்திரிந்த தொழிற்பெயர்கள்

தொழிற்பெயரின் முதனிலையானது திரிந்து அம்முதனிலையே பெயர்ப்பொருளை உணர்த்துவது முதனிலைத் திரிந்த தொழிற்பெயராகும்.

"கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்

கோடாமை சான்றோர்க் கணி"

என்பதில் 'கேடு' முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கெடுதல்' என்னும் தொழிற்பெயரின் முதனிலை 'கெடு'. இக் 'கெடு' என்னும் வினையடி 'கேடு' எனத்

திரிந்து முதனிலையே தொழிற்பெயரின் பொருளை உணர்த்துகின்றமையால் 'கேடு' முதனிலைத் திரிந்த தொழிற் பெயராயிற்று.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்றை யவை" (கு.எண்:400)

என்பதில் 'கேடு' முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கெடுதல்' என்னும் தொழிற்பெயரின் முதனிலை 'கெடு'. இக் 'கெடு' என்னும் வினையடி 'கேடு' எனத் திரிந்து முதனிலையே தொழிற்பெயரின் பொருளை உணர்த்துகின்றமையால் 'கேடு' முதனிலைத் திரிந்த தொழிற் பெயராயிற்று.

"கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா

நாடென்ப நாட்டின் தலை"

மேற்கூறிய குறளில் 'கெடு' என்னும் வினையடி 'கேடு' எனத் திரிந்து முதனிலையே தொழிற்பெயர் பொருளை உணர்த்துகின்றமையால் 'கேடு' முதனிலைத்திரிந்த தொழிற்பெயர் ஆயிற்று.

செய்யுள் விகாரங்கள்

தொல்காப்பியர் செய்யும் விகாரங்களாக வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் ஆகிய ஐந்தோடு முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை மூன்றையும் சேர்த்து எட்டாகக் குறிப்பிடுகிறார். இக்கருத்தினை அடியொற்றியே நன்னூலாரும் நூற்பா வகுத்துள்ளார்.

"வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்

விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி"[18]

"ஒருமொழி மூவழிக்குறைதலும் அனைத்தே"[19]

செய்யுள் விகாரங்கள் என்னும் இவ்வுட்பிரிவினுள் பரிமேலழகரால் சுட்டப்படும் வலித்தல், மெலித்தல், தொகுத்தல், இடைக்குறை, கடைக்குறை ஆகிய இலக்கணக்கூறுகள் இடம்பெறுகின்றன.

வலித்தல் விகாரம்

"மெல்லினம் வரவேண்டிய இடத்தில் வல்லினம் வந்து விகாரப்படுதலை வலித்தல் விகாரம்"[20] என்பர்.

"செவியுணவிற் கேள்வி உடையார் அவிஉணவின்

ஆன்றாரோ டொப்பர் நிலத்து" (கு.எண்:413)

என்பதில் 'உணவிற்கேள்வி' - அல்வழிக்கண் வந்த 'இன்' சாரியையதுனகரம் வலிந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். இக்குறளில் 'உணவின் கேள்வி' என மெல்லினம் வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் 'உணவிற்கேள்வி' என வல்லினம் வந்தமையால் இது வலித்தல் விகாரமாயிற்று. மேலும்

"னஃகான் றஃகான் நான்கானுருபிற்கு"[21]

"னகார இறுதி வல்லெழுத்தியையின்

றகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே"[22]

என்ற தொல்காப்பிய நூற்பாக்களால் வேற்றுமைப் புணர்ச்சியில் மட்டுமின்றி அல்வழிப் புணர்ச்சியிலும் 'இன்' சாரியையின் 'னகரம்', 'றகரமாக' வருதலை அறியமுடிகிறது.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்

அப்பால் நாற்கூற்றே மருந்து" (கு.எண்:950)

இக்குறளுரையில் 'நாற்கூற்றது' என்பது விகாரமாயிற்று என்கிறார் பரிமேலழகர். 'நாற்கூற்று' என்பது 'நான்கு கூற்று' என்று மெல்லினம் பெற்று வரல்வேண்டும். அவ்வாறு வாராமல் 'நாற்கூற்று' என வல்லினமெய் வந்து விகாரபட்டுள்ளமையால் (னகரத்திற்கு பதிலாக றகரம் வரல்) இது வலித்தல் விகாரமாயிற்று.

"குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்

சிறக்கணித்தாள் போல நகும்" (கு.எண்:1095)

இக்குறட்பாவில் 'சிறக்கணித்தாள்' என்பது 'சிறங்கணித்தாள்' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் மெல்லின மெய்யாகிய நகரத்திற்குப் பதிலாக வல்லின மெய்யாகிய ககரம் வந்துள்ளது. இவ்வாறு மெல்லினம் வரவேண்டிய இடத்தில் வல்லினம் வந்து விகாரப்பட்டுள்ளமையால் இது வலித்தல் விகாரமாயிற்று.

மெலித்தல் விகாரம்

"வல்லினம் வரவேண்டிய இடத்தில் மெல்லினம் வந்து விகாரப்படுதலை மெலித்தல் விகாரம்"(23) என்பர்

"இருணீங்கி இன்பம் பயக்கு மருணீங்கி

மாசறு காட்சி யவர்க்கு" (கு.எண்:352)

இக்குறளுரையில் 'நீங்கி' மெலிந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'நீங்கி' என்பது 'நீக்கி' என வல்லினம் பெற்று வரல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் வல்லின மெய்யாகிய 'க்' பதில் மெல்லின

மெய்யாகிய ‘ங்’ வந்து விகாரப்பட்டுள்ளமையால் இது மெலித்தல் விகாரமாயிற்று.

“பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்

கலந்தீமை யால்திரிந் தற்று” (கு.எண்:1000)

இக்குறளுரையில் ‘கலத்தீமை’ என்பது மெலிந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு ‘கலந்தீமை’ என்பது ‘கலத்தீமை’ எனவரல் வேண்டும். அவ்வாறு வாராமல் வல்லின மெய் ‘த்’ திற்குப் பதிலாக மெல்லின மெய் ‘ந்’ வந்து விகாரப்பட்டுள்ளமையால் இது மெலித்தல் விகாரமாயிற்று.

தொகுத்தல் விகாரம்

ஒரு சொல்லில் வரும் உறுப்போ, சாரியையோ, வேற்றுமை உருபோ மறைந்து வருவது தொகுத்தல் விகாரம் ஆகும்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் பதினேழு[24] இடங்களில் தொகுத்து விகாரம் வருதலைச் சுட்டிக் காட்டுகிறார்.

“ஐந்தவித்தான் ஆற்ற அகல்விசும்பு உளார்கோமான்

இந்திரனே சாலுங்கரி” (கு.எண்:25)

இக்குறளுரையில் ‘ஐந்து’, ‘ஆற்ற’ என்பன செய்யுள் விகாரத்தால் தொக்கன என்கிறார் பரிமேலழகர். இங்கு ‘ஐந்து’ என்பது ‘ஐந்தும்’ என முற்றுமை பெற்றும் ‘ஆற்ற’ என்பது ‘ஆற்றற்கு’ என நான்கானுருபு பெற்றும் வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் ‘ம்’ என்பதும் ‘கு’ உருபும் தொக்கி வந்துள்ளமையால் இது தொகுத்தல் விகாரமாயிற்று.

"அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்

கருவியாற் போற்றிச் செயின்" (கு.எண்:537)

இக்குறளுரையில் 'பொச்சாவாத' என்பதன் இறுதிநிலை, விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'பொச்சாவா' என்பது 'பொச்சாவாத' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் கடைசி உறுப்பு 'த' தொக்கி வந்துள்ளமையால் இது தொகுத்தல் விகாரமாயிற்று.

"இறைகாக்கும் வையக மெல்லா அவனை

முறைகாக்கு முட்டாச் செயின்" (கு.எண்:547)

இக்குறளுரையில் 'முட்டாது' என்பதன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'முட்டா' என்பது 'முட்டாது' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் கடைசி உறுப்பு 'து' மறைந்து வந்துள்ளமையால் இது தொகுத்தல் விகாரமாயிற்று.

"கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்ல

தில்லை நிலக்குப் பொறை" (கு.எண்:570)

இக்குறளுரையில் 'நிலக்கு' செய்யுள் விகாரம் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'நிலக்கு' என்பது நிலத்திற்கு என 'அந்து' சாரியை பெற்று வர வேண்டும். அவ்வாறு வாராமல் தொக்கி வந்தமையால் இது தொகுத்தல் விகாரமாயிற்று.

"மிகச்செய்து தம்மெள் ளுவாரை நகச்செய்து

நட்பினுட் சாப்புல்லற் பாற்று" (கு.எண்:829)

இக்குறளுரையில் 'சாவ' என்பதன் இறுதிநிலை விகாரத்தால்

தொக்காது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'சா' என்பது 'சாவ' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் 'வகரம்' தொக்கினமையால் இது தொகுத்தல் விகாரமாயிற்று.

"பகல் கருதிப் பற்றா செயினும் இகல் கருதி
இன்னாசெய் யாமை தலை" (கு.எண்:852)

இக்குறளுரையில் 'பற்றாத' என்பதமன் இறுதிநிலை விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'பற்றா' என்பது 'பற்றாத' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் கடைசி உறுப்பாகிய 'தகரம்' மறைந்து வந்துள்ளமையால் இது தொகுத்தல் விகாரமாயிற்று.

"காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்" (கு.எண்:866)

இக்குறளுரையில் 'காணாத சினமென்பது' விகாரமாயிற்று என்கிறார் பரிமேலழகர். இங்கு 'காணா' என்பது 'காணாத' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் 'தகரம்' தொக்கி வந்தமையால் இது தொகுத்தல் விகாரமாயிற்று

"கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் நெஞ்சு" (கு.எண்:1264)

என்பதில் 'கொடு' என்பது விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கொடு' என்பது 'கொண்டு' என வாராமல் 'ணகர' மெய் தொக்கி வந்துள்ளமையால் இது தொகுத்தல் விகாரமாயிற்று.

இடைக்குறை விகாரம்

"ஒரு சொல்லின் இடையில் நிற்கும் உறுப்பு குறைந்து வருதலை இடைக்குறை"(25) என்பர்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் இடைக்குறை விகாரத்தை ஆறு இடங்களில்[26] சுட்டுகிறார்.

"சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே

மற்றின்பம் வேண்டு பவர்" (கு.எண்:173)

இக்குறளுரையில் 'மற்றையின்பம்' என்பம் 'மற்றின்பம்' என நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'எமற்றையின்பம்' என்பதின் இடையிலுள்ள 'ஐகாரம் குறைந்து' 'மற்றின்பம்' என வருதலால் இது இடைக்குறை விகாரமாயிற்று.

"மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை

அப்பால் இரண்டென மொழிமனார் புலவர்"[27]

"மற்றைய தென்னுங் கிளவி தானே

சுட்டுநிலை யொழிய இனங் குறித்தன்றே"[28]

என்னும் தொல்காப்பிய சூத்திரங்களால் 'மற்று' என்னும் இடைச்சொல்லுக்குப் பிறிதென்னும் பொருள் இல்லையென்றும், அப்பொருள் 'மற்றை' என்னும் இடைச்சொல்லுக்கே உரியது என்றும் தெரிதலால் 'மற்றையென்பது மற்றின்பம்' என நின்றது என்கிறார் பரிமேலழகர். நன்னூல் ஆசிரியர் குறிப்பிடும்,

"வினைமாற்று அசைநிலை பிறிதென்னு மற்றே"[29]

என்னும் நூற்பாவைப் புதியன புகுதல் என்னும் உத்தியுள் அடக்கலாம்.

"பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்

எண்ணப் படுவதொன் றன்று" (கு.எண்:438)

இக்குறளுரையில் 'எவற்றுள்ளும்' என்பது இடைக்குறைந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். அதாவது 'எவற்றுள்ளும்' என்பதின் இடையிலுள்ள 'வற்று'ச் சாரியை குறைந்து 'எற்றுள்ளும்' என வந்தமையால் இது இடைக்குறை விகாரம் ஆயிற்று.

"மடியில்லா மன்னவன் எய்தும் அடியளந்தான்

தாஅயது எல்லாம் ஒருங்கு" (கு.எண்:610)

என்னும் குறளுரையில் 'தாவியது' என்பது இடைக்குறைந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். 'தாவியது' என்னும் சொல்லின் இடையிலுள்ள 'வி' என்பது குறைந்து 'தாஅயது' வருதலால் இது இடைக்குறை விகாரம் ஆயிற்று.

கடைக் குறை விகாரம்

ஒரு சொல்லின் இறுதிக்கண் நிற்கும் உறுப்பு குறைந்து வருதலைக் 'கடைக்குறை விகாரம்' என்பர்.

பரிமேலழகர், செய்யுள் விகாரங்களுள் கடைக்குறையாக வருவனவற்றை ஏழு இடங்களில்(30) குறிப்பிடுகிறார்.

"அறிவினும் எல்லாம் தலையென்ப தீய

செறுவார்க்குஞ் செய்யா விடல்" (கு.எண்:203)

இக்குறளுரையில் 'செய்யாது' என்பது கடைக் குறைந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'செய்யாது' என்பதிலுள்ள கடைசி உறுப்பு 'து' குறைந்து வந்துள்ளமையால் இது கடைக்குறை விகாரம் ஆயிற்று.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு

பொய்யா விளக்கே விளக்கு" (கு.எண்:299)

இக்குறளுரையில் 'பொய்யாதவிளக்கு' என்பது கடைக்குறைந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். 'பொய்யாத' என்பதிலுள்ள கடைசி எழுத்து 'த' குறைந்து வந்துள்ளமையால் இது கடைக்குறை விகாரம் ஆயிற்று.

"சென்ற இடத்தால் செலவிடாஅ தீதுஒரீஇ

நற்றின்பால் உய்ப்ப தறிவு" (கு.எண்:422)

இக்குறளுரையில் 'விடாது' என்பது கடைக்குறைந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். 'விடாது' என்பதிலுள்ள கடைசி எழுத்தாகிய 'து' குறைந்து வந்துள்ளமையால் இது கடைக்குறை விகாரம் ஆயிற்று.

"பலருடைய நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்

அலகுடை நீழ லவர்" (கு.எண்:1034)

இக்குறளுரையில் 'உடைய' என்பது குறைந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். 'உடைய' என்பதிலுள்ள கடைசி எழுத்தாகிய 'யகரம்' குறைந்து 'உடை' என வந்தமையால் இது கடைக்குறை விகாரமாயிற்று.

தொகுத்தல் விகாரமாய் வரும் சில செய்களிலும் கடைசி எழுத்து குறைந்து வரும். சான்றாக 'பிழையாத தற்று' (கு.எண்:307) என்பது கடைக்குறைந்து 'பிழையாதற்று' என வந்துள்ளது. இதனைக் கடைக்குறையா? தொகுத்தல் விகாரமா? என்று கூறுவதில் ஐயம் தோன்றும். இவ்வேறுபாட்டை விளக்க வந்த சேனாவரையார்,

"குறைத்தலாவது ஒரு சொல்லில் சிறிது நிற்ப சிறிது

கெடுத்தலாகலின் முழுவதும் கெடுத்தலாகிய

தொகுக்கும் வழித் தொகத்தலின் (தொகுத்தல்

விகாரம்) வேறாதல் அறிக"(31) என்கிறார்.

சாரியைகள்

பெயர்ச்சொற்களின் பின்னாகிய இடத்தின் கண்ணே சாரியை வரும் என்று கூறி,

"அவைதாம்

இன்னே வற்றே யத்தே யம்மே

ஒன்னே யானே யக்கே யிக்கே

அன்னென் கிளவி உளப்படப் பிறவும்

அன்ன வென்ப சாரியை மொழியே"(32)

என அவற்றின் வகைகளையும் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். நன்னூலாரோ,

"பதத்தின் முன் விகுதியோ, பதமோ, உருபோ புணரும் போது அவற்றுக்கு இடையே ஒரு சாரியையோ பல சாரியையோ வருதலும், வராதிருத்தலும் உண்டு"(33) என்று கூறி, தொல்காப்பியரைக் காட்டிலும் கூடுதலாகப் பல சாரியைகளைக் குறிப்பிடுகிறார்.

"அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்

தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன

இன்ன பிறவும் பொதுச்சாரியையே"(34)

இவ்விரு இலக்கணிகள் கூறும் சாரியைகளில் தொல்காப்பியர் கூறியவற்றையே தம் உரையில் சுட்டுகிறார் பரிமேலழகர்.

‘இன்’ - சாரியை நிற்க இரண்டானுருபு தொக்கல்

பதத்தோடு உருபுகள் சேரும்போது அவற்றுக்கிடையே சாரியைகள் ஒன்றோ பலவோ வரும். இவ்வாறு வருகின்ற சாரியைகள் அப்படியே இருக்க, அவற்றிற்குப்பின்னே வருகின்ற வேற்றுமை உருபுகள் தொக்கி வருதலும் உண்டு.

“அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்கண்

அல்லல் உழப்பதாம் நட்பு” (கு.எண்:787)

இக்குறளுரையில் ‘இன்’ சாரியை நிற்க; இரண்டானுருபு தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு ‘அழிவினவை’ என்பதை ‘அழிவினை உடைய அவை’ என்று பொருள் கொளல் வேண்டும். இவற்றில் இரண்டானுருபு ‘ஐ’-யும், ‘உடைய’ என்னும் சொல்லுருபும் மறைந்துள்ளதால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனவும் கொள்ளலாம். ஆனால் இங்கே ‘அழிவினவை’ என்பதில் ‘இன்’ சாரியை வெளிப்படையாக நிற்க, இரண்டானுருபு ‘ஐ’ மறைந்து வருகின்றமையால் இவ்வாறு கூறுகிறார் பரிமேலழகர்.

அல்வழிக்கண் ‘இன்’ சாரியை வலிந்து நிற்றல்

பதத்தோடு வேற்றுமை உருபுகள் சாராமல் சில சமயங்களில் சாரியைகள் வருதலும் உண்டு. அவ்வாறு வருதலை அல்வழிக்கண் சாரியை வருதல் எனலாம். இவ்வாறு வருகின்ற ‘இன்’ சாரியையினது ‘னகரம்’ வலிந்து நிற்றலை கீழ்க்கண்ட குறளில் குறிப்பிடுகிறார் பரிமேலழகர்.

"செவியுணவிற் கேள்வி உடையார் அவியுணவின்

ஆன்றாரோ டொப்பர் நிலத்து" (கு.எண்:413)

என்பதில் 'உணவிற் கேள்வி' என்பது 'உணவின் கேள்வி' என வரல் வேண்டும். இங்கு 'இன்' சாரியை வேற்றுமை உருபுகளோடு சேராமல் அல்வழியில் வந்துள்ளது. மேலும் 'இன்' சாரியையினது 'னகரம்' (மெல்லினம்) 'றகரமாக' (வல்லினம்) மாறி வலிந்து நிற்றலையும் அறியமுடிகிறது.

அல்வழிக்கண் 'அத்து' சாரியை வரல்

"தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே

காமத்துக் காழில் கனி" (கு.எண்:1191)

இக்குறளில் 'காமத்து' என்ற சொல்லில் வேற்றுமை உருபுகளோடு சாராமல் 'அந்து' சாரியை வந்துள்ளமையால், அல்வழிக்கண் 'அத்து' சாரியை வந்தது என்கிறார் பரிமேலழகர்.

'அத்து' சாரியை விகாரத்தால் தொக்கல்

"நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்

பிறற்குரியார் தோள்தோயா தார்" (கு.எண்:149)

இக்குறளுரையில் 'அத்து' சாரியை விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'நலக்கு' என்பது 'நலத்திற்கு' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் 'அத்து'ச் சாரியை தொக்கியுள்ளமையால் இது தொக்கல் விகாரத்தின்பாற்பட்டது எனலாம். மேலும் மகரவீற்றுச்சொல் வேற்றுமை உருபு ஏற்கும் போது,

"மஃகான் புள்ளிக் கத்தே சாரியை"[35]

என்ற தொல்காப்பிய நூற்பா வழி 'நலம்' என்பது 'நலத்துக்கு' என்று 'அத்து'ச் சாரியை பெற்று வரவேண்டும். அவ்வாறில்லாமல் 'நலக்கு' என வந்ததனால் 'அத்து' சாரியை விகாரத்தால் தொக்கது என்கிறார்.

"உணலினும் உண்ட தறலினிது காமம்

புணர்தலினும் ஊடல் இனிது" (கு.எண்:1326)

இங்கு 'காமம்' என்பது 'காமத்திற்கு' என வரல் வேண்டும். அவ்வாறில்லாமல் நான்கானுருபு 'கு'- வும், 'அத்து' ச் சாரியையும் மறைந்து வந்துள்ளமையால், சாரியையும், நான்கானுருபும் விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர்.

'அன்' சாரியை விகாரத்தால் தொக்கி வரல்

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்

பெற்றத்தாற் பெற்ற பயன்" (கு.எண்:524)

இக்குறளுரையில் 'பெற்றத்தால்' என்பதில் 'அன்' சாரியை விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்குப் 'பெற்றத்தால்' என்பது 'பெற்றவதனால்' என்பதின் தொகுத்தல் விகாரமாகும். (அன் சாரியை மறைந்துள்ளமையால்) ஏனெனில் "அது அல்லது அஃது என்ற சுட்டுப் பெயர் 'ஆல்' என்னும் வேற்றுமை உருபு ஏற்கும் போது 'அன்' சாரியை பெற்று 'அதனால்' என நிற்குமே யன்றி, சாரியை பெறாது. 'அதால்' என நில்லாது என்ற தொல்காப்பியரின் கருத்தையொட்டியே பரிமேலழகர் உரைக்கிறார்"[36] எனலாம்.

உடம்படுமெய்

புணர்ச்சியில் நிலைமொழி இறுதியிலும், வருமொழி முதலிலும் உயிர்கள் வரும் பொழுது அவை இரண்டையும் உடம்படுத்த யகரம், வகரம் ஆகிய இரண்டு மெய்கள் வரும். இவ்வாறு வரும் மெய்களுக்கு 'உடம்படுமெய்' என்று பெயர்.

உடம்படுமெய்கள் வருகின்ற தன்மையை நன்னூலார்,

"இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ்விருமையும்
உயிர்வரின் உடும்படுமெய் என்றாகும்"(37)

என்கிறார். இதன் மூலம் நிலைமொழியில் இ, ஈ, ஐ வந்தால் யகரமும், ஏனைய உயிர் வந்தால் வகரமும், ஏகாரம் வந்தால் யகரமும், வகரமும் வரும் என்பதை இந்நூற்பா வாயிலாக அறியலாகிறது.

பரிமேலழகர் ஓரிடத்தில் உடம்படுமெய் வருதலைச் சுட்டுகிறார்.

"அழிவின் அறைபோகா தாகி வழிவந்த
வன்கண் அதுவே படை" (கு.எண்: 764)

இக்குறளுரையில் குற்றியலுகரத்தின் முன் உடம்படுமெய் விகாரத்தான் வந்தது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'வன்கணதுவே' என்பதை 'வன்கணது+ஏ' எனப் பிரிக்கலாம். இவற்றில்; நிலைமொழியின் ஈற்றில் 'உகரம்' வந்து வருமொழி முதலில் ஏகாரம் வந்துள்ளமையால் இவ்விரு உயிர்களையும உடம்படுத்த 'வகரம்' உடம்படு மெய்யாக வந்து 'வன்கணதுவே' என வந்தது எனலாம்.

ஆனால் குற்றியலுகரத்தின் முன்னர் உடம்படுமெய் வராது என்பதை,

"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்"(38)

என்கிறார் நன்னூலார். இந்நூற்பா படி 'வன்கணது+ஏ=வன்கணதே' என்றுதான் வரல் வேண்டும். அவ்வாறில்லாமல் 'வன்கணதுவே' என்று வந்தது விரித்தல் விகாரத்தின்பாற்பட்டது என்கிறார் பரிமேலழகர்.

திருக்குறளில் பரிமேலழகரால் சுட்டப்பட்ட எழுத்து இலக்கணக்கூறுகளும் அவை இடம் பெற்ற குறட்பாக்களும் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

வ.எண்	இலக்கணக் கூறுகள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	சுட்டுக்கள்	
	i.சுட்டு நீளுதல்	1179
	ii.இகரச் சுட்டு வருவித்தல்	1082
2.	வினாச் சொல்	
	i.எகர வினா	211, 987
3.	குற்றியலுகரம்	
	i. உயிர்த்தொடர் குற்றியலுகரம்	334
4.	விகுதிகள்	
	i. 'அன்' - விகுதி	205
	ii. 'அல்' - விகுதி	720
	iii. 'ஐகார விகுதி'	1301

5.	பகுதிப் பொருள் விகுதி	221, 235, 435, 637, 1249
6.	காலங்கள்	
	i. இறந்த காலம்	3, 61, 454, 511
7.	தொழிற் பெயர்கள்	235, 523, 1005
	i. முதனிலைத் தொழிற் பெயர்கள்	93, 117, 177, 564, 614, 638, 653, 720, 798, 807, 877, 1051, 1313, 1318
	ii. முதனிலைத் திரிந்த தொழிற் பெயர்கள்	115, 400, 736
8.	செய்யுள் விகாரங்கள்	
	i. வலித்தல் விகாரம்	413, 950, 1095
	ii. மெலித்தல் விகாரம்	352, 1000
	iii. தொகுத்தல் விகாரம்	25, 43, 59, 537, 547, 570, 701, 714, 829, 852, 866, 911, 950, 1037, 1059, 1221, 1264
	iv. இடைக்குறை விகாரம்	149, 173, 307, 438, 610, 653, 1180
	v. கடைக்குறை விகாரம்	203, 299, 422, 1034, 1052, 1187, 1264

9.	சாரியைகள்	
	i. 'இன்' - சாரியை நிற்க இரண்டானுருபு தொக்கல்	787
	ii. அல்வழிக்கண் 'இன்' - சாரியை வலிந்து நிற்றல்	413,
	iii. அல்வழிக்கண் 'அத்து' - சாரியை வரல்	1191
	iv. 'அத்து' - சாரியை விகாரத்தால் தொக்கி வருதல்	149, 1326
	v. 'அன்' - சாரியை விகாரத்தால் தொக்கி வருதல்	524
10.	உடம்படுமெய்	764

தொகுப்புரை

1. பரிமேலழகர் பெரும்பாலும் தொல்காப்பியத்தை அடியொற்றியே எழுத்து இலக்கணக்கூறுகளை விளக்குகிறார்.

2. பரிமேலழகர் சுட்டும் எழுத்திலக்கணக் கூறுகளில் செய்யுள் விகாரங்கள் மிகுதியான இடங்களில் பயின்று வருகின்றன.

3. பரிமேலழகர் தொகுத்தல் விகாரத்தை 17 இடங்களில் சுட்டுகிறார்.

4. தொகுத்தல் விகாரத்திற்கும், கடைக்குறை விகாரத்திற்கும் சேனாவரையர் வேறுபாடு காட்டும் விதம் பரிமேலழகர் உரைக்கு வலிமை சேர்ப்பதாக உள்ளது.

5. செய்யுள் விகாரங்களுக்கு அடுத்தபடியாகப் பகுதிப்பொருள் விகுதியும், காலங்களும் மிகுதியாக இடம் பெறுகின்றன.

6. குற்றியலுகரத்தை அடுத்தும் உடம்படுமெய் வரும் என்பதைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

7. தொல்காப்பியர் சுட்டிய சாரியைகளை மட்டும் பரிமேலழகர் தம் உரையில் விளக்கிச் செல்கிறார்.

8. பரிமேலழகர் உரையில் எழுத்திலக்கணக்கூறுகள் குறைந்த அளவிலேயே சுட்டப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், நூன்மரபு, நூ.31.
2. நன்னூல், எழுத்தியல், நூ.11.
3. தொல்காப்பியம், நூன்மரபு, நூ.32.
4. நன்னூல், எழுத்தியல், நூ.12.
5. தொல்காப்பியம், மொழிமரபு, நூ.3.
6. நன்னூல், எழுத்தியல், நூ.39.
7. நன்னூல், பதவியல், நூ.6.
8. நன்னூல், எழுத்ததிகாரம், சோம.இளவரசு உரை, ப.64.
9. நன்னூல், பதவியல், நூ.13.
10. மேலது, நூ.7.
11. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், வை.மு.கோபாலக் கிருஷ்ணமாச்சார்யன், ப.165.
12. தொல்காப்பியம், வினையியல், நூ.3.
13. நன்னூல், பதவியல், நூ.15.
14. நன்னூல், பதவியல், காண்டிகை உரை, ப.100.
15. நன்னூல், மெய்யீற்றுப்புணரியல், காண்டிகை உரை, ப.138.
16. பிரயோகவிவேகம், திங்ஙப்படலம், செய்.1.
17. குறள்:93, 117, 177, 536, 564, 607, 614, 638, 653, 720, 798, 807, 877, 1051, 1313, 1318.
18. நன்னூல், உயிரீற்றுப் புணரியல், நூ.155.
19. மேலது, நூ.156.
20. நன்னூல், உயிரீற்றுப் புணரியல், காண்டிகை உரை, ப.100.

21. தொல்காப்பியம், புணரியல், நூ.124.

22. தொல்காப்பியம், புள்ளி மயங்கியல், நூ.333.

23. தொல்காப்பியம், உயிரீற்றுப் புணரியல், காண்டிகை உரை, ப.199.

24. குறள்: 25, 43, 59, 537, 547, 570, 701, 714, 829, 852, 866, 911, 950, 1037, 1059, 1221, 1264.

25. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், வை.மு. கோபாலக் கிருஷ்ணமாச்சாரியார் உரை, ப.105.

26. குறள்: 143, 173, 307, 438, 610, 653.

27. தொல்காப்பியம், இடையியல், நூ.14.

28. மேலது, நூ.16.

29. நன்னூல், இடையியல், நூ.14.

30. குறள்:203, 299, 422, 950, 1034, 1052, 1187.

31. தொல்காப்பியம், எச்சவியல், சேனாவரையருரை, ப.241.

32. தொல்காப்பியம், புணரியல், நூ.17.

33. நன்னூல், உருபு புணரியல், நூ.17.

34. மேலது, நூ.5.

35. தொல்காப்பியம், உருபியல், நூ.13.

36. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், வை.மு.கோபாலச் கிருஷ்ண மாச்சாரியார் உரை, ப.136.

37. நன்னூல், உயிரீற்றுப்புணரியல், நூ.12.

38. மேலது, நூ.14.

இயல் - 2

சொல்லிலக்கணக் கூறுகள்

இயல்-2

திருக்குறள் பரிமேலழகர் உரையில் சொல்லிலக்கணக் கூறுகள்

உலக மக்கள் பலரால் போற்றிப் பாராட்டப்படுகின்ற நூல் திருக்குறள் எனலாம். அதனால்தான் 'உலகப்பொதுமறை' என அனைவராலும் போற்றப்படுகிறது. இதனை நன்கு கற்று உணர்ந்தவர்கள் உயர்வு தாழ்வு என்ற பேதம் பாராட்ட மாட்டார்கள் என்பதை,

"வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒரு குலத்துக் கொருநீதி"

என்கிறார் மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை.

இத்தகு சிறப்புடைய திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையில் பல்வேறு இலக்கணக் கூறுகள் காணப்படுகின்றன. அவற்றில் சொல் இலக்கணக் கூறுகள் மட்டும் இவ்வியலில் இடம்பெறுகின்றன.

சொல் இலக்கணமானது, தொல்காப்பியத்தில் ஒன்பது இயல்களாகவும் நன்னூலில் ஐந்து இயல்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. பரிமேலழகர் சுட்டுகின்ற இலக்கணக் குறிப்புகள் இவ்விரு நூல்களிலும் இடம் பெறுகின்றன. பரிமேலழகர் பெரும்பாலும் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு தம் இலக்கணக் கூறுகளைச் சுட்டுகிறார். சில இடங்களிலும்

நன்னூலையும் பயன்படுத்துகிறார். சான்றாக, நன்னூலார் சுட்டும் 'ஒரு பொருட் பன்மொழி' என்பதைப் பரிமேலழகர் தம் உரையில் பயன்படுத்துகிறார். இதன்மூலம் 'பரிமேலழகர் நன்னூலாருக்குப் பிற்பட்டவர்' என நிறுவுகிறார் (உரையாசிரியர்கள், ப.319) மு.வை.அரவிந்தன்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் சொல்லிலக்கணக் கூறுகளை மிகுதியான இடங்களில் சுட்டுகிறார். அவர் சுட்டும் கூறுகளாவன;

1. உயர்திணைகளும் அஃறிணைகளும்

i உயர்திணை அஃறிணையை ஒத்து வருதல்

ii உயர்திணைப் பொருட்கண் வந்த அஃறிணைச் சொல்

iii உயர்திணைப் பன்மை

iv உயர்திணைப் பன்மை வினை

v படர்க்கை ஒருமை

vi பன்மையாகக் கூறல்

vii பொருட் பன்மை

2. பெயர்கள்

i அஃறிணைப் பன்மைப் பெயர்

ii பால் விளங்கா அஃறிணை படர்க்கைப் பெயர்

iii அஃறிணை பன்மை வினாப் பெயர்

iv குணப்பெயர்

v வாளா பெயர்

vi பெயரடை

vii குறிப்பு வினையாலணையும் பெயர்

vii சுட்டுப்பெயர்

௩. ஆகுபெயர்கள்

i பண்பாகு பெயர்

ii இடவாகு பெயர்

iii பொருளாகு பெயர்

iv காரியவாகு பெயர்

v காரணவாகு பெயர்

vi முதலாகு பெயர்

vii சினையாகு பெயர்

viii தொழிலாகு பெயர்

ix கருவியாகு பெயர்

x காலவாகு பெயர்

xi தானியாகு பெயர்

xii எண்ணல் அளவையாகு பெயர்

xiii இருமடியாகு பெயர்

xiv அடையடுத்த பண்பாகு பெயர்

xv உவமவாகு பெயர்

4. வேற்றுமைகள்

i வேற்றுமையின் பெயரும் முறையும்

ii வேற்றுமை மயக்கம்

iii வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக வரல்

iv இரண்டாம் வேற்றுமை

v ஐந்தாம் வேற்றுமை

vi வேற்றுமை உருபுகள் மயங்கி வருதல்

vii வேற்றுமை உருபுகள் விகாரத்தால் தொக்கி வருதல்

அ. இரண்டானுருபு தொக்கி வருதல்

ஆ. மூன்றானுருபு தொக்கி வருதல்

இ. நான்கானுருபு தொக்கி வருதல்

ஈ. ஐந்தானுருபு தொக்கி வருதல்

உ. ஏழானுருபு தொக்கி வருதல்

ஊ. ஏழானுருபும் சாரியையும் மயங்கி வருதல்

எ. நான்கானுருபும் சாரியையும் தொக்கி வருதல்

viii எழுவாய் வருவித்தல்

ix செயப்படுபொருள் வருவித்தல்

5. வினைச்சொற்கள்

i எதிர்மறை வினை

ii சினைவினை

iii பெயரடியாய வினை

iv வியங்கோள் வினைமுற்று

v எதிர்கால வினைச்சொல்

vi வினைமுதல் வருவித்தல்

vii எதிர்கால - ஆர் ஈற்று முற்றுச்சொல்

6. எச்சங்கள்

i பெயரெச்சம்

ii ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

iii வினையெச்சம்

iv எதிர்மறை வினையெச்சம்

v இறந்த கால வினையெச்சம்

vi செயப்பாட்டு வினையெச்சம்

vii சொல்லெச்சம்

viii செய்தனெச்சம்

ix முற்றெச்சம்

x குறிப்பெச்சம்

xi இசையெச்சம்

xii மறுதலை எச்சம்

xiii எச்சத்திரிபு

௭. இடைச்சொற்கள்

i இடைச்சொல் நிற்குமிடம்

ii உம் - என்னும் இடைச்சொல்

அ. எச்சவும்மை

ஆ. இறந்தது தழீஇய எச்சவும்மை

இ. எதிரது தழீஇய எச்சவும்மை

ஈ. எச்சவும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதல்

iii சிறப்பும்மை

அ. உயர்வு சிறப்பும்மை

ஆ. இழிவு சிறப்பும்மை

இ. உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கி வருதல்

ஈ. இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கி வருதல்

iv முற்றும்மைகள்

அ. முற்றும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதல்

v எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதல்

vi ஏகார இடைச்சொல்

அ. தேற்ற ஏகாரம்

ஆ. பிரிநிலை ஏகாரம்

vii ஓகார இடைச்சொல்

அ. எதிர்மறை ஓகாரம்

ஆ. அசைநிலை ஓகாரம்

இ. பிரிநிலை ஓகாரம்

viii மன் - இடைச்சொல்

அ. ஒழியிசை

ix எண்ணிடைச்சொல்

x மூன்றாவதன் பொருள்படுவதோர் இடைச்சொல்

xi செவ்வெண்

xii மற்று - வினை மாற்று

xiii அசைநிலைகள்

க். ஓகார அசைநிலை

ங். கொல் - அசைநிலை

ச். மற்று - அசைநிலை

ஞ். மன் - அசைநிலை

ட். உம் - அசைநிலை

ண். ஆங்கு - அசைநிலை

ந். ஒரும் - அசைநிலை

த். ஆல் - அசைநிலை

ப். ஆம் - அசைநிலை

ம். தான் - அசைநிலை

ய். ஐகாரம் - அசைநிலை

ர். அரோ - அசைநிலை

ல். பிற - அசைநிலை

வ். வாழி - அசைநிலை

8. உரிச்சொற்கள்

i நாம்

ii நனி

iii கடி

iv ஒரு பொருட் பன்மொழி

9. தொகைநிலைத் தொடர்கள்

i வேற்றுமைத் தொகை

அ. நான்காம் வேற்றுமைத் தொகை

ஆ. மூன்றாம் வேற்றுமைத் தொகை

இ. ஆறாம் வேற்றுமைத் தொகை

ஈ. பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றமைத் தொகை

ii வினைத்தொகை

iii பண்புத்தொகை

அ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

iv உம்மைத் தொகை

v *உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை*

10. குறிப்பு மொழிகள்

i *குறிப்புச் சொல்*

ii *புகழ்ச்சிக்குறிப்பு*

iii *இகழ்ச்சிக் குறிப்பு*

iv *வியப்புக் குறிப்பு*

v *உடன்பாட்டுக் குறிப்பு*

vi *விரைவுக் குறிப்பு*

vii *இரக்கக் குறிப்பு*

11. பின்மொழி நிலையல்

12. இடக்கரடக்கல்

13. இசைநிறை

14. இடவழுவமைதி

15. அடுக்குத் தொடர்

16. பொருள் கோள்

i *நிரல் நிறைப் பொருள்கோள்*

அ. நேர்நிரல் நிறைப் பொருள்கோள்

ஆ. எதிர்நிரல் நிறைப் பொருள்கோள்

ii *தாப்பிசைப் பொருள் கோள்*

17. பால் மயக்கு உறழ்ச்சி

18. உலக வழக்கு

19. அதிகாரம்

20. அவாய் நிலை

இவ்வியலானது தொல்காப்பியம் - நன்னூல் நூற்பாக்களை யொட்டியும், தொல்காப்பியம் - நன்னூலுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் கருத்தையொட்டியும், தேவைப்படும் இடங்களில் வேறுசில இலக்கண நூல்களைப் பின்பற்றியும் அமைக்கப்பட்டுள்ளது.

உயர்திணைகளும் அஃறிணைகளும்

உயர்திணை, அஃறிணை பற்றிக் கூறவந்த தொல்காப்பியர்,

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமென சொல்லே"(1)

இக்கருத்திணை ஏற்றுக்கொண்டே நன்னூலார், "மக்கள், தேவர், நரகர் ஆகியவை உயர்திணை என்றும் மற்றுமுள்ள உயிர் உள்ள பொருள்களும், உயிரற்ற பொருட்களும் அஃறிணை"(2) என்று குறிப்பிடுகிறார்.

பரிமேலழகர் உயர்திணை பற்றி தம்முடைய உரையில் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

"மனநல மன்னுயிர்க் காக்கி இனநலம்
எல்லாப் புகழும் தரும்" (கு.எண்.457)

என்பதில் 'மன்னுயிர்' என்றது ஈண்டு உயர்திணைமேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'மன்னுயிர்' என்பது நிலைத்த உயிர்களைப் பற்றி வருவதால் இது அஃறிணையை குறித்து நிற்றல்

வேண்டும். அவ்வாறு வாராமல் 'மன்னுயிர்' என்பது மனத்தினது நன்மையினையும் இனத்தினது நன்மையினையும் குறித்து நிற்கிறது. இவை இரண்டு பண்புகளும் அஃறிணைக் குறிதல்லாமல் உயர்திணைக்கே உரியது என்பதால் உயர்திணைமேல் நின்றது என்கிறார்.

உயர்திணை அஃறிணையை ஒத்து வருதல்

உயர்திணையானது அஃறிணையை ஒத்து வருதலைப் பரிமேலழகர் இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறார்.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை" (கு.எண். 12)

என்பதில் 'மழை' என்பது உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின் அஃறிணைக்கும் இஃது ஒக்கும் என்கிறார் பரிமேலழகர். இங்கு மழையானது உண்பவர்க்கு உணவாகப் பயன்படுகிற காரணத்தால் 'துப்பார்க்கு' என உயர்திணையில் கூறுகிறார் திருவள்ளுவர். ஆனால் மற்றைய அஃறிணை உயிர்களின் பசியையும் நீர்வேட்கையும் போக்குதலின் இது அஃறிணைக்கும் ஒத்து வரும் என்பதை பரிமேலழகர் உரைவழி அறியமுடிகிறது.

"வலியார்முன் தன்னை நினைக்காதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து" (கு.எண். 250)

என்பதில் 'மெலியார்' எனச் சிறப்புடைய உயர்திணைமேல் கூறினாராயினும் ஏனை அஃறிணையும் கொள்ளப்படும் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'மெலியார்' என்பதனை 'எளியார்' எனக்

கொண்டால் உயர்திணை. 'மெலியவற்றின்மேல்' எனக் கொண்டால் அஃறிணையை ஒத்து வருவதை அறியமுடிகிறது. இதனால்தான் பரிமேலழகர் அஃறிணையும் கொள்ளப்படும் என்கிறார்.

உயர்திணைப் பொருட்கண் வந்த அஃறிணைச் சொல்

அஃறிணைச் சொல்லானது உயர்திணையில் வருவதைப் பரிமேலழகர் ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார்.

"கொலைமேற்கொண் டாரிற் கொடியதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து" (கு.எண்.551)

என்பதில் 'வேந்து' என்பது உயர்திணை பொருட்கண் வந்த அஃறிணைச் சொல் என்கிறார் பரிமேலழகர். குடிமக்களை அல்லல்படுத்தி அலைக்கழிக்கும் மன்னவன் கொலைகாரர்களை விடக்கொடியவன் ஆவான் என்பது குறளின் கருத்து. இங்கு 'வேந்து' என்பது பொருளால் உயர்திணை ஆயினும் சொல்லால் அஃறிணை ஆதலை 'கொடிது' என்ற வினைமுற்றின் மூலம் அறியலாம். இவ்வாறு உயர்திணை சொல்லால் அஃறிணையாதலை,

"குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
....
உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்"(3)

என்ற நூற்பா முலம் அறியலாம். இதனுரையில் சேனாவரையர், 'அன்னபிறவும்' என்றதனால் "வேந்து வேள் குரிசில் அமைச்சு புரோசு என்னும் தொடக்கத்தனவுங் கொள்க"(4) என்கிறார்.

உயர்திணை பன்மை

உயர்திணைப் பன்மை என்பது பலர்பாலைக் குறிக்கும். இலக்கணிகள் 'பால்' என்பதை ஐந்தாகப் பகுத்து, அவை உயர்திணைக்கு மூன்று என்றும் அஃறிணைக்கு இரண்டு என்றும் குறிப்பிடுகின்றார். உயர்திணைக்குரிய பால்களாக நன்னூலார்,

"ஆண் பெண் பலர்என முப்பாற்று உயர்திணை"(5)

என்கிறார்.

"ஒன்றே பலஎன்று இருபாற்று அஃறிணை"(6)

என இரண்டனையும் நன்னூலார் குறிப்பிடுகிறார்.

உயர்திணை பன்மையில் (பலர்பாலில்) வருவதைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்" (கு.எண். 306)

என்பதில் 'சேர்ந்தாரை' என்பது உயர்திணைப் பன்மை என்கிறார் பரிமேலழகர். சினம் என்பது தன்னை மட்டுமன்றி, தன்னைச் சேர்ந்தவர்களையும் கொன்று அழித்துவிடும் என்பது குறளின் கருத்து. இங்கு 'சேர்ந்தாரை' என உயர்திணைப் பன்மையில் கூறுவதற்குக் காரணம் என்னவெனில் சேர்ந்தான், சேர்ந்தாள்,

சேர்ந்தது, சேர்ந்தன என்று ஏனைய நான்கு பால்களையும் நாம் கருதிக் கொள்ள வேண்டும் என்பதற்குத்தான். இதன் மூலம் சினம் என்பது அனைத்து பால்களுக்கும் உரியது என்பது புலனாகிறது. "உயர்திணைப் பலர்பால் விகுதிகளாக ர், கள் ஆகியவை வரும்"(7) என்கிறார் நன்னூலார். இங்கு 'சேர்ந்தார்' என்பதில் பன்மைக்குரிய 'ர்' விகுதி வந்து உயர்திணையையும் குறிப்பதனால் இதனை உயர்திணைப்பன்மை எனலாம்.

உயர்திணை பன்மை வினை

உயர்திணை பன்மை வினை என்பது பலர்பால் வினைமுற்றைக் குறிக்கும். பலர்பால் வினைமுற்று விகுதிகளாக நன்னூல்,

"அர்ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற
பல்லோர் படர்க்கை மார் வினையோடு முடியுமே"(8)

என்கிறது. இதன்மூலம் அர், ஆர், ப, மார் என்பன பலர்பால் வினைமுற்று விகுதிகளாக வருவதனை அறியமுடிகிறது.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (கு.எண்.392)

இக்குறளுரையில் 'கண்ணென்ப' என்பதில் உள்ள 'என்ப' உயர்திணை பன்மை வினை என்கிறார் பரிமேலழகர். எண்ணும் எழுத்தும் உயிர்களுக்கு 'கண்' போன்றதாகும் என்பது குறளின் கருத்து. இங்கு 'உயிர்களுக்கு' என்பது உயர்திணையைக் குறித்து நிற்கிறது. 'கண்ணென்ப' என்பதில் உள்ள பகர ஈறு பலர்பால் வினைமுற்றைக் குறிக்கிறது. இதனால்தாதன் பரிமேலழகர் 'கண்ணென்ப' என்பதில்

உள்ள 'என்ப' என்ற சொல்லினை உயர்திணை பன்மை வினை என்கிறார்.

படர்க்கை ஒருமை

இடம் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும் என்பதை நன்னூல்,

"தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே"(9) என்கிறது.

ஒருமைக்குரிய சொற்கள் பற்றித் தொல்காப்பியர்,

"ஒருமை எணணின் பொதுப் பிரிபாற் றொல்
ஒருமைக்கல்லது எண்ணுமுறை நில்லாது"(10)

என்கிறார். இதன் வாயிலாக 'படர்க்கை ஒருமை' என்பது தன்மை, முன்னிலை அல்லாத ஒரு பொருளைக் குறிப்பது என்று அறிய முடிகிறது.

"இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து" (கு.எண்.205)

என்பதில் இரண்டாம் அடியில் 'இலன்' என்பதிலுள்ள 'அன்' விகுதி படர்க்கை ஒருமை குறித்து நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'இலன்' என்பது 'இல்லாதவன்' என்னும் பொருளைக் குறிக்கிறது. 'அன்' விகுதி ஆண்பால் படர்க்கைக்கு வரும் என்பதை நன்னூல்,

"அன்ஆன் இறுமொழி ஆண்பால் படர்க்கை"(11)

என்கிறது. இதன் வாயிலாக 'இலன்' என்பது ஆண்பாலில் வந்து, தன்மை முன்னிலை அல்லாத படர்க்கையும் குறித்து ஒருமையிலும் வந்துள்ளமையைக் காணலாம்.

பன்மையாகக் கூறல்

'பன்மை' என்பது பலவின் பாலைக் குறிக்கும். பலவின்பால் வினைமுற்று விகுதிகளாக நன்னூலார்.

"அஆ ஈற்ற பலவின் படர்க்கை

ஆவே எதிர்மறைக் கண்ணை தாகும்"(12)

பரிமேலழகர் நான்கு இடங்களில் பன்மையாக வருதலைக் குறிப்பிடுகிறார்.

"ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்

காதலர் கண்ணே உள" (கு.எண்.1099)

இக்குறளுரையில் 'உள' பன்மையாகக் கூறப்பட்டது என்கிறார் பரிமேலழகர். பொதுவிடங்களில் வேற்று மனிதரைப் போலப் பொதுவாகப் பார்க்கின்ற தன்மை, அகத்தே காதல் கொண்டவர்களிடத்தில் மட்டுமே உள்ள ஒரு தனி நுட்பம் ஆகும் என்பது குறளின் கருத்து. இங்கு 'நோக்குதல் உளது' என ஒன்றன் பாலால் கூறாமல் 'நோக்குதல் உள' என பலவின்பாலாற் (பன்மையால்) கூறியதற்குக் காரணம் தலைவன், தலைவி என்ற இருவரிடத்தும் நோக்குதல் உண்டு என்பதற்காகத்தான். இருவருடைய பார்வைகளைக் கூறுவதனால் 'உள' என பன்மையில் கூறுகிறார் எனலாம். மேலும் பன்மைக்குரிய விகுதியாகிய 'அ' என்பது 'உள' என்ற சொல்லின் இறுதியில் வந்துள்ளமையாலும் இதனை 'பன்மை' என்கிறார்.

"அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்

பெண்ணேவல் செய்வார்கண் இல்" (கு.எண்.909)

அறச்செயலும், பொருட்செயலும் பிறவாகிய இன்பச் செயலும் பெண்ணிடம் ஏவல் செய்பவர்களிடம் இல்லை என்பது குறளின் கருத்து. இங்கு 'பிறவினை' பன்மை என்கிறார் பரிமேலழகர். பிறவினை எனப் பன்மையாற் கூறியதற்குக் காரணம் ஐம்புலன்களாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களால் இன்பமானது உணரப்படுகிறது. 'பிற' என்பது ஐம்புலன்களை குறித்தலாலும் பன்மைக்குரிய 'அ' விகுதி வந்துள்ளமையாலும் இதனைப் பன்மை எனலாம்.

"உடம்போடு உயிரிடை என்னமற் றன்ன

மடந்தையோடு எம்மிடை நட்பு" (கு.எண்.1122)

உடம்புக்கும் உயிர்க்கும் உள்ள நட்பு எத்தன்மையதோ அதேப் போன்றது எனக்கும் என்னவளுக்கும் உள்ள உறவு என்பது குறளின் கருத்து. இங்கு உடம்பும், உயிரும் வேற்றுமையின்றித் தொன்று தொட்டுக் கலந்து வருவதால் இவை இரண்டையும் சேர்த்து 'என்ன' எனப் பன்மையில் கூறுகிறார். மேலும் 'என்ன' என்பதில் பன்மைக்குரிய 'அ' விகுதி வந்துளளது. இதனால் 'என்ன' என்பதைப் பரிமேலழகர் பன்மை என்கிறார்.

"ஒருநாள் எழுநாள்போற் செல்லும்சேட் சென்றார்

வருநாள்வைத் தேங்கு பவர்க்கு" (கு.எண்.1269)

இங்கு 'எழுநாள்' என்பது மிக்க பன்மை குறித்து நின்றது என்கிறார்

பரிமேலழகர். இங்கு 'எழுநாள்' என்பது ஏழுக்கு மேற்பட்ட பல நாள்களைக் குறித்தலால் இது பன்மை ஆயிற்று எனலாம்.

பொருட் பன்மை

பொருளானது பன்மை பற்றி வந்தால் அது 'பொருட்பன்மை' ஆகும்.

"இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள" (கு.எண்.223)

இங்கு ஈதல் 'பொருட்பன்மை' என்கிறார் பரிமேலழகர். ஏனெனில் ஈதல் தொழில் ஒன்றாயினும் இரக்கம் பலருக்கும் ஈயப்படும் பொருள்கள் பலவாதலால் அப்பொருள்களின் பன்மைபற்றி ஈதலும் இங்குப் பன்மையாயின எனலாம்.

பரிமேலழகரால் சுட்டப்படும் திணை, பால், எண், இடங்களும், அவை இடம்பெற்ற குறட்பாக்களும் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

வ.எண்	திணை, பால், எண், இடங்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	உயர்திணை அஃறிணையை ஒத்து வருதல்	12, 250
2.	உயர்திணைப் பொருட்கண் வந்த அஃறிணைச் சொல்	551
3.	உயர்திணைப் பன்மை	306
4.	உயர்திணைப் பன்மை வினை	392
5.	படர்க்கை ஒருமை	205
6.	பன்மையாகக் கூறல்	1099, 909, 1122, 1269
7.	பொருட்பன்மை	223

பெயர்கள்

அஃறிணைப் பன்மைப் பெயர்

அஃறிணைப் பன்மைப் பெயர் என்பது பலவின்பால் பெயரையும் குறிக்கும். பலவின்பால் பெயர் விகுதிகளாக,

"வை, அ, கள், ஆகியன வரும்"[13]

என்கிறார் நன்னூலார்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (கு.எண்.392)

இக்குறளுரையில் முதலடியில் வந்த 'என்ப' இரண்டும் அஃறிணைப் பன்மைப் பெயர் என்கிறார் பரிமேலழகர். 'எண்ணென்ப, எழுத்தென்ப' ஆகியவை 'எண்கள் என்பன, எழுத்துக்கள் என்பன' என விரியும். 'எண்கள், எழுத்துக்கள்' இரண்டும் அஃறிணைப் பெயரினையும் 'என்பன' என்பவற்றின் இறுதியில் அகர ஈறு வந்து பன்மையையும் சுட்டினமையால் இது அஃறிணைப் பன்மைப் பெயர் ஆயிற்று.

பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்

ஒன்றன் பாலுக்குரிய 'து' விகுதியையாவது, பலவின் பாலைக் காட்டுகிற 'வை, அ, கள்' என்னும் விகுதிகளில் ஒன்றையாவது பெறாமல் அவ்விரு பால்களுக்கும் பொதுவாய் வருகிற அஃறிணைப்பெயர் பால்விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர் ஆகும். இதனை நன்னூல்,

"பால்பகா அஃறிணைப் பெயர்கள் பால் பொதுமையை"(14)

என்கிறது.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரந்தளிர்த் தற்று" (கு.எண்.78)

இக்குறளுரையில் 'வற்றல்' என்பது பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'வற்றல்' என்பது அஃறிணையில் வந்து ஒன்றன் பாலுக்குரிய விகுதியையோ, பலவின் பாலுக்குரிய விகுதியையோ பெறாமல் இரண்டுக்கும் பொதுவாக வந்துளளமையால் இது பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயராயிற்று.

அஃறிணைப் பன்மை வினாப் பெயர்

யகரம் அஃறிணை பன்மை வினாப் பெயராக வரும் என்பதை,

"..............

பல்ல சில்ல உளஇல பலசில

இன்னவும் பலவின் பெயராகும்மே"(15)

என்ற நூற்பாவில் வரும் 'இன்னவும்' என்ற தொடரின் மூலம் அறியமுடிகிறது.

'இன்னவும்' என்றதனால் யா, பிற, மற்றைய என அஃறிணைப் பலவின்பால் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்க"(16) என்கிறார்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (கு.எண்.1127)

யாதொன்றையும் காக்காவிட்டாலும் நாவு ஒன்றையாவது காத்தல் வேண்டும். இல்லையென்றால் மற்றவர் சொல் குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்பது குறளின் கருத்து. இங்கு 'யாது' என்னும் அஃறிணைப் பன்மை வினாப்பெயர் 'யா' எனத்தொக்கி நின்றமையால் பரிமேலழகர் 'யா' அஃறிணைப் பன்மை வினாப் பெயர் என்கிறார்.

குணப்பெயர்

பெயர்ச் சொல்லானது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என ஆறுவகையாகப் பகுக்கப்படுகிறது. இவற்றில் 'குணப்பெயர்' என்பது ஒன்றினது பண்பைக் குறிக்கும் பெயராகும்.

இவை வண்ணம், வடிவம், அளவு, சுவை, தன்மை ஆகியவற்றில் ஒன்றைக் குறித்து நிற்கும்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்

இல்லவள் மாணாக் கடை" (கு. எண். 53)

இக்குறளுரையில் 'மாண்பு' எனக்குணத்தின் பெயர், குணிமேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'மாண்பு' என்பது நல்ல குணத்தின் தன்மையைக் குறிக்கிறது. மேலும் 'மாண்பு' என்பது நல்ல குணத்தையுடைய பெண்ணுக்கு ஆகி வருகிறது. இதனால் 'மாண்பு' எனக் குணப்பெயர் குணியின்மேல் நின்றது என்கிறது. (குணி-குணத்தையுடையது)

வாளா பெயர்

தனக்கென வேறு பொருளின்றி வெறும் பெயரால் மாத்திரம் வருதல் வாளா பெயர் எனப்படுகிறது. இதனை, "வாள்போலும் வேற்கண், கோடாத செங்கோல், வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன், அடியளந்தான் தாயதெல்லாம் - இவற்றுள் கண், கோல், கோலன, அடி என ஒரு சொல்லாகவே கொள்வர்"(17) என்னும் இலக்கணக்கொத்து உரைவாயிலாக அறியமுடிகிறது.

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு" (கு.எண்.610)

இக்குறளுரையில் 'அடியளந்தான்' என்பது 'வாளா பெயராய்' நின்றது என்கிறார் பரிமேலழகர். சோம்பல் இல்லாத மன்னவனால் திருமாலின் பாதம்பட்ட நிலப்பரப்பு முழுவதையும் ஆளமுடியும் என்பது குறளின் கருத்து. இங்குப் பின்னே 'தாஅய தெல்லாம்' என வருதலால், முன்னே 'அடியளந்தான்' என்பது அவ்வரலாற்றைக் குறிக்காமல் 'திருமால்' என்ற பெயரை மட்டும் குறித்து நிற்கிறது. இதன் காரணமாக 'அடியளந்தான்' என்பதை வாளாபெயர் என்கிறார்.

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்த ஒல்லைக் கெடும்" (கு.எண்.563)

என்பதில் 'வெங்கோலன்' என்பது வாளா பெயர் என்கிறார் பரிமேலழகர். குடிகள் அஞ்சுமாறு கொடிய செயல்களைச் செய்யும் மன்னன் நிச்சயமாக விரைவில் கெட்டழிவான் என்பது குறளின்

கருத்து. இங்கு 'வெகுவந்த செய்தெழுகும்' எனக் கொடுங்கோன்மையைக் குறிக்க அடைமொழி வந்த காரணத்தினால் 'வெங்கோலன்' என்பது 'அரசன்' என்ற பெயராய் மட்டுமே நிற்கிறது. இதனால் வாளா பெயராயிற்று என்கிறார்.

பெயரடை

ஒரு பெயரனைச் சிறப்பிதது்க் கூறுவதற்கோ இழிவாகக் கூறுவதற்கோ பயன்டுகின்ற அடைமொழி 'பெயரடை' எனப்படும்.

"முறிமேனி மூத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு" (கு.எண்:1113)

இக்குறட்பாவில் 'வேய்த்தோள்' என்பது பெயரடை என்கிறார் பரிமேலழகர். 'வேய்த்தோள்' என்பது மூங்கிலை ஒத்த தோள் எனப் பொருள்படும். இங்குப் பெண்ணின் தோளை வேய்த்தோள் எனச் சிறப்பித்துக் கூறினமையால் இது பெயரடை ஆயிற்று.

"வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று"

இங்குத் தவவேடம் பூண்டு ஒழுக்கம் இல்லாதவன் செயலை வலியில் நிலைமையான் - வலிமையில்லாதவன் என இழிவாகக் குறிப்பிட்டமையாமல் இது பெயரடை ஆயிற்று என்கிறார் பரிமேலழகர்.

குறிப்பு வினையாலணையும் பெயர்

தொழில் செய்தவனைக் குறிப்பால் உணர்த்தும் பெயர் குறிப்பு வினையாலணையும் பெயர் எனலாம்.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ

வன்சொல் வழங்குவது" (கு.எண்: 99)

இக்குறளுரையில் 'இனிது' என்பதை வினைக்குறிப்புப் பெயர் என்கிறார் பரிமேலழகர். வினைக்குறிப்புப் பெயர் என்பது தொழில் செய்தவனை குறிப்பால் உணர்த்தும் பெயராகும். அதனல் இதனைக் குறிப்பு வினையாலணையும் பெயர் எனவும் கூறலாம். இங்கு 'இனிது' என்பது 'இன்பம் செய்தலை அனுபவித்தானை'க் குறிப்பால் உணர்த்துவதால் இது குறிப்பு வினையாலணையும் பெயர் ஆயிற்று.

"பொருள் தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த

மாசறு காட்சி யவர்" (கு.எண்:199)

இக்குறளுரையில் 'காட்சியவர்' என்பது வினைக்குறிப்புப் பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'காட்சியவர்' என்பது 'அறிவினை உடையவர்' என்பதைக் குறிப்பால் உணர்த்தினமையால் இது குறிப்பு வினையாலணையும் பெயர் ஆயிற்று.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கு

மாசறு காட்சி யவர்க்கு" (கு.எண்: 352)

இங்கு 'காட்சியவர்' என்பது 'அறிவினை உடையவர்' என்பதனைக் குறிப்பதால் 'உடையவர்' என்பது குறிப்பு வினையாலணையும் பெயராயிற்று.

சுட்டுப் பெயர்

ஒன்றினைச் சுட்டிக் கூறும் பெயர்களைச் சுட்டுப்பெயர்கள் எனலாம். சுட்டெழுத்துக்களாக நன்னூலார்,

"அஇஉம் முதல தனிவரில் சுட்டே"[18]

என்கிறார். மேற்கண்ட சூத்திரம் வாயிலாக அ, இ, உ மூன்றும் சுட்டுகளாக வரும் என்பதை அறியமுடிகிறது. அகரம் சேய்மையில் உள்ளவற்றையும், இகரம் அண்மையில் உள்ளவற்றையும் உகரம் இரண்டுக்கும் நடுவில் உள்ளவற்றையும் குறிக்கும். இம்மூன்று எழுத்துக்களையும் முதலாகப் பெற்று சுட்டிக் கூறுகின்ற முறையில் வரும் பெயர்கள் சுட்டுப்பெயர்கள் என அழைக்கப்படுகிறது.

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப இல்லாயின் நன்று" (கு.எண்:49)

அறன் என்று சொல்லப்பட்டதே இல்வாழ்க்கை அதுவும் பிறரால் பழிக்கப்படுவது இல்லையாயின் நன்றாம் என்பது குறளின் கருத்து. இங்கு 'அஃதும்' என்னும் சுட்டுப்பெயர் இல்லறத்தில் இருந்து துறவறத்தைப் பிரித்து அது எனச் சுட்டிக் காட்டுவதால் சுட்டுப் பெயராயிற்று என்கிறான் பரிமேலழகர்.

"நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்" (கு.எண்:1093)

யான்நோக்கா அளவில் தான் என்னை அன்போடு நோக்கி ஒன்றனை உட்கொண்டு நாணி இறைஞ்சினான். அக்குறிப்பு இருவருமிடையே தோன்றிய அன்பு பயிர்வளர, அதன்கண் அவள் வார்த்த நீராயிற்று என்பது குறளின் கருத்து. இங்கு 'அஃது' என்பது அக்குறிப்பு எனச் சுட்டிக்காட்டுவதால் இது சுட்டுப்பெயர் ஆயிற்று என்கிறார் பரிமேலழகர்.

"மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்"

காம நோயை மறைத்தல் இயலாது. இஃது ஊற்றுநீர்போல ஊறும் எனச் சுட்டிக் காட்டினமையால் 'இஃது' என்பது சுட்டுப்பெயராயிற்று என்கிறார் பரிமேலழகர்.

பரிமேலழகரால் சுட்டப்பெறும் பெர்களும் அவை இடம் பெற்ற குறட்பாக்களும் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தப்படுகிறது.

வ.எண்	பெயர்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	அஃறிணைப் பன்மைப் பெயர்	337, 392
2.	பால்விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்	78
3.	அஃறிணைப் பன்மை வினாப் பெயர்	127, 392
4.	குணப் பெயர்	53
5.	வாளா பெயர்	563, 610
6.	பெயரடை	1113, 273
7.	குறிப்பு வினையாலணையும் பெயர்	99, 199, 352
8.	சுட்டுப்பெயர்	49, 636, 642, 1093, 1161

ஆகுபெயர்கள்

ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகிவருவது 'ஆகுபெயர்' ஆகும். பரிமேலழகர் தான் பயன்படுத்திய இலக்கணக்கூறுகளில் மிகுதியாக

இடம்பெறுவது ஆகுபெயரே. “பரிமேலழகர் எடுத்துக்காட்டும் குறிப்புகளில் ஆகுபெயர் மிகுதியான இடங்களைப் பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது”[19] என்கிறார் இ. சுந்தரமூர்த்தி.

தொல்காப்பியர் ஆகுபெயர் பற்றிய இலக்கணங்களை நான்கு நூற்பாக்களில் குறிப்பிடுகிறார்.

“முதலில் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழி கூறும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெயரொட்டும்
வினைமுத லுரைக்கும் கிளவியோடு தொகைஇ
அனைய மரபினவே ஆகுபெயர்க் கிளவி”[20]

இந்நூற்பாவில் ‘அனைய மரபின’ என்பதற்கு சேனாவரையர், “அனைய மரபின என்றது அவ்வாறு யாதானும் ஓர் இயைபு பற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்காதலென ஆகுபெயர் இலக்கணத்திற்கு தோற்றுவாய் செய்தவாறு”[21] என்கிறார். மேற்கண்ட நூற்பா ஏழுவகை ஆகுபெயர்களைச் சுட்டிப் பொது இலக்கணத்தையும் சுட்டுகிறது.

“அளவும் நிறையும் அவற்றோடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே”[22]

இந்நூற்பா மூலம் தொல்காப்பியர் மேலும் இரண்டு வகையான ஆகுபெயரைச்சுட்டுகிறார். புறனடை நூற்பா மூலம், சேனாவரையர், நச்சினாக்கினியர் குறிப்பிடும் கருவியாகுபெயர், உவமையாகுபெயர்,

தொழியாகுபெயர் ஆகிய மூன்றனையும் சேர்த்து தொல்காப்பியம் சுட்டுவன 12. உரையாசிரியர்கள் இந்நூற்பா மூலம் எண்ணலளவையும் கொள்கின்றனர். ஆக மொத்தம் இங்குப் பெறப்படுவன பதிமூன்று வகையான ஆகுபெயர்களாகும்.

நன்னூலார் ஆகுபெயரைப் பதினாறு வகையாகக் கூறி 'இன்ன பிறவும்' என்கிறார்.

"பொருண் முதலாறோ டளவை சொற்றானி
கருவி காரியம் கருத்தா னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகுபெயரே"(23)

'ஆதி' என்றதனால் உவமையாகுபெயர், விடாத ஆகுபெயர், விட்ட ஆகுபெயர், இருமடி ஆகுபெயர், மும்மடி ஆகுபெயர், அடையடுத்த ஆகுபெயர், இருபெயரொட்டாகு பெயர் என மேலும் ஏழுவகையினை உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

"ஆக்கப் பொருள் கொள்ளும் மொழியே ஆகுபெயராம். ஆக்க ஆகும் பெயர் ஆகுபெயர் என்றியிற்று"(24) என்கிறார் மயிலை நாதர்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் இருநூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் ஆகுபெயரைச் சுட்டுகிறார். ஆனால் எங்குமே இவற்றை வகைப்படுத்திக் குறிப்பிடவில்லை. ஆய்வில் இவை யாவும் வகைப்படுத்தப்பட்டு கீழ்க்கண்ட பதினைந்து வகைகளுள் அடக்கப்படுகிறது.

1. பண்பாகு பெயர்

2. இடவாகு பெயர்

3. பொருளாகு பெயர்

4. காரியவாகு பெயர்

5. காரணவாகு பெயர்

6. முதலாகு பெயர்

7. சினையாகு பெயர்

8. தொழிலாகு பெயர்

9. கருவியாகு பெயர்

10. காலவாகு பெயர்

11. தானியாகு பெயர்

12. எண்ணல் அளவையாகு பெயர்

13. இருமடியாகு பெயர்

14. அடையடுத்த பண்பாகு பெயர்

15. உவமவாகு பெயர்

பண்பாகு பெயர்

ஒன்றன் பண்புப்பெயர் அதனோடு தொடர்புடைய பிரிதொன்றுக்கு ஆகி வருவது 'பண்பாகு பெயர்' ஆகும்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானொன்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை" (கு.எண்:43)

இக்குறட்பாவில் பரிமேலழகர் 'விருந்து' என்பது புதுமை. அஃது ஈண்டு ஆகுபெயராய் புதியராய் வந்தார்மேல் நின்றது என்கிறார்.

இங்கு 'விருந்து-புதுமை' என்னும் பண்பின் பெயர் விருந்தினரைக் குறித்தலால் இது பண்பாகு பெயர் ஆயிற்று.

"பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்" (கு.எண்:186)

இக்குறட்பாவில் 'திறன்' என்பது வலிமையைக் குறிப்பதாகப் பரிமேலழகர் சுட்டுகிறார். இங்கு 'வலிமை' என்னும் பண்பின் பெயர் வலிமையுடைய பழிச்சொற்களுக்கு ஆகி வருவதால் இது பண்பாகுபெயர் ஆயிற்று.

"தூஉய்மை என்ப தாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்" (கு.எண்:364)

இங்கு வாய்மை என்பது 'மெய்மை'யைக் குறிக்கும். மெய்மை என்னும் குணத்தின் பெயர் உண்மையான தன்மையுடைய பரம் பொருளைக் குறித்தலால் இது பண்பாகும் பெயராகும்.

"காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி" (கு.எண்:1131)

இக்குறட்பாவில் 'வலி' என்னும் பண்பின் பெயர் வலிமையுடைய பொருளுக்கு ஆகி வருவதால் இது பண்பாகு பெயர் ஆயிற்று எனலாம்.

இவை தவிர இன்னும் "பல இடங்களில்"(25) பரிமேலழகர் பண்பாடு பெயரைச் சுட்டிச் செல்கிறார்.

இடவாகுபெயர்

ஒன்றனது இடத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்கு ஆகிவருவது 'இடவாகுபெயர்' ஆகும்.

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே

பசும்புல் தலைகாண்பு அரிசு" (கு.எண்:16)

இக்குறட்பாவில் 'விசும்பு' - ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு விசும்பு என்னும் இடப்பெயர் மேகத்திற்கு ஆக வந்தமையால் இடவாகு பெயர் ஆயிற்று.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை" (கு.எண்:41)

இக்குறட்பாவில் 'இல்' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'இல்' என்னும் இடப்பெயர் இல்லறத்தில் செய்யும் தர்மத்திற்கு ஆகி வருவதால் இது இடவாகு பெயர் ஆயிற்று.

"அல்லல் அருள்வார்க்க இல்லை வளிவழங்கும்

மல்லல்மா ஞாலம் கரி" (கு.எண்:245)

இக்குறட்பாவில் 'ஞாலம்' என்னும் இடப்பெயர் பூமியில் வாழ்வாரைக் குறித்தலால் இது இடவாகுபெயர் ஆகும்.

"உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை

நில்லாது நீங்கி விடும்" (கு.எண்:592)

இக்குறட்பாவில் 'உள்ளம்' என்னும் இடத்தின் பெயர் அதனுடைய கிளர்ச்சியை உணர்த்தியதால் இடவாகுபெயராகும்.

"வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து

மாலை அயர்காம் விருந்து" (கு.எண்:1268)

இங்கு 'மனை' என்னும் இடப்பெயர் மனையில் இருப்பவளைக் காட்டியதால் இது இடவாகு பெயர் ஆயிற்று.

மேலும் "பல இடங்களில்"(26) இடவாகு பெயரைப் பரிமேலழகர் சுட்டுகிறார்.

பொருளாகுபெயர்

ஒன்றன் பொருட்பெயர் அதனோடு தொடர்புடைய பிரிதொன்றுக்கு ஆகிவருவது 'பொருளாகு பெயர்' ஆகும்.

"குழலினது யாழினது என்பதாம் மக்கள்

மழலைச்சொற் கேளா தவர்" (கு.எண்:66)

இக்குறட்பாவில் 'குழல், யாழ்' என்பன ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்குக் குழல், யாழ் என்னும் பொருள்களின் பெயர் அவற்றின் இனிமையான ஓசைக்கு ஆகி வருதலால் இது பொருளாகுபெயர் ஆயிற்று.

"புறங்குன்றி கண்டனைய ரேனும் மகட்குன்றி

மூக்கிற் கரியார் உடைத்து" (கு.எண்:1113)

இக்குறளுரையில் 'குன்றி' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்குக் 'குன்றிக் கொடி' என்னும் முதற்பொருளின் பெயர் அதன் சினையாகிய 'மணியை'க் குறித்தமையால் இது பொருளாகு பெயர் ஆகும்.

"முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்

வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு" (கு.எண்:1113)

இக்குறட்பாவில் 'முறி' ஆகுபெயர் என்கிறார். 'முறி' என்பது 'தளி'ரைக் குறிக்கும். 'தளிர்' என்றும் பொருளின் பெயர் தளிரின் நிறத்தைக் குறித்தலால் இது பொருளாகு பெயர் ஆயிற்று.

இவை தவிர இன்னும் "சில இடங்களிலும்"(27)பரிமேலழகர் பொருளாகு பெயரைச் சுட்டிச் செல்கிறார்.

காரியவாகு பெயர்

ஒன்றனது காரியத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய கருவிக்கு ஆகிவருவது 'காரியவாகு பெயர்' ஆகும்.

திருக்குறளில் இவ்வாகுபெயர்களைப் "பத்தொன்பது இடங்களில்"(28) சுட்டுகிறார் பரிமேலழகர். ஆய்வில் ஒருசிலவற்றை மட்டுமே இங்கு விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

"பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்" *(கு.எண்:141)*

இக்குறட்பாவில் அறம், பொருள் என்பன ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு அறம், பொருள் என்ற காரியப் பெயர்கள் அவற்றை உணர்த்துவதற்குரிய கருவியாகிய நூல்களுக்கு ஆகிவந்தமையால் இது காரியவாகு பெயர் ஆயிற்று.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்" *(கு.எண்:183)*

இக்குறட்பாவில் 'அறம்' என்னும் காரியத்தின் பெயர் அவற்றை உணர்த்துவதற்குரிய கருவியாகிய தர்ம சாஸ்திரம் என்னும் நூலின் மேல் நின்றதனால் இது காரியவாகு பெயராயிற்று.

"முடிவு இடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்" *(கு.எண்:676)*

இக்குறட்பாவில் 'முடிவு' என்னும் காரியத்தின் பெயர் முடிதற்குக் காரணமான முயற்சியைக் குறித்தலால் இது காரியவாகு பெயராயிற்று எனலாம்.

காரணவாகு பெயர்

ஒன்றன் காரணம் அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்கு ஆகி வருவது 'காரணவாகு பெயர்' எனலாம்.

"காலைக்குச் செய்த நன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை" (கு.எண்.1225)

இக்குறட்பாவில் 'பகை' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'பகை' என்னும் காரணப்பெயர் பகைவர்கள் செய்யும் தீமைக்கு ஆகிவருவதால் இது காரணவாகுபெயராகும்.

"உரநசைஇ உள்ளம் துணையகச் சென்றார்
வரநசைஇ இன்னும் உளேன்" (கு.எண்.1263)

இக்குறட்பாவில் 'உரன்' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு உரன் என்பது வலிமை எனப்பொருள்படும். வலிமை என்னும் காரணப் பெயர், அதனால் ஆகும் பகையை வெல்லுதல் என்பதைக குறித்து நிற்றலால் இது காரணவாகு பெயராயிற்று.

"கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று" (கு.எண்.1313)

இக்குறட்பாவில் 'பூ' என்பது ஆகுபெயராகச் சுட்டப்படுகிறது. பூ என்னும் காரணப்பெயர் பூவினால் ஆன மாலைக்கு ஆகி வருதலால் இது காரணவாகு பெயராயிற்று.

மேலும் "சில இடங்களில்"(29) இவ்வாகு பெயரானது பரிமேலழகரால் சுட்டப்படுகிறது.

முதலாகுபெயர்

ஒன்றனது முதலின் பெயர் அதனோடு தொடர்புடைய சினைக்கு ஆகி வருவது 'முதலாகுபெயர்' ஆகும்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (கு.எண்.90)

இக்குறட்பாவில் 'அனிச்சம்' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு அனிச்சம் என்பது ஒரு மரம். அனிச்சமரம் என்ற முதலின் பெயர் அதன் சினையாகிய மலருக்கு ஆகிவருவதால் இதனை முதலாகுபெயர் எனலாம்.

"பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை உணர்வாப் பெறின்" (கு.எண்.709)

இக்குறட்பாவில் இறுதியில் வருகின்ற 'கண்' ஆகுபெயராகச் சுட்டப்படுகிறது. இங்கு 'கண்' என்ற முதலின் பெயர் அதன் சினையாகிய பார்வையைக் குறித்தலால் இது முதலாகு பெயராயிற்று.

மேலும் "சில இடங்களில்"(30) பரிமேலழகர் முதலாகு பெயரைச் சுட்டிக் காட்டுகிறார்.

சினையாகு பெயர்

ஒன்றனது சினையின் பெயர் அதனோடு தொடர்புடைய முதலுக்கு ஆகி வருவது 'சினையாகு பெய'ராகும்.

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு" (கு.எண்.72)

இக்குறட்பாவில் 'என்பு' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். 'என்பு' என்பது எலும்பு. எலும்பு என்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய உடம்பிற்கு ஆகிவந்தமையால் இது சினையாகுபெயர் ஆயிற்று.

"வேட்டப் பொழுதின் அவையாவை போலுமே

தோட்டார் கதுப்பினாள் தோள்" (கு.எண்.1105)

இக்குறட்பாவில் 'தோடு' ஆகுபெயராகச் சுட்டப்படுகிறது. இங்கு 'தோடு' என்பது இதழ். இதழ் என்ற சினைப்பெயர் இதழையுடைய மலருக்கு ஆகி வந்தமையால் இது சினையாகு பெயராயிற்று.

தொழிலாகு பெயர்

ஒன்றனது தொழிலின் பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றுக்கு ஆகி வருவது 'தொழிலாகு பெயர்' ஆகும்.

"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு

தாழ்ச்சியுள் தங்குதல் தீது" (கு.எண்.671)

இக்குறட்பாவில் 'துணிவு' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்குத் 'துணிவு' என்பது நிச்சயித்தல். 'நிச்சயத்தல்' என்பது நிச்சயத்தலை உடைய வினையை உணர்த்தினமையால் இது தொழிலாகு பெயராயிற்று.

"குறிப்பின் குறிப்புணரா வாயினும் உறுப்பினுள்

என்ன பயத்தவோ கண்" (கு.எண்.705)

இக்குறட்பாவில் முதற்கண் ‘குறிப்பு’ ஆகுபெயராகப் பரிமேலழகரால் சுட்டப்படுகிறது. இங்குக் குறிப்பு என்பது குறித்தல் என்னும் தொழிலை உடையது. குறித்தல் என்னும் தொழில் குறிப்பிட்ட பொருளைக் காணும் பார்வையை உணர்த்தினமையால் இது தொழிலாகு பெயராகும்.

மேலும் “சில இடங்களில்”(31) பரிமேலழகர் இவ்வாகு பெயரைச் சுட்டிக் காட்டுகிறார்.

கருவியாகு பெயர்

ஒன்றனது கருவியின் (காரணத்தின்) பெயர் அதனோடு தொடர்புடைய காரியத்திற்கு ஆகி வருவது ‘கருவியாகு பெய’ராகும்.

“வில்லேர் உழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை” (கு.எண்.872)

இக்குறட்பாவில் ‘சொல்’ ஆகுபெயராய் நீதிநூல் மேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்குச் சொல் என்னும் கருவியின் அதனோடு தொடர்புடைய நீதிநூலுக்கு ஆகிவருவதனால் இது கருவியாகு பெயர் ஆயிற்று.

“தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்” (கு.எண்.916)

இக்குறட்பாவில் ‘நலம்’ என்பது ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு நலம் என்னும் கருவியின் பெயர் அதனோடு தொடர்புடைய

‘நலத்தலாகிய புகழ்’ என்னும் காரியத்திற்கு ஆகி வருதலால் இதனைக் கருவியாகு பெயர் எனலாம்.

"ஏரினும் நன்றா எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" *(கு.எண்.1038)*

இக்குறட்பாவில் ‘ஏர்’ ஆகுபெயராகச் சுட்டப்படுகிறது. இங்கு ஏர் என்னும் கருவியின் பெயர் அதனோடு தொடர்புடைய உழவுக்கு ஆகி வருதலால் இது கருவியாகு பெயராயிற்று.

மேலும் "சில இடங்களில்"[32] இவ்வாகு பெயரானது பரிமேலழகரால் சுட்டப்படுகிறது.

காலவாகு பெயர்

காலப்பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றுக்கு ஆகி வருவது ‘காலவாகு பெய’ராகும்.

"கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்" *(கு.எண்.184)*

இக்குறட்பாவில் ‘பின்’ ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு ‘பின்’ என்பது பிற்காலத்தைக் குறிக்கிறது. ஆகவே பின்-என்னும் காலப்பெயர் பிற்காலத்தில் உண்டாகும் குற்றத்தைக் குறித்தலால் இது காலவாகு பெயராகும்.

தானியாகு பெயர்

ஒன்றனது தானியின் பெயர் அதனோடு தொடர்புடைய தானத்திற்கு ஆகி வருவது ‘தானியாகு பெய’ராகும். "இங்கு தானம்

- இடம் எனவும், தானி - இடத்திலுள்ள பொருள் எனவும்"(33) நன்னூல் குறிப்பிடுகிறது.

"அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்" (கு.எண்.1098)

இக்குறட்பாவில் 'ஏர்' ஆகுபெயர் எனப் பரிமேலழகர் சுட்டுகிறார். இங்கு ஏர் என்பது அழகினைக் குறிக்கும். அழகு என்னும் தானியின் பெயர் அதன் தானமாகிய நன்மையைக் குறித்தலால் இது தானியாகு பெயராயிற்று.

எண்ணல் அளவையாகு பெயர்

எண்ணலளவையாகு பெயர் என்பது அதனோடு தொடர்புடைய பிறிதொன்றுக்கு ஆகி வருவதாகும்.

"புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா
திகழ்ந்தார்க்க எழுமையும் இல்" (கு.எண்.538)

இக்குறட்பாவில் 'எழுமை' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு எழுமை என்பது 'ஏழு' என்னும் எண்ணுப்பெயரைக் குறிக்கிறது. ஏழு என்னும் எண்ணல் அளவைப் பெயர் அதனோடு தொடர்புடைய ஏழு பிறப்பினை உணர்த்துவதால் இது எண்ணலளவையாகு பெயராயிற்று.

இருமடியாகு பெயர்

ஒன்றனது பெயர் அதனோடு தொடர்புடைய இரண்டு பொருளுக்கு ஆகி வருவது இருமடி ஆகுபெயராகும்.

"ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா

மாற்றங் கொடுத்தற் பொருட்டு" (கு.எண்.725)

இக்குறட்பாவில் 'அளவு' என்பது ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு அளவு என்பது ஆராய்ந்து வரையறுத்து அறிதல் என்னும் ஆகுபெயராகி பின்பு அவற்றை அளத்தற்குரிய கருவிக்கும் ஆகி வருவதால் இது இருமடி ஆகுபெயராயிற்று.

அடையடுத்த பண்பாகு பெயர்

ஒரு பெயரினது அடைமொழி அதனோடு தொடர்புடைய பண்பிற்கும் ஆகி வருவது அடையடுத்த 'பண்பாகு பெயர்' ஆகும்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினுந் தான்முந் துறும்" (கு.எண்.380)

இக்குறட்பாவில் 'பெருவலி' ஆகுபெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'பெருவலி' என்பதிலுள்ள 'பெரிய' என்பது 'வலி' என்பதற்கு அடைமொழியாக வந்து பின்னர் 'வலிமை' என்னும் பண்பிற்கும் ஆகி வந்தமையால் இது அடையடுத்த பண்பாகு பெயராகும்.

உவமவாகு பெயர்

ஒன்றனது உவமைப் பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றுக்கு ஆகிவருவது உவமவாகு பெயராகும்.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்

உடையனாம் வேந்தர்க்கு ஒளி" (கு.எண்.390)

இங்கு 'செங்கோல்' ஆகுபெயராகச் சுட்டப்படுகிறது. இங்குச்

செவ்விய கோல் என்னும் உவமை அதனோடு தொடர்புடைய கோணல் இல்லாத தன்மைக்கு ஆகிவருதலால் இது உவமவாகு பெயராயிற்று.

பரிமேலழகரால் சுட்டப்பட்ட ஆகுபெயர்களை ஆய்வில் வகைப்படுத்தியுள்ளமை, அவ்வகைகளுக்குள். அடங்கிய குறட்பாக்கள் ஆகியவை கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் விளக்கப்படுகிறது.

வ.எண்	ஆகுபெயரின் வகைகள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	இடவாகு பெயர்	*16, 41, 245, 247, 401, 500, 592, 701, 901, 927, 953, 958, 996, 1042, 1058, 1196, 1221, 1268*
2.	பண்பாகு பெயர்	*43, 186, 364, 735, 940, 958, 984, 1013, 1113, 1131, 1255*
3.	பொருளாகு பெயர்	*48, 66, 124, 277, 470, 796, 1287*
4.	காரியவாகு பெயர்	*141, 178, 180, 183, 204, 352, 509, 676, 791, 901, 939, 1006, 1052, 1056, 1237, 1293*

5.	காரணவாகு பெயர்	88, 523, 566, 801, 817, 901, 1039, 1132, 1225, 1263, 1313
6.	முதலாகு பெயர்	90, 334, 407, 595, 706, 709, 1111
7.	சினையாகு பெயர்	72, 1105
8.	தொழிலாகு பெயர்	359, 671, 701, 705, 748, 909
9.	கருவியாகு பெயர்	872, 916, 920, 980, 1024, 1038, 1097
10.	காலவாகு பெயர்	184
11.	தானியாகு பெயர்	334, 1098
12.	எண்ணலளவையாகுபெயர்	538
13.	இருமடியாகு பெயர்	725
14.	அடையடுத்தப் பண்பாகு பெயர்	380
15.	உவமையாகு பெயர்	390

வேற்றுமைகள்

தம்மை ஏற்றுக் கொள்வதற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாய், அப்பெயர்ப்பொருளை வேற்றுமைபடுத்துவன வேற்றுமை எனப்படும். இதனைத்

தொல்காப்பியர்,

“வேற்றுமை தாமே ஏழென மொழிப”[34]

எனக்கூறிவிட்டு,

“விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே”[35]

என வேற்றுமையை எட்டு வகையாகப் பின்பு குறிப்பிடுகிறார். இக்கருத்தினை அப்படியே ஏற்றுக் கொண்டு வேற்றுமை என்ன என்பதையும் அது எத்தனை என்பதையும் கீழ்க்கண்ட நூற்பா மூலம் நன்னூலார் விளக்குகிறார்.

“ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈற்றாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை ”[36]

வேற்றுமையின் பெயரும் முறையும்

“பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளிஎன்றாகும் அவற்றின் முறை”[37]

என வேற்றுமை பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்ற முறையில் அமையும். இவற்றில் பெயர் அல்லது எழுவாய் வேற்றுமைக்கும், விளிவேற்றுமைக்கும் உருபுகள் கிடையாது. ஏனைய ஆறு வேற்றுமைக்கு மட்டுமே உண்டு எனத் தொல்காப்பியரும், நன்னூலாரும் குறிப்பிடுகின்றனர். ஆனால் தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமைக்கு ‘ஒடு’ உருபைக் குறிப்பிடுகிறார். நன்னூலாரோ ‘ஆல்’ என்ற உருபினைச் சுட்டி அவற்றோடு ‘ஒடு’ முதலான உருபுகளையும் சேர்த்துக் கொள்வதை அறியமுடிகிறது.

வேற்றுமை தொடர்பான செய்திகளைப் பரிமேலழகர் திருக்குறளில் சுட்டுவதை கீழ்க்கண்டவாறு பகுக்கலாம்.

i. வேற்றுமை மயக்கம்

ii. வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக வரல்

iii. வேற்றுமை உருபுகள் மயங்கி வரல்

iv. வேற்றுமை உருபுகள் விகாரத்தால் தொக்கி வரல்

வேற்றுமை மயக்கம்

வேற்றுமை மயக்கம் இரு வகைப்படும். ஒன்று வேற்றுமைப் பொருள் மயக்கம் மற்றொன்று வேற்றுமை உருபு மயக்கம். இவற்றுள் பரிமேலழகர் உரையில் காணப்படுவது வேற்றுமை மயக்கம். ஆனால் வேற்றுமை மயக்கம் எனினும் உருபு மயக்கம். எனினும் ஒன்றே என்பர். பரிமேலழகர் சில இடங்களில் இவ்வாறே குறிப்பிடுகிறார்.

ஒரு தொடரில் வந்துள்ள ஓர் உருபு தனக்குரிய பொருளைத் தராமல், வேறொரு உருபின் பொருளைத் தருதல் வேற்றுமை மயக்கம் அல்லது உருபு மயக்கம் எனப்படும். தொல்காப்பியர் உருபு மயக்கத்தை,

"யாதனுருபிற் கூறிற்றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்"[38]

என்கிறார். நன்னூலில் இந்நூற்பா (நன்.பெயரி.60) அப்படியே அமைந்துள்ளது.

பரிமேலழகர் இவற்றைத் தம்முடைய உரையில் "11 இடங்களில்"(39) சுட்டுகிறார்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"(கு.எண்.102)

இக்குறளுரையில் 'காலத்தினால்' என்பது வேற்றுமை மயக்கம் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு தனக்குரிய பொருளில் வராமல் 'காலத்தின்கண்' என ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் வந்துள்ளமையால் இது வேற்றுமை மயக்கம் ஆகும்.

"பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு" (கு.எண் : 347)

இக்குறளுரையில் 'விடாஅதவர்க்கு' என்பது வேற்றுமை மயக்கம் என்கிறார் பரிமேலழகர். இங்கு விடாஅதவர்க்கு என்னும் நான்காம் வேற்றுமை 'விடாதாரை' என்னும் இரண்டாம் வேற்றுமைக்குரிய செயப்படுபொருளை உணர்த்தினமையால் இது வேற்றுமை மயக்கம் ஆயிற்று.

"சிறைநலனுஞ் சீரு மிலரெனினும் மாந்தர்
உறை நிலத்தோடு ஒட்டல் அரிது" (கு.எண் : 449)

இங்கு 'நிலத்தோடு' என்பது வேற்றுமை மயக்கம் எனப் பரிமேலழகர் சுட்டுகிறார். 'நிலத்தோடு' என்னும் மூன்றாம் வேற்றுமை 'நிலத்தின்கண்' என ஏழாம் வேற்றுமை இடப்பொருளைத் தருவதால் இது வேற்றுமை மயக்கம் ஆயிற்று.

வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக வரல்

உருபுகள் வெளிப்படையாக வருதலைச் சுட்ட வந்த பரிமேலழகர், இன்ன உருபு இன்ன பொருளில் வந்தது எனக் குறிப்பிடுகிறார். ஓர் உருபிற்குப் பல பொருள்கள் இருத்தலின், அவற்றுள் இன்ன பொருளை உணர்த்துகிறது எனச் சுட்டிக் காட்டுகின்ற இவருடைய மரபு சிறப்புடையதாகும்.

இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை உருபையும் பொருளையும் சுட்ட வந்த தொல்காப்பியர்,

"இரண்டாகுவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலில் தோன்றும் அதுவே"(40)

என்கிறார். இந்நூற்பா மூலம் இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' என்பதும் அது செய்யப்படு பொருளில் வரும் என்பதும் பெறப்படுகிறது.

"கலித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று" (கு.எண்: 929)

என்பதில் 'களித்தான்' என்னும் இரண்டாவது 'அறிவுடை அந்தணன் அவளைக் காட்டென்றானோ' (கலி.மருதம்.7) என்புழி நின்றது என்கிறார் பரிமேலழகர். 'களித்தான்' என்பது 'கள்ளுண்டு

களித்தவனை என்னும் செயப்படுபொருளில் வந்துள்ளது. மேலும் இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' என்பதும் வெளிப்படையாக வந்துள்ளமையால் இவ்வாறு கூறினார் எனலாம்.

ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபையும் பொருளையும் சுட்ட வந்த நன்னூலார்,

"ஐந்தாவ தனுருபு இல்லும் இன்னும்
நீங்க லொப் பெல்லை ஏதுப் பொருளே"(41)

என்கிறார். ஆனால் தொல்காப்பியர், "ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' என்றும் இதன் பொருள் இதனின் இற்றிது"(42) என்றும் கூறுகிறார்.

"ஐந்தாம் வேற்றுமை பொருவு, எல்லை, ஏது, நீக்கம் என்னும் நான்கு பொருளில் வரும் என்றும் இவற்றுள் 'பொருவு' என்பது உறழ்பொருவு, உவமப் பொருவு என இரண்டு வகைப்படும்"(43) என்றும் சேனாவரையர் தமது உரையில் குறிப்பிடுகிறார்.

உறழ்பொருவு என்பதை 'உறழ்ச்சிப் பொருள்' என்றும் கூறுவர். இங்கு உறழ்ச்சிப் பொருளில் வரும் 'இன்' உருபு ஒப்பிட்டுக் காட்டுகிற 'காட்டிலும்' என்னும் பொருளில் வருகிறது.

"நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை தீயினத்தின
அல்லல் படுப்பதூஉம் இல்" (கு.எண்: 460)

என்பதில், நல்லினத்தின, தீயினத்தின் என்ற சொற்களின் இறுதியில் உள்ள 'இன்' உருபு உறழ் பொருளில் வந்தன என்கிறார் பரிமேலழகர். ஒருவற்கு நல்லெண்ணத்தைக் காட்டிலும் மிக்க துணையும் இல்லை. தீயெண்ணத்தைக் காட்டிலும் மிக்க பகையும் இல்லை என்பது பொருளாகலின் 'நல்லினத்தின், தீயினத்தின்' என்பதிலுள்ள 'இன்' உருபு உறழ்ச்சிப் பொருளில் வந்துள்ளமையைக் காணமுடிகிறது.

வேற்றுமை உருபுகள் மயங்கி வருதல்

ஒன்றன் உருபு மற்றொன்றாக மாறி மயங்கிவரும் இடங்களாகப் பரிமேலழகர் ஆறினைச்[44] சுட்டுகிறார்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு" (கு.எண்:261)

இக்குறட்பாவில் 'தவத்திற்கு உருஅற்று' என்பது 'யானையது கோடு கூரிது' என்பதனை 'யானைக்குக் கோடு கூரிது' என்றாற்போல ஆறாவது பொருட்கண் நான்காவது வந்த மயக்கம் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'தவத்திற்கு உரு அற்று' என்பது 'தவத்தினது உரு அற்று' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் மயங்கி வந்துள்ளமையால் மேற்கண்டவாறு கூறுகிறார்.

"எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்" (கு.எண்:582)

இக்குறளில் 'எல்லார்க்கும்' என்ற சொல்லில் நான்காம் வேற்றுமை உருபாகி 'கு' மயங்கி 'எல்லார் கண்ணும்' என ஏழாம் வேற்றுமை

உருபாகிய 'கண்' வந்துள்ளமையால் நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது என்கிறார் பரிமேலழகர்.

"நனவினான் நல்கா தவரைக் கனவினாற்

காண்டலின் உண்டென் உயிர்" (கு.எண்:1213)

நனவினான், கனவினான் என்பதிலுள்ள மூன்றானுருபு கனவின்கண், நனவின்கண் என ஏழான் உருபு ஆக மயங்கி வந்துள்ளமையால் மூன்றானுருபுகள் ஏழான் பொருண்மைக்கண் வந்துள்ளன என்கிறார் பரிமேலழகர்.

வேற்றுமை உருபுகள் விகாரத்தால் தொக்கி வருதல்

ஓர் எழுத்து தோன்றுதலும், திரிதலும், கெடுதலும் விகாரம் ஆகும். இவை வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என்னும் ஆறு பொருளில் வரும் இவை பற்றிய தெளிவான செய்திகள் 'இடைச்சொற்கள்' என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ளன. பரிமேலழகர் உருபுகள் விகாரத்தால் தொக்கி வருதலை சில இடங்களில் குறிப்பிடுகிறார்.

இரண்டானுருபு தொக்கி வருதல்

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' ஆகும். இது மறைந்து வருதல் பரிமேலழகர் சிலவிடங்களில் சுட்டுகிறார்.

"சூழ்வார்க் கண்ணாக ஒழுகலான் மன்னவன்

சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்" (கு.எண்: 445)

இக்குறளில் 'சூழ்வார்' என்பது 'சூழ்வாரை' என இரண்டானுருபு

பெற்றுவரல் வேண்டும். அவ்வாறு வாராது தொக்கி வந்தமையால் இரண்டாவது விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர்.

மேலும் "மூன்று இடங்களில்"(45) இவ்வுருபு தொக்கி வருதலைப் பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.

மூன்றாமுருபு தொக்கி வருதல்

மூன்றாம் வேற்றுமை உருபுகள் அன், ஆன், ஒடு, ஓடு, ஆல் ஆகியவையாகும். இவை தொக்கி வருதலை மேலும் 11 இடங்களில்(46) சுட்டுகிறார் பரிமேலழகர்.

"மனநலம் நன்குஉடையார் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து" (கு.எண்: 458)

இக்குறளுரையில் 'நன்கால்' என்னும் மூன்றானுருபு விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். 'நன்கால்' என வரவேண்டிய இச்சொல் 'நன்கு' எனத்தொக்கி, மூன்றானுருபாகி 'ஆல்' மறைந்து வந்துள்ளது. இவற்றை மூன்றாம் வேற்றுமைத் தொகை என எண்ணாமல் 'செய்யுள் விகாரம்' என்கிறார் பரிமேலழகர். ஏனெனில் "இவை தொக்கியும் தொகைப் பொருள் உணர்த்தாமல் எழுவாயும் பயனிலையுமாக நிற்கின்றன. இங்ஙனம் வருபனவற்றை தொகை எனல் ஆக"(47) என்கிற நச்சினார்க்கினியர் கருத்து பற்றியேயாகும்.

"விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பிற் தலைப் பிரியாதார்" (கு.எண்:810)

இக்குறட்பாவில் 'விழையார்' என்பது 'விழையாரானும்' என

மூன்றானுருபு பெற்று வரல் வேண்டும். அவ்வாறு வராமல் - ஆன் உருபு தொக்கி வந்தமையால் மூன்றானுருபு விகாரத்தால் தொக்கியது என்கிறார் பரிமேலழகர்.

நான்கானுருபு தொக்கி வருதல்

நான்காம் வேற்றுமை உருபு 'கு' ஆகும். இவை தொக்கி வருதலை "மூன்று இடங்களில்"(48) பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி" (கு.எண்: 25)

இங்கு 'ஆற்றல்' என்பது 'ஆற்றற்கு' என நான்கானுருபு பெற்று வரவேண்டும். அவ்வாறு வாராமையால் தொக்கி நின்று விகாரமாயிற்று.

ஐந்தானுருபு தொக்கி வருதல்

ஐந்தாம் வேற்றுமை உருபு 'இல், இன்' ஆகும். இவ்வுருபு தொக்கி வருதலை ஓரிடத்தில் மட்டுமே பரிமேலழகர் சுட்டுகிறார்.

"திணைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணை
காமம் நிறைய வரின்" (கு.எண்.1282)

என்பதில், 'பனைத்துணையும்' என்புழி ஐந்தானுருபு விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'பனைத்துணையும்' என்பது 'பனைத்துணையின்' என ஐந்தானருபு பெற்று வெளிப்படையாக வந்திருத்தல் வேண்டும். அவ்வாறு வாராமையினால் தொக்கி வந்தது என்கிறார்.

ஏழான் உருபு தொக்கி வருதல்

ஏழாம் வேற்றுமை உருபு 'கண்' ஆகும். இது விகாரத்தால் தொக்கி வருதலை ஐந்து இடங்களில்[49] பரிமேலழகர் சுட்டுகிறார்.

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

தான்சாந் துயரம் தரும்" (கு.எண்.792)

என்பதில் 'கடைமுறைக்கண்' என இறுதிக்கண் ஏழாவது தொக்கி வந்தது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கடைமுறை' என்பது 'கடைமுறைக்கண்' என ஏழாம் வேற்றுமை உருபு பெற்று வரல் வேண்டும். அவ்வாறு வாராமையால் இதனைத் தொக்கி வந்தது என்கிறார்.

"அச்சமே கீழ்களது ஆசார மெச்சம்

அவாவுண்டேல் உண்டாஞ் சிறிது" (கு.எண்.1075)

இங்கு 'எச்சம்' என்பது 'எச்சத்தின்கண்' என ஏழான் உருபு பெற்று வரல் வேண்டும். அவ்வாறு வாராமையினால் இதனைத் தொக்கது என்கிறார் பரிமேலழகர்.

ஏழான் உருபும் சாரியையும் மயங்கி வருதல்

ஏழான் உருபு 'கண்' ஆகும். இவற்றோடு மயங்கி வரும் சாரியை என்பது பெயர்ச் சொற்களின் பின்னே வருதாகும். இவை பற்றித் தொல்காப்பியர்,

"அவைதாம்

இன்னே வற்றே யத்தே அம்மே

ஒன்னே யானே யக்கே யிக்கே

அஃறிணைக்கிளவி உளப்பட பிறவும்

அன்னவென்ப சாரியை மொழியே"[50]

எனக் குறிப்பிடுகிறார். இதனைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை

பின்னூ ரங்கு விடும்" (கு.எண்.535)

என்பதில் 'ஊற்றின்கண்' என்புழி உருபும் சாரியையும் உடன் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஊற்றின்கண்' என்பது 'ஊறு' என வந்துள்ளது. 'ஊறு' என்பதில் 'இன்' சாரியையும், 'கண்' என்ற ஏழான் உருபும் தொக்கி வந்தமையால் இவ்வாறு கூறுகிறார்.

நான்கானுருபும் சாரியையும் தொக்கி வருதல்

"உணலினு முண்ட தறலினிது காமம்

புணர்தலி னூடல் இனிது" (கு.எண்.1326)

என்பதில் 'காமத்திற்கு' என்புழிச் சாரியையும் நான்கானுருபும் விகாரத்தால் தொக்கது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'காமம்' என்பது 'காமத்திற்கு' என வரல் வேண்டும். அவ்வாறு வாராமல் 'அத்து' சாரியையும், 'கு' உருபும் மறைந்து வருகின்றமையினால் இவ்வாறு கூறுகிறார்.

எழுவாய் வருவித்தல்

எழுவாய் என்பது மாறுபாடு அடையாத பெயர் என்பதை நன்னூலார்,

"எழுவாய் உருபு திரிபில் பெயரே"[51]

என்கிறார். இவ்வெழுவாய் வருவித்தலைப் பரிமேலழகர் ஓர்

இடத்தில் சுட்டிக் காட்டுகிறார்.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்

மீக்கூறும் மன்னன் நிலம்" (கு.எண். 386)

குடிமக்கள் காண்பதற்கு எளியவனாகவும், கடுமையாகப் பேசாதவனாகவும் இருக்கும் மன்னது நாட்டை எல்லா நிலங்களிலும் உயர்த்திக் கூறும் உலகம் என்பது குறளின் கருத்து. இங்கு 'உலகம்' என்பது குறளில் இடம் பெறவில்லை. ஆனால் 'உலகம்' என்ற எழுவாய் வருவிக்கப்பட்டது. இவ்வாறு வருவனவற்றை எழுவாய் வருவித்தல் என்கிறார் பரிமேலழகர்.

செயப்படு பொருள் வருவித்தல்

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' ஆகும். இது செய்யபபடு பொருளில் வரும். ஒரு தொடரில் யாரை, எதை என்ற கேள்விக்கு விடை தருவது செயப்படுபொருளாகும். இது ஆறு பொருள்களில் வரும் என்பதை நன்னூலார்,

"இரண்டாவதன் உருபு ஐயே, அதன் பொருள்

ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்

ஒத்தல் உடைமை ஆதி ஆகும்"(52)

என்கிறார். குறளில் சில இடங்களில் செயப்படுபொருள் இல்லாமல் உரைக்கப்படும், அவ்விடங்களில் உரையாசிரியர்கள் தானே வருவித்துப் பொருள் கொள்வார். இவ்வாறு செயப்படு பொருள் வருவித்தலைப் பரிமேலழகர் "ஏழு இடங்களில்"(53) சுட்டுகிறார்.

"சென்ற இடத்தாற் செலவிடாத் தீதொரீஇ

நன்றின்பா லுய்ப்ப தறிவு" (கு.எண்.422)

மனத்தை தான் போகும் வழிகளிலெல்லாம் செல்லவிடாது நல்ல வழியில் செலுத்துவதே அறிவின் தன்மை என்பது குறளின் கருத்து. இங்கு 'மனத்தை' என்று வினைக்கு ஏற்ற செயப்படுபொருள் வருவிக்கப்படுகிறது. அதனால் தான் இக்குறளுரையில் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர்.

பரிமேலழகர் வேற்றுமை தொடர்பான செய்திகளைச் சுட்டும் குறட்பாக்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

வ.எண்	வேற்றுமைகள்	இடம் பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	வேற்றுமை மயக்கம்	102, 167, 242, 347, 499,515, 858, 1117, 1231, 1292, 1231
2.	வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக வரல்	
	(அ) இரண்டாம் வேற்றுமை	929
	(ஆ) ஐந்தாம் வேற்றுமை	560
3.	வேற்றுமை உருபுகள் மயங்கி வருதல்	261, 582, 859, 1196, 1213, 1214

4.	வேற்றுமை உருபுகள் விகாரத்தால் தொக்கி வருதல்	
	(அ) இரண்டானுருபு	445, 787, 795, 1067
	(ஆ) மூன்றானுருபு	147, 191, 257, 458, 556, 668, 810, 1148, 1235, 1236, 1264
	(இ) நான்கானுருபு	25, 1051, 1268
	(ஈ) ஐந்தானுருபு	1282
	(உ) ஏழானுருபு	792, 845, 1075, 1090, 1324
	(ஊ) ஏழானுருபும், சாரியையும்	535
	(எ) நான்கருபும், சாரியையும்	1326
5.	எழுவாய் வருவித்தல்	386
6.	செயப்படுபொருள் வருவித்தல்	442, 462, 473, 777, 1132, 1171, 1286

வினைச்சொற்கள்

ஒன்றனது செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் 'வினைச்சொற்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இவ்வினைச் சொற்கள் பற்றிக் கூற வந்த தொல்காப்பியர்,

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"(54)

என்கிறார். ஆனால் நன்னூலார்,

"வினைமுதல், கருவி, இடம், காலம், செயல், செயப்படுபொருள் ஆகிய அறுவகைப் பொருளையும் தருவது வினைச் சொல்"(55) என்கிறார்.

இவ்வினைச்சொற்களில் கீழ்க்கண்டவற்றைத் தம்முடைய உரையில் சுட்டுகிறார் பரிமேலழகர்.

i. எதிர்மறை வினை

ii. சினை வினை

iii. பெயரடியாய வினை

iv. வியங்கோள் வினைமுற்று

v. எதிர்கால வினைச்சொல்

vi. வினைமுதல் வருவித்தல்

vii. எதிர்கால-ஆர் ஈற்று முற்றுச்சொல்

எதிர்மறை வினை

ஒரு வினை அல்லது செயலானது எதிர்மறைப் பொருளில் வருமேயானால் அதனை எதிர்மறை வினை எனலாம்.

"அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்

தீவினை செய்யான் எனின்" (கு.எண்: 210)

இங்கு 'செய்யான்' எதிர்மறை வினை என்கிறார் பரிமேலழகர். இவ்விடத்தில் 'செய்வான்' என்ற சொல்லின் எதிர்மறையாக 'செய்யான்' என்பது வந்துள்ளது. மேலும் 'செய்யான்' என்பது 'செய்யாமல் இருப்பான்' என்னும் பொருளைத் தந்து எதிர்காலத்தையும் காட்டுவதால் இது எதிர்மறை வினை ஆயிற்று.

சினைவினை

சினைவினை பற்றிக் கூறவந்த நன்னூலார்,

"சினைவினை சினையொடும் முதலோடும் செறியும்" (56)

என்கிறார். இந்நூற்பா வாயிலாக சினைவினையானது; உறுப்போடும், உறுப்பினைச்சார்ந்த முதலோடும் முடியும் என்பதை அறியமுடிகிறது.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின்" (கு.எண்:475)

இக்குறளுரையில் 'இறும்' என்னும் சினைவினை முதல் மேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'இறும்' (முறியும்) என்பது வினை. 'அச்சு' என்பது சகடத்தின் உறுப்பாகையால் அது சினை. இவ்விடத்தில் 'அச்சுமுறியும்' என்னும் சினைவினையானது அதன் முதலாகிய சகடத்தின் மேல் நின்ற காரணத்தினால் இவ்வாறு கூறுகிறார் எனலாம்.

"மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு

இயைந்து கண்ணோடா தவர்" (கு.எண்:576)

இக்குறளுரையில் 'ஓடாதவர்' என்புழி சினைவினை முதல் மேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஓடாதவர்' (கருணை புரியாதவர்) என்பது வினை. 'கண்' என்பது உடம்பின் உறுப்பாதலால் அது சினை. இவ்விடத்தில் கண்ணோடு இருந்தும் கருணை புரியாதவர் என்னும் சினைவினை 'உடம்பு' என்ற முதல் மேல் நின்றதால் இவ்வாறு கூறினார் எனலாம்.

பெயரடியாய வினை

ஒரு வினையானது பெயரினை அடியாகக் கொண்டு தோன்றினால் அதனை 'பெயரடியாயவினை' எனலாம்.

"பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்

பெண்டகையால் பேரமர்க் கட்டு" (கு.எண்:1083)

என்பதில் 'அமர்த்தல்' பெயரடியாய வினை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அமர்த்தல்' என்பது போர் செய்தலைக் குறிக்கும். (அமர்-போர்) இவ்விடத்தில் 'செய்தல்' என்னும் வினை 'அமர்' என்னும் பெயரினை அடியாகக் கொண்டு தோன்றுவதால் இதனைப் பெயரடியாய வினை எனலாம்.

வியங்கோள் வினைமுற்று

க, ய என்னும் இரண்டு உயிர்மெய்களையும், ரகர ஒற்றையும் இறுதியாக உடைய மொழிகள் 'வியங்கோள் வினைமுற்றுகள்' அவை மூன்று இடங்களிலும், ஐம்பால்களிலும் வரும் என்பதை நன்னூலார்,

"கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்

இயலும் இடம்பால் எங்கும் என்ப"(57)

என்கிறார். உரையிற்கோடல் என்னும் உத்தியால் அ, அல், தல் என்பன வியங்கோள் விகுதிகளாக வரும் என்றும் அவை வாழ்த்துதல், வைதல், ஏவல், பணிவுடன் வேண்டுதல் ஆகிய பொருள்களில் வரும் என்றும் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

"பயனில்சொற் பாராட்டுவானை மகனெனல்

மக்கட் பதடி எனல்" (கு.எண்: 196)

இக்குறளுரையில் 'அல்' விகுதி வியங்கோள் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'மகன் எனல்' என்பது எதிர்மறைப் பொருளிலும் 'பதடிஎனல்' என்பது உடன்பாட்டு பொருளிலும் வந்துள்ளது. 'அல்' என்னும் விகுதி பெற்றமையாலும் வைதற் பொருளில் வந்தமையாலும் இது வியங்கோள் வினைமுற்று ஆயிற்று.

"உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைத்

கள்ளத்தாற் கொள்வே மெனல்" (கு.எண்: 282)

இங்கு 'எனல்' என்பதில் எதிர்மறை வியங்கோள் 'அல்' விகுதி வந்து வைதற் பொருளைக் குறிப்பதால் இதனை வியங்கோள் என்கிறார் பரிமேலழகர்.

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்

தெற்றென்க மன்னவன் கண்" (கு.எண்: 581)

இக்குறளுரையில் 'தெற்றென்க' வியங்கோள் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'தெற்றென்க' என்பதில் 'க' என்னும் வியங்கோள் விகுதி வந்துள்ளது. மேலும் அரசனிடம் பணிவுடன் வேண்டிக்கோடல் என்னும் பொருளிலும் அமைந்துள்ளது. இதனால் வியங்கோள் என்கிறார் பரிமேலழகர்.

எதிர்கால வினைச்சொல்

ஒரு வினைச்சொல்லானது எதிர்காலத்தில் வருமேயானால் அதனை 'எதிர்கால வினைச் சொல்' எனலாம்.

"அகடாரால் அல்லல் உழப்பர் சூதென்னும்

முகடியால் மூடப்பட டார்" (கு.எண்:936)

இங்கு 'உழப்பர்' என்பதில் எதிர்கால இடைநிலையான 'ப்'

வந்துள்ளது. மேலும் 'உழுத்தல் அல்லது வருந்துதல்' என்னும் தொழிலினையும் காட்டுகிறது. இதனால் 'உழப்பர்' என்பதனை எதிர்கால வினைச்சொல் என்கிறார் பரிமேலழகர்.

வினைமுதல் வருவித்தல்

வினைக்கு அல்லது தொழிலுக்கு ஏற்ற முதலினை அல்லது பெயரினை வருவித்துக் கொள்கின்ற தன்மையை 'வினைமுதல் வருவித்தல்' என்பர்.

எதிர்கால - ஆர் ஈற்று முற்றுச்சொல்

ஆர் ஈறானது பலர்பால் படர்க்கை வினைமுற்றில் வரும் என்பதை நன்னூலார்,

"அர்ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற
பல்லோர் படர்க்கை மார் வினையோடு முடியும்மே"(58)

என்கிறார்.

"துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்" (கு.எண்:378)

என்பதில் 'துறப்பார்' எதிர்கால-ஆர் ஈற்று முற்றுச்சொல் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'துறப்பார்' என்பதில் - ஆர் ஈறு வந்தும் எதிர்காலத்தைக் காட்டக் கூடிய இடைநிலையான 'ப்' வந்தும். ஒரு முற்றுப் பெற்ற சொல்லாக இருப்பதால் இது எதிர்கால-ஆர் ஈற்று முற்றுச்சொல் ஆயிற்று.

பரிமேலழகரால் சுட்டப்பெறும் வினைச்சொற்களும் அவற்றின் வகைகளும், இடம் பெற்றுள்ள குறட்பாக்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்திச் சுட்டப்படுகிறது.

வ.எண்	வினைச் சொற்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	எதிர்மறை வினை	210
2.	சினை வினை	475, 576
3.	பெயரடியாய வினை	1083
4.	வியங்கோள் வினைமுற்று	196, 282, 581
5.	எதிர்கால வினைச்சொல்	936
6.	வினைமுதல் வருவித்தல்	1143
7.	எதிர்கால-ஆர் ஈற்று முற்றுச்சொல்.	378

எச்சங்கள்

எச்சங்கள் பற்றிய செய்திகள் தொல்காப்பிய எச்சவியலிலும், நன்னூல் பொதுவியலிலும் இடம் பெறுகிறது. எச்சமாக வரும் சொற்கள் பத்து என்பதைத் தொல்காப்பியர்,

"பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயிரைந்தும்
நெறிபடத் தோன்றும் எஞ்சு பொருட் கிளவி"(59)

என்கிறார். நன்னூலாரும் இதனை அப்படியே ஒப்புக் கொண்டு "எச்சங்கள் 1. பெயரெச்சம் 2. வினையெச்சம் 3. உம்மை எச்சம் 4. சொல்லெச்சம் 5. பிரிநிலை எச்சம் 6. எனவெச்சம் 7. ஒழியிசை எச்சம் 8. எதிர்மறை எச்சம் 9. இசையெச்சம் 10. குறிப்பெச்சம் எனப் பத்து வகைப்படும்"(60) என்கிறார்.

இப்பத்துவகை எச்சங்களுள் பரிமேலழகர் பலவற்றை தம்முடைய உரையில் சுட்டுகிறார். இவற்றுள் 'ஒழியிசை எச்சம்' என்பது இடைச்சொற்கள் என்னும் பகுதியில் இடம்பெறுகிறது.

பெயரச்சம்

"பெயரைக் கொண்டு முடியும் ஒரு சொல் எச்சமாய் நின்றால் அது பெயரெச்சம்"(61) என்கிறார் தொல்காப்பியர். ஆனால் நன்னூலார்,

"செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமும் செயலும் தோன்றிப் பாலோடு
செய்வதாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச்சம்"(62)

என்கிறார். பரிமேலழகர் தம்முடைய உரையில் பெயரெச்சத்தை "12 இடங்களில்"(63) சுட்டுகிறார். பெயரெச்சங்கள் பெரும்பாலும் விகாரத்தால் தொக்கி வருதலையே குறிப்பிடுகிறார்.

"புகழ்புரிந் இல்லோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை" (கு.எண்:59)

இக்குறளுரையில் 'புரிந்த' என்னும் பெயரெச்சம் விகாரத்தால் தொக்கது என்கிறார். இங்கு 'புரிந்த' என்பது 'இல்லாள்' என்னும் பெயரை தழுவி நிற்றலால் பெயரச்சம் ஆயிற்று. மேலும் 'புரிந்த' என்பதில் இறுதிநிலை விகாரத்தால் தொக்கி வந்துள்ளது. இதனால் விகாரத்தால் தொக்கியே பெயரெச்சம் ஆயிற்று.

"கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா

நாடென்ப நாட்டின் தலை" (கு.எண்:736)

இக்குறளுரையில் பரிமேலழகர் அறியாத, குன்றாத என்னும் பெயரெச்சங்களின் இறுதிநிலைகள் விகாரத்தால் தொக்கன என்கிறார். 'கெடுதல் அறியாத' என்பது 'பகைவர்' என்னும் பெயரையும் 'வளங்குன்றாத' என்பது 'நாடு' என்னும் பெயரினையும் தழுவி எச்சமாக நிற்றலால் பெயரெச்சம் ஆயிற்று.

"செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை

எய்தலின் எய்தாமை நன்று" (கு.எண்:815)

இக்குறளுரையில் 'சாராத' என்னும் பெயரெச்சம் 'கேண்மை' என்னும் பெயர் கொண்டது என்கிறார் பரிமேலழகர். 'சாராத' என்பதில் பெயரச்ச விகுதியாகிய அகரம் தொக்கி 'சாரா' என்று வந்துள்ளது. இது கேண்மை என்னும் பெயரைச் சார்ந்து எச்சமாக வந்துள்ளதால் பெயரெச்சமாயிற்று.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பெயரெச்சத்தின் இறுதிநிலை கெட்டு எதிர்மறைப் பொருளில் வந்தால் அது 'ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்' எனப்படும்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேரா தியல்வது நாடு" (கு.எண்:734)

இங்கு 'ஓவாப்பிணி' என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். 'ஓவாத' என்பதில் ஈறுகெட்டு நீங்காத என்னும் எதிர்மறைப

பொருளில் வந்து 'பிணி' என்னும் பெயர்ப் பொருளைத் தழுவி நிற்றலால் இச்சொல் ஈறுகெட்ட எதிர்மறைப பெயரெச்சம் ஆயிற்று.

"கேள் இழுக்கம் கேளாக் கெழு தகைமை வல்லார்க்கு

நாள் இழுக்கம் நட்டான் செயின்" (கு.எண்:808)

இங்கு 'கேளா' ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்கிறார் பரிமேலழகர். 'கேளாத' என்பதில் இறுதிநிலை கெட்டு 'கொள்ளாத' என்னும் எதிர்மறைப் பொருளில் வந்து 'உரிமை அறியவல்லார்க்கு' பெயர்ப்பொருளைத் தழுவி நிற்றலால் இவ்வெச்சமாயிற்று.

வினை எச்சம்

ஒரு சொல் எச்சமாய் நின்று, வினைப் பொருளைத் தரும் சொல்லைக் கொண்டு முடிந்தால் அது 'வினையெச்சம்' எனப்படும். இதனைத் தொல்காப்பியம்,

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலை காலமோடு தோன்றும்"(64)

எனக் குறிப்பிடுகிறது. ஆனால் நன்னூல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது.

"தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை

ஒழிய நிற்பது வினையெச்சம்"(65)

பரிமேலழகர் தம்முடைய உரையில் வினையெச்சத்தைப் "பதின்மூன்று இடங்களில்"(66) சுட்டுகிறார்.

"அருங்கேடன் என்பது அறிக மருங்கு ஓடித்

தீவினை செய்யான் எனின்" (கு.எண்:210)

இக்குறளுரையில் பரிமேலழகர் 'ஓடி' என்னும் வினையெச்சம் 'செய்யான்' என்னும் எதிர்மறை வினையின் செய்தலோடு முடிந்தது என்கிறார். இங்கு 'ஓடி' என்னும் எச்சம் 'செய்யான்' என்னும் எதிர்மறை வினையின் செய்தலோடு முடிவதால் இது வினையெச்சம் ஆயிற்று.

"ஆக்கம் கருதிமுதல் இழக்கும் செய்வினை

ஊக்கார் அறிவுடை யார்" (கு.எண்:463)

இக்குறளுரையில் 'கருதி' என்னும் வினையெச்சம் 'இழக்கும்' என்னும். பெயரெச்சவினை கொண்டது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கருதி' என்னும் சொல் 'முதல் இழத்தல்' என்னும் தொழிலையும் இறந்த காலத்தையும் தழுவி நிற்றலால் 'வினையெச்சம்' ஆயிற்று.

"குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து

மாண்ட உஞற்றி லவர்க்கு" (கு.எண்:604)

இக்குறளுரையில் 'மடிந்து' என்னும் வினையெச்சம் 'இலவர்' என்னுங் குறிப்பு வினைப்பெயர் கொண்டது என்கிறார் பரிமேலழகர். 'மடிந்து' என்னும் எச்சம் 'குற்றம்' என்னும் தொழிலைக் கொண்டு முடிவதாலும் மேலும் இறந்த காலத்தைத் தழுவி நிற்றலாலும் இது வினையெச்சம் ஆயிற்று.

எதிர்மறை வினையெச்சம்

வினையெச்சமானது எதிர்மறைப் பொருளில் வருவது 'எதிர்மறை வினையெச்சம்' ஆகும். பெயரெச்சமும் வினையெச்சமும் எதிர்மறைப் பொருளில் வந்தாலும் பொருள் மாறுபடாது என்கிறார் தொல்காப்பியர். இதனை,

"பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா"(67)

என்னும் நூற்பா மூலம் விளக்குகிறார்.

"எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத் தொன்றுங்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு" (கு.எண்:281)

இக்குறளுரையில் 'எள்ளாது' என்ற வினையெச்சம் 'எள்ளாமை' எனத்திரிந்து நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'எள்ளல்' என்னும் வினை 'எள்ளி' என்ற வினையெச்சமாகி பின்னர் 'எள்ளாது' என எதிர்மறை எச்சமாக வந்து இறந்த காலத்தையும் குறித்தலால் எதிர்மறை வினையெச்சம் ஆயிற்று.

இறந்தகால வினையெச்சம்

வினையெச்சமானது இறந்த காலத்தைக் குறித்து வருமானால் அது 'இறந்த கால வினையெச்சம்' ஆகும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (கு.எண்:322)

இக்குறளுரையில் 'பகுத்துண்டு' என்பது இறந்த கால வினையெச்சம்

என்கிறார் பரிமேலழகர். இங்கு 'உண்ணல்' என்னும் தொழிலில் இருந்து 'உண்டு' என்னும் எச்சம் பெறப்படுகிறது. ஆனால் 'பகுத்துண்டு' என வரும்போது இறந்த காலத்தையும் குறிக்கிறது. இதனால் இது இறந்தகால வினையெச்சம் ஆயிற்று.

செயப்பாட்டு வினையெச்சம்

செய்த பொருளுக்கு முதன்மை தருவது செய்வினை, செய்யப்பட்ட பொருளுக்கு முதன்மை தருவது செயப்பாட்டு வினை. இந்த செயப்பாட்டு வினை எச்சமாக வருவதற்கு 'செயப்பாட்டு வினையெச்சம்' என்று பெயர்.

"அரம்பொருத பொன்போலத் தேயும் முரம்பொருது
உட்பகை உற்ற குடி" (கு.எண்:888)

இக்குறளுரையில் 'பொருது' செயப்பாட்டு வினையெச்சம் என்கிறார் பரிமேலழகர். அரத்தால் தேய்க்கப்பட்ட இரும்பு எவ்வாறு தேய்ந்து போகுமோ அதுபோல உட்பகை உள்ள குடி அழிந்து போகும் என்பது குறளின் கருத்து. இங்கு இரும்பு அரத்தால் பொரப்பட்டது (தேய்க்கப்பட்டது) என்பது செயப்பாட்டு வினை. இவற்றில் 'பொரப்பட்டது' என்பது 'பொருது' என வினையெச்சமாக வந்துள்ளமையால் இது செயப்பாட்டு வினையெச்சம் ஆயிற்று.

சொல்லெச்சம்

ஒரு தொடர் பொருள் முடிவு பெறாமல் இருக்கும் நிலையில், ஏதேனும் ஒரு சொல் அவ்விடத்தில் வருவிக்கப்பட்டு, பொருள்

முடிவு பெற உரைக்கப்படுமேயானால் அது 'சொல்லெச்சம்' எனப்படும். ஏனைய எச்சங்களுக்கு (வினையெச்சம், பெயரெச்சம், எனவெச்சம்) முடிக்கும் சொல் உண்டு. ஆனால் இச்சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசை எச்சம் ஆகியவற்றிற்கு முடிக்கும் சொல் இல்லை. இக்கருத்தைத் தொல்காப்பியர்,

"எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கும்
எஞ்சு பொருட் கிளவி இலவென மொழிப"[(63)]

என்று கூறுவதனால் அறியமுடிகிறது.

"பெயரெச்சம் முதலாயின தம்மை முடிக்கும் பிற சொல்லை அவாவி நிற்கும். சொல்லெச்சம் முதலான மூன்றும் பிற சொல்லை அவாவாது நிற்கும்"[(69)] என்கிறார் சேனாவரையர்.

சொல்லெச்சத்தில் ஒரே ஒரு சொல் மட்டும் எஞ்சி நிற்கும் தொடர் எஞ்சி நிற்காது. இது தொடருக்கு முன்னும் பின்னும் எஞ்சி நிற்கும் என்பதை,

"சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்லது எஞ்சுதல் இன்றே"[(70)]

என்கிறார் தொல்காப்பியர். பரிமேலழகர் சொல்லெச்சத்தை ஆறு இடங்களில்"[(71)] குறிப்பிடுகிறார்.

"அறத்தாற்றின் இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை" (கு.எண்:37)

இக்குறளானது 'அறம் இதுவென உரைக்க வேண்டாம். பல்லாக்கில்

உட்கார்ந்து செல்பவனுக்கும் தூக்குபவனுக்கும் இடையே என தொடர் முடிவுபெறாமல் இருக்கிறது. அதனால் 'உரைப்படும்' என்னும் சொல் வருவிக்கப்பட்டு பின்பு தொடரானது முற்றுப் பெறுகிறது. இவ்வாறு ஒரு சொல்லானது தொடருக்கு முன்போ பின்போ வந்து பொருளை முற்றுப் பெறச் செய்வது 'சொல்லெச்சம்' ஆகும்.

"கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை" (கு.எண்:572)

இக்குறளில் 'அதற்கு' என்பது சொல்லெச்சம் என்கிறார் பரிமேலழகர். 'கண்ணோட்டம் இல்லாதவர் இவ்வுலகில் இருத்தல் இந்நிலத்திற்குப் பாரமாதற்கே' என்பது குறளின் கருத்து. 'பிறிதொன்றற்கு அன்று' என்னும் சொல் பொருள் முடிப்புக்காக எடுக்கப்பட்டது. எனவே இது சொல்லெச்சம் ஆயிற்று.

செய்தனெச்சம்

நன்னூலார் வினையெச்ச வாய்ப்பாடுகளைக் கூறும்போது செய்தனெச்சம் இறந்த காலத்தைக் காட்டும் என்கிறார். ஆனால் தொல்காப்பியர் இறந்தகாலம் மட்டுமன்றி எதிர்காலத்தையும் காட்டும் என்கிறார்.

"செய்தனெச்சத் திறந்த காலம்
எய்தனுடைத்தே வாராக் காலம்"(72)

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்" (கு.எண்:643)

இங்கு 'அவாய்' என்னும் செய்தனெச்சம் 'மொழிவது' என்னும் செயப்பாட்டு வினை கொண்டது என்கிறார் பரிமேலழகர். 'அவாய்' என்பது 'விரும்புதல்' என்பதைக் குறிக்கும். இது இறந்த காலத்தைக் காட்டுகிறது. ஆதலால் செய்தனெச்சம் ஆயிற்று.

"குணம்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனனிலனாம் ஏமாப்பு உடைத்து" (கு.எண்:868)

என்பதில் 'இலனாய்' என்னும் செய்தனெச்சம் 'உடைய' என வந்த பெயரெச்சக் குறிப்பு கொண்டது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'இலனாய்' என்பது 'இழத்தல்' என்னும் பொருள்படும். 'இழத்தல்' என்பது இறந்த காலத்தைக் காட்டுவதால் இது செய்தனெச்சம் ஆயிற்று.

முற்றெச்சம்

வினைமுற்று எச்சப்பொருளில் வந்தால் அது 'முற்றெச்சம்' எனப்படும்.

"வைத்தான் வாய்சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல்" (கு.எண்:1001)

இக்குறளுரையில் 'வைத்தான்' என்பது முற்றெச்சம் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'வைத்தான்' என்னும் வினைமுற்று 'வைத்து' என்னும் எச்சப்பொருளில் வந்துள்ளமையால் இது முற்றெச்சம் ஆயிற்று.

குறிப்பெச்சம்

ஒரு தொடர் முழுவதும் எஞ்சி நின்று குறிப்பால் பொருளை உணர்த்துவது 'குறிப்பெச்சம்' எனப்படும். குறிப்பெச்சம் சொல்வான் குறிப்பால் எஞ்சி நின்று பொருளை உணர்த்தும். அதாவது சொல்லாற்றல் பொருளாற்றல்களால் குறிக்கப்படும் சொற்கள் எஞ்சி நிற்பது 'குறிப்பெச்சம்' எனப்படும்.

"குறிப்பெச்சம் குறிப்பின்கண் தோன்றிய எச்சம்"(73)

என்கிறார் நச்சினார்க்கினியர். "இது வடமொழியில் அருத்தாபத்தியின் பாற்படும் என்கிறார்"(74) வை.மு.சடகோபர்.

"அவைதாம்

தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்"(75)

என்பது தொல்காப்பிய நூற்பாவாகும். பரிமேலழகர் குறிப்பெச்சத்தை 15 இடங்களில்"(76) தம்முடைய உரையில் சுட்டுகிறார்.

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை" (கு.எண்:411)

செல்வங்களுள் சிறப்புடைய செல்வமாவது செவியான் வரும் செல்வம். அச்செல்வம் பிற செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையாயது. ஆனால் மற்றைய செல்வங்கள் நிலைத்து நிற்காது. அவை துன்பம் விளைவிப்பன. ஆகவே இது தலையாயிற்று. அதனால் அவற்றை ஒழித்து 'இதனையே செய்க' என்பது தோன்றி நின்றமையால் குறிப்பெச்சம் என்கிறார் பரிமேலழகர்.

"அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்

இன்மை அரிதே வெளிறு" (கு.எண்:503)

அரிய நூல்களைக் கற்றுத் தெளிந்து குற்றமில்லாதவர்களாய் விளங்குபவர்களிடத்தும் கூட சில குறைகள் இருக்கத்தான் செய்யும் என்பது குறளின் கருத்து. இங்கு 'அது தெரிந்து தெளிதல் வேண்டும்' என்னும் குறிப்புச் சொல் எச்சமாக நிற்றலால் இது குறிப்பெச்சமாயிற்று.

இசையெச்சம்

"இசை எச்சமாவது சொற்றொடர்களில் அவ்வவ் இடத்திற்கேற்ப ஒரு சொல்லும் பல சொற்களும் வருவித்து உரைப்பது"[77] ஆகும்.

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்

எம்மை மறைத்தீரோ என்று" (கு.எண்:1318)

'எம்மை' யை இக்குறளில் இசையெச்சம் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'எம்மை' என்பது 'நும்மோடு யாதும்ஓர் இயல்பில்லாத எனக்கு' என்ற பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு சொற்றொடரில் இடத்திற்கேற்ப சில சொற்கள். வருவிக்கப்படுவதால் இது இசை எச்சம் ஆயிற்று.

மறுதலை எச்சம்

ஒரு சொல் எச்சப் பொருளில் வந்தால் அதற்கு எதிர்மறையான மற்றொரு எச்சச் சொல்லை வருவிப்பது 'மறுதலை எச்சம்' எனப்படும்.

"இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்

துன்ப மதனிற் பெரிது" (கு.எண்:1166)

இக்குறளுரையில் 'அடுங்காலென' வந்தமையின் மறுதலை எச்சம் வருவிக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அடுங்கால்' என்பது 'துன்பம் செய்யுங்கால்' என்னும் பொருளுடையது. ஆகவே 'துன்பம் செய்யுங்கால்' என்னும் எச்சத்திற்கு எதிர்மறையாக 'இன்பம் செய்யுங்கால்' என்னும் எச்சம் வருவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வருவது மறுதலை எச்சம் ஆகும்.

எச்சத் திரிபு

எச்சங்கள் மாறி வருவது 'எச்சத் திரிபு' எனப்படும். அதாவது பெயரெச்சம் வினையெச்சமாகவோ அல்லது வினையெச்சம் பெயரெச்சமாகவோ மாறி வருவதாகும்.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றும்

நாமங் கெடக்கெடு நோய்" (கு.எண்:360)

இக்குறட்பாவில் 'கெட' எச்சத் திரிபு என்கிறார் பரிமேலழகர். காமம், வெகுளி, மயக்கம் மூன்றும் கெட்டுப் போய்விட்டால் பிறவித் துன்பம் இருக்காது என்பது குறளின் கருத்து. 'கெட்டு' என்னும் சொல் 'கெடு' என்னும் வினையெச்சத்தில் இருந்து தோன்றியதாகும். இங்கு 'கெடு' என்னும் வினையெச்சம் 'கெட' என்று பெயரெச்சமாக திரிந்ததனால் எச்சத் திரிபு ஆயிற்று எனலாம்.

பரிமேலழகரால் சுட்டப்பெறும் எச்சங்களும் அவை இடம்பெற்றுள்ள குறட்பாக்களும் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தி விளக்கப்படுகிறது.

வ.எண்	எச்சங்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	பெயரெச்சம்	59, 199, 228, 435, 448, 463, 548, 585, 736, 815, 852, 994.
2.	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்	734, 808
3.	வினையெச்சம்	22, 94, 210, 322, 352, 463, 536, 548, 602, 604, 1149, 1307.
4.	எதிர்மறை வினையெச்சம்	281
5.	இறந்தகால வினையெச்சம்	322, 868
6.	செயப்பாட்டு வினையெச்சம்	888
7.	சொல்லெச்சம்	37, 58, 171, 188, 572, 1095
8.	செய்தனெச்சம்	643
9.	முற்றெச்சம்	1001
10.	குறிப்பெச்சம்	66, 85, 117, 411, 415, 503, 574, 627, 762, 1001, 1080, 1095, 1127, 1128,1223.
11.	இசை எச்சம்	240, 1318.
12.	மறுதலை எச்சம்	1166
13.	எச்சத் திரிபு	360

இடைச்சொற்கள்

தனித்து வர இயலாமல் பெயர்ச்சொல்லையோ, வினைச் சொல்லையோ, இடமாகக் கொண்டு வருவது 'இடைச்சொல்' ஆகும் என்கிறார் தொல்காப்பியர். இதனையே தொல்காப்பியம்,

"இடையெனப் படுவ பெயரோடும் வினையோடும்
நடைபெற் றியலுந தமக்கியல் பிலவே"(78)

என்கின்றது. இக்கருத்தினை அடியொற்றியே நன்னூலாரும் இடைச் சொற்களின் பொதுவான இலக்கணத்தை எடுத்துக்கூறி, அவைகளின் எட்டு வகையான தன்மைகளையும் கீழ்க்கண்ட நூற்பா மூலம் குறிப்பிடுகிறார்.

"வேற்றுமை வினை சாரியை ஒப்புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பென் எண்பகுதியின் தனித்து இயல்பின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்"(79)

இடைச்சொல் நிற்கும் இடம்

நன்னூலானது இடைச்சொற்கள், பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் முன்பின் ஓரிடத்தில் ஒன்றும் ஒன்றும் பலவும் வரும் எனக் குறிப்பிடுகிறது. ஆனால் அதற்கு முன் தோன்றிய தொல்காப்பியம்,

"அவைதாம்

முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலுந்

தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையிலும்

அன்னவை எல்லாம் உரிய வென்ப"(80)

எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன்மூலம் இடைச்சொல், இடை வருதலன்றித் தம்மாற் சாரப்படுஞ் சொற்கு முன்னும், பின்னும் வருதலும், தம் ஈறு வேறுபட்டு வருதலும், பிரிது ஓர் இடைச்சொல் ஓர் இடைச்சொல்முன் வருதலும் ஆகிய தன்மை எல்லாம் உடையது என்பதை அறியமுடிகிறது.

பரிமேலழகர் தம்முடைய உரையில் கீழ்க்கண்ட இடைச்சொற்களைக் குறிப்பிடுகிறார்.

1. உம் - என்னும் இடைச்சொல்
2. ஏகார இடைச்சொல்
3. ஓகார இடைச்சொல்
4. மன்-இடைச்சொல்

உம் - என்னும் இடைச்சொல்

தொல்காப்பியம் உம் - என்னும் இடைச்சொல்லை,

"எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை

முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று

அப்பால் எட்டே உம்மைச் சொல்லே"(81)

என எட்டு வகையாகப் பகுக்கிறார். இதனை அடிப்படையாகக் கொண்டே நன்னூலாரும் கீழ்க்கண்டவாறு நூற்பா வகுக்கிறார்.

"எதிர்மறை சிறப்பையம் எச்சம் முற்றளவை

தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே"[82]

பரிமேலழகர் உம்மைகளை அதிகமான இடங்களில் தம் உரையில் சுட்டுகிறார். மேலும் இவர் வெளிப்படையாக வந்த உம்மைகளை மட்டுமல்லாமல், விகாரத்தால் தொக்குபவனவற்றையும் கூறுகின்றார்.

எச்சவும்மை

ஒரு சொல்லில் இடம்பெறும் உம்மையனது கருத்து முடிவுபெறாமல் வேறொன்றைத் தழுவி நிற்குமாயின் 'எச்சவும்மை' ஆகும்.

"பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை

எதிர்மறை உம்மை எனவே சொல்லே

குறிப்பே இசையே ஆயிரைந்தும்

நெறிபடத் தோன்றும் எஞ்சு பொருட்கிளவி"[83]

இந்நூற்பாவில் குறிக்கப்படுகின்ற 'உம்மை' என்பதே 'உம்மை எச்சம்' அல்லது எச்சவும்மை ஆகும்.

எச்சவும்மையை பரிமேலழகர் "ஆறு இடங்களில்"[84] குறிப்பிடுகிறார். ஒரு சிலவற்றை மட்டுமே ஆய்வில் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

"கூத்தாட்டு அவைக்குழாம் தற்றே பெருஞ்செல்வம்

போக்கு மதுவிளிந் தற்று" (கு.எண்: 332)

இக்குறளுரையில் 'போக்கும்' என்னும் எச்சவும்மையால் 'வருதல்'

என்பது பெற்றாம் என்கிறார் பரிமேலழகர். ஒருவனிடம் பெருஞ்செல்வம் வருதல் கூத்தாடுகின்ற அவையில் மக்கள் கூடுவது போன்றாம். செல்வம் கரைதல் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவது போன்றாம் என்பது குறளின் கருத்து. இங்கு 'போக்கும்' என்னும் எச்சச்சொல் 'வருதல்' என்னும் சொல்லைத் தழுவி நிற்றலால் இவ்வும்மை ஆயிற்று.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்

அன்னநீ ரார்க்கே உள" (கு.எண்: 527)

இங்கு 'ஆக்கமும்' என்ற சொல்லை எச்சவும்மை என்கிறார் பரிமேலழகர். காக்கையானது உணவு உண்ணும் போது சுற்றத்தாரை அழைத்து உண்ணும். அதுபோல் சுற்றத்தாரிடம் பகிர்ந்து உண்ணுபவரிடமே செல்வம் சேரும் என்பது குறளின் கருத்து. இங்கு 'ஆக்கம்' என்ற சொல் - உம் உருபு பெற்றதனால் அறமும், இன்பமும் மட்டுமன்றி பொருளையும் பெறும் என்பது தோன்ற நிற்கிறது. இதனால் எச்சவும்மை ஆயிற்று. மேலும் எச்சவும்மையானது, இறந்தது தழீஇய எச்சவும்மை, எதிரது தழீஇய எச்சவும்மை என இரண்டு வகைப்படும். "இப்பாகுபாடு நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் உரையில் இடம்பெறுகிறது"(85) என்பர்.

இறந்தது தழீஇய எச்சவும்மை

ஒரு சொல்லில் இடம்பெற்ற எச்சப் பொருளில் வரும் உம்மையானது இறந்த காலத்தைத் தழுவிநிற்குமாயின் இது 'இறந்தது

தழீஇ எச்சவும்மை' எனப்படும். நான்கு இடங்களில் பரிமேலழகர் இவற்றைச் சுட்டுகிறார்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு" (கு.எண்: 383)

இக்குறளுரையில் 'இம்மூன்றும்' என்பது இறந்தது தழீஇய எச்சவும்மை என்கிறார் பரிமேலழகர். ஒரு நாட்டை ஆளும் அரசனுக்குத் தூங்காமை, துணிவு, கல்வி ஆகியவை எப்போதும் இருத்தல் வேண்டும். இங்கு 'இம்மூன்றும்' என்னும் முற்றும்மை இறந்த காலத்தைத் தழுவி எச்சப் பொருளில் வந்துள்ளதால் இவ்வும்மை ஆயிற்று.

"மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லா புகழும் தரும்" (கு.எண்: 457)

இக்குறளுரையில் 'புகழும்' என்பது இறந்தது தழீஇ எச்சவும்மை என்கிறார் பரிமேலழகர். இங்கு, மனத்தூய்மை நிலைத்த உயிர்களுக்கு ஆக்கத்தைக் கொடுக்கும். இனத்தூய்மை ஆக்கந் தருதலோடு எல்லாப் புகழையும் தரும் எனப் 'புகழும்' என்னும் சொல் இறந்த காலத்தைத் தழுவி நிற்றலால் இவ்வும்மை ஆயிற்று.

"கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்" (கு.எண்: 577)

இக்குறளுரையில் 'இன்மையும்' என்பது இறந்தது தழீஇய எச்சவும்மை என்கிறார் பரிமேலழகர். ஏனென்றால் கண்ணோட்டம் இல்லாதவர் கண்ணுடையாரும் இல்லர். கண்ணுடையவர் கண்ணோட்டம்

இலராதலும் இல்லை என்பது குறளின் கருத்து. இவ்விடத்தில 'இன்மையும்' என்பது 'இலராதலும்' என்னும் இறந்தகாலப் பொருளைச் சுட்டினமையால் இவ்வும்மை ஆயிற்று.

எதிரது தழீஇய எச்சவும்மை

ஒரு சொல்லில் இடம்பெற்ற, எச்சப் பொருளில் வருகின்ற உம்மையானது எதிர்காலத்தைத் தழுவி நிற்பது எதிரது தழீஇய எச்சவும்மை ஆகும். இவ்வும்மையைப் பரிமேலழகர் ஓர் இடத்தில் மட்டும் சுட்டுகிறார்.

"இகலின் மிகலினது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து" (கு.எண்: 856)

இங்கு 'தவலும்' என்பது எதிரது தழீஇய எச்சவும்மை என்கிறார் பரிமேலழகர். பிறரிடம் மாறுபாடு கொள்வது இனிது என்று செய்வானது வாழ்க்கை பிழைத்தலும் முற்றக் கெடுதலும் சிறு பொழுதுகளேயாம் என்பது குறளின் கருத்து. இங்கு 'தவலும்' என்ற உம்மை விரைவில் கெட்டுப் போவதும் உண்டு என எதிர்காலத்தைத் தழுவி நிற்றலால் இவ்வும்மை ஆயிற்று.

எச்சவும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதல்

"ஓர் எழுத்து தோன்றுதலும், மற்றொரு எழுத்தாக மாறுதலும், உள்ள எழுத்தே கெட்டுப் போதலும் ஆகிய மூன்று தன்மைகள் உடையது 'விகாரம்' என நன்னூல் குறிப்பிடுகிறது."(86)

மேலே சொல்லப்பட்ட இவ்விகாரம்,

"வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்

விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி"(87)

என ஆறு வகையாகவும், பகுத்துச் சுட்டப்படுகிது. இந்நூற்பாவில் உள்ள 'தொகுத்தல்' என்பது தொக்கி நிற்றலைக் குறிக்கும். தொக்கி நிற்றல் என்பது ஓர் எழுத்தோ, சொல்லோ மறைந்து வருதலாகும்.

எச்சவும்மைகள் குறளில் "பல இடங்களில்"(88) தொக்கி வருவனவற்றை பரிமேலழகர் சுட்டுகிறார்.

"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி

எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து" (கு.எண்: 112)

நடுநிலைமை உடையவனது செல்வம், பிறர் செல்வம் போல் அழிவில்லாமல் அவன் இறக்கும் வரைக்கும் துணையாக இருக்கும் என்பது குறளின் கருத்து. இக்குறள் கருத்தின் அடிப்படையில் 'எச்சத்திற்கு' என்பது 'எச்சத்திற்கும்' என்று இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் - உம் உருபு தொக்கி நின்றதால் இது விகாரத்தால் தொக்கிய எச்சவும்மை ஆயிற்று.

"சான்றவர் சான்றாண்மை குன்றி இருநிலத்தான்

தாங்காது மன்னோ பொறை" (கு.எண்: 990)

பல குணங்களால் நிறைந்த சான்றோர்கள் தம் நிலையில் இருந்து குன்றுவார்களானால் இரு நிலத்தாலும் அவர்களது பொறையைத் தாங்க இயலாது என்பது குறளின் கருத்து. 'தான்' என்னும் சொல் 'தானும்' என்னும் பொருளில் வந்துள்ளது. மேலும் 'தான்' என்ற

சொல்லில் - உம் உருபு மறைந்துள்ளதால் இது விகாரத்தால் தொக்கிய எச்சவும்மை ஆயிற்று.

சிறப்பும்மை

உம் உருபானது ஒன்றைச் சிறப்பிக்கும் பொருட்டு வருவது 'சிறப்பும்மை' ஆகும். இந்த சிறப்பும்மையானது உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு என இரண்டு வகைப்படும். "இப்பாகுபாடு நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் உரையில் காணப்படுகிறது"(89) என்பர். சிறப்பும்மையை 24 இடங்களில் பரிமேலழகர் சுட்டுகிறார். உயர்வு சிறப்பும்மை 19 இடங்களிலும், இழிவு சிறப்பும்மை 5 இடங்களிலும் வருகின்றன.

உயர்வு சிறப்பும்மை

உம் என்னும் உருபானது ஒன்றினை உயர்வாகச் சிறப்பிதத்துச் சொல்வதற்கு 'உயர்வு சிறப்பும்மை' என்று பெயர்.

"நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந தடிந்தெழிலி
தானல்கா தாகி விடும்" (கு.எண்: 17)

இக்குறளுரையில் 'நெடுங்கடலும்' என்ற சொல்லில் - உம் உருபு பயின்று வருகிறது. இதனைப் பரிமேலழகர் சிறப்பும்மை என்கிறார். ஏனென்றால் மழைக்குக் காரணமாகிய கடலை உயர்வாகச் சிறப்பித்து 'நெடுங்கடல்' என்றதனால். இப்படி உயர்வாகிய கடலும் மேகம் பொழியாவிட்டால் தன் இயல்பில் இருந்து குன்றும் என்று சிறப்பித்ததனால் இது சிறப்பும்மை ஆயிற்று.

"கூற்றம் குதித்தலுங் கைக்கூடும் நோற்றலின்

ஆற்றல் தலைப்பட் டவர்க்கு" (கு.எண்: 269)

இக்குறட்பாவில் 'குதித்தலும்' என்ற சொல்லில் - உம் உருபு பயின்று வருகிறது. இதனைப் பரிமேலழகர் சிறப்பும்மை என்கிறார். தவ ஆற்றல் உடையவர்களால் எமனைக் கூட கடக்க முடியும் என்பது குறளின் கருத்து. இங்கு 'குதித்தலும்' என்ற சொல் 'எமனைக் கடத்தலும்' முடியும் என்ற உயர்வைக் குறிப்பதனால் இது உயர்வு சிறப்பும்மை ஆயிற்று.

"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்

செவ்வி தலைப்படு வார்" (கு.எண்: 1289)

இக்குறட்பாவில் 'மலரினும்' என்ற சொல்லில் - உம் உருபு பயின்று வருகிறது. இதனைப் பரிமேலழகர் உயர்வு சிறப்பும்மை என்கிறார். இங்கு 'மலர்' மென்மையானது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதனைவிட மென்மையானது 'காதல்' என உயர்வாகச் சிறப்பித்துக் கூறுவதற்கு - உம் உருபு பயன்படுகின்றமையால் இது உயர்வு சிறப்பும்மை ஆயிற்று.

மேலும் சில இடங்களில்"[90] இவ்வும்மையானது பயின்று வருவதைப் பரிமேலழகர் தம் உரையில் குறிப்பிடுகிறார்.

இழிவு சிறப்பும்மை

-உம் என்னும் இடைச்சொல் ஒன்றினை இழிவாகச் சிறப்பித்துக் கூறுவதற்கு இழிவு சிறப்பும்மை என்று பெயர்.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்

கள்ளத்தால் கள்வேம் எனல்" (கு.எண்: 282)

பிறனுடைய பொருளை அவர் அறியாமல் கொள்வோம் என மனத்தால் நினைத்தலும் கூடத் தீதாகும் என்பது குறளின் கருத்து. இங்கு 'உள்ளலும்' என்ற உம்மை 'நினைத்தலும்' என்ற பொருளை உணர்த்துகிறது. நினைத்தல் என்பது சிறப்பைக் குறிக்கும். அதுவே தீயது எனக் கூறினமையால் இது இழிவு சிறப்பும்மை ஆகும்.

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்

எழுதேம் கரப்பாக் கறிந்து" (கு.எண்: 1127)

'கண்ணும்' என்ற சொல்லில் - உம் உருபு பயின்று வருகிறது. 'கண்' என்பது உயர்வான பெருள், அதற்கு 'மைதீட்டுதல்' பெண்களோட வழக்கம். காதலர் அதனுள்ளே இருப்பதால் கண்ணிற்குள்ளும் மைதீட்ட மாட்டோம் என -உம் உருபு இழிவு தோன்ற நிற்றலால் இது இழிவு சிறப்பும்மை ஆகும்.

மேலும் "சில இடங்களில்"(91) பரிமேலழகர் இவ்வும்மையை சுட்டிக் காட்டுகிறார்.

உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கல்

உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கி வருதலை "10 இடங்களில்"(92) பரிமேலழகர் குறிப்பிடுகிறார். ஒரு சில குறட்பாக்கள் மட்டுமே இங்கு விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்

எண்ணுவ மென்ப இழுக்கு" (கு.எண்:467)

எந்தவொரு செயலையும் எண்ணிய பிறகே தொடங்க வேண்டும். தொடங்கிய பிறகு எண்ணுதல் என்பது குற்றமாகும். இக்குறட்பாவில் 'கருமம்' என்பது 'கருமமும்' என உம் உருபு பெற்று இருத்தல் வேண்டும். மேலும் 'கருமம்' என்பது உயர்வான செயல். இவ்வாறு உயர்வான ஒன்று -உம் உருபு தொக்கி வந்தமையால் இது விகாரத்தால் தொக்கிய உயர்வு சிறப்பும்மை ஆயிற்று.

"ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது

நீடுவ தன்றுகொல் என்று" (கு.எண்:1307)

கூடியிருக்கும் போது இந்த இன்பம் நீடித்து இருக்காதோ என்று எண்ணுதலால் ஊடல் கொண்டிருப்பதிலும் ஒரு துன்பம் உள்ளது என்பது குறளின் கருத்தாகும். இங்கு ஊடல் என்பது உயர்வான ஒன்று 'ஊடலின்' என்பது 'ஊடலினும்' என -உம் உருபு பெற்று வந்திருத்தல் வேண்டும். அவ்வாறு வராமல் தொக்கி வந்தமையால் இது விகாரத்தால் தொக்கிய உயர்சிறப்பும்மை ஆயிற்று.

இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கி வருதல்

இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கி வருதலைப் பரிமேலழகர் "ஒன்பது இடங்களில்"(93) குறிப்பிடுகிறார்.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்

நாமங் கெடக்கெடு நோய்" (கு.எண்: 360)

இக்குறட்பாவில் 'இவை மூன்றன்' என்பது 'இவை மூன்றனும்' என -உம் உருபு பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு பெறாமல் தொக்கி வந்துள்ளது. மேலும் காமம், கோபம், அறியாமை இவை மூன்றும் ஞான முதிர்ச்சி இல்லாதவர்க்கே இருக்கும் என்று இழிவு தோன்ற நின்றமையால் இது விகாரத்தால் தொக்கிய இழிவு சிறப்பும்மை ஆயிற்று.

"உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது" (கு.எண்: 762)

இக்குறட்பாவில் 'தொலைவிடத்து' என்பது 'தொலைவிடத்தும்' என -உம் உருபு பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு பெறாமல் தொக்கி வந்துள்ளது. மேலும் சிறிய அளவிலும், அரசனுக்குத் துன்பம் வரும்போது உதவ முடியாமற் போதல் என இழிவு பொருள்படவும் நிற்றலால் இது விகாரத்தால் தொக்கிய இழிவு சிறப்பும்மை ஆயிற்று.

"குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுப
குன்றி அனைய செயின்" (கு.எண்: 965)

இங்கு 'குன்றி அனைய' என்னும் சொல் 'குன்றி அனையவும்' என -உம் உருபு பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் தொக்கி வந்துள்ளது. தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களை ஒரு குன்றி அளவாயினும் செய்வாராயினும் தாழ்வர் என்று இழிவுபடக் கூறித் தொக்கியும் வந்தமையால் இவ்வும்மை ஆயிற்று.

முற்றும்மைகள்

'இதற்கு மேல் இல்லை' என்னும் பொருளில் வரக்கூடிய

உம்மைகளை 'முற்றும்மைகள்' என்பர். இத்தனை என அறியப்பட்ட இடத்திலும் முற்றும்மை கொடுக்க வேண்டும் என்பார் தொல்காப்பியர். இதனை,

"இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியில் உம்மை வேண்டும்"(94)

என்ற நூற்பா மூலம் குறிப்பிடுகிறார்.

"கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று" (கு.எண்: 402)

இக்குறளுரையில் 'இனைத்தென அறிந்த சினை' (தொல்.கிளவி.33) ஆகலின், தொகையோடு முற்றும்மை கொடுத்தார் என்கிறார் பரிமேலழகர். அதாவது, கல்வியில்லாதவன் ஒருவன் அவையில் ஒன்று சொல்ல விரும்புதல், இயல்பாகவே முலை இரண்டும் இல்லாதாள் ஒருத்தி பெண்மையை விரும்பினாற் போலும் என்றாகலின், இங்கு 'முலை இரண்டும்' என்பது முற்றும்மை ஆயிற்று.

"கண்டுகேட்டு உண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள" (கு.எண்: 1101)

இக்குறட்பாவில் காணுதல், கேட்டலும், உண்டலும், உயிர்த்தலும், உற்றறிதலும் ஆகிய ஐம்புலனும் என வருதலால் இவ்வைந்திற்கும் மேல் இல்லை என்னும் பொருள்பட நிற்கிறது. ஆதலால் 'ஐம்புலனும்' என்பது முற்றும்மை ஆயிற்று.

மேலும் "சில இடங்களிலும்"(95) இவ்வும்மையைப் பரிமேலழகர் சுட்டிகாட்டுகிறார்.

முற்றும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதல்

முற்றும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதலைப் பரிமேலழகர் "ஏழு இடங்களில்"(96) சுட்டுகிறார்.

"மிகினும் குறையினும் நோய் செய்யு நூலோர்

வளிமுதலா எண்ணிய மூன்று" (கு.எண்: 941)

இங்கு 'மூன்றும்' என்பது 'மூன்று' என விகாரத்தால் தொக்கி வந்துள்ளது. மேலும் மூன்றிற்கு மேலும் இல்லை என்னும் பொருளிலும் வந்துள்ளமையால் இது விகாரத்தால் தொக்கிய முற்றும்மை ஆயிற்று.

"யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (கு.எண்: 127)

இக்குறளில் 'யாகாவாராயினும்' என்பது 'யாகாவாராயினு' என விகாரத்தால் தொக்கி வந்துள்ளது. இது எல்லாவற்றையும் அதாவது ஐம்பொறிகளையும் என முற்றுப் பொருளிலும் வந்துள்ளது. இதனால்தான் விகாரத்தால் தொக்கிய முற்றும்மை என்கிறார் பரிமேலழகர்.

எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதல்

-உம் என்னும் இடைச்சொல்லானது எண்ணப்படு பொருளில் வருவது 'எண்ணும்மைகள்' ஆகும். எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கி வருவதைப் பரிமேலழகர் ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார்.

"தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச் சொல்லி

நன்றி பயப்பதாந் தூது" (கு.எண்: 685)

இக்குறட்பாவில் 'தொகச்சொல்லியும், நகச்சொல்லியும்' என்பதில் -உம் உருபானது தொக்கி 'தொகச்சொல்லி, நகச்சொல்லி' என வந்துள்ளது. மேலும் -உம் உருபானது எண்ணப்படு பொருளிலும் வந்துள்ளமையால் இது விகாரத்தால் தொக்கிய எண்ணும்மை என்கிறார் பரிமேலழகர்.

ஏகார இடைச்சொல்

தொல்காப்பியம் ஏகார இடைச்சொல்,

"தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே

ஈற்றசை இவ்வைந் தேகாரம்மே"[97]

என ஐந்து பொருள்களில் வரும் என்கின்றது. ஆனால் நன்னூல்

"பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்

இசைநிறை என ஆறு ஏகாரம்மே"[98]

என மேலும் 'இசைநிறை' ஒன்றைச் சேர்த்து ஆறு எனக் குறிப்பிடுகின்றது. பரிமேலழகர் தம்முடைய உரையில் தேற்ற ஏகாரத்தையும், பிரிநிலை ஏகாரத்தையும் குறிப்பிடுகின்றார்.

தேற்ற ஏகாரம்

ஏகாரம் தேற்றப் பொருளில் (தெளிவுப் பொருள்) வருவதைப் பரிமேலழகர் "ஆறு இடங்களில்"[99] சுட்டுகிறார்.

"அகர முதல எழுத்தெல்லாம் - ஆதி

பகவன் முதற்றே உலகு" (கு.எண்: 1)

இக்குறளுரையில் ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது என்கிறார் பரிமேலழகர். காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுளுக்கு உண்மை வேண்டுதலின் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்று கூறினார் என்கிறார் பரிமேலழகர். இங்கு ஆதிபகவன்தான் உலகிற்கு முதல் எனத் தெளிவுப் பொருளில் கூறியதால் தேற்ற ஏகாரமாயிற்று.

"உற்றநோய் நோன்றல் உயிர்குறுகண் செய்யாமை

அற்றே தவத்திற் குரு" (கு.எண்: 261)

'அற்றே' என்பது தேற்ற ஏகாரம் எனச் சுட்டப்படுகிறது. ஏனெனில் மற்றுளவனவெல்லாம் இதில் அடங்கியுள்ளன என்ற நிச்சயப் பொருளைத் தருவதால் ஆகும்.

"கண்டுகேட்டு உண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்

ஒண்டொடி கண்ணே உள" (கு.எண்: 1101)

இக்குறளில் ஏகாரம் தேற்றப் பொருளைக் குறிப்பதாகப் பரிமேலழகர் சுட்டுகிறார். காண்டல், கேட்டல், உண்டல், உயிர்த்தல், உற்றறிதல் ஆகிய ஐந்து பண்புகளும் பெண்களிடம் மட்டுமே உள்ளன எனத் தெளிவுப் பொருளைத் தருவதால் இது தேற்ற ஏகாரமாயிற்று.

பிரிநிலை ஏகாரம்

பரிமேலழகர் பிரிநிலை ஏகாரத்தைத் தம்முடைய உரையில் "ஆறு இடங்களில்"[(100)] சுட்டுகிறார்.

“அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்பது இல்லாயின் நன்று” (கு.எண்: 49)

இக்குறளில் ஏகாரம் பிரிநிலையின்கண் வந்ததாகப் பரிமேலழகர் சுட்டுகிறார். இங்கு அறவழிப்பட்டதே இல்வாழ்க்கை, ஏனைய துறவறமோ பிறரால் பழிக்கப்படாமையின் நன்று எனக் குறிப்பிடப்படுகிறது. அறவாழ்க்கையில் இருந்து ‘ஏகாரம்’ துறவற வாழ்க்கையைப் பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை ஏகாரமாயிற்று

“சிறைக் காக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்

நிறை காக்குங் காப்பே தலை” (கு.எண்: 57)

மகளிரைச் சிறையில் அடைத்து வைத்து காப்பதனால் என்ன பயன்/ ஒரு பயனும் இல்லை. தாங்களாகவே தங்கள் கற்பைக் காத்துக் கொள்ளுதலே தலையாயது என்பது குறளின் கருத்து. இங்கு சிறைக் காத்தலைவிட நிறைக் காத்தலே சிறந்தது என ‘ஏகாரம்’ பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை ஏகாரமயிற்று என்கிறார் பரிமேலழகர்.

“நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்

இல்லெனினும் ஈதலே நன்று” (கு.எண்: 222)

இக்குறளுரையில் ஏகாரம் பிரிநிலையின்கண் வந்ததாகப் பரிமேலழகர் சுட்டுகிறார். இங்கு தானம் பெறுவதைக் காட்டிலும் கொடுத்தலே சிறந்தது எனப் பிரித்து காட்டுகின்றமையால் இது பிரிநிலை ஏகாரமாயிற்று.

ஓகார இடைச்சொல்

தொல்காப்பியர் ஓகார இடைச்சொற்களை ஆறு வகையாகப் பகுத்துக் கீழ்க்கண்டவாறு நூற்பா வகுக்கிறார்.

"பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்போடு தொகைஇ
இருமூன்றென்ப ஓகாரம்மே"(101)

ஆனால் நன்னூலார் இவற்றோடு மேலும் இரண்டையும் சேர்த்து எட்டு என நூற்பா வகுக்கிறார்.

"ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை
கழிவுஅசை நிலைபிரிப்பு என எட்டு ஓவே"(102)

பரிமேலழகர் தம்முடைய உரையில் எதிர்மறை ஓகாரம், அசைநிலை ஓகாரம், பிரிநிலை ஓகாரம் ஆகிய மூன்றையும் சுட்டுகிறார்.

எதிர்மறை ஓகாரம்

எதிர்மறை ஓகாரத்தை ஓர் இடத்தில் மட்டும் பரிமேலழகர் சுட்டுகிறார்.

"அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை" (கு.எண்: 1014)

இக்குறட்பாவில் அணியன்றோ, பிணியன்றோ என்னும் எதிர்மறை ஓகார இடைச்சொற்கள் அணியும், பிணியும் என்னும் பொருளைத் தருகின்ற காரணத்தினால் இது எதிர்மறை ஓகாரமாயிற்று.

அசைநிலை ஓகாரம்

அசைநிலை ஓகாரத்தைப் பரிமேலழகர் ஓர் இடத்தில் மட்டும் குறிப்பிடுகிறார்.

"இன்னாசெய் தார்க்கு இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு" (கு.எண்: 987)

தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்கும் சால்புடையவர் இனியவற்றைச் செய்யாராயின் அச்சால்பு என்ன பயனை உடைத்து/ என்பது குறளின் கருத்து. இங்கு ஓகாரம் மேற்கொண்டு வேறு பொருளில்லாமல் நிற்றலால் அசைநிலையாயிற்று என்கிறார்.

பிரிநிலை ஓகாரம்

பிரிநிலை ஓகாரத்தைப் பரிமேலழகர் ஓர் இடத்தில் மட்டும் குறிப்பிடுகிறார்.

"காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு" (கு.எண்: 1247)

நெஞ்சமே! ஒன்று காம ஆசையை விடு! இல்லையென்றால் நாணத்தை விடு! இந்த இரண்டையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்பது குறளின் கருத்து. 'யானோ' என்பதில் உள்ள ஓகாரம் நீ பொறுத்துக் கொள்வாய் ஆனால் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது எனப் பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை ஓகாரம் என்கிறார் பரிமேலழகர்.

மன் - என்னும் இடைச்சொல்

"மன் - என்னும் இடைச்சொல் கழிவு, ஆக்கம், ஒழியிசை ஆகிய மூன்று பொருளில் வரும்"(103) என்பார் தொல்காப்பியர் ஆனால் நன்னூலார்,

"மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபேறு ஆகும்"(104)

என எட்டு வகையான பொருள்களில் வரும் என்கிறார். இவற்றுள் ஒழியிசைப் பொருளையே பரிமேலழகர் பலவிடங்களில் சுட்டுகிறார்.

ஒழியிசை

ஒழிந்த பொருளைச் சுட்டுவது ஒழியிசை எனப்படும். இவை மூன்று வகையான இடைச்சொற்களின் பொருளாக வருகிறது. அவை, 1. ஒகார இடைச்சொல், 2. தல் - என்னும் இடைச்சொல், 3.மன்-இடைச்சொல். இவற்றுள் மன் - என்னும் இடைச்சொல்லில் வரும் ஒழியிசையைப் பரிமேலழகர் "பல இடங்களில்"(105) சுட்டுகிறார்.

"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின்" (கு.எண்: 540)

அரசன் தான் நினைத்ததை நினைத்தபடி அடையலாம் என்பது குறளின் கருத்து. இங்கு அது கூடாது என்பதை உணர்த்துவதால் மன்-ஒழியிசையின்கண் வந்தது என்கிறார் பரிமேலழகர்.

"பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்

மண்புக்கு மாய்வது மன்" (கு.எண்: 996)

பண்புடையார்களால் தான் இந்த உலகம் இன்னும் நிலைத்து நிற்கிறது. இல்லாவிடில் மண்ணுக்குள் மாய்ந்து விடுமாம் என்பது குறளின் கருத்து. இங்கு 'மண்ணுக்குள் மாய்வது வேண்டா' என்னும் ஒழிந்த பொருளைச் சுட்டுவதால் 'மன்' ஒழியிசை ஆயிற்று.

"உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்

ஒள்ளமர்க் கண்ணாள் குணம்" (கு.எண்: 1125)

போரிடும் கண்களையுடைய இவளின் குணங்களை மறந்தால் தானே நினைக்க முடியும் என்பது குறளின் கருத்து. இங்கு 'மன்' என்பது 'மறக்கவில்லையே' என்ற ஒழிந்த பொருளைச் சுட்டுவதால் இது ஒழியிசை ஆயிற்று.

எண்ணிடைச் சொல்

எண்ணப்படு பொருளில் வரும் இடைச்சொற்கள் எண்ணிடைச் சொற்கள் எனப்படும். இவ்வெண்ணிடைச் சொற்களில் சில தொகை பெற்றும் பெறாமலும் வரும். தொகை பெறாது வருவனவாக உம்மை, என், என, ஒடு என்ற நான்கையும், தொகைபெற்று வருவனவாக செவ்வெண், ஏ, என்றா, என என்ற நான்கையும் குறிப்பிடுகிறார் நன்னூலார். இதனை,

"பெயர்ச்செவ் வெண்ணே யென்றா வெனாவெண்

ணான்குந் தொகைபெறு மும்மையென் றெனவோ

டிந் நான் கெண்ணும் அஃதின்றியும் இயலும்"(106)

என்னும் நூற்பா மூலம் சுட்டுகிறார்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் "மூன்று இடங்களில்"

இவ்வெண்ணிடைச் சொல்லைக் குறிப்பிடுகிறார்.

"பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க்

நோதக்க நட்டார் செயின்" (கு.எண்: 805)

நட்டார் வெறுக்கத் தக்கனவற்றைச் செய்வாராயின் அதற்குக் காரணம் (i) அறியாமை (ii) மிக்க உரிமை என்று எண்ணுப் பொருளில் வருவதால் 'ஒன்றோ' எண்ணிடைச் சொல் ஆயிற்று.

"பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்

பேதை வினைமேற் கொளின்" (கு.எண்:836)

செய்ய வழி தெரியாத ஒரு பேதை ஒரு செயலைச் செய்யத் தொடங்கினால் (i) குற்றப்படுவான்(ii)விலங்கு பூட்டப்படுவான் என்று எண்ணுப் பொருளில் வந்துள்ளமையால் 'ஒன்றோ' எண்ணிடைச் சொல் ஆயிற்று.

மூன்றாவதன் பொருள் படுவதோர் இடைச்சொல்

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட

பெயலும் விளையுளுந் தொக்கு" (கு.எண்: 545)

இக்குறளுரையில் பரிமேலழகர் 'உளி' என்னும் சொல் மூன்றவதன் பொருள் படுவதோர் இடைச்சொல் என்கிறார். இங்கு 'இயல்புளி' என்பது 'நூல்களில் சொல்லிய இயல்பால்' எனப் பொருள்படும். 'இயல்பால்' என்பதில் மூன்றாம் வேற்றுமை உருபு - 'ஆல்' வெளிப்படையாக வந்து அவ்வேற்றுமைக்குரிய பொருளைத் தருவதால் 'உளி' என்பதனை மூன்றாவதன் பொருள்படுவதோர் இடைச்சொல் எனக் கூறுகிறார் எனலாம்.

செவ்வெண்

பெயர் வினைகளில் எண்ணிடைச் சொற்களில் உள்ள -உம் உருபு தொக்கி வருவது 'செவ்வெண்' எனப்படும். இதனை நன்னூலார்,

"செவ்வெண ஈற்றதாம் எச்சவும்மை"(108)

என்கிறார்.

"பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார் கணில்" (கு.எண்: 141)

பிறருடைய மனையாளைக் காதலித்து ஒழுகுகின்ற பேதைமை அறநூல்களையும் பொருள் நூலையும் ஆராய்ந்தார் மாட்டு இல்லை என்பது குறளின் கருத்து. இக்குறளுரையில் அறம்பொருள் 'செவ்வெண்' என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அறமும் பொருளும்' என உம்மை தொகாது வரவேண்டும். அவ்வாறு வராமல் எண்ணப்படுபொருளில் 'உம்' உருபு தொக்கி வந்துள்ளமையால் இது 'செவ்வெண்' ஆயிற்று.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து" (கு.எண்: 645)

என்பதில் 'பிறிதோர்சொல், வெல்லும் சொல்' என்பது 'செவ்வெண்' என்கிறார் பரிமேலழகர். இங்கு பிறிதோர் சொல்லும், வெல்லும் சொல்லும் என வரல் வேண்டும். இவ்வாறு வாராமல் தொக்கி வந்தமையால் செவ்வெண் ஆயிற்று.

மற்று - வினைமாற்று

முன் சொல்கின்றது ஒழிய இனி வேறொன்று என்னும் பொருளைக் குறிக்குமிடத்து 'மற்று' வந்தால் அது 'வினைமாற்று' எனப்படும். ஒரு வினையை மற்றொரு வினையாக மாற்றிப் பொருள் கொள்ளுமிடத்தில் வந்தாலும், 'மற்று' வினைமாற்றாகிறது. இதனை நன்னூலார் இடைச்சொல்லாகக் கருதி,

"வினைமாற்று அசைநிலை பிறிதெனும் மற்றே"(109)

என நூற்பா அமைக்கிறார். 'மற்று' என்னும் இடைச்சொல் வினைமாற்றாக வருவதைப் பரிமேலழகர் தம்முடைய உரையில் "பதினான்கு இடங்களில்"(110) குறிப்பிடுகிறார்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை" (கு.எண்: 15)

பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது கெடுப்பதும், அவ்வாறு கெட்டவர்க்கு துணையாய்ப் பெய்து, முன் கெடுத்தாற் போல எடுப்பதும் வல்லது மழை என்பது குறளின் கருத்து. இங்கு 'உலகத்தாரைப் பெய்யாது கெடுப்பதும்' என்ற ஒரு செய்தியைக் கூறிவிட்டு அதற்கு மாற்றாக 'அவர்களை எடுப்பதும்' என்ற செய்தியைக் கூற 'மற்று' பயன்பட்டுள்ளமையை அறியமுடிகிறது. இவ்வாறு முன் சொல்லுகின்றது ஒழிய இனி வேறொன்று உண்டு என்கின்ற பொழுது 'மற்று' வந்தமையால் இது வினைமாற்று ஆயிற்று.

"மனநலத்தின் ஆகுமறுமை மற்று அஃதும்

இன நலத்தின் ஏமாப்பு உடைத்து" (கு.எண்: 459)

ஒருவனுக்கு மனத்தின் நன்மையால் மறுமை உண்டாகும். மற்று அம்மனநலம் இனத்தின் நன்மையால் வலிமை பெறும் என்பது குறளின் கருத்து. இங்கு முன்னர் ஒரு செய்தியைக் கூறிவிட்டு பின்னர் ஒரு செய்தியைக் கூற 'மற்று' பயன்படுகிறது. இவ்வாறு முன் சொல்கின்ற தொழிய வேறொன்று உண்டு என்னும் பொருளில் 'மற்று' வந்தமையால் இது வினைமாற்று ஆயிற்று.

"இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்

துன்ப மதனிற் பெரிது" (கு.எண்: 1166)

காதலருடன் கூடும்போது இன்பம் கடல் போல் பெருகுகிறது. ஆனால் பிரியும் போது அவ்வின்பம் கடலைவிட பெரிதாக துன்பம் தருகிறது. இங்கு கூடும்போது கடல் போனற இன்பம், பிரியும் போது அக்கடலைக் காட்டிலும் துன்பம் தருகிறது என்னும் கருத்தை வேறுபடுத்திக் காட்ட 'மற்று' பயன்பட்டுள்ளமையால் இது வினைமாற்று ஆயிற்று.

"நோதல் எவன்மற்று நொந்தாரென்

காதலர் இல்லா வழி" (கு.எண்: 1308)

இங்கு 'நோதல்' என்ற வினையைத் தவிர்த்து 'நோவாமை' என்ற வினையைத் தழுவுவதால் 'மற்று' என்பது வினைமாற்று ஆயிற்று.

அசைநிலைகள்

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து

தனக்கென ஒரு பொருளையும் உணர்த்தாது வருவது 'அசைநிலை' எனப்படும். இவ்வசை நிலைகள் யாப்பிலக்கண அமைதி நோக்கி வரும் என்பர்.

"பொருளுணர்த்தாது பெயரோடும் வினையோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின் அசைநிலையாயிற்று"(111) என்று காரணப் பொருளாக விளக்குகிறார் சேனாவரையர்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் பல்வேறு அசை நிலைகளைச் சுட்டுகிறார். அவை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி விளக்கப்படுகிறது.

ஓகார அசை நிலை

ஓகாரம் அசைநிலையாக வருவதை நன்னூலார்,

"ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை
கழிவு அசைநிலை பிரிப்பு எனஎட்டு ஓவே"(112)

என்கிறார். ஓகாரம் அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் நான்கு இடங்களில் சுட்டுகிறார்.

"நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்" (கு.எண்: 1016)

என்பதில், 'மன்னோ' என்ற சொல்லில் உள்ள ஓகாரம் அசைநிலை என்கிறார் பரிமேலழகர். உயர்ந்தவர்கள் தமக்கு வேலியாக நாணத்தைக் கொள்வதன்றி அகன்ற உலகத்தைக் கொள்ள விரும்ப மாட்டார் என்பது குறளின் கருத்து. இங்கு 'ஓகாரம்' தனக்கென

ஒரு பொருளையும் உணர்த்தாமல் வந்தமையால் அசை நிலையாயிற்று.

"இன்னாசெய் தார்க்கு இனியவே செய்யாக்கால்

என்ன பயத்ததோ சால்பு" (கு.எண்: 987)

தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்கும் சால்புடையவர் இனியவற்றைச் செய்யாராயின், அச்சால்பு என்ன பயனை உடைத்து என்பது குறளின் கருத்து. இங்கு 'ஓகாரம்' ஒரு பொருளும் உணர்த்தாமையால் அசைநிலையாயிற்று.

கொல் - அசைநிலை

'கொல்' என்பது அசை நிலையாக வரும் என்பதை நன்னூலார்,

"கொல்லே ஐயம் அசைநிலைக்கூற்றே"(113)

என்கிறார். பரிமேலழகர் 'கொல்' அசைநிலையாக வருவதை இரண்டு இடங்களில் சுட்டுகிறார்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றா ளொழாஅ ரெனின்" (கு.எண்: 2)

மெய்யறிவினையுடையவனது தாள்களைத் தொழாராயின் எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வி அறிவான் ஆய பயன் யாது! என்பது இக்குறளின் கருத்து. இங்கு 'கொல்' என்பது எவ்விதப் பொருளையும் உணர்த்தாமையினால் அசைநிலையாயிற்று.

மற்று - அசைநிலை

'மற்று' என்னும் இடைச்சொல் அசைநிலையாக வரும் என்பதை,

"வினைமாற்று அசைநிலை பிறிதெனும் மற்றே"(114)

என்கிறார் நன்னூலார். 'மற்று' என்னும் சொல் அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் நான்கு இடங்களில் சுட்டுகிறார்.

"அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை" (கு.எண்: 36)

காலம் இருக்கிறது என்று கருதாமல், அப்போதைக்கு அப்போது அறம் செய்தல் வேண்டும். அதுவே நாம் அழியுங்காலத்தில் துணையாக நிற்கும் என்பது குறளின் கருத்து. இங்கு 'மற்று' என்பது ஒரு பொருளும் உணர்த்தாமையால் அசைநிலையாயிற்று.

"இலன் என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து" (கு.எண்: 205)

என்பதில் 'மற்று' அசைநிலை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'மற்று' என்னும் சொல் ஒரு பொருளும் உணர்த்தாமையினால் அசைநிலை ஆயிற்று.

மன் - அசைநிலை

'மன்' என்னும் இடைச்சொல் அசைநிலையாக வரும் என்பதை நன்னூலார்,

"மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்

கழிவு மிகுதி நிலைபேறு ஆகும்[115]

என்கிறார். 'மன்' என்னும் சொல் அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் நான்கு இடங்களில் சுட்டுகிறார்.

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்

திங்களைப் பாம்புகொண் டற்று" (கு.எண்: 1146)

இக்குறளுரையில் 'மன், உம்' அசைநிலைகள் என்கிறார் பரிமேலழகர். நான் என் காதலரைக் கண்டதோ ஒரு நாள் தான்; ஆனால் அலரோ முழு நிலவைப் பாம்பு கவ்வியதைப் போல பரவி நிற்கிறது என்பது குறளின் கருத்து. இங்கு 'மன்' என்பதும் 'உம்' என்பதும் ஒரு பொருளும் உணர்த்தாமையினால் அசைநிலை ஆயிற்று.

"ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்

கூடலில் காணப் படும்" (கு.எண்: 1327)

ஊடலில் தோற்றுப்போய் இறங்கி வருகிறவர்களே வெற்றி பெற்றவர்கள். இதைக் கூடும் இன்பத்தின் மலர்ச்சியில் புரிந்து கொள்ளலாம் என்பது குறளின் கருத்தாகும். இங்கு 'மன்' என்பது எவ்விதப் பொருளையும் உணர்த்தாது வருகின்ற காரணத்தினால் அசைநிலையாயிற்று என்கிறார் பரிமேலழகர்.

உம் - அசைநிலை

'உம்' என்னும் சொல் அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் மூன்று இடங்களில் சுட்டுகிறார்.

"காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்தும்

ஏமப் புணைமன்னு மில்" (கு.எண்: 1164)

இக்குறளுரையில் 'மன்னும்' என்பதிலுள்ள 'உம்' அசைநிலை என்கிறார் பரிமேலழகர். காமம் கடல்போல் பரந்து கிடக்கிறது. அதை நீந்திக் கடப்பதற்கான வலிமையான படகுதான் தென்பட வில்லை என்பது குறளின் கருத்தாகும். இங்கு 'உம்' என்பது எவ்விதப் பொருளும் உணர்த்தாமையினால் அசைநிலை என்கிறார் பரிமேலழகர்.

ஆங்கு - அசைநிலை

'ஆங்கு' என்பது அசைநிலையாக வரும் என்பதனை நன்னூலார்,

"அந்தி ஆங்கு அசைநிலை இடப்பொரு ளவ்வே"(116)

பரிமேலழகர் 'ஆங்கு' என்பது அசைநிலையாக வருவதை ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது

நீடுவ தன்றுகொல் என்று" (கு.எண்:1307)

என்பதில் 'ஆங்கு' அசைநிலை என்கிறார் பரிமேலழகர். இனிப் புணர்ச்சி நீடிக்குமோ நீடியாதோ எனக் கருதலான், இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலின் கண்ணேயும் ஒரு துன்பம் நிகழும் என்பது குறளின் கருத்தாகும். இங்கு 'உண்டாங்கோர்' என்பதிலுள்ள 'ஆங்கு' என்னும் சொல் எவ்விதப் பொருளையும் உணர்த்தாது வந்தமையினால் இதனை அசைநிலை என்கிறார் பரிமேலழகர்.

இவை தவிர ஒரும், ஆல், ஆம், தான், ஐகாரம், அரோ, பிற, வாழி ஆகிய சொற்களும் அசைநிலையாக வரும் என்பதை நன்னூலார்,

"யாகா பிறபிறக்கு அரோபோ மாது இகும்
சின்குரை ஒரும் போலும் இருந்து இட்டு
அன்று ஆம் தாம்தான் கின்று நின்று அசைமொழி"(117)

என்கிறார்.

ஒரும் - அசைநிலை

'ஒரும்' என்னும் சொல் அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் இரண்டு இடங்களில் சுட்டுகிறார்.

"அஞ்சுவதோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா" (கு.எண்:336)

இக்குறளுரையில் 'ஒரும்' என்பன அசைநிலைகள் என்கிறார் பரிமேலழகர். ஒருவன் அறத்திற்கு அஞ்ச வேண்டும். ஏனெனில் அவனை வஞ்சித்துக் கெடுப்பது அவன் படுகின்ற அறம் பிறழ்ந்த ஆசையே என்பது குறளின் கருத்தாகும். இங்கு 'ஒரும்' என இரண்டு முறை வரும் சொற்கள் எவ்வித பொருளையும் உணர்த்தாமையினால் இது அசைநிலை ஆயிற்று.

ஆல் - அசைநிலை

'ஆல்' என்னும் சொல் அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்

செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" (கு.எண்: 91)

என்பதில் 'ஆல்' அசைநிலை என்கிறார் பரிமேலழகர். இன்சொல்லாவன, அன்போடு கலந்து வஞ்சனை இல்லாமல் இருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாய்ச்சொற்கள் ஆகும் என்பது குறளின் கருத்து. இங்கு 'ஆல்' என்பது ஒரு பொருளையும் உணர்த்தாது வந்தமையால் இதனை அசைநிலை என்கிறார் பரிமேலழகர்.

ஆம் - அசைநிலை

'ஆம்' என்னும் சொல் அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை

அணியுமாம் தன்னை வியந்து" (கு.எண்: 978)

இக்குறளுரையில் 'ஆம்' இரண்டும் அசைநிலை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஆம்' இரண்டும் எவ்விதப் பொருளிலும் வாராமையினால் அசைநிலை ஆயிற்று.

தான் - அசைநிலை

'தான்' என்பது அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்

குற்றமே கூறி விடும்" (கு.எண்: 980)

இங்கு 'தான்' என்பது எவ்விதப் பொருளிலும் வாராமல் அசைநிலையாக நிற்பதால் இதனை அசைநிலை என்கிறார் பரிமேலழகர்.

ஐகாரம் - அசைநிலை

'ஐகாரம்' என்பது அசைநிலையாக வருவதனைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று" (கு.எண்:1058)

இங்கு 'இரப்பாரை' என்ற சொல்லில் உள்ள 'ஐகாரம்' பொருளுணர்த்தாமல் அசைநிலையாக நிற்பதால் இதனை அசைநிலை என்கிறார் பரிமேலழகர்.

அரோ - அசைநிலை

'அரோ' என்னும் சொல் அசைநிலையாக வருவதனைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"அரிதரோ தேற்ற அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்" (கு.எண்:1153)

இங்கு 'அரோ' என்னும் சொல்லில் உள்ள 'அரோ' பொருளுணர்த்தாமல் அசைநிலையாக மட்டும் வருவதால் இதனை அசைநிலை என்கிறார் பரிமேலழகர்.

பிற - அசைநிலை

'பிற' என்னும் சொல் அசைநிலையாக வருவதைப் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

"நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற" (கு.எண்:1181)

இக்குறளின் ஈற்றுச் சீராகிய 'பிற' எவ்விதப் பொருள் உணர்த்தாமல் அசைநிலையாக நிற்றலின் இதனைப் பரிமேலழகர் அசைநிலை என்கிறார்.

வாழி - அசைநிலை

'வாழி' என்பது ஓரிடத்தில் மட்டும் அசைநிலையாக வருவதனைப் பரிமேலழகர் சுட்டுகிறார்.

"விடாஅது சென்றாரைக் கண்ணிற் காணப்
படாஅதி வாழி மதி" (கு.எண்:1210)

இங்கு 'வாழி' என்பது பொருள் உணர்த்தாது அசைநிலையாக மட்டும் நிற்றலால் இதனை அசைநிலை என்கிறார் பரிமேலழகர்.

பரிமேலழகரால் திருக்குறளில் சுட்டப் பெறும் இடைச் சொற்களும் அவற்றின் வகைகளும் இடம் பெற்ற குறட்பாக்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

வ.எண்	இடைச்சொற்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	**உம்-இடைச்சொல்**	
	i.எச்சவும்மைகள்	332, 380, 527, 974, 986, 1060.
	ii. இறந்தது தழீஇய எச்சவும்மை	383, 487, 577, 856.
	iii. எதிரது தழீஇய எச்சவும்மை	856
	iv. எச்சவும்மைகள் விகாரத்தால் தொக்குதல்	112, 224, 306, 463, 990, 1138, 1150, 1195, 1222, 1262
	சிறப்பும்மைகள்	
	v. உயர்வு சிறப்பும்மை	17, 18, 71, 269, 354, 469, 492, 521, 748, 765, 819, 987, 998, 1044, 1047, 1061, 1153, 1289.
	vi.இழிவு சிறப்பும்மை	282, 337, 403, 1127, 1199
	vii.உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்குதல்	187, 290, 346, 467, 810, 1160, 1194, 1202, 1305, 1307
	viii.இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்குதல்	344, 360, 408, 751, 762, 965, 969, 1198, 1257.
	முற்றும்மைகள்	
	ix.முற்றும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதல்	25, 402, 835, 992, 401. 127, 224, 822, 941, 1108, 1141, 1247
	எண்ணும்மைகள்	
	எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கி வருதல்	685

வ.எண்	இடைச்சொற்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
2.	**ஏகார இடைச்சொல்**	
	i. தேற்ற ஏகாரம்	1, 261, 418, 1101, 1108.
	ii. பிரிநிலை ஏகாரம்	49, 57, 72, 165, 222, 521.
3.	**ஓகார இடைச்சொல்**	
	i. எதிர்மறை ஓகாரம்	1014.
	ii. அசைநிலை ஓகாரம்	987.
	iii. பிரிநிலை ஓகாரம்	1247.
4.	**மன் - இடைச்சொல்**	
	i. மன் - ஒழியிசை	378, 540, 990, 996, 1086, 1125, 1161, 1165, 1170, 1178, 1189, 1206, 1207, 1212, 1216, 1253, 1265, 1266, 1284.
5.	**எண்ணிடைச் சொல்**	148, 805, 855.
6.	மூன்றாவதன் பொருள் படுவதோர் இடைச்சொல்	545
7.	செவ்வெண்	141, 645.
8.	**மற்று - இடைச்சொல்**	
	i. வினைமாற்று	15, 16, 65, 248, 266, 362, 364, 695, 1155, 1166, 1178, 1294, 1308, 1313.
9.	அசைநிலைகள்	
	i. ஓகார அசைநிலை	1004, 1016, 1178, 1184.
	ii. கொல் அசைநிலை	2, 85
	iii. மற்று அசைநிலை	36, 60, 95, 205
	iv. மன் - அசைநிலை	1016, 1146, 1164, 1327

வ.எண்	இடைச்சொற்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
	v. உம் - அசைநிலை	1146, 1164, 1327
	vi. ஆங்கு - அசைநிலை	1307
	vii. ஒரும் - அசைநிலை	40, 366
	viii. ஆல் - அசைநிலை	91
	ix. ஆம் - அசைநிலை	978
	x. தான் - அசைநிலை	980
	xi. ஐகாரம் - அசைநிலை	1058
	xii. அரோ - அசைநிலை	1153
	xiii. பிற - அசைநிலை	1181, 1184
	xiv. வாழி - அசைநிலை	1210

உரிச்சொற்கள்

"பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றிற்கு உரிமை பூண்டு நிற்பன உரிச்சொற்கள்"[118] ஆகும். இது செய்யுளுக்கு உரியதாய் மட்டும் வரும் என்கிறார் நன்னூலார்.

பரிமேலழகர் தம்முடை உரையில் நாம், நனி, கடி ஆகிய உரிச்சொற்களைச் சுட்டுகிறார்.

நாம் - என்னும் உரிச்சொல்

'நாம்' என்பது அச்சப்பொருளில் வரும் என்பதைத் தொல்காப்பியர்,

"பேம்காம் உருமென வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப்பொருள்"[119]

என்கிறார்.

"நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
பிறர்க்குரியா தோள்தோயா தார்" (கு.எண்.149)

என்பதில் 'நாமநீர்' உரிச்சொல் என்கிறார் பரிமேலழகர். 'நாமநீர்' என்பதற்கு 'அச்சம் தரும் கடல்' என்பது பொருள். இங்கு 'நாம்' என்பது 'அச்சம்' என்னும் பொருளில் வருவதை மேற்கண்ட குறள் வாயிலாக அறியமுடிகிறது. இதனால் 'நாமநீர்' உரிச்சொல் ஆயிற்று.

நனி - என்னும் உரிச்சொல்:

'நனி' என்பது 'மிகுதி' என்னும் பொருளில் வரும் என்பதை, "சாலவுறுதவ நனிகூர் கழி மிகல்"[120] என்னும் நூற்பா வாயிலாக அறியமுடிகிறது.

"கல்லா தவரும் நனிநல்லார் கற்றார்முன்

சொல்லா திருக்கப் பெறின்" (கு.எண்.403)

இங்கு 'நனி நல்லார்' என்பது 'மிகவும் நல்லவர்' என்னும் பொருளில் வந்துள்ளது. ஆகவே 'நனிநல்லார்' என்னும் மிகுதிப்பொருள் பற்றியதோர் இடைச்சொல் எனலாம்.

கடி என்னும் உரிச்சொல்:

'கடி' என்னும் உரிச்சொல் பத்துப் பொருளில் வருவதாகத் தொல்காப்பியர் சுட்டுகிறார். ஆனால் நன்னூலார் பதின்மூன்று பொருள்களில் வருவதாகக் குறிப்பிடுகிறார். இதனை,

"கடியென் கிளவி காப்பே கூர்மை

விரையே விளக்கு மச்சஞ் சிறப்பே

விரைவே மிகுதி புதுமை யார்த்தல்

வரைவே மன்றல் கரிப்பினாகும்"(121)

என்னும் நூற்பாவால் அறியமுடிகிறது.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்

கடுத்தது காட்டும் முகம்" (கு.எண்.706)

இக்குறளுரையில் 'கடுத்தது' என்பது 'கடி' என்னும் உரிச்சொல்லின் அடியாய் வந்த தொழிற்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கடுத்தது' என்பது 'மிக்கது' என்னும் பொருளில் வந்துள்ளது. 'கடி' என்பது 'மிகுதி' என்னும் பொருள் உணர்த்துவதை மேற்கண்ட நூற்பா வாயிலாக அறியமுடிகிறது. இதனால் 'கடுத்தது' உரிச்சொல் ஆயிற்று எனலாம்.

ஒருபொருட் பன்மொழி:

பல சொற்கள் சேர்ந்து ஒரு பொருளைத் தருவது 'ஒரு பொருட் பன்மொழி' எனப்படுகிறது. ஒருபொருட பன்மொழி குறித்து தொல்காப்பியரும் நன்னூலாரும் கீழ்க்கண்டவாறு நூற்பா அமைக்கின்றனர்.

"ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்"[122]

"ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா"[123]

பரிமேலழகர் தம்முடைய உரையில் இரண்டு இடங்களில் ஒருபொருட் பன்மொழியைச் சுட்டுகிறார்.

"கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டின் உலகு" (கு.எண்.571)

இக்குறளுரையில் 'கழிபெருங்காரிகை' ஒருபொருட் பன்மொழி என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கழி' என்பதும் 'பெரு' என்பதும் மிகுதி என்னும் பொருளை உணர்த்துகிறது. இவ்வாறு இரண்டு சொற்கள் வந்து ஒரு பொருளை உணர்த்தினமையால் ஒரு பொருட் பன்மொழி ஆயிற்று.

"அஞ்சும் அறியான் அமைவிலான் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு" (கு.எண்.863)

இக்குறளுரையில் 'தஞ்சம், எளியன்' ஒருபொருட் பன்மொழி என்கிறார் பரிமேலழகர். 'தஞ்சம்' என்பது எளிமைப் பொருளில் வரும் என்பதை,

"தஞ்சக்கிளவி யெண்மைப் பொருட்டே"[124]

என்கிறார் தொல்காப்பியர். இதன்மூதலம் 'தஞ்சம்' என்பதும் 'எளியன்' என்பதும் ஒரு பொருளில் வரும் என்பதை

உணரமுடிகிறது. இவ்வாறு இரண்டு சொற்கள் வந்து ஒரு பொருளை உணர்த்தினமையால் இரு ஒருபொருட் பன்மொழி ஆயிற்று.

பரிமேலழகரால் சுட்டப்பெறும் உரிச்சொற் கூறுகளும், அவை இடம்பெற்ற குறட்பாக்களும் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தப்படுகின்றன.

வ. எண்.	உரிச்சொற்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	நம் என்னும் உரிச்சொல்	149
2.	நனி என்னும் உரிச்சொல்	403
3.	கடி என்னும் உரிச்சொல்	706
4.	ஒருபொருட் பன்மொழி	571, 863

தொகை நிலைத் தொடர்கள்

ஒரு சொல்லில் அல்லது தொடரில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டோ, சொற்கள் மறைந்து வருவது 'தொகை' எனப்படும். இவ்வாறு சொற்கள் மறைந்து வரும் தொடர்களைப் பற்றிக் கூறவந்த நன்னூலார்,

“பெயரோடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத்
தொடர்ச்சொல்”(125)

என்கிறார். 'தொகை' என்பது இந்நூற்பாவின் வாயிலாக, 'உருபுகள் மறைந்து வருதல்' என்பது புலனாகிறது. இவ்வாறு உருபுகள் மறைந்து

வரும் மொழிகளைத் தொல்காப்பியம்,

"வேற்றுமைத் தொகையே உவமைத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று
அவ்வா றென்ப தொகைமொழி நிலையே"[126]

என ஆறு வகையாகப் பகுத்துச்சுட்டுகிறது.

பரிமேலழகர் தம்முடைய உரையில் கீழ்க்கண்ட தொகைகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

1. வேற்றுமைத் தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. உம்மைத்தொகை
5. உவமைத்தொகைப் புறத்து பிறந்த அன்மொழித்தொகை.

வேற்றுமைத்தொகை:

வேற்றுமை உருபுகள் மறைந்து வருவது வேற்றுமைத் தொகை ஆகும். இதனைத் தொல்காப்பியம்,

"அவற்றுள்
வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல"[127]

என்கிறது. பரிமேலழகர் மூன்று இடங்களில் இவ்வேற்றுமைத் தொகையினைச் சுட்டுகிறார்.

நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' மறைந்து வருவது 'நான்காம் வேற்றுமைத் தொகை' ஆகும்.

"பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்

ஆகலூழ் உற்றக் கடை" (கு.எண்.372)

இக்குறளுரையில் 'இழவூழ். ஆகலூழ்' இரண்டும் வேற்றுமைத் தொகை என்கிறார் பரிமேலழகர். இங்கு இழவூழ் என்பது 'இழத்தற்கு ஏதுவாகிய ஊழ்வினை' என்னும், ஆகலூழ் என்பது 'ஆதற்கு ஏதுவாகிய ஊழ்வினை' என்றும் விரியும். இவ்விடத்தில் நான்காம் வேற்றுமை உருபோடு ஒரு சொல் உருபும் மறைந்து வந்து உள்ளது. இவ்வாறு நான்காம் வேற்றுமை உருபும் ஒரு சொல்லுருபும் மறைந்து வருவதனால் இது நான்காம் வேற்றுமை உருவும் பயனும் உடன் தொக்க தொகையாகும்.

மூன்றாம் வேற்றுமைத் தொகை:

மூன்றாம் வேற்றுமை உருபாகிய 'ஆல்' மறைந்து வருவது மூன்றாம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

"செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்

அவியினும் வாழினும் என்" (கு.எண்.420)

இக்குறளுரையில் 'வாயுணர்வு' என்பது இடைப்பதங்கள் தொக்கு நின்ற மூன்றாம் வேற்றுமைத் தொகை என்கிறார் பரிமேலழகர். மூன்றாம் வேற்றுமை உருபுகளாக ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகியவற்றை நன்னூலார் (நன்.பெயரி.40) குறிப்பிடுகிறார். இங்கு 'வாயினானாகிய உணர்வு' என்பது 'வாயுணர்வு' எனத் தொக்கி வந்துள்ளது. இதில் மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபாகிய 'ஆன்' மறைந்து வந்துள்ளமையால் இது மூன்றாம் வேற்றுமைத் தொகை ஆயிற்று.

ஆறாம் வேற்றுமைத் தொகை:

ஆறாம் வேற்றுமை உருவுகளாகிய அது, உடைய போன்றவை தொக்கி வருவது ஆறாம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை:

பின் நிற்கும் ஒரு சொல் முன்னாக வந்தும், ஆறாம் வேற்றுமை உருபு தொக்கியும் வருவது பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை எனப்படும்.

"பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" (கு.எண்.319)

இக்குறளுரையில் முற்பகல், பிற்பகல் என்பன பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'பகலினது முன்', 'பகலினது பின்' என இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் பின்னால் வரக்கூடிய 'முன், பின்' என்ற சொற்கள் முன்னால் வந்து ஆறாம் வேற்றுமை உருபாகிய 'அது' மறைந்து வந்துள்ளமையால் இவையிரண்டும் மேற்கூறிய வேற்றுமை ஆகிற்று.

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கு இறுதியாகி விடும்" (கு.எண்.476)

இக்குறளுரையில் 'நுனிக்கொம்பர்' என்பது 'கடைக்கண்' என்பது போல பின் முன்னதாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை என்கிறார் பரிமேலழகர். இச்சொல் 'கொம்பினது நுனி' என்று இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் பின்னால் வரக்கூடிய

'நுனி' என்ற சொல் முன்னால் வந்துள்ளது. மேலும் ஆறாவுருப மறைந்து வந்துள்ளமையால் இது பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை ஆயிற்று.

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று" (கு.எண்.1008)

இக்குறட்பாவில் 'நடுவூர்' என்பது 'ஊரினது நடு' என இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் பின்னால் வரக்கூடிய 'நடு' என்ற சொல் முன்னால் வந்து ஆறானுருபு மறைந்து வந்துள்ளமையால் இது பின் முன்னாகத்தொக்க ஆறாம் வேற்றுமைத்தொகை என்கிறார் பரிமேலழகர்.

வினைத்தொகை:

விதைத்தொகைகள் பற்றித் தொல்காப்பியர் கூறும்போது,

"வினையின் தொகுதி காலத்தியலும்"[128]

என்கிறார். ஆனல் நன்னூலார்,

"காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை"[129]

என்கிறார். வினைத்தொகை என்பதற்குப் பலர் பலவாறு கருத்துக் கூறுகின்றனர். அவற்றுள் "தெய்வச்சிலையாரே தெளிவாகக் கூறி இருப்பதாக பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி"[130] குறிப்பிடுகிறார். வினைத்தொகை பற்றிய தெய்வச் சிலையார் கருத்துக்கள் நன்னூலார் கருத்துடன் ஒத்து அமைவதை உணரமுடிகிறது. மேலும்,

"வினைச்சொல்லின் பகுதியும் பெயர்ச்சொல்லும் புணர்ந்து வருவது வினைத்தொகை"[131] என்கிறார் கோ.வடிவேலு செட்டியார்.

"ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி" (கு.எண்.371)

இக்குறளுரையில் 'ஆகூழ், போகூழ்' என்பன வினைத்தொகை என்கிறார் பரிமேலழகர். ஆகூழ் என்பது ஆன ஊழ், ஆகின்ற ஊழ், ஆகும் ஊழ் எனவும் போகூழ் என்பது போன ஊழ், போகின்ற ஊழ், போகும் ஊழ் எனவும் விரியும், இவ்வாறு விரியாமல் மூன்று காலமும் மறைந்து வந்துள்ளமையால் இது வினைத்தொகை ஆயிற்று.

"ஒஓதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை
ஆஅது என்னு மவர்" (கு.எண்.653)

இங்கு 'செய்வினை' என்பது வினைத்தொகை என்கிறார் பரிமேலழகர். செய்வினை என்பது செய்தவினை, செய்கின்றவினை, செய்யும் வினை என விரிந்து மூன்று காலமும் காட்டும். அவ்வாறு முக்காலமும் காட்டாமல் தொக்கி வந்தமையால் இது வினைத்தொகை ஆயிற்று.

பண்புத்தொகை:

"பண்புக்கும் பண்பிக்கும் உள்ள ஒற்றுமை நயத்தை விளக்குவதற்காக வரும் 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்கு நிற்பனவும், பொதுப்பெயரும், சிறப்புப்பெயரும் இணைந்து நிற்க, அவற்றுக்கு இடையே அவ்வுருபு தொக்கு வருவனவும் 'பண்புத்தொகை' ஆகும்"(132) என்கிறார் நன்னூலார்.

ஆனால் தொல்காப்பியர் வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவும் அவைபோல்வன பிறவுமாகிய குணத்தைக் குறிக்கும்

உருபுகள் தொக்கி வருவது என்று பண்புத் தொகைக்கு கீழ்க்கண்டவாறு நூற்பா உரைக்கிறார்.

"வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று
அன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்னது இதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே"(133)

இப்பண்புத் தொகையில் ஒன்றான இருபெயரொட்டுப் பண்புத் தொகையை மட்டும் பரிமேலழகர் தமது உரையில் ஓரிடத்தில் சுட்டிக் காட்டுகிறார்.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை:

'ஆகிய' என்னும் பண்புருபு இடையிலே தொக்கு நிற்கச் சிறப்புப் பெயரும் பொதுப்பெயருமாய் ஒரு பொருளைக் குறிக்கிற இருசொற்கள் தொடர்ந்து வருவதனை 'இருபெயரொட்டுப் பண்புத் தொகை' எனலாம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (கு.எண்.1)

இக்குறளுரையில் 'ஆதிபகவன்' இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஆதிபகவன்' என்பது 'ஆதியாகிய பகவன்' என விரியும். 'ஆதி' என்னும் சிறப்புப் பெயரும் 'பகவன்' என்னும் பொதுப்பெயரும் தொடர்ந்து வர அவற்றுக்கிடையில் 'ஆகிய' என்னும் பண்புருபு மறைந்து வந்துள்ளமையால் இது 'இருபெயரொட்டுப் பண்புத் தொகை' ஆயிற்று.

உம்மைத் தொகை:

உம்மைத்தொகை பற்றிகூறவந்த தொல்காப்பியர்.

"இருபெயர் பல்பெய் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க்கிளவி
எண்ணின் பெயரோடு அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே"[134]

என்கிறார். ஆனால் நன்னூலார் "எண்ணல், நிறுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு வகை அளவைப் பெயர்களுள் 'உம்' என்னும் இடைச்சொல் தொக்கு வருபவை உம்மைத் தொகைகள்"[135] ஆகும் என்கிறார்.

"உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம்
போஒய புறமே படும்" (கு.எண்.933)

என்பதில் 'பொருளாயம்' உம்மைத் தொகை என்கிறார் பரிமேலழகர். இங்கு பொருளாயம் என்பது 'பொருளும் ஆயமும்' என விரிதல் வேண்டும். அவ்வாறு விரியாமல் 'உம்' உருபு தொக்கி வந்துள்ளமையால் இது உம்மைத்தொகை ஆயிற்று.

"குடியாண்மை உள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்" (கு.எண்.609)

என்பதில் குடியாண்மை உம்மைத் தொகை என்கிறார் பரிமேலழகர். இங்கு குடியாண்மை என்பது குடியுள்ளும் ஆணமையுள்ளும் என விரிந்து இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாமல் 'உம்' உருபு மறைந்துள்ளமையால் இது உம்மைத் தொகை ஆயிற்று.

உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை:

போல, புரைய, மான, கடுப்ப போன்ற உவம உருபுகள் மறைந்து வருவது 'உவமத் தொகை' எனப்படுகிறது.

அன்மொழித்தொகை பற்றிக் கூறவந்த நன்னூலார்,

"ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி"[136]

என்று கூறி, ஐந்தொகை புறத்தே வருவது என்கிறார்.

"தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலோடு
மாலை உழக்கும் துயர்" (கு.எண்.1135)

என்பதில் 'தொடலைக் குறுந்தொடி' என்பது உவமைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'தொடலைக் குறுந்தொடி' என்பது 'மாலை போலத் தொடர்ந்த சிறு வளையினை உடையாள்' என விரியும், இங்கு 'போல' என்னும் உரும உருவும் 'உடையாள்' என்னும் முடிக்கும் சொல்லும் மறைந்து வருவதால் இது உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆயிற்று.

பரிமேலழகர் திருக்குறளில் சுட்டிய தொகை நிலைத்தொடர்களும் அவை இடம் பெற்றுள்ள குறட்பாக்களும் கீழ்கண்ட அட்டவணை மூலம் விளக்கப்படுகிறது.

வ. எண்.	தொகை நிலைத் தொடர்கள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	நான்காம் வேற்றுமைத் தொகை	372
2.	மூன்றாம் வேற்றுமைத் தொகை	420
3.	பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை	319, 476, 1008
4.	வினைத் தொகை	371, 653
5.	இருபெயரோட்டு பண்புத்தொகை	1
6.	உம்மைத் தொகை	609, 933
7.	உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை	1135

குறிப்பு மொழிகள்

சொன்ன மாத்திரத்தால் தோன்றாது சொல்லோடு கூடி குறிப்பால் தோன்றுதல் குறிப்பு மொழி எனப்படுகிறது. இதனைத் தொல்காப்பியம்,

"தெரிபுவேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே"[137]

என்கிறது. பரிமேலழகர் தம்முடைய உரையில் கீழ்க்கண்ட குறிப்பு மொழிகளைச் சுட்டுகிறார்.

1. குறிப்புச்சொல்
2. புகழ்ச்சிக்குறிப்பு
3. இகழ்ச்சிக்குறிப்பு
4. வியப்புக் குறிப்பு

5. உடன்பாட்டுக் குறிப்பு

6. விரைவுக் குறிப்பு

7. இரக்கக் குறிப்பு

குறிப்புச் சொல்:

குறிப்பால் உணரப்படும் சொல் 'குறிப்புச் சொல்' எனப்படுகிறது. இதனைத் தம்முடைய உரையில் பரிமேலழகர் ஏழு இடங்களில்"(138) குறிப்பிடுகிறார்.

"குடம்பைதனத்தொழியப புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு" (கு.எண்.338)

முன்னே தனித்திராத முட்டை தனித்துக்கிடப்ப, ஒரு குறிப்பிட்ட காலம் வந்தவுடன் பறவை அதனைப் பிரிந்து பறந்து செல்வது போன்றதாகுமுயிர்க்கும் உடம்பிற்கும் உள்ள நட்பு என்பது குறளின் கருத்து. 'நட்பு' என்பது பிரியாமல் இருத்தலைக்குறிக்கும். ஆனால் உயிருக்கும் உடம்பிற்கும் உள்ள நட்பு பிரியக்கூடியதாகும். அதனால் இங்கு 'நட்பு' என்பது நட்பில்லாமையைக் குறித்து நின்றதால் குறிப்புச் சொல் என்கிறார் பரிமேலழகர்.

"இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பான் உடம்பு" கு.எண்.1029)

தன் குடிப்பெருமைக்குத் தீங்கு நேர்ந்துவிடாமல் எப்போதும் பாடுபட்டுக் காத்துக் கொண்டிருப்பவனுடைய உடம்பு துன்பத்திற்கு உறைவிடம் தானோ? என்பது குறளின் கருத்து. இங்கு குடும்பத்தினுடைய குற்றம் மறைப்பவனது உடம்பு இடும்பைக்குக் கொல்களமாயினும், இருமை இன்பம் அடைவதற்குக்

காரணமாதலால் 'இனிமையாம்' என்ற பொருளைக் குறித்து நிற்பதால் இதனைக் குறிப்பு மொழி என்கிறார் பரிமேலழகர்.

"பாடு பெறுதியே நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோள் பூசல் உரைத்து" (கு.எண்.123)

நெஞ்சமே! என்னைப் பிரிந்து சென்ற கொடுமை செய்த காதலர்க்கு அவர் பிரிவால் இளைக்கும் என் தோள் களினால் ஏற்படுகின்ற ஊர்ப்பழியை எடுத்துச் சொல்லிப் பெருமை பெறுவாயாக என்பது குறளின் கருத்து. 'கொடியார்க்கென்று' இங்கு தலைவி தலைவனைக் கூறுவது, பிறர் கெடியரென்று என் காதலனைக் கூறுகின்றனர். அவர் இயற்கையில் 'கொடியரல்லர்' என்பது தோன்ற நற்பதால் இதனைக் குறிப்புச் சொல் என்கிறார் பரிமேலழகர்.

புகழ்ச்சிக்குறிப்பு:

ஒரு சொல்லானது புகழ்ச்சியைக் குறிப்பால் உணர்த்துவதற்கு 'புகழ்ச்சிக்குறிப்பு' என்று பெயர்.

"கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்வர் நாணுப் பிற" (கு.எண்.1011)

பழிதரும் சொற்களுக்கு வெட்கப்பட்டு நாணுவது நாணம் ஆகும். ஆனால் அழகிய நெற்றியை உடைய பெண்கள் கொள்ளும் நாணம் வேறு என்பது குறளின் கருத்து. பழிதரும் சொற்களுக்கு நாணப்படும் நாணத்தைக் காட்டிலும் அழகிய நெற்றியை உடைய பெண்களின் நாணம் உயர்ந்தது. இது அதனைக் காட்டிலும் வேறானது எனப் புகழ்ந்து கூறினமையால் இது புகழ்ச்சிக்குறிப்பு என்கிறார் பரிமேலழகர்.

இகழ்ச்சிக்குறிப்பு:

ஒரு சொல்லானது இகழ்ச்சியால் குறிப்பு தோன்றுமாறு செய்யின் அது 'இகழ்ச்சிக்குறிப்பு' எனப்படும்.

"கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்" (கு.எண்.894)

ஆற்றல் உடையவர்க்கு, அவை அல்லாதார் தாம் முற்பட்டு இன்னாதவற்றைச் செய்தல் தானாக வரக்கூடிய எமனை அதற்கு முன்னே கைகாட்டி அழைத்தல் போன்றது என்பது குறளின் கருத்து. இங்குச் சாவிற்கு எமனைக் கையால் அழைத்தல் என்பது இகழ்ச்சிக்குறிப்பு பொருளைத்தருவதால் இதனை இகழ்ச்சிக் குறிப்பு என்கிறார் பரிமேலழகர்.

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையே
கதலை வாழி மதி" (கு.எண்.1118)

நிலவே! வாழ்வாயாக! இந்தப் பெண்களின் முகம்போல ஒளிவீச உன்னல் முடியுமானால் நீ என்னால் விரும்பப்படுவாய் என்பது குறளின கருத்து. இங்கு மாதர் முகம்போல ஒளிவட மாட்டாத நீ இருந்து என்ன பயன்? என்ற பெருளைக் குறித்தால் 'வாழியென்பது' இகழ்ச்சிக் குறிப்பு என்கிறார் பரிமேலழகர்.

"காதல் அவரில ராகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு" கு.எண்.1242)

நெஞ்சே! நீ வாழ்வாயாக, அவர் என்மீது காதல் இல்லாதவராக இப்பதற்காக நீ நொந்து கொள்வது மூடத்தனம் என்பது குறளின் கருத்து. இங்கு எப்போதும் தலைவியின் மனமானது தலைவனையே

நினைத்துக் கொண்டிருக்கிறது. அப்படி நினைக்க வேண்டும் என்பதற்காக 'பேதைமையுடைய நெஞ்சே நீ வாழ வேண்டியது அவசியம்' என இகழ்ச்சி தோன்றக் கூறினமையால் இதனை இகழ்ச்சிக் குறிப்பு என்கிறார் பரிமேலழகர்.

இவை தவிர மேலும் "சில இடங்களில்"(139) பரிமேலழகர் இகழ்ச்சிக் குறிப்பினைச் சுட்டிக் காட்டுகிறார்.

வியப்புக் குறிப்பு:

ஒரு செல்லானது, வியப்பைக் குறிப்பால் உணர்த்தினால அதற்கு வியப்புக் குறிப்பு என்று பெயர்.

"ஒண்ணுதற் கோஓ உடந்ததே நட்பினுள்
நண்ணாகு முட்டுமென் பீடு" (கு.எண்.1088)

போர்க்களத்தில் பகைவரையும் அஞ்சி ஓடச்செய்யும் என் உலிமை இந்தப் பெண்ணின் ஒளி பொருந்திய நெற்றிக்குத் தோற்றுப் போனதே என்பது குறளின் கருத்து. இங்கு 'ஓ' என்னும் குறிப்பு இடைச்சொல் மனவலிமையின் பெருமையையும் அவற்றை உடைக்கும் நெற்றியின் சிறுமையையும் குறித்து வியப்பைத் தெரிவித்தலால் இதனை வியப்புக் குறிப்பு என்கிறார் பரிமேலழகர்.

உடன்பாட்டுக்குறிப்பு:

ஒரு சொல்லானது, ஒத்துப்போகின்ற தன்மையினைக் குறிப்பால் உணர்த்துவது 'உடன்பாட்டுக் குறிப்பு' ஆகும்

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்" (கு.எண்.1111)

அனிச்சமே! வாழ்வாயாக; பூக்களில் நீ மென்மைத் தன்மை பெற்றிருக்கிறாய். எனினும் நான் விரும்பும் என்னவளோ உன்னைவிட மென்மையான தன்மை உடையவள் என்பது குறளின் கருத்து. இங்கு வாழியென்பது, 'உன்னைக் காட்டிலும் மென்மையானவள் தலைவி' என்பதால் இனிமேல் 'மென்மை' என்ற கர்வத்தை நீ ஒழிய வேண்டும்' என்கிற பொருளைக் குறிப்பால் உணர்த்துகின்ற காரணத்தால் இதனை உடன்பாட்டுக்குறிப்பு என்கிறார் பரிமேலழகர்.

விரைவுக் குறிப்பு:

ஒரு சொல்லானது, விரைவினைக் குறிப்பால் உணர்த்தினால் அதற்கு 'விரைவுக் குறிப்பு' என்று பெய்.

"பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்" (கு.எண்.487)

அறிவுடைய அரசர் பகைவர் அறியுமாறு வெகுளியைக் காட்டாமல் தாம் அவரை வெல்லுவதற்கு ஏற்ற கலம் வருமளவும் அகத்துள் வெகுளயைக் கொண்டிருப்பார். காலம் வந்தவுடன் விரைந்து வெளிக்காட்டுவார் என்பது குறளின் கருத்து.

இங்கு 'பொள்ளென' என்பது அரசன் விரைந்து செயல்படுதலைக் குறிப்பால் உணர்த்தினமையால் இது விரைவுக் குறிப்பு என்கிறார் பரிமேலழகர்.

இரக்கக் குறிப்பு:

ஒரு சொல்லானது, இரக்கத்தைக் குறிப்பால் உணர்த்தினால் அதற்கு 'இரக்கக் குறிப்பு' என்று பெயர்.

"காமமெனை ஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்" (கு.எண்.1252)

காமம் என்று சொல்லப்படுகிற ஒன்றிற்குக் கண் உண்டோ? அது என் மனத்தை நடு யாமத்திலும் துன்பப்படுத்துகிறது என்பது குறளின் கருத்து. இங்கு காமத்தின் கொடுமையைத் தாங்கமுடியாமல் 'காமமெனை ஒன்றோ' என்கிறாள் தலைவி. காமத்தால் வருந்தி துன்பப்படுகிற தலைவியினது இரக்கத்தை 'ஓ' என்னும் இடைச்சொல்லானது குறித்து நிற்றலால் இதனை 'இரக்கக்குறிப்பு' என்கிறார் பரிமேலழகர்.

பரிமேலழகரால் சுட்டப்பெறும் குறிப்பு மொழிகளும், அவை இடம்பெற்ற குறட்பாக்களும் கீழ்க்கணடவறு அட்டவணைப்படுத்தப் படுகின்றன.

வ. எண்.	குறிப்பு மொழிகள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	குறிப்புச் சொல்	338, 102, 1144, 1176, 1221, 1235, 1237
2.	புகழ்ச்சிக் குறிப்பு	1011
3.	இகழ்ச்சிக் குறிப்பு	251, 894, 1118, 1190, 1242, 1256
4.	வியப்புக் குறிப்பு	1088
5.	உடன்பாட்டுக் குறிப்பு	1111
6.	விரைவுக் குறிப்பு	487
7.	இரக்கக் குறிப்பு	1252

பின்மொழி நிலையல்:

ஒரு சொல்லுக்குப் பின்னே அடை நின்று அச்சொல்லின் பொருளைச் சிறக்கச் செய்யுமானால் அவ்வடை நிற்கும் சூழலே பின்மொழி நிலையில் என்பர்.

“அவை தாம்
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள் நிலை மரபே.”(140)

எனத் தொல்காப்பியர் இவற்றிற்கு நூற்பா அமைக்கிறார்.

“மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதநுட்பம்
யாவுள முன்நிற் பவை” (கு.எண்.636)

நூலறிவோடு கூடிய நுட்பமான அறிவுடையவர்க்கு, செயவதற்கரிய மிக நுட்பமான செயலென்று எதுவும் இல்லை என்பது குறளின் கருத்து. இங்கு ‘மதி’ என்ற சொல்லுக்குப் பின்னே ‘நுட்பம்’ என்னும் அடைவந்து ‘நுணுக்கமான அறிவு’ என்னும் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு சொல்லுக்குப்பின்னே அடைவந்து அச்சொல்லின் பொருளைச் சிறக்கச் செய்கின்ற காரணத்தினால் ‘மதி நுட்பம்’ பின்மொழி நிலையல் என்கிறார் பரிமேலழகர்.

இடக்கரடக்கல்:

வழக்கு இரண்டு வகைப்படும். அவை 1. இயல்பு வழக்கு, 2. தகுதி வழக்கு. இத்தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவற்றுள் ஒன்று இடக்கரடக்கல் இதனை நன்னூல்,

"இலக்கணமுடையது இலக்கணப்போலி
மரூஉ வென்றாகும் மூவகை இயல்பும்
இடக்கரடக்கல் மங்களம் குழூஉக்குறி
எனும் முத்தகுதியோ டாறாம் வழக்கியல்"[141]

எனச்சுட்டுகிறது. ஆனால் தொல்காப்பியம் 'அவையல் கிளவி' என இவற்றைக் குறிப்பிட்டுக் கீழ்க்கண்டவாறு நூற்பா உரைக்கிறது.

"அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்"[142]

"இடக்கரடக்கலென்பது நன்மக்களிடத்தே சொல்லத்தாகத சொல்லை அவ்வாய்ப்பாடு மறைத்துப்பிற வாய்ப்பாட்டாற் சொல்வது"[143] ஆகும்.

"கழாக்கால் பள்ளியுள் வைத்தாற்றல் சான்றோர்
குழாத்துப் பேதை பகல்" (கு.எண்.840)

சான்றோர் அவையில் பேதைமை உடையவன் புகுதல் அல்ல மிதித்த காலை, இன்பம் தரும் படுக்கை அறையில் வைப்பது போலாகும் என்பது குறளின் கருத்து. இங்கு 'அல்ல மிதித்த கால்' என்பதை 'கழுவாக்கால்' என அவ்வாய்பாடு மறைத்துப் பிற வாய்பாட்டிற் கூறினமையான் 'கழுவாக்கால்' என்பது இடக்கரடக்கல் என்கிறார் பரிமேலழகர்.

இசை நிறை:

செய்யுளில் இசை குன்றும் போது அவ்விசையை நிறைத்தற் பொருட்டு ஒரு சொல் வருமாயின் அது இசைநிறை எனப்படுகிறது. நன்னூலார் இவற்றை,

"பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனஆறு ஏகாரம்மே"[144]

என ஏகார இடைச்சொல்லின் பொருளாக இசைநிறையைக் குறிப்பிடுகிறார்.

"நல்குரவு என்னும்இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று விடும்" (கு.எண்.1045)

இக்குறளுரையில் 'குரை' என்பது இசைநிறை எனகிறர் பரிமேலழகர். வறுமை என்று சொல்லப்படும் துன்பம் ஒன்றனுள்ளே பல துன்பங்களும் வந்து விளையும் என்பது இக்குறளின் கருத்து. இங்கு 'குரை' என்னும் சொல் குறளில் இல்லாவிட்டாலும் பொருள் மாறுபடவில்லை. ஆகையால் இச்சொல் இசையை நிறைத்தற் பொருட்டே பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே 'குரை' என்பதனை இசைநிறை என்கிறார் பரிமேலழகர்.

இடவழுவமைதி:

இன்னின்ன சொற்கள் இன்னின்ன இடங்களில் வரவேண்டும் என்று முறை இருக்கின்றது. இம்முறைக்கு மாறுபட்டு வருவனவற்றை வழுவமைதியாகக் கொள்வர். இடம் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும். இம்மூவிடத்திலும் செலவு, வரவு, தரவு, கொடை என்னும் நான்கு சொல்லும் வரும் என்பதை,

"செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப"[145]

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பரிமேலழகர் தம்முடைய

உரையில் 'வரும், தரும்' என்ற சொற்களை இட வழுவமைதியாகக் குறிப்பிடுகிறார். வரும் என்னும் சொல்லும் தரும் என்னும் சொல்லும் தன்மை, முன்னிலை இடத்திற்கு வரும் என்பதை,

"அவற்றுள்
தருசெல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீரிடத்த"[146]

எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (கு.எண்.86)

இக்குறளுரையில் 'வருவிருந்து' இட வழுவமைதி என்கிறார் பரிமேலழகர். செல்லும் விருந்தினரை வழியனுப்பி, வருகின்ற புது விருந்தாளிக்காகக் காத்திருப்பவன் பிற்காலத்தில் வானுலகிற்கு நல்ல விருந்தாளி ஆவான் என்பது குறளின் கருத்து. இங்கு வருவிந்து என்பது வரும் விருந்து என விரியும். இங்கு 'வரும்' என்னும் சொல் தன்மை, முன்னிலை இடத்திற்கு வராமல் படர்க்கை இடத்திற்கு வந்துள்ளது. அதனால் வழுவாகும். ஆனால் மேலே சுட்டிய 'செலவினும் வரவினும்' என்னும் நூற்பா மூலம் 'வரும்' வழுவமைதியாகக் கருதப்படுகிறது.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்" (கு.எண்.183)

என்பதில் 'தரும்' இடவழுவமைதி என்கிறார் பரிமேலழகர். மற்றவர்களைத் தாழ்த்திப்பேசி, தன்னை உயர்த்திக் கொள்ளும் பொய் வழக்கை வாழ்வதைவிடச் செத்துப் போகலாம். அது

அறநூல்களில் சொல்லப்பட்ட ஆக்கத்தைக் கொடுக்கும் என்பது குறளின் கருத்து. இங்கு 'தரும்' என்னும் சொல் தன்மை. முன்னிலையைக் குறிக்காமல் படர்க்கையில் வந்தமையால் வழுவாயிற்று. 'செலவினும் வரவினும்...' நூற்பா மூலம் வழுவமைதியாகத் 'தரும்' கருதப்படுகிறது.

"மனநலம் மண்ணுயிர்க் காக்க இனநலம்
எல்லாப் புகழும்தரும்" (கு.எண்.457)

இங்கு 'தரும்' என்னும் சொல் தன்மை, முன்னிலையைக் குறிக்காமல் படர்க்கை இடத்து வந்தமையால் இதனை இடவழுவமைதி என்கிறார் பரிமேலழகர்.

அடுக்குத்தொடர்:

இரண்டும் இதற்கு மேலும் ஒரு சொல் அடுக்கி வந்தால் அது அடுக்குத்தொடர் எனப்படும். இதனை,

"இசைநிறை அசைநிலை பொருளோடு புணர்தலென்று
அவை மூன்றென்ப ஒருசொல் அடுக்கே"[147]

என்கிறார் தொல்காப்பியர். இக்கருத்தினை ஒட்டியே நன்னூலாரும்,

"அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்
இரண்டு மூன்றுநான்கு எல்லைமுறை அடுக்கும்"[148]

என்கிறார்.

இங்கு 'பொருள்நிலை' என்பது விரைவு, துணிவு, வெகுளி, உடம்பாடு, உவமை, அச்சம், ஒரு தொழில் பலகால் நிகழ்தல், அவலம் முதலிய பொருள்களைக் குறிக்கும் என்கின்றனர் உரையாசிரியர்கள்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

செய்யாமை செய்யாமை நன்று" (கு.எண்.297)

இங்கு 'பொய்யாமை பொய்யாமை' என்பதும் 'செய்யாமை செய்யாமை' என்பதும் அடுக்குத்தொடர் என்கிறார் பரிமேலழகர். 'பொய்யாமை பொய்யாமை' என்பதில் இரண்டு சொல் அடுக்கி வந்து விரைவும் பொருள் உணர்த்துகிறது. 'செய்யாமை செய்யாமை' என்பதில் இரண்டு சொற்கள் அடுக்கி வந்து துணிவுப் பொருள் உணர்த்துகிறது.

"ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்

சொல்தொக்க தேறப் படும்" (கு.எண்.589)

இக்குறட்பாவில் வரும் 'ஒற்றுஒற்று' என்பது அடுக்கி வந்தமையால் அடுக்குத் தொடர் ஆயிற்று. இவ்வடுக்குகளை ஒரு தொழில் பலகால் நிகழ்தல் என்பதில அடக்கலாம். "இவ்வடுக்குகள் தொழில் பற்றியதாகலின், அடுக்குகள் தொழில் பயிலவுப் பெருளில் வந்தன"(149) என்றார் கோ.வடிவேலு செட்டியார்.

மேலும் "சில குறட்பாக்களில்"(150) பரிமேலழகர் இவ்வடுக்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

பொருள்கோள்:

செய்யுளில் பொருள் அமைந்து நிற்கும் முறையே 'பொருள்கோள்' எனப்படுகிறது. தொல்காப்பியர் நான்கு விதமான பொருள்கோள்களையும் நன்னூலார் எட்டு விதமான பொருள் கோள்களையும் குறிப்பிடுகின்றனர். பொருள்கோள் பற்றிய

செய்திகள் தொல்காப்பிய எச்சவியலிலும் நன்னூல் பொதுவியலிலும் காணப்படுகிறது.

திருக்குறளில் நிரல்நிரைப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள் ஆகிய இரண்டு மட்டுமே உரையாசிரியர்களால் சுட்டப்படுகிறது.

நிரல் நிறைப் பொருள்கோள்:

வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தொடர்பானவற்றைத் தொடர்ந்து அம்முறையிலேயே அழகுபடக்கூறுவது நிரல்நிரைப் பொருள்கோளாகும். இதனைத் தொல்காப்பியர்

“அவற்றுள்
நிரல் நிறை தானே
வினையினும் பெயரினும் நினையத்தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்”[151]

என்கிறார். “நன்னூலார் நிரல் நிரைப்பொருள்கோளுக்கு இலக்கணம் கூறி அவற்றை இரண்டு வகையாகக் குறிப்பிடுகிறார்”[(152)]

நேர் நிரல் நிறைப்பொருள்கோள்:

வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தொடர்பானவற்றை நேர் நேராகப் பொருள் கொள்வது இவ்வகைப் பொருள்கோளாகும்.

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது” (கு.எண்.45)

இங்கு அன்பும், அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி

பண்பும் பயனும் என அதற்கு இயைபுள்ள சொற்களை முறைப்பட கூறினமையால் இது நேர் நிரல் பொருள்கோள் ஆயிற்று.

எதிர் நிரல் நிறைப்பொருள்கோள்:

வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தொடர்பானவற்றை நேர் எதிராகப் பொருள கொள்வது எதிர் நிரல் நிறைப் பெருள்கோளாகும்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்" (கு.எண்.410)

இங்கு விலங்கு, மக்கள் என்ற முறைக்கேற்ப கல்லாதவர், கற்றார் எனக்கூறாமல், விலங்கு-கற்றவர், மக்கள்-கல்லாதவர் என முறை மாற்றிக் கூறினமையால் எதிர் நிரல் நிறைப்பொருள்கோள் ஆயிற்று.

தாப்பிசைப் பொருள்கோள்:

ஒரு செய்யுளின் இடையில் நிற்கும் சொல்லானது அதன் முதலினும் ஈற்றினும் சென்று இயைந்து பொருள்தருவது தாப்பிசைப் பொருள்கோளாகும் என்பதை நன்னூல்,

"இடைநிலை மொழியே ஏனையீரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை"[153]

எனக் குறிப்பிடுகின்றது. இங்கு 'தாம்பு' என்பது கயிறு. அது கயிற்று ஊசலைக் குறித்து நிற்கிறது. ஊசல் கயிறுபோல இடைநின்று இருமடங்கும் சென்று இயைவது தாப்பிசை பொருள்கோள் ஆகும்.

"உண்ணாமை உள்ள துயிர்நிலை; ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு" (கு.எண்.255)

இக்குறட்பாவில் 'ஊன்' என இடைநிலை நின்ற சொல் 'ஊனுண்ணாமை உள்ளது' என முன்னும் 'ஊனுண்ண' எனப்பின்னும் சென்று இயைந்து பொருள்தருவதால் இது தாப்பிசைப் பொருள் கோளாயிற்று.

பால்மயக்குறழ்ச்சி:

பால்கள் ஒன்றேடொன்று தம்முள் மயங்கி, ஐந்தாம் வேற்றுமைக்குரிய உறழ்ச்சிப் பொருளில் வருவது 'பால் மயக்குறழ்ச்சி' ஆகும்.

"கொலைமேற்கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து" (கு.எண்.551)

குடிமக்களை அல்லல்படுத்தி அலைக்கழிக்கும் மன்னனது செயல் கொலைகாரர்களை விடக் கொடியதாகும் என்பது குறளின் கருத்து. இங்கு 'கொலைமேற்கொண்டார்' என்பது பன்மைப்பாலாகவும், 'அலைமேற் கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து' என்பது ஒருமைப்பாலாகவும் வந்த காரணத்தினால் 'பால் மயக்கம்' ஆயிற்று. இவ்வாறு பால்கள் மயங்கி வருதலைத் தண்டியலங்காரம்,

"மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும்
பால்மறு படுதலும பாகுபாடு உடைய"[154]

எனக் குறப்பிடுகின்றது.

'உறழ்ச்சி' என்பது உவமான உவமேய சந்தர்ப்பத்தில் தோன்றும் எல்லைப் பொருளாகும். இவ்வாறு சொல்லப்பட்ட உவமான உவமேயம் ஆகியவற்றுக்கு இடையில் 'இன்' உருபு

'போல' என்னும் பொருளில் வந்தால் 'உவமப்பொருவு' எனவும் 'காட்டிலும்' என்னும் பொருளில் வந்தால் 'உறழ்பொருவு அல்லது உறழ்ச்சி' எனவும் அழைக்கப்படுகிறது. இக்குறளில் 'கொலையாளிகளினும் கொடியன்' என்பது 'கொலையாளிகளைக் காட்டிலும் கொடியன்' எனப்பொருள்பட்டு உறழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது. இவ்வாறு பன்மைக்குரிய பால்கள் ஒருமைப்பால்களாக மயங்கி உறழ்ச்சிப் பொருளில் வந்துள்ளமையால் இது பால்மயக்கு உறழ்ச்சி ஆயிற்று.

உலக வழக்கு:

ஒரு அடையும், ஒரு சினையும், ஒரு முதலும் ஒன்றை ஒன்று சிறப்பித்து வருதலும், இரண்டு அடைமொழிகள் முதலைச் சிறப்பித்து வருதலும் உலக வழக்கு என்பதை,

"அடைசினை முதன்முறை அடைதலும் ஈரடை
முதலோடு ஆதலும் வழக்கியல்"[155]

என நன்னூல் குறிப்பிடுகிறது.

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்" (கு.எண்.395)

இக்குறளுரையில் உடையார், இல்லார் என்பன உலக வழக்கு என்கிறார் பரிமேலழகர். 'உடையார்' என்பது 'பொருளுடையார்' எனவும் 'இல்லார்' என்பது 'பொருளில்லார்' எனவும் ஒரு முதலானது வந்து சிறப்பித்தலால் இது உலக வழக்கு ஆயிற்று.

அதிகாரம்

"ஈண்டு அதிகாரம் என்றது, ஒரு பொருள் நுதலி வரும் பல

ஒத்தினது தொகுதியை என்க. வடநூலாரும், ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடு சென்றியைதிலையும், ஒன்றன் இலக்கணம் பற்றி வரும் பல சூத்திரத்தொடு தியையும் அதிகாரம் என்ப"[156] என்று சேனாவரையர் வடநூல் ஒட்டி கருத்துரைக்கிறார்.

இவ்வாறு "அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனை 'ஆதிகாரிகம்' எனபர்"[157] வடநூலார்.

அதிகாரம் என்பது, நில்லாத சொற்களைப் பொருத்தம் அறிந்து வருவித்தல் ஆகும் என்பதை இலக்கணக் கொத்து,

"அதிகாரத்தால் அவாய் நிலை தன்னா
லோர் சொற்பொருளை யுறுத்தாற் பொருட்டாற்..."[158]

எனத் தெளிவாகச் சுட்டுகிறது.

இந்நூற்பா கருத்து 'அவாய் நிலை' என்பதற்கும் பொருந்தி வருவதை அறியமுடிகிறது.

அதிகாரத்தால் சொல்லை வருவித்துப் பொருள் முடிக்கும் முறையைப் பரிமேலழகர் "இருபத்தி ஒன்று இடங்களில்"[159] குறிப்பிடுகிறார்.

"நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்" (கு.எண்.97)

நன்மையைத் தருகிற இனிமைப் பண்பினின்று நீங்காத சொல், ஒருவனுக்கு இன்மையில் நீதியை உண்டாக்கி, மறுமையில் அறத்தைக் கொடுக்கும் என்பது குறளின் கருத்து. இங்கு 'பண்பு' என்னும்

பொதுப்பெயர் 'இனியவை கூறல்' என்னும் அதிகாரத்திற்கு ஏற்ப சிறப்பாய் இனிமையைக் குறித்து நிற்றலால் 'பண்பு' அதிகாரத்தான் வந்தது என்கிறார் பரிமேலழகர்.

"நல்லவை எல்லாந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு" (கு.எண்.375)

ஊழின் காரணமாகச் செல்வம் ஈட்டுகிற முயற்சியில் நல்லவை எல்லாம் தீயவை ஆதலும் உண்டு. தீயவை எல்லாம் நல்லவை ஆதலும் உண்டு என்பது குறளின் கருத்து. இங்கு 'ஊழ்' என்ற சொல் அதிகாரத்திற்கேற்ப வருவிக்கப்பட்டுள்ளமையால் இதனை அதிகாரத்தான் வந்தது என்கிறார் பரிமேலழகர்.

"வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்" (கு.எண்.435)

குற்றம் வருவதற்கு முன்னே காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு காவாத மன்னனது வாழ்க்கை தீ முன்னர் வைக்கப்பட்ட வைக்கோல் போர் போல் அழிந்து சாம்பலாகிவிடும் என்பது குறளின் கருத்து. இங்கு 'குற்றங்கடிதல்' என்றும் அதிகாரத்திற்கு ஏற்ப 'குற்றம்' என்ற சொல் வருவிக்கப்பட்டுள்ளமையால் இதனை அதிகாரத்தான் வந்தது என்கிறார் பரிமேலழகர்.

"அளவளா இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று" (கு.எண்.523)

சுற்றத்தாரோடு கூடிக்குலவிக் கலந்து பழகும் தன்மை இல்லாதவன் வாழ்க்கை, கரையில்லாத குளத்தில் நீர் நிரம்பியது போலாகிவிடும் என்பது குறளின் கருத்து. இங்குச் 'சுற்றந்தழால்' என்னும்

அதிகாரத்திற்கு ஏற்ப 'சுற்றத்தாரோடு கூடுதல்' என்ற சொல் வருவிக்கப்பட்டுள்ளமையால் இதனை அதிகாரத்தான் வந்தது என்கிறார் பரிமேலழகர்.

"அருமை உடைத்தென் றசவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" (கு.எண்.611)

இவ்வினை முடித்தல் அருமையுடைத்து என்று கருதி தளராதொழில் அது முடித்தற்கேற்ற தன்மையை முயற்சி உண்டாக்கும் என்பது குறளின் கருத்து. 'ஆள்வினை உடமை' என்ற அதிகாரத்திற்கேற்ப 'வினைமுடித்தல்' என்னும் சொல் வருவிக்கப்பட்டுள்ளமையால் இதனை அதிகாரத்தான் வந்தது என்கிறார் பரிமேலழகர்.

அவாய் நிலை:

"அவாய் நிலையாவது ஒரு சொல் தன்னோடு சேர்ந்து பொருள் முடித்தற்குரிய மற்றொரு சொல்லை விரும்பி நிற்றல் ஆகும். ஆ கிடந்தது என்புழி, ஆ என்ன செய்தது என அவா நிகழ்ந்த வழிக் 'கிடந்தது' எனவும், கிடந்தது எது என அவா நிகழ்ந்த வழி 'ஆ' எனவும் ஒன்றை ஒன்று அவாவி நின்று பொருள் விளக்குதலைக் காண்க"[160] என்கிறார் கு.மா.திருநாவுக்கரசு.

அவாய் நிலை பற்றி இலக்கணக் கொத்து கீழ்க்கண்டவாறு நூற்பா அமைக்கிறது.

"தகுதி அவாய்நிலை அண்மைநிலை மூன்றும்
புணராப் புணர்வது புணர்பெனப் புகல்வர்"[161]

இவ்வாறு ஒரு சொல்லானது மற்றொரு சொல்லை வேண்டி

நிற்கின்ற முறையை வடநூலார் 'அத்யாஹாரம்' என அழைக்கின்றனர்."[162]

பரிமேலழகர் அவாய் நிலையாக வருவனவற்றைத் தம்முடைய உரையில் இருபத்தி ஏழு இடங்களில்"[163] சுட்டுகிறார்.

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு" (கு.எண்.467)

செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை எண்ணித்துணிக. அவ்வாறு துணிந்தபின் எண்ணக்கடவோம் என்பது குற்றம் ஆகும் என்பது குறளின் கருத்து. இங்கே 'எண்ணி' என்னும் வினை 'உபாயத்தை' என்ற செயல்படு பொருளை வேண்டி நிற்றலால் இதனை அவாய் நிலை என்கிறார் பரிமேலழகர்.

"ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்" (கு.எண்.493)

அதற்கு ஏற்ற இடத்தினை அறிந்து, காத்து பகைவர் மாட்டு செய்வராயின் வலியார் அல்லாதாரும் வெல்வர் என்பது குறளின் கருத்து. இக்குறளுரையில் 'தம்மை, வினை' என்னும் சொற்கள் அவாய் நிலையான் வந்தது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஏற்ற இடத்தினை அறிந்து தம்மைக்காத்து பகைவர் மாட்டு வினை செய்வாராயின்' என்னும் போது பொருள் முடிப்புக்காக 'தன்மை, வினை' என்ற சொற்கள் வருவிக்கப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது. இதனால் அவாய் நிலையாயிற்று.

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்" (கு.எண்.494)

என்பதில் 'அரண்' அவாய் நிலையான் வந்தது என்கிறார் பரிமேலழகர். அரசர் அரணைப் பொருந்தி நின்று செய்வாராயின் அவரை வெல்வதாக இருந்த பகைவர் தம் எண்ணத்தினை இழப்பர் என்பது குறளின் கருத்து இங்கு 'அரசர்' என்பதற்கு ஏற்ற 'அரனை' என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டுள்ளமையால் இது அவாய் நிலை ஆயிற்று.

"மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்" (கு.எண்.602)

இக்குறளில் 'மடியை மடியாகக் கருதி முயற்சியோடு ஒழுகுக' என்கிறார். இங்கு 'முயற்சியோடு' என்பது பொருள் முடிப்புக்காக வகுவிக்கப்ட்டுள்ளமையால் அவாய் நிலை ஆயிற்கு.

"கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து" (கு.எண்.717)

வழுப்படாமல் சொற்களை ஆராய்ந்த வல்லார் அவை கண் சொல்லின் பல நூல்களையும் கற்று அவற்றின் ஆய பயனை அறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும் என்பது குறளின் கருத்து. இங்கு 'அகத்து' என்பது 'சொல்லின்' என்பதை வேண்டி நிற்றலால் 'சொல்லின்' என்பது அவாய் நிலை ஆயிற்று.

"மனையாளை அஞ்சும் மறுமை இலாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று" (கு.எண்.904)

என்பதில் 'வினை ஆளுந்தன்மை உண்டாய வழியும் நல்லோரால் கொண்டாடப்படாது' என்னும் போது வினையாண்மை என்பது 'உண்டாய வழியும்' என்பதை விரும்பி நிற்கிறது. இதனால் அவாய் நிலை ஆயிற்று.

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின் கணையப் படும்." (கு.எண்.958)

குலநலமுடையவனாய் வருகின்றவன் கண்ணே ஈரமின்மை உளதாமாயின் அவனை அக்குலப்பிறப்பின் கண்ணே ஐயப்படும் உலகம் என்பது குறளின் கருத்து. இங்கு 'ஐயம்' என்னும் சொல் 'உலகம்' என்னும் சொல்லை அவாவி நிற்றலால் இது அவாய் நிலை ஆயிற்று.

தொல்காப்பிய எச்சவியலிலும், நன்னூல் பொதுவியலிலும் அமைந்த இலக்கணக் கூறுகளும், உரையாசிரியர்களால் கூறப்படும் சில இலக்கணக் கூறுகளும் இவ்வியலின் கடைசிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதி தொடர்பாகப் பரிமேலழகர் சுட்டிய இலக்கணக் கூறுகளும் அவை இடம்பெற்ற குறட்பாக்களும் கீழே அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

வ. எண்.	இலக்கணக் கூறுகள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	பின்மொழி நிலையல்	636
2.	இடக்கரடக்கல்	840
3.	இசை நிறை	1045
4.	இடவழுவமைதி	86,183, 457
5.	அடுக்குத் தொடர்	297, 341, 423
6.	பொருள்கோள்	
	i. நேர் நிரல் நிரை	45, 182
	ii. எதிர் நிரல் நிரை	1183
	iii. தாப்பிசை	255
7.	பால்மயக்கு உறழ்ச்சி	551
8.	உலக வழக்கு	395
9.	அதிகாரம்	10, 186, 323, 372, 375, 435, 478, 523, 372, 375, 435,478, 523, 582, 611, 687, 721, 947, 961, 984, 1021, 1088, 1173, 1207, 1286
10.	அவாய் நிலை	15, 415, 467, 473, 493, 494, 574, 602, 704, 717, 720, 759, 779, 817, 825, 829, 842, 871, 895, 904, 918, 927, 914, 958, 1103, 1124, 1190.

தொகுப்புரை

பரிமேலழகர் பெரும்பாலும் தொல்காப்பியத்தின் வழியே சொல் இலக்கணக் கூறுகளை விளக்குகிறார்.

சேனாவரையரும், பரிமேலழகரும் கருத்தாலும், காட்டுகின்ற உவமையாலும் பலவிடங்களில் ஒன்று படுகின்றனர்.

பரிமேலழகர் தாம் சுட்டிய இலக்கணக் கூறுகளுக்கு வலிமை சேர்க்கும் பொருட்டு இலக்கிய மேற்கோள்களை எடுத்துரைக்கிறார்.

பரிமேலழகரின் இலக்கணக் கூறுகளில் ஆகுபெயர்களே மிகுதியான இடங்களில் பயின்று வருகிறது. ஆனால் இவற்றை வகைப்படுத்திச் சுட்டவில்லை.

ஆகுபெயர்களுக்கு அடுத்தபடியாக இடைச்சொற்களும், எச்சங்களும் சுட்டப்படுகின்றன. இவை வகைப்படுத்திக் காட்டப்படுகின்றன.

பரிமேலழகர் சுட்டும் சில இலக்கணக் கூறுகளை, அவருக்குப் பின்னால் தோன்றிய இலக்கண நூல்கள் தெளிவாக விளக்குகின்றன.

'ஒரு பொருட் பன்மொழி' என்பதைப் பரிமேலழகர் சுட்டுவதன் மூலம் இவர் நன்னூலாருக்குப் பிற்பட்டவர் எனஅறிய முடிகிறது.

உரையாசிரியர்கள் கருத்தையொட்டியும் தம் இலக்கணக் கூறுகளை அமைத்துள்ளார் பரிமேலழகர்.

இலக்கணக்கூறுகளைச் சில இடங்களில் விளக்கும் போது வடநூல் கருத்துக்களை எடுத்தாளுவதை அறியமுடிகிறது.

குறிப்புகள்

1.தொல்காப்பியம், கிளவியாக்கம், நூ.1

2.நன்னூல், பெயரியல், நூ.4

3.தொல்காப்பியம், கிளவியாக்கம், நூ.56

4.தொல்காப்பியம், சேனாவரையருரை, ப.45, சாரதா பதிப்பகம்.

5.நன்னூல், பெயரியல், நூ.5

6.மேலது, நூ.6

7.மேலது, நூ.21

8.நன்னூல், வினையியல், நூ.8

9.நன்னூல், பெயரியல், நூ.9

10.தொல்காப்பியம், கிளவியாக்கம், நூ.44

11.நன்னூல், வினையியல், நூ.6

12.மேலது, நூ.10

13.நன்னூல், பெயரியல், நூ.23

14.மேலது, நூ.24

15.மேலது, நூ.23

16.மேலது, சோ.ம.இளவரசு உரை, ப.27

17.இலக்கணக்கொத்து, ப.72

18.நன்னூல், எழுத்தியல், நூ.11

19.இ.சுந்தரமூர்த்தி, திருக்குறள் உரைத்திறன், ப.178

20.தொல்காப்பியம், வேற்றுமை மயங்கியல், நூ.31

21.தொல்காப்பியம், வேற்றுமை மயங்கியல், சேனாவரையருரை, ப.88

22.மேலது, நூ.33

23.நன்னூல், பெயரியல், நூ.33

24.நன்னூல், சொல்லதிகாரம், விருத்தியுரை, ப.147

25.திருக்குறள், 735, 940, 958, 984, 1013, 1113, 1255

26.திருக்குறள்: 247, 401, 500, 701, 901, 927, 953, 958, 996, 1042, 1058, 1196, 1221.

27.திருக்குறள்: 48, 124, 796, 1287

28.திருக்குறள்: 141, 178, 180, 183, 204, 236, 245, 296, 352, 509, 676, 791, 901, 939, 1006, 1052, 1056, 1237, 1293.

29.திருக்குறள்: 523, 566, 801, 817, 901, 1039, 1132,

30.திருக்குறள்: 334, 407, 595, 706, 1111

31.திருக்குறள்: 359, 701, 748, 907

32.திருக்குறள்: 920, 980, 1024, 1097

33.நன்னூல், சொல்லதிகாரம், சோம.இளவரசு உரை, ப.35

34.தொல்காப்பியம், வேற்றுமையியல், நூ.1

35.மேலது, நூ.2

36.நன்னூல், பெயரியல், நூ.34

37.மேலது, நூ.35

38.தொல்காப்பியம், வேற்றுமை மயங்கியல், நூ.23

39.திருக்குறள்: 102, 242, 347, 499, 515, 858, 1117, 1231, 1292

40.தொல்காப்பியம், வேற்றுமையியல், நூ.10

41.நன்னூல் பெயரியல், நூ.42

42.தொல்காப்பியம், வேற்றுமையியல், நச்சினார்க்கினியர் உரை, ப.235

43.தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையருரை, 4.63

44.திருக்குறள்: 261, 582, 859, 1196, 1213, 1214

45.திருக்குறள்: 787, 795, 1067

46.திருக்குறள்: 147, 191, 257, 458, 556, 668, 810, 1148, 1235, 1236, 1264

47.தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, ப.235

48.திருக்குறள்: 25, 1051, 1268

49.திருக்குறள்: 792, 845, 1075, 1090, 1324

50.தொல்காப்பியம், புணரியல், நூ.17

51.நன்னூல், பெயரியல், நூ.38

52.மேலது, நூ.39

53.திருக்குறள்: 422, 462, 473, 777, 1132. 1171, 1286

54.தொல்காப்பியம், வினையியல், நூ.1

55.நன்னூல், வினையியல், நூ.1

56.மேலது, நூ.26

57.மேலது, நூ.19

58.மேலது, நூ.8

59.தொல்காப்பியம், எச்சவியல், நூ.34

60.நன்னூல், பொதுவியல், நூ.9

61.தொல்காப்பியம், எச்சவியல், நூ.37

62.நன்னூல், வினையியல், நூ.21

63.திருக்குறள்: 59, 199, 228, 435, 448, 463, 548, 585, 736, 815, 852, 994

64.தொல்காப்பியம், வினையியல், நூ.1

65.நன்னூல், வினையியல், நூ.23

66.திருக்குறள்: 22, 94, 210, 322, 352, 463, 536, 548, 602, 604, 1149, 1168, 1307

67.தொல்காப்பியம், வினையியல், நூ.39

68.தொல்காப்பியம், எச்சவியல், நூ.43

69.தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையருரை, ப.194

70.தொல்காப்பியம், எச்சவியல், நூ.45

71.திருக்குறள்: 37, 58, 171, 188, 572, 1095

72.தொல்காப்பியம், வினையியல், நூ.42

73.தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, ப.255

74.வை.மு.சடகோபராமானுஜ சுவாமிகள், திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழகர் உரையும், ப.51

75.தொல்காப்பியம், எச்சவியல், நூ.44

76.திருக்குறள்: 66, 85, 117, 411, 415, 503, 574, 627, 762, 1001, 1080,1095, 1127, 1128, 1223

77.நன்னூல், சொல்லதிகாரம், சோம.இளவரசு உரை, ப.83

78.தொல்காப்பியம், இடையியல், நூ.1

79.நன்னூல், இடையியல், நூ.1

80.தொல்காப்பியம், இடையியல், நூ.3

81.தொல்காப்பியம், இடையியல், நூ.7

82.நன்னூல், இடையியல், நூ.6

83.தொல்காப்பியம், எச்சவியல், நூ.34

84.திருக்குறள்: 332, 380, 527, 974, 986, 1060

85.தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, ப.168

தெய்வச்சிலையார் உரை, ப.142

86.நன்னூல், உயிரீற்றுப்புணரியல், நூ.5

87.மேலது, நூ.6

88.திருக்குறள்: 112, 224, 306, 463, 985, 990, 1138, 1150, 1195, 1222, 1262, 1318.

89.தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்கினியர் உரை, ப.142,

தெய்வச்சிலையார் உரை, ப.192

90.திருக்குறள்: 18, 71, 354, 469, 492, 521, 748, 765, 819, 987, 998, 1044, 1047

91.திருக்குறள்: 337, 403, 1199

92.திருக்குறள்: 187, 290, 346, 467, 810, 1160, 1194, 1202, 1305, 1307

93.திருக்குறள்: 344, 360, 408, 751, 762, 965, 969, 1198, 1251

94.தொல்காப்பியம், கிளவியாக்கம், நூ.33

95.திருக்குறள்: 25, 835, 992

96.திருக்குறள்: 127, 224, 822, 941, 1108, 1141, 1247

97.தொல்காப்பியம், இடையியல், நூ.9

98.நன்னூல், இடையியல், நூ.3

99.திருக்குறள்: 1, 261, 418, 521, 1101, 1108

100.திருக்குறள்: 49, 57, 72, 165, 222, 521

101.தொல்காப்பியம், இடையியல், நூ.8

102.நன்னூல், இடையியல், நூ.4

103.தொல்காப்பியம், இடையியல், நூ.4

104.நன்னூல், இடையியல், நூ.13

105.திருக்குறள்: 378, 540, 990, 996, 1086, 1125, 1161, 1165, 1170, 1178, 1189, 1206, 1207, 1216, 1253, 1265, 1266, 1284

106.நன்னூல், இடையியல், நூ.9

107.திருக்குறள்: 148, 805, 836

108.நன்னூல், இடையியல், நூ.8

109.மேலது, நூ.14

110.திருக்குறள்: 15, 16, 65, 248, 266, 362, 364, 695, 1155, 1166, 1178, 1294, 1308, 1313

111. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையருரை, ப.176

112. நன்னூல், இடையியல், நூ.4

113. மேலது, நூ.16

114. மேலது, நூ.14

115. மேலது, நூ.13

116. மேலது, நூ.18

117. மேலது, நூ.22

118. நன்னூல், உரியியல், சோம.இளவரசு உரை, ப.136

119. தொல்காப்பியம், உரியியல், நூ.69

120. நன்னூல், உரியியல், நூ.15

121. மேலது, நூ.16

122. தொல்காப்பியம், எச்சவியல், நூ.64

123. நன்னூல், பொதுவியல், நூ.47

124. தொல்காப்பியம், இடையியல், நூ.18

125. நன்னூல், பொதுவியல், நூ.10

126. தொல்காப்பியம், எச்சவியல், நூ.16

127. மேலது, நூ.17

128. மேலது, நூ.19

129. நன்னூல், பொதுவியல், நூ.13

130. பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரியார், சொல்லதிகாரக்குறிப்பு, ப.192

131. கோ.வடிவேலு செட்டியார், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் அறத்துப்பால், ப.419

132. நன்னூல், பொதுவியல், நூ.14 உரை

133. தொல்காப்பியம், எச்சவியல், நூ.20

134. மேலது, நூ.21

135. நன்னூல், பொதுவியல், நூ.17 உரை

136. நன்னூல், பொதுவியல், நூ.18

137. தொல்காப்பியம், பெயரியல், நூ.1

138. திருக்குறள்: 338, 1029, 1144, 1176, 1221, 1235, 1237

139. திருக்குறள்: 251, 1168, 1190, 1256

140. தொல்காப்பியம், எச்சவியல், நூ.23

141. நன்னூல், பெயரியல், நூ.10

142. தொல்காப்பியம், எச்சவியல், நூ.46

143. நன்னூல், சொல்லதிகாரம், காண்டிகை உரை, ப.27

144. நன்னூல், இடையியல், நூ.3

145. தொல்காப்பியம், கிளவியாக்கம், நூ.28

146. மேலது, நூ.29

147. தொல்காப்பியம், எச்சவியல், நூ.15

148. நன்னூல், பொதுவியல், நூ.44

149. கோ.வடிவேலு செட்டியார், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் அறத்துப்பால், ப.279

150. திருக்குறள்: 341, 423

151. தொல்காப்பியம், எச்சவியல், நூ.9

152. நன்னூல், பொதுவியல், நூ.52

153. மேலது, நூ.65

154. தண்டியலங்காரம், பொருளணியல், நூ.34

155. நன்னூல், பொதுவியல், நூ.52

156. தொல்காப்பியம், கிளவியாக்கம், சேனாவரையருரை, ப.2

157. வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், ப.128

158. இலக்கணக்கொத்து, ஒழிபியல், செய்யுள் 3

159. திருக்குறள்: 10, 186, 323, 372, 375, 435, 478, 523, 582, 611, 687, 721, 947, 961, 984, 1021, 1088, 1173, 1207, 1286

160. கு.மா.திருநாவுக்கரசு, தொல்காப்பிய வழிகாட்டி, ப.3

161. இலக்கணக்கொத்து, ஒழிபியல், செய்யுள் 19

162. வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியர், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், ப.200.

163. திருக்குறள்: 15, 415, 467, 473, 493, 494, 574, 602, 704, 717, 720, 759, 779, 817, 825, 829, 842, 871, 895, 904, 918, 927, 941, 958, 1103, 1124, 1190.

இயல் - 3

பொருளிலக்கணக் கூறுகள்

இயல் - 3

திருக்குறள் பரிமேலழகர் உரையில் பொருளிலக்கணக் கூறுகள்

முன்னுரை

தெய்வப்புலவர் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் எல்லாப் பொருளும் நிறைந்து, இதில் இல்லாத பொருளே இல்லை என்னும் அளவிற்குக் காணப்படுகிறது. இதனை,

"எல்லா பொருளும் இதன்பாலுள - இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லால்
பரந்த பாவால் என்பயன் வள்ளுவனார்
சுரந்த பாவையத் துணை"(1)

என்ற மதுரைத் தமிழ்நாகனார் பாடல் விளக்குகிறது.

இவ்வாறே சிறப்புடன் திகழ்கின்ற திருக்குறளில், தமிழுக்கே உரித்தான சிறப்பு இலக்கணமான பொருள் இலக்கணக் கூறுகளும் நிரம்பிக் காணப்படுகிறது. பரிமேலழகர் எழுத்து, சொல் இலக்கணக் கூறுகளைச் சுட்டிய அளவிற்குப் பொருளிலக்கணக் கூறுகளைக் குறிப்பிடவில்லை. சில இடங்களில் மட்டும் சுட்டிச் செல்வதைக் காணமுடிகிறது.

தொல்காப்பியம் பொருளதிகாரமானது அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், உவமவியல், மெய்ப்பாட்டியியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அகத்திணையியல்,

புறத்திணையியல், களவியல், செய்யுளியல் ஆகிய பகுதிகளிலிருந்து மட்டும் பரிமேலழகர் இலக்கணக் கூறுகளைச் சுட்டுகிறார். புறத்திணைக் கூறுகளைச் சுட்டும் போது புறப்பொருள் வெண்பாமாலையினைப் பின்பற்றுகிறார்.

தொல்காப்பியம் அகத்திணையைப் போலவே புறத்திணையையும் ஏழாகப் பகுக்கிறது. ஆனால் புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணையை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப் பன்னிரண்டாகப் பகுக்கிறது. இச்சிறப்பினைக் கருதியே, "இந்நூல் புறப்பொருள் இலக்கண உலகின் தனிச் சிறப்புடையதாகும். ஏனெனில் இதற்குப்பின் புறப்பொருள் கூறும் தனி இலக்கண நூல்கள எவையும் தோற்றமுற்றில"[(2)] என்கிறார் இளங்குமரன்.

பரிமேலழகர் புறப்பொருள் வெண்பாமாலை கொளுவினை மட்டுமன்றி வெண்பாவினையும் சில இடங்களில் மேற்கோளாகச் சுட்டுகிறார். புறத்திணைக் கூறுகளைப் பெருமளவு 'படைமாட்சி' 'படைச்செருக்கு' ஆகிய அதிகாரங்களில் இருந்து சுட்டுகிறார்.

இவ்வியலானது, தொல்காப்பிய பொருளதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிய நூல்களை அடியொற்றியும், இவற்றிற்கு உரையெழுதிய உரையாசிரியர்களின் கருத்தையொட்டியும் தேவைப்படும் இடங்களில் வேறுசில இலக்கண நூல்களைப் பின்பற்றியும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வியலில் பொருளிலக்கணக் கூறுகளாக;

அகத்திணையியல்

வேந்தன் - பொருள் விளக்கம்

கருப்பொருள்

புறத்திணையியல்

வஞ்சித்திணை

தழிஞ்சி

நெடுமொழி வஞ்சி

தும்பைத்திணை

தும்பை அரவம்

நூழிலாட்டு

வாகைத்திணை

ஏறாண்முல்லை

பாடாண்திணை

செவியறிவுறூஉ

களவியல்

செய்யுளியல்

தோல்

ஆகியவற்றைச் சுட்டுகிறார் பரிமேலழகர். இவ்வியலில் இலக்கணக் கூறுகள் அனைத்தும் தொல்காப்பியப் பொருளதிகார இயல்கள் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

அகத்திணையியல்

அகவொழுக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுவது 'அகத்திணை'யாகும். இதனைப் பற்றிக் கூறும் பகுதிக்கு அகத்திணையியல் என்று பெயர்.

வேந்தன் – பொருள் விளக்கம்

'வேந்தன்' என்ற சொல் 'இந்திரனை'க் குறிப்பிடுகிறது என்பதற்காக அகத்திணையியலில் இருந்து ஒரு நூற்பாவைப் பரிமேலகழர் தம் உரையில் சுட்டியுள்ளமையை அறியமுடிகிறது.

"எய்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும்" (கு.எண்: 899)

காத்தற்கு அருமையான உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வாராயின் அவர் ஆற்றலால் இந்திரன் இடையே தன் பதம் இழந்து கெடும் என்பது குறளின் கருத்து. இங்கு 'வேந்தன்' என்ற சொல் 'இந்திரன்' என்னும் பொருளில் வருகிறது என்பதற்காகக் கீழ்க்காணும் நூற்பாவை எடுத்துக் காட்டுகிறார்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"(3)

'நகுடன்' என்னும் சந்திரகுலத்து அரசன், நூறு அசுவமேத யாகம் செய்து இந்திரன் பதவி பெற்றுப் பல்லக்கில் ஏறிச் செல்கின்ற காலத்து, இந்திராணிமேல் வைத்த காதல் மிகுதியால், தன் பல்லக்கைத் தாங்கிச் செல்கின்ற ஏழு முனிவர்களுள் குறுமுனிவரான காரணத்தால் மெதுவாய் நடந்த அகத்தியரை நோக்கி 'விரைந்து செல்' என்று கூறினான். அகத்தியர் அவன்மீது கோபம் கொண்டு 'நீ ஸர்ப்பமாகுதி' என்று சாபம் போட அவன் இந்திர பதவி இழந்து உடனே பாம்பாகி நிலத்தில் கிடந்தான் என்ற வரலாற்றை உட்கொண்டு கூறினார் வள்ளுவர் என்பதைப் பரிமேலழகர் வழி அறிய முடிகிறது.

கருப்பொருள்

தொல்காப்பியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறது. இவற்றுள் கருப்பொருள. என்பது ஒவ்வொரு நிலத்திலும் காணப்படுகின்ற உயிர்கள், பொருட்களைக் குறிக்கும். தொல்காப்பியர் கருப்பொருளாக,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"[(4)]

என மேற்கண்டவற்றையும் குறிப்பிடுகிறார்.

"அனிச்சப்பூ கால்களையாள் பெய்த நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை" (கு.எண்: 1115)

இப்பாடலில் தலைவியின் மென்மையான இடையைக் கூற வந்த வள்ளுவர், அனிச்சப்பூவின் முகிழ்களையாது சூடியதன் காரணமாக, பாரம் பொறையால் இனி இவள் இடைக்கு நல்ல பறைகள் ஒலிக்காது என்கிறார். ஆனால் பரிமேலழகர் அம்முகிழ்ப் பாரம் பொறாமையின் இடை முரியும்; முரிந்தால், அதற்குச் செத்தார்க்குரிய நெய்தற் பறையே பாடுவதென்பதாம் என்கிறார்.

இங்கு, நெய்தற்பறைக்கு 'சாப்பறை' என்ற வேறொரு பெயரும் உண்டு என்பதால், 'செத்தார்க்குரிய நெய்தற்பறை' எனப் பரிமேலழகர் குறிப்பிடுவதை அறிய முடிகிறது. தொல்காப்பியம் ஒவ்வொரு நிலத்திற்குரிய கருப்பொருளை நூற்பாவினுள் குறிப்பிடவில்லை. மாறாக உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் நம்பியகப்பொருள் ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருளைத் தனித்தனி நூற்பாக்களில் அமைத்துக்காட்டுகிறது. சான்றாக,

"வருணன் சேர்ப்பன் விரிதிரைப புலம்பன்
பரும அல்குல் பரத்தி நுளைச்சி
புலவு மீன் உப்பு விலைகளிற் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய் பம்பை
....
நெடுங்கடல் ஆடல் நெய்தல் கருப்பொருளே"(5)

என்ற நூற்பா வாயிலாக நெய்தல் கருப்பொருளும், அந்நிலத்திற்குரிய பறையான 'மீன்கோட்' பறையும் சுட்டப்படுவதை அறியமுடிகிறது.

புறத்திணையியல்

புறவொழுக்கத்தைப் பற்றிக் கூறும் பகுதி 'புறத்திணையியல்' ஆகும். பரிமேலழகர் புறத்திணைக் கூறுகளை, புறப்பொருள் வெண்பாமாலையிலுள்ள வஞ்சி, தும்பை, வாகை, பாடாண் ஆகிய பகுதியிலிருந்து சுட்டுகிறார்.

வஞ்சித்திணை

மண்ணாசை காரணமாகப் பகைநாட்டின் மீது போர் தொடுப்பது 'வஞ்சி' எனப்படும். இப்போரின்போது வீரர்கள் வஞ்சிப்பூவினைச் சூடிக்கொள்வர்.

"வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல் குறித்தன்று"(6)

எனப் புறப்பொருள் வெண்பாமாலையும்,

எஞ்சா மண்ணாசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதச் சென்று அடல்குறித்தன்றே"(7)

எனத் தொல்காப்பியமும் சுட்டுகிறது.

வஞ்சித்திணையில் 'தழிஞ்சி', 'நெடுமொழி வஞ்சி' ஆகிய துறைகளை மட்டும் பரிமேலழகர் தம் உரையில் சுட்டுகிறார்.

தழிஞ்சி

போரில் வீரன் ஒருவன் புறமுதுகிட்டு ஓடும்போது அவனைத் தன்னுடைய கூர்மையான வாளினால் எறியாத மற்றொரு வீரனது

சிறந்த மறப்பண்பினைக் கண்டோர், அதனை விருப்பமுடன் கூறுவது 'தழிஞ்சி' என்னும் துறையாகும். இதனை,

"அழிகுநர் புறக்கொடை அயில்வாள் ஒச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று"[8]

எனப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது. ஆனால் தொல்காப்பியம் புறத்திணையியலில்,

"அழிபடை தட்டோர் தழிஞ்சி"[9]

எனச் சுட்டுகிறது.

படைகளைத் தம்மிடத்தே தடுத்துக் கொண்டு விழுப்புண்பட்ட மறவரை, அரசன் சென்று கண்டு பொருள் கொடுத்தும், முகமன் கூறியும் தழுவிக்கோடல் 'அழிபடை தட்டோர் தழிஞ்சி' எனப்படும்.

"அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு" (கு.எண்:384)

இங்கு 'மறன் இழுக்கா மானம்' என்பதற்கு விளக்கம் கூற வந்த பரிமேலழகர்.

"அழிகுநர் புறக்கொடை அயில்வாளொச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று"

என்கிறார். 'மறன் இழுக்கா மானம்' என்பது உயிர் பிழைக்க ஓடுவானது கருத்தினைத் தானும் தழுவியவனாக, அவன் முதுகினிடத்தில் வாளை எறியாமல் பிழைத்துச் செல்ல விடுதலாகும்.

"மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்

எனநான்கே ஏமம் படைக்கு" (கு.எண்:766)

என்னும் குறளில், மறம் - பகைவரை விரைவில் கொள்ளுதல், மானம் - அரசனுக்கு அவமானம் உண்டாகாதபடி பாதுகாத்தல், மாண்டவழிச் செலவு - புறங்காட்டி ஓடுபவர்மேல் படைக் கருவிகளைச் செலுத்தாமை, தேற்றம் - பகைவர்க்கு வசப்பட்டுத் தன் அரசனை வஞ்சிக்காமை ஆகிய நான்கினையும் பெறப்பட்டதாகக் கூறி 'அழியுநர் புறக்கொடை அயில் வாளொச்சாமை' (புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ப.66) என்பதனை மேற்கோளாகக் காட்டித் தழிஞ்சித் துறையைச் சுட்டிகிறார்.

"கானமுயல் எய்த அம்பினில் யானை

பிழைத்தவேல் ஏந்தல் இனிது" (கு.எண்:772)

இக்குறள் 'தழிஞ்சி' என்னும் துறையைச் சார்ந்தது என்கிறார் பரிமேலழகர்.

காட்டு முயலைக் கொன்ற அம்பைவிட, யானையைக் குறி வைத்து எறிந்து தவறிய வேல் சிறந்தது என்பது போல போரில் புறமுதுகிட்டு ஓடுபவனைக் கொல்வதைவிட நேருக்கு நேர் நின்று போரிடும் போது குறிதவறுவதும் சிறப்பாகும் எனப் பொருள்படுவதிலிருந்து தழிஞ்சித்துறை பயின்று வந்துள்ளமையை அறிய முடிகிறது.

"பேராண்மை என்பதறுகண் ஒன்று உற்றக்கால்

ஊராண்மை மற்றதன் எஃகு" (கு.எண்:773)

பகைவரை வெல்லுதல் வீரம்; பகைவர்க்குத் தாழ்வு வந்தபொழுது உதவுதல் அவ்வீரத்தின் சிறப்பு என்பது தோன்ற நின்றமையின் இப்பாடல் தழிஞ்சித்துறையைப் பெற்றிருக்கிறது என்கிறார் பரிமேலழகர்.

நெடுமொழிவஞ்சி

வஞ்சி மறவன் தன் பகைவரது படையின் முன்னின்று தனது ஆண்மையை மிகுத்துக்கூறுதல் 'நெடுமொழிவஞ்சி' என்னும் துறையாகும். இதனை,

"ஒன்னாதார் படை கெழுமித்

தன்னாண்மை எடுத்துரைத் தன்று"(10)

எனப் புறப்பொருள் வெண்பாமாலையும்,

"மாராயம் பெற்ற நெடுமொழியானும்"(11)

எனத் தொல்காப்பியமும் சுட்டுகிறது.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை

முன்நின்று கல்நின் றவர்" (கு.எண்:771)

என் தலைவன் முன்நின்று போர்செய்து மாண்டவர் பலர். ஆதலால் அவனை எதிர்த்து நிற்காதீர் என ஒரு வீரனின் ஆண்மையைக் கூறுவதால் இக்குறள் நெடுமொழி வஞ்சித்துறையைக் குறித்தது என்பது பரிமேலழகர் கருத்தாகும்.

தும்பைத்திணை

குருதியால் சிவந்த போர்க்களத்தின் கண்ணே, வீரம் கருதி வேந்தர்களும், வீரர்களும் தும்பைப்பூவினைச சூடிப் போர் செய்தல் தும்பைத் திணையாகும். இதனைச்,

"செங்களத்து மறங்கருதிப்
பைந்தும்பை தலைமலைந் தன்று"(12)

எனப் புறப்பொருள் வெண்பாமாலையும்,

"தும்மைதானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்குச் சிறப்பிற் றென்ப"(13)

எனத் தொல்காப்பியமும் சுட்டுகிறது. பரிமேலழகர் தும்பைத்திணையின் துறைகளை இரண்டு இடங்களில் சுட்டுகிறார். அதில் ஒன்று வெண்பாவின் கருத்தமைந்த பாடலாகும்.

தும்பை அரவம்

சிறந்த அரசன் தனது படைக்கு மிக்க அருள் செய்வது 'தும்பை அரவம்' என்னும் துறையாகும். இதனைப்

"பொன்புனைந்த கழலடியான்
தன்படையைத் தலையளித்தன்று"(14)

எனப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகின்றது.

"உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்

தொல்படைக் கல்லால் அரிது" (கு.எண்:762)

தான் சிறியதாக இருப்பினும் போரில் தம் அரசனுக்கு அழிவு நேர்வதாக இருந்தால், தான் புண்படுவதற்குப் பின் வாங்காமல் நின்று தாங்கும் வல்லமை, அறுவகைப் படையினுள் மூல படைக்குரியது என்பதால், அரசன் அதனைப் போற்ற வேண்டும் என்னும் கருத்து தோன்ற நின்றமையால்,

"வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்டையும்

கொல்களிறும் மாவும் கொடுத்தளித்தான் - பல்புரவி

நன்மணித் திண்தேர் நயவார் தலை பனிப்பப்

பன்மணிப் பூணான் படைக்கு"[15]

எனப் புறப்பொருள் வெண்பாமாலையிலுள்ள வெண்பா மேற்கோளாகக் காட்டப்படுகிறது.

நூழிலாட்டு

ஒரு வீரன் தனது மார்பைப் பிளந்த பகைவரது வேலினை எடுத்து, அப்பகைவர் போர்க்களத்தை விட்டு கெட்டோடுமாறு எறிந்தது 'நூழிலாட்டு' என்னும் துறையாகும்.

"களங்கழுமிய படையிரிய

உளங் கிழித்தவேல் பரித்தோச் சின்று"[16]

எனப் புறப்பொருள் வெண்பாமாலையும்,

"பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்

ஒள்வாள் வீசிய நூழிலும்"(17)

எனத் தொல்காப்பியமும்,

"நேரலர் பனிப்பக் நெஞ்சிடைக்குளித்த

கூரயில் பறித்துக கைக்கொண்ட நூழிலும்"(18)

என இலக்கண விளக்கமும் சுட்டுகிறது.

"கைவேல் களிற்றோடு போக்கி வருபவன்

நெய்வேல் பறியா நடும்" (கு.எண்:774)

பரிமேலழகர் இக்குறட்பாவினை 'நூழிலாட்டு' என்னும் துறையில் அடக்குகிறார். கையில் இருந்த வேலினை யானைமீது வீசிவிட்டுத் தன் உடம்பில் இருந்த வேலைப் பிடுங்கி வைத்துக் கொண்டு மகிழ்வான் என்னும் கருத்து தோன்ற நின்றமையின் இத்துறை ஆயிற்று எனலாம்.

வாகைத்திணை

பகை வேந்தனை வெற்றிகொண்ட அரசன் வாகைப்பூ மாலை சூடி ஆரவாரம் செய்தல் 'வாகைத்திணை' ஆகும்.

"இலைபுனை வாகை குடிஇகல் மலைந்து

அலைகடல் தானை அரசட்டார்த் தன்று"(19)

எனப் புறப்பொருள் வெண்பாமாலையும்,

"தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்

பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"(20)

எனத் தொல்காப்பியமும் சுட்டுகிறது.

வாகைத்திணையில் 'ஏறாண்முல்லை' துறையைச் சார்ந்த வெண்பாவினை மட்டும் பரிமேலழகர் ஓரிடத்தில் சுட்டுகிறார்.

ஏறாண்முல்லை

அரிய போரைப் பரம்பரையாகச் செய்து விரணப்பட்ட பெரிய குடியின் பராக்கிரமத்தைச் சொல்லுதல் 'ஏறாண்முல்லை' என்னும் துறையாகும். இதனை,

"மாறின்றி மறங்கானலும்
ஏறாண்டி எடுத்துரைதன்று"(21)

எனப் புறப்பொருள் வெண்பாமாலையும்,

"அருஞ்சமம் வழிவழியாற்றி ஏறுண்ட
இருங்குடி மறம்புகழ் ஏறாண்முல்லை"(22)

என இலக்கண விளக்கமும் குறிப்பிடுகிறது.

"அழிவின்றி அறைபோகா தாகி வழிவந்த
வண்க ணதுவே படை" (கு.எண்:764)

போரில் பின்வாங்காமல், பகைவர் வஞ்சனைக்க ஆளாகாமல் பரம்பரையான வீரத்தை உடையதே படையாகும் என்பது குறளின் கருத்து. இங்கு 'வழிவந்த வண்கண்மை' என்பதற்கு விளக்கம் கூறவந்த பரிமேலழகர், புறப்பொருள் வெண்பாமாலையிலுள்ள 'ஏறாண்முல்லை' வெண்பாவினைக் கீழே சுட்டுகிறார்.

"கன்னின்றன் எந்தன் கணவன் களப்பட்டான்
முன்னின்று மெய்யவிழ்ந்தார் என்னையார் - பின்னின்று
கைபோய்க் கணையிதைப்பக் காவலன் மேலோடி
எப்போற் கிடந்தானென்று ஏறு"(23)

பாடாண்திணை

ஒரு தலைவனுடைய புகழ், வலிமை, கொடை, கல்வி ஆகியவற்றை ஆராய்ந்து சொல்லுதல் 'பாடாண்திணை' என்னும் துறையாகும். இதனை,

"ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்

அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று"(24)

என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது.

பாடாண்திணையில் 'செவியறிவுறூஉ' என்னும் துறையிலுள்ள ஒரு வெண்பாவினை மட்டும் பரிமேலழகர் மேற்கோளாகக் காட்டுகிறார்.

செவியறிவுறூஉ

பெரியோர் நடுவுள் வெகுடலின்றித் தாழ்ந்து ஒழுகுதல் கடன் எனச் செவியறிவுறுத்தல் 'செவியறிவுறூஉ' என்னும் துறையாகும்.

"செவியுறைதானே

பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண்

அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே"(25)

எனச் சுட்டுகிறார் தொல்காப்பியர்.

"இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா

உவகையும் ஏதம் இறைக்கு" (கு.எண்:432)

இக்குறளுரையில் 'மாண்பு இறந்த மானம்' என்பதற்கு விளக்கம் கூறவந்த பரிமேலழகர்.

"அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதாய் என்றிவர்க்குத் தார்வேந்தே - முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டான் முறை"(26)

அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தம்முன்னோர்கள் தாய், தந்தை ஆகியோரை வணங்காமல் இருப்பது என மேற்கண்ட வெண்பா மூலம் விளக்குவதால் இது 'செவியறிவுறூஉ' என்னும் துறையைச் சார்ந்தது எனலாம்.

களவியல்

"பிறருக்குரிய பொருளை மறையிற்கோடல் 'களவு' ஆகும். அதாவது ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது, கன்னியர் தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து கொள்ளுதலாகும்"(27)என்கிறார் தொல்காப்பியர்.

காதலர் ஏதிலார்போல் நோக்கி உள்ளத்தில் மகிழ்வதை விளக்க இப்பகுதியிலிருந்து ஒரு வெண்பாவினை மேற்கோளாகக் காட்டுகிறார் பரிமேலழகர்.

"ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே உள" (கு.எண்:1099)

முன்பின் அறியாதவர்கள் போல் பொதுவாக நோக்குதல் காதலரிடம் மட்டுமே உள்ள சிறந்த பண்பாகும் என்பது குறளின் கருத்து.

இங்கு நோக்குதல் வெவ்வேறு குறிப்புக் கொண்டு இருந்தாலும், நுட்பமாய் நோக்கும் அவர்களுக்கன்றி மற்றையோர்க்கு அது புலனாகிறது.

இவர்கள் ஒருவரையொருவர் தெரியதவர்கள் போல் பார்த்துக் கொண்டு மகிழ்வதை, மதுவை மறைந்து உண்டவர்கள் வெளியில் தெரியாமல் உள்ளத்திலே அடக்கிக் கொண்டு மகிழ்வதற்கு ஒப்புமைப்படுத்தி, இதற்காகக் கீழ்க்கண்ட களவியல் வெண்பாவினை மேற்கோளாகக் காட்டுகிறார் பரிமேலழகர்.

"மது மறைந்துண்டார் மகிழ்ச்சி போல
உள்ளத்துள்ளே மகிழ்ப
சொல்லும் ஆடுப கண்ணி னானே"(28)

செய்யுளியல்

செய்யுள் உறுப்புகளைப் பற்றிக் கூறும் பகுதி 'செய்யுளியல்' ஆகும். 'தோல்' என்பதற்கு விளக்கம் கூறவந்த பரிமேலழகர் இப்பகுதியிலிருந்து ஒரு நூற்பாவை எடுத்துக் காட்டுகிறார்.

தோல்

மெல்லென்ற சொல்லால் சிறந்த நால்வகைப் புருஷார்த்தமும் உண்டாகுமாறு சொல்லுதல் 'தோல்' எனப் பெயர் பெறும். இதனை,

"இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்"(29)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக

நல்குரவு என்னும் நசை" (கு.எண்:1043)

இக்குறளுரையில் 'தோல்' என்பதற்கு விளக்கம் கூற வந்த பரிமேலழகர், 'இழுமென் மொழியால் விழுமியது நுவறல்' எனத் தொல்காப்பியம் சுட்டுவதாகக் கூறுகிறார்.

தொல்காப்பியர் கூற்றுப்படி, தோல் என்பது 'குடிப்பிறப்பிற்கேற்ற விழுமிய சொல்' என்னும் பொருள் படுதலால் பரிமேலழகர் இந்நூற்பாவை மேற்கோளாகக் காட்டியுள்ளமையை அறியமுடிகிறது.

இவ்வியலில் பரிமேலழகரால் சுட்டப்பட்ட பொருள் இலக்கணக் கூறுகள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப் படுகின்றன.

வ.எண்	இலக்கணக் கூறுகள்	இடம்பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	**அகத்திணையியல்**	
	i. வேந்தன் - பொருள் விளக்கம்	809
	ii. கருப்பொருள்	1115
2.	**புறத்திணையியல்**	
	வஞ்சித்திணை	
	i. தழிஞ்சி	384, 766, 772, 773
	ii. நெடுமொழி வஞ்சி	771
	தும்பைத்திணை	
	i. தும்பை அரவம்	762
	ii. நூழிலாட்டு	774
	வாகைத்திணை	
	i. ஏறாண்முல்லை	764
	பாடாண்திணை	
	i. செவியறிவுறூஉ	432
3.	களவியல்	1099
4.	செய்யுளியல்	
	i. தோல்	1043

தொகுப்புரை

1. பரிமேலழகர் பொருள் இலக்கணத்தில், புறத்திணைக் கூறுகளை அதிகமான இடங்களில் சுட்டுவதை அறிய முடிகிறது.

2. புறத்திணைக் கூறுகளைப் பெரும்பாலும் புறப்பொருள் வெண்பாமாலையில் இருந்து சுட்டுவதை அறியமுடிகிறது.

3. புறப்பொருள் வெண்பமாலையில் கொளுவினை மட்டுமன்றி சில இடங்களில் வெண்பாக்களையும் மேற்கோளாகக் காட்டுவதைக் காணமுடிகிறது.

4. தொல்காப்பியப் புறத்திணையியலின் வளர்ச்சி அடைந்த நிலையாகப் புறப்பொருள் வெண்பாமாலை இருப்பதால், இந்நூலைப் பின்பற்றியே பரிமேலழகர் புறத்திணைக் கூறுகளைச் சுட்டுவதை காணப்பெறுகிறது.

5. புறத்திணைகளில் வஞ்சி, தும்பை, வாகை, பாடாண் ஆகிய நான்கு திணைகளின் துறைகளை மட்டுமே பரிமேலழகர் சுட்டியுள்ளமை புலனாகிறது.

6. குறிப்பிட்ட சொல்லின் பொருளை விளக்க மட்டுமே அகத்திணையியல், செய்யுளியல் நூற்பாக்களைக் கையாண்டுள்ளமையைக் காணமுடிகிறது.

7. களவியலில் ஓரிடத்தில் மட்டும் பொருள் விளக்கத்திற்காக வெண்பாவினைப் பயன்படுத்தி உள்ளதை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது.

குறிப்புகள்

1. திருவள்ளுவமாலை, மதுரைத் தமிழ் நாகனார், பாடல் எண்.29.
2. இரா.இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.206.
3. தொல்காப்பியம், அகத்திணையியல், நூ.5.
4. மேலது, நூ.20.
5. நம்பியகப்பொருள், அகத்திணையியல், நூ.24.
6. புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், கொளு.1.
7. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.7.
8. புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ப.66.
9. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.8.
10. புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ப.60.
11. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.8.
12. புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம், கொளு.2.
13. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.12.
14. புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம், ப.130.
15. மேலது, ப.130.
16. மேலது, ப.140.
17. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.14.
18. இலக்கண விளக்கம், தும்பைத்திணை, ப.170.
19. புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ப.153.
20. தொல்காப்பியம், புறத்திணையியல், நூ.15.

21. புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ப.168.

22. இலக்கண விளக்கம், தும்பைத்திணை, ப.190.

23. புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ப.168.

24. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், கொளு.1.

25. தொல்காப்பியம், செய்யுளியல், நூ.110.

26. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், ப.206.

27. தொல்காப்பியம், களவியல், ப.153.

28. மேலது, ப.215.

29. தொல்காப்பியம், செய்யுளியல், நூ.230.

இயல் - 4

யாப்பிலக்கணக் கூறுகள்

இயல் - 4

திருக்குறள் பரிமேலழகர் உரையில் யாப்பிலக்கணக் கூறுகள்

முன்னுரை

அனைத்து இலக்கணங்களும் நிரம்பப் பெற்ற நூல் திருக்குறளாகும். இதனை,

"எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்புஅணி வண்ணம் - இழுக்கின்றி
என்றெவர் செய்தன வெல்லாம் இயம்பின்
இன்றிவரின் குறள்வெண் பா" (திருவள்ளுவமாலை.45)

என்ற நச்சுமனார் பாடல் வாயிலாக எழுத்து, அசை, சீர், அடி, சொல், பொருள், யாப்பு, வனப்பு, வண்ணம் ஆகிய அனைத்தும் இவற்றில் பொருந்தியுள்ளமையை அறியமுடிகிறது.

ஏனைய இலக்கணக்கூறுகளைச் (எழுத்து, சொல், பொருள், அணி, வடமொழி இலக்கணம்) சுட்டியளவிற்குப் பரிமேலழகர் யாப்பிலக்கணக் கூறுகளைச் சுட்டவில்லை. யாப்பிலுள்ள செய்யுள் உறுப்புகள் மற்றும் குறள் வெண்பாவிற்குரிய இலக்கணக்கூறுகள் மட்டுமே திருக்குறளில் இடம்பெற்றுள்ளமையாலும், இவையாவும் கற்றவர் அனைவருக்கும் எளிமையான முறையில் புரிந்து கொள்ள முடியும் என்ற காரணத்தினாலும் எடுத்தியம்பாமல் விட்டிருக்கலாம் எனத் தெளிவாகிறது.

இருந்தபோதிலும், இவ்வாய்வுத் தலைப்பினை கருத்திற் கொண்டு திருக்குறளிலுள்ள யாப்பிலக்கணக் கூறுகள் இவ்வாய்வில் விளக்கி உரைக்கப்படுகின்றன.

இவ்வியலானது தொல்காப்பியம் எழுத்ததிகாரம், பொருளதிகாரச் செய்யுளியல், நன்னூல் எழுத்தியல், யாப்பருங்கலக் காரிகை நூற்பாக்களைத் தழுவியும், தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலக்காரிகைக்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் கருத்தையொட்டியும், தேவைப்படும் இடங்களில் வேறுசில இலக்கண நூல்கள் மற்றும் உரையாசிரியர்களின் கருத்துக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

யாப்பிலக்கணக் கூறுகள் அனைத்தும் யாப்பருங்கலக் காரிகையின் அடிப்படையில் தனித்தனி உட்தலைப்புகளாக ஆய்வில் இடம்பெற்றுள்ளன.

திருக்குறளில் இடம்பெற்றுள்ள யாப்பிலக்கணக் கூறுகள்

யாப்பு - விளக்கம்

செய்யுள் விளக்கம்

எழுத்து

முதலெழுத்துக்கள்

உயிரெழுத்துக்கள்

மெய்யெழுத்துக்கள்

சார்பெழுத்துக்கள்

அசைக்கு உறுப்பாதல்

அசை

நேரசை

நிரையசை

சீர்

சீரின் வகைகள்

ஓரசைச்சீரும் - வாய்பாடும்

ஈரசைச்சீரும் - வாய்பாடும்

மூவசைச்சீரும் - வாய்பாடும்

தளை

தளையின் வகைகள்

இயற்சீர் வெண்டளை

வெண்சீர் வெண்டளை

அலகிடுதல்

அடி

சிந்தடி

அளவடி

தொடையும் வகைகளும்

மோனைத் தொடை

இனமோனை

அடிமோனை

இணைமோனை

பொழிப்பு மோனை

ஒரூஉ மோனை

கூழை மோனை

மேற்கதுவாய் மோனை

கீழ்க்கதுவாய் மோனை

முற்றுமோனை

எதுகைத் தொடை

அடி எதுகை

இணை எதுகை

பொழிப்பு எதுகை

ஒரூஉ எதுகை

கூழை எதுகை

மேற்கதுவாய் எதுகை

கீழ்க்கதுவாய் எதுகை

முற்றெதுகை

முரண்தொடை

அடிமுரண்

இணைமுரண்

பொழிப்பு முரண்

ஒரூஉ முரண்

இரட்டைத் தொடை

செந்தொடை

அளபெடையும் வகைகளும்

உயிரளபெடையும் வகைகளும்

இன்னிசை அளபெடை

இசைநிறையளபெடை

சொல்லிசையளபெடை

பா வகைகள்

வெண்பாவின் பொதுவான இலக்கணம்

செப்பலோசை வகைகள்

ஏந்திசைச் செப்பலோசை

தூங்கிசைச் செப்பலோசை

ஒழுகிசைச் செப்பலோசை

வெண்பாவின் வகைகள்

என்பனவாகும்.

யாப்பு விளக்கம்

'யாப்பு' என்றால் 'கட்டுதல்' என்று பொருள்படும். அதாவது செய்யுள் உறுப்புக்களால் கட்டுதலாகும். ஓசை நயமும் பொருட் சிறப்பும் அமையப் புலவர்களால் யாக்கின்ற காரணத்தினால், அது பற்றிக் கூறும் இலக்கணத்திற்கு 'யாப்பிலக்கணம்' என்று பெயர்.

செய்யுள் உறுப்புகள்

செய்யுள் உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை எனப்படும்.

"எழுத்தசை சீர் பந்தம்

அடி தொடை பாவினங் கூறுவன்"[1]

எனக் காரிகையும்,

"எழுத்தசை சீர்தளை அடிதொடை ஆறும்
செய்யுள் உறுப்பெனச் செப்பினார் புலவர்"(2)

என நற்றமிழ் இலக்கணமும் சுட்டுகிறது.

எழுத்து

மொழிக்கு மூலக்காரணமாய் அமைகின்ற அணுத்திரளின் காரியமாகிய ஒலியே எழுத்தாகும். இது வரிவடிவில் காணப்படும். இவ்வெழுத்துக்கள் இரண்டு வகைப்படும். இதனை,

"மொழிமுதல் காரணமாம் அணுத்திரள் ஒலி
எழுத்து; அது முதல் சார்பென இருவகைத்தே"(3)

என நன்னூலாரும்,

"எழுத்தெனப்படுவ
அகர முதல னகர இறுவாய்
முப்பதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே"(4)

எனத் தொல்காப்பியமும் குறிப்பிடுகிறது.

இவ்விருவரின் கூற்றுக்களிலிருந்து எழுத்தினை,

1. முதலெழுத்துக்கள்
2. சார்பெழுத்துக்கள்

என இரண்டாகப் பகுக்கலாம்.

முதலெழுத்துக்கள்

மொழிக்கு முதலில் தோன்றிய காரணத்தினாலும் முதன்மையான எழுத்துக்கள் என்னும் காரணத்தினாலும் இவற்றை முதலெழுத்துக்கள் எனலாம். நன்னூலார்,

"உயிரும் உடம்புமாம் முப்பது முதலே"(5)

என்கிறார். இந்த முதலெழுத்துக்கள்,

1. உயிரெழுத்துக்கள்
2. மெய்யெழுத்துக்கள்

என இரண்டாகப் பகுக்கப்படுகிறது.

உயிரெழுத்துக்கள்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டும் உயிரெழுத்துக்களாகும். இவை முறையே,

i.குறில் எழுத்துக்கள் - அ, இ, உ, எ, ஒ

ii.நெடில் எழுத்துக்கள் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

iii.சுட்டெழுத்துக்கள் -அ, இ, உ

iv.வினா எழுத்துக்கள் - எ, ஏ, ஆ, ஓ

v.இனவெழுத்துக்கள் - அஆ, இஈ, உஊ, எஏ, ஐஇ, ஒஓ, ஔஉ

எனப் பாகுபடுத்தப்படுகிறது.

மெய்யெழுத்துக்கள்

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துக்களாகும். இவை முறையே,

i. வல்லினம் - க், ச், ட், த், ப், ற்

ii. மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்

iii. இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

iv. வினா எழுத்து - ய்

v. இனவெழுத்து - க்ங், ச்ஞ், ட்ண், த்ந், ப்ம், ற்ன்

எனப் பாகுபடுத்தப்படுகிறது.

சார்பெழுத்துக்கள்

தனித்து இயங்கும் ஆற்றலின்ற உயிரெழுத்துக்களையோ, மெய்யெழுத்துக்களையோ சார்ந்து வருவது 'சார்பெழுத்துக்கள்' ஆகும்.

"குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன"(6)

எனத் தொல்காப்பியம் மூன்றாகவும்,

"உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளவு
அஃகிய இஉஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்"(7)

என நன்னூல் பத்தாகவும் சார்பெழுத்துக்களைக் குறிப்பிடுகிறது.

அசைக்கு உறுப்பாதல்

மேற்கூறிய எழுத்திலக்கணத்தில் சொல்லப்பட்ட உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் ஆகிய

அனைத்தும் யாப்பில் குறில், நெடில், ஒற்று ஆகிய மூன்றாகப் பகுக்கப்பட்டு அசைக்கு உறுப்புகளாக அமைகின்றன.

(எ.கா) மேகம்

மே - நெடில்

க - குறில்

ம் - ஒற்று

அசை

குறில், நெடில், ஒற்று என்னும் எழுத்துக்களால் அசைக்கப்படுவது அல்லது கட்டப்படுவது 'அசை' எனப்படும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும். இதனைக்

"குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசிற் பெயரே"(8)

எனத் தொல்காப்பியமும்.

"நெடில்குறில் தனியாய் நின்றுமொற் றடுத்தும்
நடைபெறும் நேரசை நால்வகை யானே"(9)
"குறிலிணை குறில்நெடில் தனித்துமொற் றடுத்தும்
நெறிமையின் நான்காய் வருநிரை யசையே"(10)

என யாப்பருங்கலமும் குறிப்பிடுகிறது.

நேரசை

தனிக்குறிலையடுத்தும், தனிநெடிலையடுத்தும் ஒற்று வருவது 'நேரசை' ஆகும்.

க - குறில்

கா - நெடில்

கல் - குறிலொற்று

கால் - நெடிலொற்று

நேரசையும் செய்யுள் இயற்றும்போது கீழ்க்கண்டவற்றை நினைவில் கொள்ளவேண்டும்.

i. தனிக்குறில் சொல்லின் முதலில் வந்து நேரசையாகாது

ii. சொல்லின் முதலில் வரும் குறில் அடுத்து ஒற்று வந்தால் மட்டுமே நேரசையாகும்.

iii. நெடிலுக்குப்பின்னும், ஒற்றுக்குப் பின்னும் வரும் குறில் மட்டுமே நேரசையாகும்.

iv. நெடில் எவ்விடத்திலும் தனித்தும், ஒற்றடுத்தும் வந்தாலும் நேரசையாகும்.

v. ஒற்றெழுத்து தனி அலகு பெறாது. அது முன்னர் உள்ள குறில் அல்லது நெடிலோடு சேர்ந்து ஒலிக்கும்.

vi. இரண்டு ஒற்று எழுத்துக்கள் சேர்ந்து வந்தாலும் அதனை ஒன்றாகவே கொள்ளுதல் வேண்டும்.

நிரையசை

குறில் இணைந்தும், குறில் நெடில் இணைந்தும் ஒற்றெடுத்தும் வருவது 'நிரையசை' ஆகும்.

பனி - குறிலிணை

பலா - குறில் நெடில்

பலம் - குறிலிணை ஒற்று

புலால் - குறில் நெடில் ஒற்று

சீர்

நேரசை, நிரையசை ஆகிய இரண்டும் தனித்தும், சேர்ந்தும் வருவது 'சீர்' எனப்படும்.

சீரின் வகைகள்

மேற்கூறிய சீரானது நான்கு வகையாகப் பகுக்கப்படுகிறது. அவை,

i. ஓரசைச்சீர்

ii. ஈரசைச்சீர்

iii. மூவசைச்சீர்

iv. நாலசைச்சீர்

ஓரசைச்சீரும் வாய்பாடும்

வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவை 'அசைச்சீர்' எனப்படும். அதன் வாய்பாடு நாள், மலர் ஆகும் என்பதை,

"நாமாண்பு உரைத்த அசைச்சீர்க்கு
உதாரணம் நாள் மலரே"(11)

என்ற யாப்பருங்கலக்காரிகை வாயிலாக அறியமுடிகிறது.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்" (கு.எண்.360)

இக்குறளில் நோய்-நேரசை, வாய்பாடு- நாள் என்பதாம்

"செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது

வயிற்றுக்கும் ஈயப்படும்" (கு.எண்.412)

இக்குறளில் படும் - நிரையசை, வாய்பாடு- மலர் என்பதாகும்.

"திருக்குறளில் 174 குறட்பாக்களின் ஈற்றுச்சீர் 'நாள்' வாய்பாட்லும் 655 குறட்பாக்களின் ஈற்றுச்சீர் 'மலர்' வாய்பாட்டிலும் அமைந்துள்ளதாகத் திருக்குறள் பதின் கவனகர், இராமையா"[12] அவர்கள் கூறுகிறார்கள்.

நேர்பு, நிரைபு - காசு, பிறப்பு

வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசை தனியாக வருவது போன்று நேர்பு, நிரைபு என குற்றியலுகர வாய்பாட்டுச் சீர்களும் அமைவதுண்டு. அவற்றின் வாய்பாடு காசு, பிறப்பு ஆகும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று

இக்குறளில், நன்று - நேர்பு, வாய்பாடு - காசு என்பதாம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு

இக்குறளில் உலகு - நிரைபு, வாய்பாடு - பிறப்பு என்பதாகும்.

"திருக்குறளில் 200 குறட்பாக்கள் காசு வாய்பாட்டிலும், 291 குறட்பாக்கள் பிறப்பு வாய்பாட்டிலும் வந்துள்ளதாக இராமையா"[13] குறிப்பிடுகிறார்.

ஈரசைச்சீரும் வாய்பாடும்

"ஈரசை கூடிய சீரியற சீரவை

ஈரிரண் டென்பர் இயல்புணர்ந் தோரே"[14]

என்ற சூத்திரம் மூலம் நேர், நிரை என்னும் அசைகள், இரண்டிரண்டாக இணைந்து வரும் சீர்கள் 'ஈரசைச்சீர்' எனலாம். அவற்றிற்கு வாய்பாடுகள் தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பதனை,

"தேமா புளிமா கருவிளம் கூவிளம் சீரவகற்கு"[15]

என்ற காரிகை வாயிலாக அறியமுடிகிறது.

அசை		**வாய்பாடு**
நேர் + நேர்	-	தேமா
நிரை + நேர்	-	புளிமா
நிரை + நிரை	-	கருவிளம்
நேர் + நிரை	-	கூவிளம்

மேற்கூறிய வாய்பாட்டின் சொல்லைப் பிரித்தாலே, அது எந்த அசைகளின் இணைப்பால் தோன்றியதோ, அதே அசைகள் அதில் அமைந்திருப்பதை அறியலாம்.

(எ.கா)

தேமா	-	நேர் + நேர்
புளிமா	-	நிரை + நேர்
கருவிளம்	-	நிரை + நிரை
கூவிளம்	-	நேர் + நிரை

ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவில் மிகுந்து வருகின்ற காரணத்தினால் இதற்கு 'ஆசிரிய உரிச்சீர்' என்று பெயர்.

"ஈரசை நாற்சீர் அகவற்குரிய"(16)

என்ற காரிகை வாயிலாக அறியமுடிகிறது. ஆசிரியப்பாவிற்கு அகவற்பா என்ற பெயரும் உண்டு. ஏனெனில்,

"அகவலென்ப ஆசிரயம்மே"(17)

என்ற தொல்காப்பிய நூற்பா இதனைப் புலப்படுத்துகிறது.

மூவசைச்சீரும் வாய்பாடும்

ஈரசைச்சீர் நான்கனோடும், நேரசை, நிரையசை ஆகிய இரண்டினையும் தனித்தனியாக இறுதியில் சேர்த்தால் 'மூவசைச்சீர்' உருவாகும். இதனை,

"மூவசைச் சீர்உரிச் சீருள் நான்கினும்
நேரிறு நான்கும் வெள்ளை யல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட்டனவே"(18)

என்ற யாப்பருங்கல சூத்திர வாயிலாக அறியலாம். இதன் வாய்பாடு தேமாங்காய், புளிமாங்கனி, புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய், தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என்பதனை,

"ஆமாங் கடைகாய் அடையின் வெண்பாவிற்கு
அந்தம் கனியா வகுத்த வஞ்சிக்குரிச்சீர்"(19)

என்ற காரிகை வாயிலாக அறியமுடிகிறது.

அசை	வாய்பாடு
நேர் + நேர் + நேர் -	தேமாங்காய்
நிரை + நேர் + நேர் -	புளிமாங்காய்
நிரை + நிரை + நேர் -	கருவிளங்காய்
நேர் + நிரை + நேர் -	கூவிளங்காய்

இவை நான்கும் காய்ச்சீர், நேரீற்று மூவசைச்சீர் என யாப்பருங்கலக் காரிகை குறிப்பிடுகிறது. மேலும்,

"வெண்பாவினவாம் நேரசை யாலிற்று மூவசைச்சீர்"(20)

எனக் கூறினமையால் 'வெண்பா உரிச்சீர்' என்றும் அழைக்கப்படுகிறது. காய்ச்சீர் நான்கும் வெண்பாவிற்கு மட்டுமே உரியதாதலாலும் இவ்வாறு அழைக்கப்பெறுகிறது.

காய்ச்சீர் நான்கும் பயின்று வரும் குறள் வெண்பா

"ஆனந்தக் கூத்த னடிக்கன்பு செய்மனனே
யீனந் தனையொழிவாய் இன்று"

ஆனந்தக் - நேர் + நேர் + நேர் - தேமாங்காய்

னடிக்கன்பு - நிரை + நேர் + நேர் - புளிமாங்காய்

செய்மனனே - நேர் + நிரை + நேர் - கூவிளங்காய்

தனையொழிவாய் - நிரை + நிரை + நேர் - கருவிளங்காய்

கனிச்சீர் நான்கும், நாலசைச்சீர் பதினாறும் வெண்பாவிற்குரியன அல்லாத காரணத்தினால் இவை இவ்வாய்வில் தவிர்க்கப்பட்டுள்ளன.

தளை

சீர்கள் ஒன்றோடொன்று கட்டுப்பட்டு நிற்கும் நிலையே 'தளை' எனப்படும். (தளை-கட்டு)

நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் அமைவது 'தளை' ஆகும். இதனை,

"தன்சீர் தனதொன்றில் தன்தளையாம்"(21)

என்ற காரிகை வழி அறியமுடிகிறது.

நேர் முன் நேர்
நிரை முன் நிரை - ஒன்றி வருதல்

நிரை முன் நேர்
நேர் முன் நிரை - ஒன்றாது வருதல்

(எ.கா)

கற்க - கல்வி
நேர் + <u>நேர்</u> - <u>நேர்</u> + நேர் - ஒன்றி வந்தன
நிலவினில் - பழுது
நிரை + <u>நிரை</u> - <u>நிரை</u> + நேர்

ஆற்றுக் - கல்வி
நேர் + <u>நேர்</u> - <u>நிரை</u> + நேர் - ஒன்றாது வந்தன
கசடறக் - கற்க
நிரை + <u>நிரை</u> - <u>நேர்</u> + நேர்

தளையின் வகைகள்

தளை ஏழு வகைப்படும். அவை

1. நேரொன்றாசிரியத் தளை
2. நிரையொன்றாசிரியத்தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. ஒன்றிய வஞ்சித்தளை
6. ஒன்றாத வஞ்சித்தளை
7. கலித்தளை

மேற்கூறிய தளைகளுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டுமே வெண்பாவிற்குரியன. ஆகவே அவை இரண்டும் மட்டும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இயற்சீர் வெண்டளை

இயற்சீர் வெண்டளை இருவகையாக அமைகிறது. நின்றசீர் மாச்சீராக இருக்க வரும் சீரின் முதலசை நிரையாக வருவது 'மாச்சீர்' ஆகும். நின்ற சீர் விளச்சீராக இருக்க வரும் சீரின் முதலசை நேராக வருவது விளச்சீர் ஆகும். இதனை,

"மாமுன் நிரையும் விளமுன்நேரும்
இயைந்து வருவதே இயற்சீர் வெண்டளை"(22)

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

(எ.கா)

கற்க	கசடற	கற்பவை	கற்றபின்
நே+நே	நி+நி	நே+நி	நே+நி
தேமா	கருவிளம்	கூவிளம்	கூவிளம்
	மாமுன்நிரை	விளமுன்நேர்	விளமுன்நேர்

இங்கு மாமுன்நிரையும், விளமுன்நேரும் வந்துள்ளமையால் இயற்சீர் - வெண்டளை ஆயிற்று.

வெண்சீர் வெண்டளை

நின்றசீர் தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினைப் பெற்றிருக்க வருஞ்சீரின் முதலசை நேராக வருவது 'வெண்சீர் வெண்டளை' எனப்படுகிறது.

(எ.கா) நெடுங்கடலும் - தன்நீர்மை

நிரை + நிரை + நேர் - நேர் + நேர் + நேர்

கூவிளங்காய்

இங்கு 'காய்முன் நேர்' வந்துள்ளமையால் வெண்சீர் வெண்டளை ஆயிற்று.

அலகிடுதல்

கீழ்க்கண்ட குறட்பாவின் மூலம் அசை, சீர், வாய்பாடு, தளை ஆகியவை அலகிட்டு விளக்கம் பெறுகின்றன.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (கு.எண்.1)

வ.எண்	சீர்	அசை	வாய்பாடு	தளை
1.	அகர	நிரை+நிரை	புளிமா	--
2.	முதல	நிரை+நிரை	புளிமா	இயற்சீர் வெண்டளை
3.	எழுத்தெல்லாம்	நிரை+நேர்+நேர்	புளிமாங்காய்	இயற்சீர் வெண்டளை
4.	ஆதி	நேர்+நேர்	தேமா	இயற்சீர் வெண்டளை
5.	பகவன்	நிரை+நேர்	புளிமா	இயற்சீர் வெண்டளை
6.	முதற்றே	நிரை+நேர்	புளிமா	இயற்சீர் வெண்டளை
7.	உலகு	நிரைபு	பிறப்பு	--

அடி

சீர்கள் பல அடுத்து நடப்பது 'அடி' ஆகும். அஃது இவ்வடி ஐந்தாகப் பகுக்கப்படுகிறது என்பதை,

"குறளடி சிந்தடி இருசீர் முச்சீர்
அளவடி நெடிலடி நாற்சீர் ஐஞ்சீர்
நிரனிறை வகையான் நிறுத்தனர் கொளலே"(23)

என்ற யாப்பருங்கல சூத்திரம் வாயிலாக அறியலாம்.

i. குறளடி ii. சிந்தடி

iii. அளவடி iv. நெடிலடி

v. கழிநெடிலடி "(மிக்க பாதம் கழிநெடில்)"(24)

மேற்கூறிய ஐவகை அடியுள் சிந்தடி, அளவடி ஆகியன மட்டும் வெண்பாவிற்குரியனவாதலால் அவை மட்டுமே இவ்வாய்வில் இடம்பெறுகின்றன.

சிந்தடி

மூன்று சீர்களால் அமையப்பெறுவது 'சிந்தடி' என்பதை "சிந்து முச்சீரடி"(25) என காரிகை விளம்புகிறது. வெண்பாவின் ஈற்றடி மூன்று சீர்களால் ஆன சிந்தடியக வரும் எனலாம்.

(எ.கா) "ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்" (கு.எண். 1330)
1 2 3

இக்குறளின் இரண்டாமடியில் மூன்று சீர்களால் ஆன 'சிந்தடி' பயின்று வந்துள்ளமையை அறியமுடிகிறது.

அளவடி

நான்கு சீர்களால் அமையப்பெறுவது 'அளவடி' ஆகும். இதனை 'நேரடி' என்றும் வழங்குவர் என்பதை,

"நாலொருசீர் அறைதரு காலை அளவொடு நேரடி"(26)

என்ற காரிகை மூலம் அறியமுடிகிறது. வெண்பாவின் ஈற்றடி தவிர ஏனைய அடிகள் நான்கு சீர்களால் வரும்.

1 2 3 4
(எ.கா) உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்" (கு.எண். 1302)

தொடையும் வகைகளும்

'தொடை' என்பது தொடுக்கப்படுவதாகும். மலர்களைக் கொண்டு மாலை தொடுப்பது போல, சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலிய தொடை வகைகள் அமையத் தொடுப்பது 'தொடை' எனப்படும்.

பாவின் ஓசை இன்பத்திற்கும் சிறப்புக்கும் இத்தொடையின் உறுப்புக்கள் இன்றியமையாதனவாக உள்ளது. 'தொடையற்ற பாட்டு நடையற்றுப்போகும்' என்பது பழமொழி.

மேற்கூறிய தொடையினை யாப்பருங்கலக்காரிகை எட்டு வகைகளாகப் பகுக்கிறது. அவை,

1. மோனைத் தொடை
2. எதுகைத் தொடை
3 இயைபுத் தொடை
4. முரண் தொடை
5. அளபெடைத் தொடை
6. அந்தாதித் தொடை
7. செந்தொடை
8. இரட்டைத் தொடை

இயைபுத் தொடை அந்தாதித்தொடை, இரட்டைத் தொடை ஆகியன திருக்குறளில் பயின்று வராமையினால் இவ்வாய்வில் அவை தவிர்க்கப்பட்டுள்ளன.

மோனைத் தொடை

செய்யுளில், அடிகளிலும், சீர்களிலும் முதலாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது 'மோனைத் தொடை' ஆகும். இதனை,

"முதலெழுத் தொன்றின் மோனை

....

கிளையெழுத்தும் உரிய"(27)

என்ற காரிகை வாயிலாக அறியமுடிகிறது.

மோனைத் தொடையானது கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தப்படுகிறது.

1. இனமோனை
2. அடிமோனை
3. இணை மோனை
4. பொழிப்பு மோனை
5. ஒரூஉ மோனை
6. கூழை மோனை
7. மேற்கதுவாய் மோனை
8. கீழ்க்கதுவாய் மோனை
9. முற்றுமோனை

இனமோனை

மோனைக்கு முதலெழுத்து மட்டுமன்றி, அதற்குரிய இனவெழுத்து ஒன்றி வரும், இதனை, 'இனமோனை' அல்லது 'கிளை மோனை' என்றும் அழைக்கப்படுகிறது.

இனமோனையாகக் கீழ்க்கண்ட எழுத்துக்கள் வரலாம். உயிரெழுத்துக்களில்,

i. அ, ஆ, ஐ, ஔ - ஓரினம்

ii. இ, ஈ, எ, ஏ - ஓரினம்

iii. உ, ஊ, ஒ, ஓ - ஓரினம்

உயிர்மெய்யெழுத்துக்களில்,

i. ஞ, ந - ஓரினம்

ii. ம, வ - ஓரினம்

iii. த, ச - ஓரினம்

உயிர்மெய்யெழுத்துக்களில் அவற்றின் வர்க்க எழுத்துக்களும் இடம்பெறும்.

(எ.கா) மனத்தொடு வாய்மை மொழியின் - ம, வா

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும்

- இ, எ

ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்பு - ஐ, ஆ, அ

அடிமோனை

அடிதோறும் முதல் சீரின் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது 'அடிமோனை' ஆகும்.

(எ.கா) "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்

தன்னெஞ்சே தன்னைச் சுடும்" (கு.எண்.293)

இணை மோனை

ஓரடியில் முதல் இரண்டு சீர்களிலும் பயின்று வரும் மோனை 'இணை மோனை' ஆகும். யாப்பருங்கலம் இதனை "இருசீர் இசைவரத் தொடுப்பது இணையே"(28) என்கிறது.

(எ.கா) "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்" (கு.எண்.948)

பொழிப்பு மோனை

"முதலோடு மூன்றாஞ் சீர்த்தொடை பொழிப்பே"(29)

என்ற வரி மூலம் முதற்சீரும் மூன்றாம் சீரும் ஒன்றி வரத் தொடுப்பது 'பொழிப்பு மோனை' என்பதனை அறியலாம்.

(எ.கா) "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை

அணியுமாம் தன்னை வியந்து" (கு.எண்.978)

ஒரூஉ மோனை

ஓரடியில் முதல் சீரும் நான்காம் சீரும் ஒன்றிவரத் தொடுப்பது 'ஒரூஉ மோனை' என்பதை,

"சீரிரண்டு இடைவிடத் தொடுப்பது

ஒரூஉத் தொடை"(30)

என்ற வரிமூலம் அறியலாம்.

(எ.கா) "பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த

நன்மை பயக்கும் எனின்" (கு.எண்.292)

கூழை மோனை

ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது 'கூழை மோனை' என்பதை,

எ.கா) "தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்

வானம் வழங்கா தெனின்" (கு.எண்.19)

மேற்கதுவாய் மோனை

ஓரடியில் முதற்சீர், மூன்றாம்சீர், நான்காம் சீர்களில் வரும் மோனை 'மேற்கதுவாய் மோனை' என்பதை,

"முதலயற் சீரொழித் தன்னல மூன்றின்

மிசைவரத் தொடுப்பது மேற்கதுவாயே"(32)

என்ற வரிகள் விளக்குகின்றன.

(எ.கா) "வானின்று உலகம் வழங்கி வருதலால்

தானமிழ்தம் என்றுணரற் மற்று" (கு.எண்.11)

கீழ்க்கதுவாய் மோனை

ஓரடியில் முதற்சீர், இரண்டாம்சீர், நான்காம் சீர்களில் மோனை வரத் தொடுப்பது 'கீழ்க்கதுவாய் மோனை' என்பதை,

"ஈற்றயற் சீரொழித் தெல்லாம் தொடுப்பது

கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்"(33)

என்ற வரிகள் விளக்குகின்றன.

(எ.கா) "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

தானமிழ்தம் என்றுணரற் பற்று" (கு.எண்.15)

முற்று மோனை

ஓரடியில் நான்கு சீர்களிலும் மோனை வரத் தொடுப்பது 'முற்று மோனை' என்பதை,

"சீர்தோறும் தொடுப்பது முற்றெனப்படுமே"(34)

என்ற வரி மூலம் அறியலாம்.

(எ.கா) "பெற்றார் பெறின்பெறுவார் பெண்டிர் பெருஞ்சிறப்புப்

புத்தேளிர் வாழும் உலகு" (கு.எண்.58)

எதுகை

முதலெழுத்து அளவொத்திருக்க, அடிதோறும் சீர் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை எனப்படும். இதனை,

"......... .... எதுகை

முதலெழுத்து அளவோ டொத்தது முதலா

அஃதொழித் தொன்றி னாகும் என்ப"(35)

என்கிறார் பல்காயனார். சீர்கள் தோறும் எதுகை பெற்று வருவது 'சீரெதுகை' எனப்படும்.

(எ.கா) "சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க

சொல்லிற் பயனிலாச் சொல்" (கு.எண்.200)

மேற்கூறிய எதுகையானது எட்டு வகையாகப் பகுக்கப் படுகிறது.

i. அடி எதுகை
ii. இணை எதுகை
iii. பொழிப்பு எதுகை
iv. ஒரூஉ எதுகை
v. கூழை எதுகை
vii. மேற்கதுவாய் எதுகை
vii. கீழ்க்கதுவாய் எதுகை
viii. முற்றெதுகை

அடி எதுகை

அடிதோறும் முதல் சீரின் முதலெழுத்து அளவு ஒத்து இருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது 'அடியெதுகை' ஆகும்.

(எ.கா) "யாகவ ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (கு.எண்.127)

இணை எதுகை

ஓரடியில் முதல் இரண்டு சீர்களில் வரும் எதுகை 'இணை எதுகை' ஆகும்.

(எ.கா) "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" (கு.எண்.297)

பொழிப்பெதுகை

ஓரடியில் முதற்சீரலும் மூன்றாம் சீரிலும் வரும் எதுகை 'பொழிப்பெதுகை' ஆகும்.

(எ.கா) "குன்றின் அனையாரும குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்" (கு.எண்.965)

ஒரூஉ எதுகை

ஓரடியில் முதல் சீரிலும் நான்காம் சீரிலும் வரும் எதுகை 'ஒரூஉ எதுகை' ஆகும்.

(எ.கா) "துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்" (கு.எண்.651)

கூழை எதுகை

ஓரடியில் முதற்சீர், இரண்டாம் சீர், மூன்றாம் சீரில் வரும் எதுகை 'கூழை எதுகை' ஆகும்.

(எ.கா) "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (கு.எண்.350)

மேற்கதுவாய் எதுகை

ஓரடியில் முதற்சீர், மூன்றாம் சீர், நான்காம் சீர்களில் எதுகை பெற்று வருவது 'மேற்கதுவாய் எதுகை' ஆகும்.

(எ.கா) "பிரிவுரைக்கும் வன்கண் ணராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை" (கு.எண்.1156)

கீழ்க்கதுவாய் எதுகை

ஓரடியில் முதற்சீர், இரண்டாம் சீர், நான்காம் சீர்களில் எதுகை வரத் தொடுப்பது 'கீழ்க்கதுவாய் எதுகை' ஆகும்.

(எ.கா) "சீரினும் சீரல்ல செய்யாரே சீரோடு
பேராண்மை வேண்டு பவர்" (கு.எண்.962)

முற்றெதுகை

ஓரடியில் நான்கு சீர்களிலும் எதுகை வரத் தொடுப்பது 'முற்றெதுகை' ஆகும்.

(எ.கா) "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" (கு.எண்.12)

முரண்தொடை

அடிகளிலோ சீர்களிலோ சொல்லோ பொருளோ முரண்பட்டு அமைவது 'முரண்தொடை' என்பதை,

"மொழியினும் பொருளினும் முரணுதன் முரணே"(36)

என்கிறார் தொல்காப்பியர்.

அடிமுரண்

அடிதோறும் முதற்சொல் முரண்படத் தொடுப்பது 'அடிமுரண்' ஆகும்.

(எ.கா) "புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை

அகத்துறுப்பு அன்பி லவர்க்கு" (கு.எண்.79)

இணை முரண்

ஓரடியில் முதல் இரண்டு சீர்களில் முரண் வரத் தொடுப்பது 'இணை முரண்' ஆகும்.

(எ.கா) "பொய்மையும் வாய்மை யிடத்து புரை தீர்ந்த

நன்மை பயக்கு மெனின்"(கு.எண்.292)

பொழிப்பு முரண்

ஓரடியில் முதற்சீரிலும், மூன்றாம் சீரிலும் முரண் அமையத் தொடுப்பது 'பொழிப்பு முரண்' ஆகும்.

(எ.கா) "செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு" (கு.எண்.86)

ஒரூஉ முரண்

ஓரடியில் முதற்சீரிலும் நான்காம் சீரிலும் முரண் அமையத் தொடுப்பது 'ஒரூஉ முரண்' ஆகும்.

(எ.கா) "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை

வாய்மையாற் காணப் படும்" (கு.எண்.298)

இரட்டைத் தொடை

ஓரடி முழுவதும் ஒரே சொல்லே வரத் தொடுப்பது 'இரட்டைத் தொடை' என்பதை,

"அடிமுழுவதும் வந்தமொழியே வருவ திரட்டை" என்ற காரிகை வாயிலாக அறிய முடிகிறது.

(எ.கா) "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை" (கு.எண்.411)

இக்குறளில் 'செல்வம்' என்ற ஒரே சொல் ஓரடி முழுவதும் வந்துள்ளமையால் இது 'இரட்டைத்தொடை' ஆயிற்று.

செந்தொடை

தொடையின் உறுப்புகள் எவையும் பயின்று வராமல் வேறுபடத் தொடுப்பது 'செந்தொடை' ஆகும்.

(எ.கா) "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட புண்" (கு.எண்.298)

இக்குறளில் தொடை உறுப்புகள் எவையும் பயின்று வரவில்லை.

அளபெடையும் வகைகளும்

அடியிலோ அல்லது சீரிலோ உயிரெத்தானும், ஒற்றெழுத்தானும் அளபெடுத்து வரத் தொடுப்பது 'அளபெடைத்தொடை' ஆகும் என்பதை,

"மொழிக்கண் அழியாது அளபெடுத்து ஒனறுதாகும்

அளபெடையே"[37]

என்ற காரிகை வாயிலாக அறியலாம்.

மேற்கூறிய அளபெடை இரண்டு வகைப்படும். அவையாவன:

1. உயிரளபெடை

2. ஒற்றளபெடை

என்பனவாகும்.

உயிரளபெடையும் வகைகளும்

செய்யுளில் ஓசை குறையும் பொழுது அவ்வோசையை நிறைவு செய்யும் பொருட்டு உயிரெழுத்துக்களிலுள்ள நெட்டெழுத்துக்கள் ஏழும் மொழி முதல், இடை, கடை ஆகிய மூன்றிடங்களிலும் தம் மாத்திரையிலிருந்து அளவு கடந்து ஒலிப்பதற்கு 'உயிரளபெடை' என்று பெயர். இவை அளபெடுத்தமையை அறிய அந்நெட்டெழுத்துக்களினுடைய குறில் எழுத்துக்களே அதனருகில் வரிவடிவில் அமைந்திருப்பதைக் காணலாம்.

"ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்" (கு.எண்.653)

-மொழி முதலில் அளபெடுத்தன.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (கு.எண்.55)

-மொழி இடையில் அளபெடுத்தன.

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழி பயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்" (கு.எண்.461)

-மொழியின் கடையில் அளபெடுத்தன.

உயிரளபெடையின் வகைகள்

உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை,

i. இன்னிசை அளபெடை

ii. இசைநிறை அல்லது செய்யுளிசை அளபெடை

iii. சொல்லிசை அளபெடை

எனப்படும்.

இன்னிசை அளபெடை

செய்யுளில் சீரும், தளையும் சிதைவுறாதபோதும் இனிமையான ஓசைக்காக நெட்டெழுத்துக்கள் அளவு கடந்து ஒலிப்பது 'இன்னிசை அளபெடை' ஆகும்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை" (கு.எண்.15)

இக்குறளில் 'கெடுப்பதூஉம்' 'எடுப்பதூஉம்' என்ற சொற்கள் இனிய ஓசைக்காக மட்டுமே அளபெடுத்துள்ளன.

இசைநிறை அல்லது செய்யுளிசை அளபெடை

செய்யுளில் சீரும், தளையும் சிதைவுற்ற பொழுது அவற்றை நிறைவு செய்யும் பொருட்டு அளபெடுப்பது 'இசைநிறை அளபெடை'யாகும்.

"அனிச்சப்பூ கால்களையாள் பெய்த நுசுப்பிற்கு

நல்ல படாஅ பறை" (கு.எண்.1115)

இக்குறளில் வெண்பாவின் ஈற்றயல் சீர் ஓரசையில் முடிந்தால் தளை தட்டும். அவற்றை நிறைவு செய்ய ஓரசை ஈரசையாக மாறி அளபெடுத்துள்ளது.

சொல்லிசை அளபெடை

செய்யுளில் அளபெடுப்பதன் மூலம் சொல்லின் பொருள் மாறுமானால் அது 'சொல்லிசை அளபெடை'யாகும்.

"உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்" (கு.எண்.1263)

இக்குறளில் 'நசை' என்னும் சொல் விருப்பம் என்னும் பொருளில் பெயர்ச்சொல்லாக வருகிறது. ஆனால் 'நசைஇ' என அளபெடுக்கும் போது 'விரும்பி' என வினைச் சொல்லாக மாறிப் பொருள் தருகிறது. இவ்வாறு அளபெடுப்பதால் ஒரு சொல்லின் நிலை மாறுவதால் சொல்லிசை அளபெடை ஆயிற்று.

ஒற்றளபெடையில் திருக்குறளில் பயின்று வராமையினால் அவை இவ்வாய்வில் தவிர்க்கப்பட்டுள்ளன.

பாவகைகள்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடிகளால் யாக்கப்பட்டு வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலிய பெயர்கள் பெற்று வருவது பாவாகும். இதனை,

"வெண்பா அகவல் கலிப்பா அளவடி வஞ்சியென்னும்

ஒண்பா அடிகுறள் சிந்தென்று உரைப்ப ஒலிமுறையே"[38]

என்ற காரிகை வாயிலாக அறியலாம். இப்பாவானது,

i. வெண்பா

ii. ஆசிரியப்பா

iii. கலிப்பா

iv. வஞ்சிப்பா

v. மருட்பா

vi. நூற்பா

என ஆறு வகையாகப் பகுக்கப்படுகிறது. இவற்றில் முன்னைய நான்கும் சிறப்புடையதாகும்.

மேற்கூறிய ஆறுவகைப்பாவினுள் வெண்பா மட்டுமே திருக்குறளில் பயின்று வருகின்ற காரணத்தால் அவை மட்டுமே இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வெண்பாவின் பொதுவான இலக்கணம்

i. குறைந்தது இரண்டு அடிகள் பெற்று வரும். அதிகமாகப் பன்னிரண்டு அடிகளுக்குள் அமையும்.

ii. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் அமையும்.

iii. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்பாட்டினுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடியும்.

iv. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய தளைகளைப் பெற்று வரும்.

v. தொடை வகைகள் பெற்று அமையும்

vi. செப்பலோசை பெற்று வரும்

செப்பலோசை வகைகள்

ஒருவர் மற்றவர்க்கு, அவர் கேட்கும் பொருளை எடுத்துச் செப்புவது போன்று அமைவதால் இது 'செப்பலோசை' எனப் பெயர் பெற்றது எனலாம். மேற்கூறிய செப்பலோசை மூன்று வகையாகப் பகுக்கப்படுகிறது.

i. ஏந்திசைச் செப்பலோசை

ii. தூங்கிசைச் செப்பலோசை

iii. ஒழுகிசைச் செப்பலோசை

எனப்படும்.

ஏந்திசைச் செப்பலோசை

இறுதிச் சீர் தவிர, பிற சீர்கள் காய்ச்சீர்களாக அமைவது 'ஏந்திசைச் செப்பலோசை' யாகும்.

(எ.கா) "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (கு.எண்.397)

இக்குறளில் இறுதிச் சீர் தவிர, மற்றைய சீர்கள் அனைத்தும் காய்ச்சீராக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

தூங்கிசைச் செப்பலோசை

இறுதிச் சீர் தவிர, பிற சீர்கள் இயற்சீர் வெண்டளையாக அமைவது 'தூங்கிசைச் செப்பலோசை' யாகும்.

(எ.கா) "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

வாலெயிற் றூறிய நீர்" (கு.எண்.1121)

இக்குறளில் இறுதிச்சீர் தவிர, ஏனைய சீர்கள் அனைத்தும் இயற்சீர் வெண்டளை பெற்று வருவதைக் காணமுடிகிறது.

ஒழுகிசைச் செப்பலோசை

இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் கலந்து வருவது 'ஒழுகிசைச் செப்பலோசை' யாகும்.

(எ.கா) "காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்

மடலல்லது இல்லை வலி" (கு.எண்.1131)

இக்குறளில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் கலந்து வருவதைக் காணமுடிகிறது.

வெண்பாவின் வகைகள்

அறக்கருத்துக்களைச் செப்புவதற்குப் பெரும்பான்மையாகப் பயன்படுவதால் பாக்களிலே தூய்மையன பாவாக 'வெண்பா' சிறப்புப் பெறுகிறது.

மேற்கூறிய சிறப்புடைய வெண்பாவானது ஐந்து வகையாகப் பகுக்கப்படுகிறது. அவை,

i. குறள் வெண்பா

ii. சிந்தியல் வெண்பா

iii. நேரிசை வெண்பா

iv. இன்னிசை வெண்பா

v. பஃறொடை வெண்பா

ஆகியவைகளாகும். இதனை,

"ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண்டு ஆயிடைக்கட்

சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசை குன்றாது

ஓரிரண் டாயும் ஒருவிகற் பாயும் வருவதுண்டேல்

நேரிசை யாடு நெறிசுரி பூங்குழல் நேரிழையே"(39)

என்ற காரிகை வாயிலாக அறியலாம்.

வெண்பாவின் வகைகளும் திருக்குறளில், 'குறள் வெண்பா' மட்டுமே பயின்று வருவதால் அவை மட்டும் இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

குறள் வெண்பா

வெண்பாவிற்குரிய பொதுவான இலக்கணமெல்லாம் பெற்று இரண்டடிகளில் ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வருவது 'குறள் வெண்பா' என்பதை,

"ஈரடி இயைந்தது குறள்வெண் பாவே"(40)

என்ற வரி மூலம் விளக்கப்பெறுகிறது.

அடிதோறும் எதுகைத் தொடை பெற்று வருவது 'ஒரு விகற்பம்' என்றும் பெறாமல் வருவது 'இரு விகற்பம்' என்றும் அழைக்கப்படுகிறது.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து

இல்லாளின் ஊடி விடும்" (கு.எண்.1039)

இக்குறளில் இரண்டடிகளிலும் அடிஎதுகைத் தொடை பெற்று வந்துளளமையால் இது 'ஒரு விகற்பக்குறள் வெண்பா'வாகும்.

(எ.கா) "நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்

யாருள்ளி நோக்கினீர் என்று" (கு.எண்.1320)

இக்குறளில் இரண்டடிகளிலும் அடிஎதுகைத் தொடை பெறாமல் வந்துள்ளமையால் இது 'இரு விகற்பக்குறள் வெண்பா'வாகும்.

தொகுப்புரை

1. திருக்குறளில் பரிமேலழகர், ஏனைய இலக்கணக் கூறுகளைச் சுட்டியது போன்று ஓரிடத்தில்கூட யாப்பிலக்கணக் கூறுகளைச் சுட்டவில்லை எனலாம்.

2. திருக்குறளில் அமைந்துள்ள யாப்பிலக்கணக் கூறுகள் கற்றவர்கள் யாவருக்கும் தெளிவாகின்ற காரணத்தினால் பரிமேலழகர் சுட்டவில்லை எனத் தெரிகிறது.

3. தமிழிலுள்ள எழுத்துக்கள் யாப்பில் குறில், நெடில், ஒற்று என மூன்றாகப் பகுக்கப்பட்டு அசைக்கு உறுப்பாவதை அறிய முடிகிறது.

4. செய்யுள் உறுப்புகள் அனைத்தும் திருக்குறளில் எவ்வாறு பயின்று வருகின்றன என்பதைத் தக்க சான்றுகளுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

5. சீர், தளை, அடி, தொடை முதலிய செய்யுள் உறுப்புகளில் திருக்குறளில் பயின்று வந்துள்ளவை மட்டும் ஆய்வில் விளக்கம் பெறுகிறது.

6. பாவகைகளில் குறள் வெண்பா மட்டும் திருக்குறளில் பயின்று வருவதால் அவை மட்டும் தக்க சான்றுகளுடன் விளக்கம் பெறுகின்றன.

7. யாப்பிலக்கணக் கூறுகள் அனைத்தும் யாப்பருங்கலக் காரிகையினை அடியொற்றி விளக்கம் பெறுகிறது.

குறிப்புகள்

1. யாப்பருங்கலக் காரிகை, தற்சிறப்பாயிரம், 1, அடி 1-2.
2. நற்றமிழ் இலக்கணம், ப.46.
3. நன்னூல், எழுத்தியல், நூ.3.
4. தொல்காப்பியம், நூன்மரபு, நூ.1.
5. நன்னூல், எழுத்தியல், நூ.4.
6. தொல்காப்பியம், நூன்மரபு, நூ.1.
7. நன்னூல், எழுத்தியல், நூ.5.
8. தொல்காப்பியம், செய்யுளியல், நூ.8.
9. யாப்பருங்கலம், சூத்திரம் 6.
10. மேலது, சூத்திரம் 8.
11. யாப்பருங்கலக்காரிகை, உறுப்பியல், காரிகை 7.
12. நற்றமிழ் இலக்கணம், ப.51.
13. மேலது, ப.52.
14. யாப்பருங்கலம், சூத்திரம் 11.
15. யாப்பருங்கலக்காரிகை, உறுப்பியல், காரிகை 7.
16. மேலது, காரிகை 6.
17. தொல்காப்பியம், செய்யுளியல், நூ.81.
18. யாப்பருங்கலம், சூத்திரம் 12.
19. யாப்பருங்கலக்காரிகை, உறுப்பியல், காரிகை 7.
20. மேலது, காரிகை 6.
21. மேலது, காரிகை 10.

22. நற்றமிழ் இலக்கணம், ப.55.

23. யாப்பருங்கலம், சூத்திரம் 2.

24. யாப்பருங்கலக்காரிகை, உறுப்பியல், காரிகை 12.

25. மேலது, காரிகை 12.

26. மேலது, காரிகை 12.

27. மேலது, ப.61.

28. யாப்பருங்கலம், சூத்திரம் 42.

29. மேலது, சூத்திரம் 43.

30. மேலது, சூத்திரம் 44.

31. மேலது, சூத்திரம் 45.

32. மேலது, சூத்திரம் 46.

33. மேலது, சூத்திரம் 47.

34. மேலது, சூத்திரம் 48.

35. யாப்பருங்கலக்காரிகை, ப.61.

36. தொல்காப்பியம், செய்யுளியல், நூ.95.

37. யாப்பருங்கலக்காரிகை, உறுப்பியல், காரிகை 16.

38. யாப்பருங்கலக்காரிகை, செய்யுளியல், காரிகை 22.

39. மேலது, காரிகை 25.

40. யாப்பருங்கலக்காரிகை, ப.80.

இயல் - 5

அணி இலக்கணக் கூறுகள்

இயல் - 5

திருக்குறள் பரிமேலழகர் உரையில் அணியிலக்கணக் கூறுகள்

முன்னுரை

ஒவ்வொரு மொழியிலும் இலக்கியத்தை அழகு பெறச் செய்வது அணி எனக் கருதப்படுகிறது. ஒரு பெண்ணை ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கும் பொழுது அவளது இயற்கையழகு சற்று பொலிவு பெறுவது போல செய்யுளில் பயனுடைய நல்ல கருத்துக்களை விளக்க அணிகளைப் பயன்படுத்தும் போது அவை பொலிவு பெறுகின்றன. இத்தகைய சிறப்புடைய அணிகள் மொழி வளர்ச்சியோடு காலப்போக்கில் ஒன்றுபட்டு பல்வேறு வடிவங்களோடு வளம் பெற்றுள்ளமையை அறியமுடிகிறது.

அணியின் தோற்றம்

கற்பனை என்பது புனைந்துரைத்தலையே குறிக்கும். இக்கற்பனை செய்யுளுக்கு உயிர்நாடியாக விளங்குகிறது. இவற்றைப் படைப்பதற்கு அணிகள் மிகவும் வேண்டப்படக்கூடிய ஒன்றாகும். தொல்காப்பியர் செய்யுளியலுக்கு முன்னர் மெய்ப்பாட்டியலையும், உவமவியலையும் வைத்துள்ள முறைமையை நோக்கும்போது செய்யுளுக்கு அணிகள் மிகமிக வேண்டப்படக்கூடிய ஒன்றாகும் என்பது புலனாகிறது.

அணி என்னும் சொல் அழகு, வனப்பு, ஒப்பனை, ஆபரணம், பெருமை, இனிமை, வரிசை முதலான பல பொருள்களையுடையது.

"படையின துறுப்பு மொப்பனையு மழகும்

பெருமையுங் கலனு மன்பு மணியெனல்"[1]

என்று பிங்கல நிகண்டும்,

"அணிபெருமை யொழுங் கழகா பரண முனை யெல்லை

யலங்கார மாலையச்சி அணிபடை வகுப்பின்"[2]

என்று நாநாத்த தீபிகையும் அணிக்கு பல பொருள் கூறுகின்றன.

"மாடக்குச் சித்திரமும் மாநகர்க்கோபுரமும்

ஆடமைத்தோ ணல்லார்க் கணியும் போல்"[3]

என்று நன்னூலும் அணிநலச்சிறப்பைக் கூறுகின்றது. மேலும் அணியப்படுவது எனவும், அழகைத் தருவது எனவும் இவை பொருள்படுகின்றன. அழகுடைய பொருளை விரும்புவதுபோல கவர்ச்சியும், அழகும, இனிமையும் பொருந்திய செய்யுள்களைக் கற்றோரும அக்காலத்தில் விரும்பியுள்ளமையை அறியமுடிகிறது.

கவிஞர்கள் தங்களுடைய உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் விளக்கிக் கூறுவதற்கு அணிகள் உறுதுணையாக அமைகின்றன என்பதைப் பாமகர்,

"உலகில் நாம் பேசும் பேச்சு இயல்பாக இருக்கிறது. காப்பியத்திலோ அதே சொல்லும் பொருளும் தனித்த சிறந்த அழகுடன் காணப்படுகின்றன. ஆகையால் அணியென்பது உலக இயற்கையைத தாண்டி, கவிகளால் மொழியில் அழகுபட இயற்றப்படுவது எனலாம்."[4]என்று அணிகளின் பொதுவான இயல்புகளை விளக்குகிறார்.

தமிழில் அணியிலக்கணம்

சிறந்த கருத்துக்கள் மனத்தை விட்டு நீங்காமல் இருப்பதற்குப் பயன்படுகின்ற அணிகளைத் தமிழ் மொழியில் பண்டைத் தமிழ்ப்புலவர்கள் அழகுற அமைத்துள்ளனர். "உவமை அணியைப் பயன்படுத்துவதில் சங்க காலப் புலவர்களுக்கும் பிற்கால புலவர்களுக்கும் பெரிதும் வேற்றுமை காணப்படுகின்றது. சங்கப்புலவர்கள் உவமைகளைப் பெரும்பாலும் எடுத்துக் கொண்ட பொருளை மிகை பாடமல் விளக்குவதற்குப் பயன்படுத்தினர். ஆனால் பிற்கால புலவர்கள் பயன்படுத்திய உவமைகள் வரம்பிகந்து, மிகைபட்டு, வனப்பின்றி அமைந்திருக்கின்றன என்பர்."(5)

தொல்காப்பியமும் முன்னூலும்

"தமிழில் இப்பொழுது நமக்குக் கிடைக்கின்ற முழுமையான, பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூலினைத் தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்றாகப் பகுத்து,"(6) யாப்பினையும், அணியினையும் பொருளதிகாரத்தில் அடக்கியுள்ளார். யாப்பிலக்கணம் செய்யுளியளிலும், அணியிலக்கணம் உவமவியல், மெய்ப்பாட்டியல் ஆகிய பகுதிகளிலும் காணப்படுகிறது. தொல்காப்பியத்திற்கு முன்னரும் அணிகள் பற்றிய செய்திகள் இருந்துள்ளமையைக் கீழ்க்கண்ட நூற்பா மூலம் அறியமுடிகிறது.

"சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப"[7]

"பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழிமருங்கு அறியத்தோன்றும் என்ப"[8]

அணியிலக்கணம் கூறும் தனிநூல்கள்

தொல்காப்பியர் காலத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று வகையாக இருந்த பாகுபாடு பின்னர் நால்வகையாயிற்று என இறையனார் களவியல் உரை மூலம் அறியமுடிகிறது. இவ்வுரையில்,

"அரசன் இனி நாடு நாடாயிற்றாகளின் நூல் வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப்பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும், யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்கு தலைப்பட்டிலேம் என வந்தார். வர, புடைப்பகவன்று, என்னை? எழுத்தும், சொல்லும், யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றோ? பொருளதிகாரம் பெறேமே யெனின், இவை பெற்றும் பெற்றிலம் எனச்சொல்லா நிற்க"[9] என்று வருவதால் அக்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு என நால்வகை இலக்கணம் இருந்துள்ளமையை உணரமுடிகிறது. "அஃதாவது தொல்காப்பியர் காலத்தில் பொருளதிகாரத்தில் அடங்கிய யாப்பு, கடைச்சங்க காலத்தில் அதனின்றும் பிரிந்து ஓரதிகாரமாயிற்று என்பதாம்."[10]

இதற்குப்பிறகுதான் அணியிலக்கணம் கூறும் நூல்கள் தனியாக எழுந்துள்ளன. அணிகளை மட்டும் தனிபடக் கூறும் நூல்கள் தண்டியலங்காரம், மாறனலங்காரம்ஆகியவையாகும். "சேனாவரையர் உரையால் அணியியல் என்ற வேறொரு நூல் இருந்தமை தெரிகிறது. ஆனால் அடியார்க்கு நல்லாரின் மேற்கோளின்படி தண்டியலங்காரமே அணியியல் என்று வழங்கப்பட்டதோ எனக் கருத வேண்டி இருக்கிறது."(11)

அணிகளின் வளர்ச்சி நிலை

"தொல்காப்பியர் அணிகளைப் பல வகைகளாகப் பாகுபாடு செய்யாது அணிகளுக்கு அடிப்படையாக உள்ள உவமை ஒன்றினை மட்டுமே விளக்கினார். ஆனால் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த "திவாகரம்" 28 அணிகளையும், 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தண்டியலங்காரம் முப்பத்தைந்து அணிகளையும், 16-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மாறனலங்காரம் அறுபத்தி நான்கு அணிகளையும், பிற்காலத்தில் தோன்றிய சந்திரலோகம் நூறு அணிகளையும், விசாகப் பெருமாலையர் இயற்றிய அணியிலக்கணம் நூற்றிரண்டு அணிகளையும், குவாலயானந்தம் நூற்றிருபது அணிகளையும் கூறுகின்றன."(12)

வடமொழியில் அணிகளுக்கு அலங்காரம் என்ற வேறொரு பெயரும் உண்டு. பரிமேலழகர் தம் உரையில் அலங்காரம் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்துகிறார். மேலும் தம்முடைய உரையில் பல்வேறு அலங்காரங்களைக் கூறியுள்ள போதிலும்

வெளிப்படையாகத் தெரிந்தவற்றைச் சுட்டவில்லை எனலாம். பரிமேலகரால் சுட்டப்பெறாத, ஆய்வில் தெரிந்த ஒரு சில அணிகளும் இவ்வியலில் விளக்கம் பெறுகின்றன.

இவ்வியல் முழுமையும் தண்டியலங்காரம் என்னும் நூலை மையமாகக் கொண்டு ஆய்வில் விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் காவ்யதர்சம் என்ற வடநூலின் மொழிபெயர்பாகும். தேவை கருதி மாறனலங்காரம், முத்துவீரியம், இலக்கண விளக்கம் போன்ற நூல்களும், அணிகள் பற்றிய பிற இலக்கண நூல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும், திறனாய்வாளர்களின் கருத்துக்களும் ஆய்வில் எடுத்தாளப்படுகின்றன.

"திருவள்ளுவர் ஏறக்குறைய 350க்கும் மேற்பட்ட குறட்பாக்களில் அணிநயம் விளங்கப்பாடியுள்ளார்"(13) ஆனால் பரிமேலழகராலும் சில இடங்களில் ஆய்விலும் அறியப்பட்ட கீழ்க்கண்ட அணிகள் மட்டுமே சுட்டப்பெறுகின்றன.

1. உவமையணி

1. தொழில் உவமம்

2. பண்பு உவமம்

3. ஐய நிலை உவமம் (அல்லது) ஐயவணி

4. எடுத்துக்காட்டு உவமை

5. இல்பொருள் உவமை

2. உருவக அணி

1. ஏகதேச உருவகம்

2. அவயவ உருவகம்

3. குறிப்பு உருவகம்

3. பின்வருவநிலையணி

1. சொற்பின்வருநிலை

2. பொருள் பின்வருநிலை

3. சொற்பொருட் பின்வருநிலை

4. நிரல் நிரையணி

1. நேர்நிரல் நிரையணி

2. மயக்க நிரல் நிரை (அல்லது) எதிர்நிரல் நிரையணி

3. பிறிது மொழிதலணி (அல்லது) ஒட்டணி

4. வேற்றுமையணி

5. காட்சியணி

6. ஏதுவணி

7. தற்குறிப்பேற்ற அணி

8. உயர்வு நவிற்சியணி

9. வஞ்சப்புகழ்ச்சியணி

10. வேற்றுப்பொருள் வைப்பணி

11. தீவக அணி

1. முதனிலைத் தீவகம்

2. இடைநிலைத் தீவகம்

3. கடைநிலைத் தீவகம்

உவமையணி

ஓர் உவமையின் மூலம் கவிஞர் தான் சொல்ல வந்த கருத்தை ஒப்பிட்டு நோக்குவது உவமையணி எனலாம். காணுகின்ற எல்லாப் பொருள்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற இயல்பு எல்லா மக்களிடையே இயற்கையாகவே அமைந்துள்ளது. இங்ஙனம் ஒப்பிட்டுப் பார்க்கும் இவ்வியல்பு எல்லா மக்களிடத்தும் இயல்பாக அமைந்துள்ள தெனினும் கவிஞர்களிடையே இவை சிறந்து காணப்படும். கவிஞனின் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளைச் சிதைவின்றி உலகிற்கு உணர்த்த உதவுவன இவ்வுவமைகளே ஆகும். இவை கருத்தை விளக்கப் பயன்படுவதோடு, அறிந்த ஒரு பொருளைக் கொண்டு அறியாத பொருளைப் பிறருக்கு அறிவுறுத்தும் ஊன்றுகோலாகவும் விளங்குகின்றன.

ஒப்புமைப்படுத்திக் கூறலே உவமை என்பதை உணர்ந்த வள்ளுவர் இறைவனை ஒப்பிட்டு நோக்கும் போது,

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு"(14)

என இறைவனை ஒப்புமை இல்லாதவன் என்கிறார்.

"உவயமாவது ஒப்புமை அளவை
கவய மாவாப் போலுமெனக் கருதுதல்"(15)

என்று மணிமேகலையும் உவமை என்பது ஒப்புமை அளவை என்கிறது.

ஒப்புமையின் வகைகள்

ஒப்புமை முழுதும் ஒத்தல், ஒருபுடை ஒத்தல் என இரண்டு வகைப்படும். முழுதும் ஒத்தற்கு உவமை தேவையில்லை. ஒரு புடை ஒத்தற்கே தேவைப்படும் என்பர். இவ்வுவமைகள் பற்றி தொல்காப்பியர் உவமவியல் என்னும் பகுதியில் தெளிவுறக் கூறுகிறார். ஒரு பொருளைப் பிறிதோர் பொருளோடு உவமைப்படுத்தும் போது வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கின் காரணமாகவே நிகழும் என்பதை,

"வினை பயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்"(16)

என்கிறார் தொல்காப்பியர்.

இந்நான்கு உவமங்களும் சிறப்பு, நலன், காதல், வலி என்னும் நான்கையும் நிலைக்களனாகக் கொண்டு பிறக்கும் என்பதை,

"சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப"(17)

என்கிறது தொல்காப்பியம்.

இந்நான்கேயன்றித் தாழ்ந்த பொருளோடும் உவமை பொருந்துமிடத்து உவமிக்கப்படும் என்பதை,

"கிழக்கிடு பொருளோடு ஐந்துமாகும்"(18)

என்கிறது தொல்காப்பிய நூற்பா.

பொருளை விட உவமைகளை உயர்வாக கூறல்

கவிஞன் தான் சொல்லவந்த உவமை, பொருளைவிட

உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பார் தொல்காப்பியர். அதனால்தான்,

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை"(19)

என்கிறார். உவமையும் பொருளும் பெரிதும் ஒத்திருத்தல் வேண்டும் என்றும் கூறுவர். இதனை விளக்க வந்த உரையாசிரியர்கள் மயில் தோகை போலும் கூந்தல் என்று கூறுவதன்றிக் காக்கைச் சிறகன்ன கருமயிர் என்று சொல்லுதல் கூடாது என்பர்.

உவமையின் உறுப்புக்கள்

உவமானம், உவமேயம், உவமஉருபு, பொதுப்பண்பு ஆகிய நான்கும் உவமையின் உறுப்புகள் ஆகும். சொல்ல எடுத்துக் கொண்ட பொருளைப் பொருள் என்றும் அதற்கு ஒப்புமையாக எடுத்துக் கொண்ட பிறிதோர் பொருளை உவமை என்றும் கூறும் தொல்காப்பியம். ஆனால் இவ்விரண்டினையும் முறையே வடநூலார் உவமேயம் உவமானம் என்பர். பொருளின் சிறப்புத் தன்மையை பொதுப்பண்பு என்பர். உவமையினையும், பொருளினையும் பொருத்துவதற்கு இடையில் பயன்படும் சொற்கள் உருபுகள் ஆகும்.

(எ.கா) "பால் போன்ற இனிமையான சொல்"

உவமானம்	-	பால்
உவமேயம்	-	சொல்
பொதுப்பண்பு	-	இனிமை
உருபு	-	போன்ற

ஆனால் தண்டியாசிரியர் ஒரு பொருளை மற்றொரு பொருள் குணத்தால் (பண்பு), தொழிலால், பயனால் ஒத்திருப்பதாக வர்ணிப்பது உவமையணி ஆகும் என்கிறார்.

"பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்

ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்த்

தொப்புமை தோன்றச் செப்புவ துவமை"[20]

உவமைகளை "மனத்தால் அறிவன, ஐம்புலன்களால் அறிவன எனவும் பாகுபடுத்தலாம்"[21] என்பார் தமிழண்ணல்.

"ஏனைய அணிகள் எல்லாம் அழிந்து இவ்வொன்று மட்டும் எஞ்சி நின்றாலும் கவிதை சிறப்போடு விளங்கும்"[22] என்கிறார் அ.ச.ஞானசம்பந்தன்.

இலக்கியத்தை அழகுபடுத்தும் அணிகளுள் முதன்மையாக விளங்குவது உவமையணி எனலாம். திருக்குறளில் பல இடங்களில் உவமையணி பயின்று வருகிறது. பரிமேலழகர் இவற்றைத் தனித்துச் சுட்டாமல் இவற்றின் வகைகளையே பெரும்பாலான இடங்களில் சுட்டுகிறார். சான்றாக,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை

இகழ்வாரைப் பொறுத்தல் தலை" (கு.எண்:151)

இப்பாடலில் வள்ளுவர், தம்மை இகழ்ந்து பேசுபவர்களைப் பொறுத்துக் கொளல் வேண்டும் (உவமேயம்) என்பதற்காக தன்னை துன்புறுத்தித் தோண்டுபவர்களை வீழாமல் காக்கும் நிலம் என்ற உவமானத்தைக் கையாளுகிறார். இவை இரண்டையும் இணைக்கப்

போல என்ற உவம உருபு வெளிப்படையாக வருவதன் மூலம் இவை உவமை அணியாகக் கருதப்படுகிறது.

தொழில் உவமம்

தொழில் பற்றி வரும் உவமைகளைத் தொழில் உவமம் எனலாம். இதனைத் தொல்காப்பியம் வினை உவமம் எனச்சுட்டுகிறது. ஒவ்வொரு உவமத்திற்கும் இன்னன்ன உருபுகள் வரும் என்பதும் கூறப்படுகிறது. அந்த வகையில் தொழில் உவமத்திற்கு

"அன்ன, ஆங்க, மான, விறப்ப,
என்ன, உறழ, தகைய, நோக்கோடு,
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்"(23)

மேற்கண்ட எட்டும் வரும் என்கிறது தொல்காப்பியம்.

இவ்வெட்டு மட்டுமன்றி பேராசிரியர் தம் உரையில் சிறுவரவின என்று குறிப்பிட்டுக் கடுப்ப, கெழுவ, ஒப்ப, போல, எய்ப்ப என மேலும் சிலவற்றைக் குறிப்பிடுகிறார்.

திருக்குறளில் பரிமேலழகர் தொழில் உவமமாகச் சுட்டும் இடங்கள் எட்டு ஆகும்.

"தவமறைந் தல்லவை செய்தல் புதன் மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" (கு.எண்:274)

தவவேடத்தில் மறைந்து தவறான செயல்களைச் செய்வது,

வேடன் புதரில் மறைந்து இலை தழைகளை அணிந்து கொண்டு பறவைகளைப் போலவே ஒலி எழுப்பி ஏமாற்றிப் பிடிப்பதற்கு சமமானது என்பது குறளின் கருத்து. இங்குத் தவ வேடத்தில் மறைந்து தவறு செய்கின்றவரரின் செயலுக்கு வேடன் மறைந்திருந்து பறவைகளைப் பிடிக்கின்ற தொழில், உவமமாகக் கூறப்பட்டுள்ளமையால் இது தொழில் உவமம் ஆயிற்று.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து" (கு.எண்:490)

கொக்கு இரை கிடைக்கும் வரை காத்து நிற்கும் கிடைத்தவுடன் விரைந்து சென்று கொத்து. இவ்வாறே அரசனும் வினைசெய்யும் காலம் அறிந்து வினையினைச் செய்தல் வேண்டும். இதனைத் தொழில் உவமமாகக் கூறி கீழ்க்கண்ட காரணத்தைக் கூறுகிறார் பரிமேலழகர்.

"மீன் கோடற்கு இருக்கும் வழி அது வந்து எய்தும் துணையும் முன் அறிந்து தப்பாமற் பொருட்டு உயிர் இல்லது போன்று இருக்கும் ஆகலானும், எய்திய வழிப் பின் தப்புவதற்கு முன்பே விரைந்து குத்தும் ஆகலானும் இருப்பிற்கும் செயலுக்கும் கொக்கு உவமையாயிற்று. கொக்கொக்க, குத்தொக்க என்றாராயினும் அது குத்துமாறு போலக் குத்துக என்றும் உரைக்கப்படும்"

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகழ்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்" (கு.எண்:691)

இக்குறட்பாவில் குளிர்க்குத் தீக்காய்தல் என்னும் தொழில் அரசனோடு சேர்ந்திருப்பவர்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளதால் இது தொழில் உவமமாயிற்று. இதனையே பரிமேலழகர் "மிக அகலின் பயன்கொடாது மிக அணுகின் அவமதி பற்றித்தெறும் வேந்தர்க்கு, மிக அகலின் குளிர் நீக்காது மிக அணுகின் சுடுவதாய தீயோடு உளதாய தொழிலுவமம் பெறப்பட்டது"

இவை தவிர மேலும் "சில குறட்பாக்களில்[24] பரிமேலழகர் தொழில் உவமத்தைச் சுட்டுகிறார்.

பண்பு உவமம்

பண்பு என்பது வண்ணம், வடிவம், சுவை, அளவு ஆகியவற்றைக் குறிக்கும் என்பதைத் தொல்காப்பியம்,

"வண்ணத்தின் வடிவிற் அளவிற் சுவையென
அன்ன பிறவும் அதன் குணம் நுதலி
இன்ன இதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே"[25]

என்கிறது. ஆகவே மேற்கண்ட நான்கு பண்புகளுள் ஏதாவது ஒன்றை உவமமாக பயன்படுத்துவது பண்பு உவமை ஆகும்.

"புறங்குன்றி கண்டனையரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து" (கு.எண்:277)

இக்குறட்பாவில் தவவேடமுடையவர்களின் புறத்தோற்றத்தை குன்றிமணியின் சிவப்பைப் போலவும் அகத்தோற்றத்தைக் குன்றிமணியின் கருப்பைப்போலவும் உவமைப்படுத்துகிறார்.

"உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது

மிக்கற்றால் நீள விடல்" (கு.எண்:1302)

பரிமேலழகர், "உப்பு மிக்க வழித்துய்ப்பது சுவையின்றானாற் போலப் புலவி மிக்க வழிக் கலவி இன்ப மின்றாம் என்றமையின்"இது பண்பு உவமை என்கிறார்.

இங்கு உப்பின் சுவை ஊடலுக்கு உவமையாகச் சொல்லப்பட்டுள்ளதால் பண்புவமை எனலாம்.

ஐயநிலை உவமம்

உவமானத்தையும், உவமேயத்தையும் ஐயமுற்று உரைப்பதனை ஐயநிலையுவமம் என்பர். தண்டியலங்காரம் இதனை உவமையணியின் வகைகளில் ஒன்றாகவே குறிப்பிடுகின்றது. மாறனலங்காரம் இதனைச் சந்தய வலங்காரம் என்கிறது.

"உற்றதோர் பொருளினை யையுற் றுணர்தல்

கற்றவர் சந்தய மெனக் கழறினாரே"(26)

என்பது மாறனலங்கார நூற்பா. புலனுகர் பொறிகளினாலோ கருத்தினாலோ ஒரு பொருளினை ஐயமுறுதலும் தெளிதலும் இவ்வணியாம். பரிமேலழகர் ஓர் இடத்தில் மட்டும் இவ்வணியைக் குறிப்பிடுகிறார்.

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்

நோக்கம் இம்மூன்றும் உடைத்து" (கு.எண்:1085)

பெண்ணின் பார்வை வருத்துவதால் எமனோ? பார்ப்பதால் கண்ணோ? படபடப்பதால் மானோ? என ஐயமுறுவதாலும் மூன்றுமே தொழில் பற்றி வருவதாலும் இது தொழில் பற்றி வருவதாலும் இது தொழில் பற்றி வந்த ஐயநிலை உவமம் என்கிறார் பரிமேலழகர்.

எடுத்துக்காட்டு உவமையணி

உவமானம் ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் நிற்க அவற்றுக்கிடையில் உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும். தொல்காப்பியர் சுட்டும் 'வேறுபட வந்த உவமத்தோற்றம்' என்பதில் இவ்வணி அடங்கும்.

தண்டியலங்காரம் இதனை 'மறுபொருளுவமை' என்று குறிப்பிடுகின்றது. 'மறுபொருளுவமை' என்பது,

"முன்னர் வைத்த பொருளுக்கு நிகராவதோர்
பொருள் பின்னர் வைப்பது"(27)

ஆகும். "மறுபொருளுவமை எனினும் எடுத்துக்காட்டு உவமை எனினும் ஒக்கும்"(28) என்பர் இலக்கண விளக்க நூலாசிரியர்.

பரிமேலழகருக்கு முன் தோன்றிய இலக்கண நூல்கள் இவ்வாறு கூற, அவருக்குப் பின் தோன்றிய மாறனலங்காரம், இலக்கண விளக்கம், முத்து வீரியம் ஆகிய இலக்கண நூல்களில் 'எடுத்துக்காட்டு உவமை' என்னும் சொல்லாட்சி காணப்பெறுகின்றன. எனவே,

இந்நூல்கள் எடுத்துக்காட்டு உவமையணி என்று பெயரிடுவதற்குப் பரிமேலழகர் இலக்கணக்கூறுகள் அடிப்படையென எண்ணுவதற்கு இடமளிக்கிறது. திருக்குறளில் பரிமேலழகர் ஐந்து இடங்களில் இவ்வணியைச் சுட்டுகிறார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (கு.எண்:01)

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன என்பது உவமானம். மக்களெல்லாம் ஆதி பகவானாகிய இறைவனை முதலாக உடையன என்பது உவமேயம். இவற்றுக்கிடையில் அதுபோல என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளது. இதனால் இது எடுத்துக்காட்டு உவமையணி ஆயிற்று.

அகரம் எழுத்துக்களுக்குத் தலைமை, இறைவன் மக்களுக்குத் தலைமை என்பது தோன்ற நின்றமையால் இதனைத் தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டு உவமை என்கிறார் பரிமேலழகர்.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது" (கு.எண்:481)

தன்னை விட வலிமை மிகுந்த கோட்டானைக் காக்கை பகற்பொழுதில் வென்றுவிடும். இரவில் வெல்லமுடியாது. அதுபோல பகைவனை வெல்லக் கருத்தும் வேந்தனும் எதிரி வலிமையற்று இருக்கும் காலத்துத் தாக்க வேண்டும் என்பது குறளின் கருத்தாகும்.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை - உவமானம்

இகல்வெல்லும் வேந்தார்க்கு வேண்டும் பொழுது - உவமேயம்

இங்கு உவமானம், உவமேயம் ஆகியவற்றுக்கிடையில் அதுபோல என்ற உவமஉருபு மறைந்து வந்துள்ளமையால் பரிமேலழகர் இதனை எடுத்துக்காட்டு உவமையணி என்கிறார்.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு

இனத்தியல்ப தாகும் அறிவு" (கு.எண்:452)

விசும்பின் கண் தன் தன்மைத்தாய் நீர் நிலத்தோடு சேர்ந்தவழி, நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போல, தனிநிலைக் கண் தன் தன்மைத்தாய அறிவு, பிற இனத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியும். இதனான் எடுத்துக்காட்டு உவமை என்கிறார் பரிமேலழகர். அதாவது சேரும் மண்ணின் தன்மைக்கேற்ப தண்ணீரின் சுவையும் நிறமும் மாறும் என்ற உவமானத்திற்கும் சேரும் மக்களின் தன்மைக்கேற்ப மனிதர்களின் அறிவு மாறும் என்ற உவமேயத்திற்கும் இடையில் அதுபோல என்ற உவம உருபு மறைந்து வந்துள்ளமையால் இவ்வணியாயிற்று.

"உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க

அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு" (கு.எண்:798)

உள்ளத்தைச் சிறுமைப்படுத்தும்

எண்ணங்களை எண்ணக்கூடாது - உவமானம்

துன்பம் வரும்போது கைவிடுபவர்களின்

நட்பைக் கொள்ளக் கூடாது - உவமேயம்

இங்கு உவமானம், உவமேயம் ஆகியவற்றுக்கு இடையில் அதுபோல என்ற உவமஉருபு மறைந்துள்ளமையால் எடுத்துக்காட்டு உவமையாகும்.

இல்பொருள் உவமையணி

கவிஞன், உலகில் நடைபெறாத ஒன்றை நடந்ததாக கற்பனை செய்து கூறுவது இல்பொருள் உவமையணி ஆகும்.

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்

புலியின்தோல் போர்த்து மேய்ந் தற்று" (கு.எண்:273)

மனத்தை அடக்கும் வலிமை இல்லாதவன், துறவி வேடம் பூண்டிருப்பது, புலித்தோலைப் போர்த்திக் கொண்டு பசு பயிர் மேய்வதைப் போன்றது என்பது குறளின் கருத்து.

இங்குப் புலித்தோலைப் போர்த்திக் கொண்டு பசுவானது புல் மேய்தல் உலகில் எங்கு நடைபெறாத ஒன்றாகும். இவ்வாறு நடைபெறாத ஒன்றை நடந்ததாகக் கூறுவதால் இதனை இல்பொருள் உவமை என்கிறார் பரிமேலழகர்.

உருவக அணி

உவமையணியோடு மிக நெருங்கிய தொடர்புடையது உருவகம். இது உவமையில் இருந்து தோன்றுவதாம். எனினும் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. ஆனால் தொல்காப்பியர் இவற்றை உவமையின் மறுவடிவாக கருதி,

"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்

மருளறு சிறப்பினஃது உவமமாகும்"(29)

என்கிறார். ஆனால் தண்டியாசிரியர்,

"உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து

ஒன்றென மாட்டின் அஃதுருவகம் ஆகும்"(30)

என்று உருவகத்திற்கு விளக்கம் தருகிறார். இரு பொருளையும் வேறுவேறாகக் கூறால் ஒன்றிலேயே மற்றொன்றைக் காண்பது உருவக அணியாகும் என்பது அவருடைய கருத்து.

அதாவது உவமானம் வேறு, உவமேயம் வேறு என்று கூறாமல் உவமானத்தின் தன்மையை உவமேயத்தின் மீது ஏற்றிக் கூறுதல் ஆகும்.

"கருத்துக்கு நயமும் செவிக்கு இனிமையும் தந்து சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்துவது இந்த உருவகம். கவிதை சிறக்கக் காரணமாவதும் இதுவே. இவ்வுருவகம் உவமைக்குப் பின்னரே தோன்றி இருத்தல் வேண்டும். உவமை நன்கு வழக்கில் பயிலப் பயிலச் சொல்லுவதில் சுருக்கம் தோன்றியிருக்கலாம். இங்ஙனம் கூறிவந்த உவமத்தொகைகள் சுருங்கி இறுதியில் உருவகம் ஆயிற்று"(31) என்பர். மேல்நாட்டர் ரிட்லே என்பவரும் உருவகம், "அடக்கிச் செறித்த உவமையே"(32) என்று கூறுவர்.

உருபின்றிக் கூறும் சொற்களுக்குப் பொருள் ஆழம் இருப்பதைக் கவிஞர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். அதனால்தான், "கருப்புச்சாறு திரண்டு பாகாகிக் கற்கண்டு

நிலையைப் பெறும் பொழுது கற்கண்டு சுவை மிகுந்து காணப்படுவது போலவே உவமையும் சுருங்கி, அடங்கி உருவகமாக வெளிப்படுங்கால் அந்த அடக்கத்தில் புதிய ஆற்றலும் சுவையும் பிறப்பது ஒரு விந்தையே ஆகும்."[(33)] என்கிறார் ந.சுப்பு ரெட்டியார்.

கருத்து விளக்கமும், கவிதைக்கு அழகும் தருகின்ற இத்தகைய உருவகங்கள் பிற்காலத்தில் கவிஞர்களால் நன்கு போற்றப்படவில்லை என்பதை, "பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை தோன்றிய இலக்கியங்கள் உருவகம், உவமை என்ற இரண்டையும் மிகுதியாகப் பயன்படுத்தி வந்துள்ளன. அதன் பின்னர்த் தோன்றிய இலக்கியங்கள் புதிய உவமை, உருவகங்களைத் தோற்றுவிக்காமல் பழையனவற்றையே கடன் கொண்டன"[(34)] என்கிறார் அ.ச.ஞானசம்பந்தன்.

"பிற அணிகளில் காணமுடியாத நடைச்சிறப்பு, தெளிவு, அழகு ஆகியவற்றைக் கொண்டு உருவகம் கவிதையைக் கவினுறச் செய்கிறது. ஆகவே சிறப்பு அடைகளைப் போன்று உருவகங்களும் மிகப்பொருத்தம் உடையனவாக இருக்க வேண்டும்"[(35)] என்று உருவகத்தின் சிறப்புக்களை அரிஸ்டாட்டில் கூறியுள்ளார்.

இத்தகைய சிறப்புடைய உருவகங்கள் திருக்குறளில் பல இடங்களில் பயின்று வந்தாலும் பரிமேலழகர் இவற்றைச் சுட்டாமல் இவற்றின் வகைகளான ஏகதேச உருவகம், அவயவ உருவகம், குறிப்பு உருவகம் ஆகியவற்றைத் தம் உரையில் சுட்டுகிறார்.

ஏகதேச உருவக அணி

கவிஞர் தாம் கூறுகின்ற பொருள் முழுவதையும் உருவகம் செய்யாது, அதன் ஒரு பகுதியை மட்டும் உருவகம் செய்து மற்றொரு பகுதியை உருவகப்படுத்தாது அப்படியே விட்டுவிடுவதை ஏகதேச உருவகம் என்பர் இலக்கண நூலார். "தண்டியலங்கார ஆசிரியர் கூறுகின்ற வியநிலை உருவகம், ஏகாங்க உருவகம், அவயவ உருவகம், அவயவி உருவகம் முதலியன ஏகதேச உருவகத்தில் அடங்கும். எனவே இவற்றை எல்லாம் ஏகதேச உருவகத்தின் வேறு பெயர்களாகக் கொள்ளலாம்"(36) என்கிறார் இ.சுந்தரமூர்த்தி.

தண்டியலங்காரத்தில் ஏகதேச உருவகம் என்னும் சொல்லாட்சி இல்லை. மாறனலங்காரத்தில் உள்ளது எனினும் நூற்பா வடிவில் தெளிவான விளக்கம் முத்து வீரியத்தில் காணப்படுகிறது.

"ஒருபொருள்ம உருவகம் செய்து மற்றொரு பொருள்
உருவகம் செய்யாது உரைத்துப் போதரல்
ஏகதேசப் பொருள் என்மனார் புலவர்"(37)

பரிமேலழகர் பதினாறு இடங்களில் இவ்வணியைச் சுட்டுகிறார். ஆய்வில் சிலவைகள் மட்டும் இங்கு விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது" (கு.எண்:08)

அறக்கடலாகிய இறைவனின் திருவடியைப் பற்றியவர் தவிர

மற்றவர்கள் மற்ற பொருள், இன்பக் கடல்களை நீந்திக் கரை ஏறமுடியாது என்பது குறளின் கருத்து. இங்கு இறைவனை அறக்கடலாக உருவகம் செய்த வள்ளுவர் அவனது திருவடியை புணையாக உருவகம் செய்யாது விட்டுள்ளமையால் இதனை ஏகதேச உருவகம் என்கிறார் பரிமேலழகர்.

"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து" (கு.எண்:24)

இப்பாடலில் அறிவை அங்குசமாக உருவகப்படுத்திய வள்ளுவர் ஐம்புலன்களை யானையாக உருவகப்படுத்தவில்லை. இதனால் இப்பாடலை ஏகதேச உருவகம் என்கிறார் பரிமேலழகர்.

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கோல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்" (கு.எண்:306)

இப்பாடலில் முற்றும் துறந்த ஞான உபதேசிகளை மட்டும் புணை என உருவகப்படுத்தி பிறவியைக் கடலாகவும், மோட்சத்தை கரையாகவும் உருவகப்படுத்தாமல் விட்டுள்ளமையால் இது ஏகதேச உருவகம் ஆயிற்று.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" (கு.எண்:505)

இங்கு தொழிலை உரைகல்லாக (கட்டளைக்கல்) உருவகம் செய்து விட்டு பெருமை, சிறுமை ஆகியவற்றை உருவகம் செய்யாமல் விட்டுள்ளமையால் இது ஏகதேச உருவகமாயிற்று.

"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந்நோய்" (கு.எண்:1147)

இப்பாடலில் ஊரார் தூற்றுகின்ற அலர் மொழிகளை எருவாகவும் அன்னை திட்டுகின்ற சொல்லினை நீராகவும் உருவகம் செய்த வள்ளுவர் காம நோயினை பயிர் என உருவகப்படுத்தவில்லை. எனவே இது ஏகதேச உருவகம் ஆயிற்று.

இவை தவிர இன்னும் சில[38] குறட்பாக்களில் இவ்வணி பயின்று வருகிறது என்பதைப் பரிமேலழகர் உரை வாயிலாக அறியமுடிகிறது.

அவயவ உருவகம்

"அவயவத்தை உருவகஞ்செய்து அவயவியை வாளாகக் கூறுவது அவயவ உருவகம் என்கிறது"[39] தண்டியலங்காரம். அவயவமானது முதற்பொருள். அவயவியாவது அவயவங்களை (உறுப்புக்களை) கொண்டுள்ள முதற்பொருள். அதாவது "முதற்பொருள் உருவகம் பெறாது அதன் அங்கங்கள் மட்டும் உருவகம் பெற்றுவருவது அவயவ உருவகம்"[40] என்கிறார் இ.சுந்தரமூர்த்தி. பரிமேலழகர் இதனை ஓரிடத்தில் மட்டுமே சுட்டுகிறார்.

"இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
மார்தாக்கப் பக்கு விடும்" (கு.எண்:1068)

இரத்தல் என்னும் பாதுகாப்பு இல்லாத மரக்கலம், வைத்துக் கொண்டு இல்லையென்று சொல்லும் பாறை தாக்கினால் உடைந்து போகும் என்பது குறளின் கருத்து. இங்கு வறுமை என்பது அவயவி

(உறுப்புடையது). இதனை உருவகம் செய்யாமல் இரவு, கரவு என்னும் அவயவங்களை உருவகம் செய்தமையால் அவயவ உருவக அணியாயிற்று என்கிறார் பரிமேலழகர். இங்கு இரவென்னும் ஏமாப்பில் தோணி என்பது கரவென்னும் பார் என்பது உருவகமாகும்.

குறிப்பு உருவகம்

செய்யுளில் ஒரு பகுதியை உருவகஞ் செய்து விட்டு மற்றொரு பகுதியை குறிப்பால் உணருமாறு செய்வதற்கு குறிப்புருவகம் என்று பெயர். திருக்குறளில் ஓர் இடத்தில் மட்டும் பரிமேலழகர் இவ்வணியைச் சுட்டுகிறார்.

"இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி" (கு.எண்:1030)

துன்பம் வந்தபோது தோள் கொடுத்துத் தாங்குகின்ற நல்ல ஆள் இல்லாத குடி, துன்பம் என்னும் கோடாரியால் வெட்டி வீழ்ந்த அடிமரம் போல சாய்ந்து விடும் என்பது குறளின் கருத்து. இங்கும் துன்பத்தை கோடாரியாக உருவகப்படுத்திய வள்ளுவர் குடிகளை மரமாக யூகித்து உணருமாறு வைத்ததனால் பரிமேலழகர் இதனைக் குறிப்புருவகம் என்கிறார்.

பின்வருவநிலை அணி

சொல்லும், பொருளும் ஒருங்கிணைய அடுக்கி உரைத்து ஓசையும் பொருளும் உள்ளம் கவரும் முறையில் அமைப்பது சிறந்த

கவிஞர்களிடம் காணப்படும் பண்பாகும். இவ்வாறு சொற்களை அடுக்கிக்கூறி பொருள்களை உணர்த்துவது தொன்று தொட்டு வரும் மரபாகக் கருதப்படுகிறது.

தொல்காப்பியர் இதனை ஏந்தல் வண்ணம் என்ற பகுதியில் அடக்குகிறார்.

"ஏந்தல் வண்ணம்

சொல்லிய சொல்லின் சொல்லியது சிறக்கும்"(41)

என்பது தொல்காப்பிய நூற்பா. அணி இலக்கண நூலார் பின்வருநிலை அணி எனக் கூறுவர்.

"முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்

பின்வரு மென்னிற் பினைவரு நிலையே"(42)

எனத் தண்டியலங்காரம் கூறுகிறது. இதனை "சொற்பின்வருநிலை, பொருட்பின் வரு நிலை, சொற்பொருள் பின்வருநிலை"(43) என மூன்றாகப் பகுப்பர்.

சொற்பின்வருநிலை அணி

ஒரு சொல் பலமுறை வந்து, பல பொருளில் வருதல் சொற்பின் வருநிலை அணி ஆகும். திருக்குறளில் பரிமேலழகர் ஓரிடத்தில் மட்டும் இவ்வணியைச் சுட்டுகிறார்.

"குன்றின் அனையாகும் குன்றுவர் குன்றுவ

குன்றி அனைய செயின்" (கு.எண்: 965)

பெருமையில் குன்றுபோல உயர்ந்து நிற்பவர்களும், தன்

பெருமைக்குத் தாழ்வு தரும் செயலினை ஒரு குன்றிமணி அளவுக்குச் செய்தாலும் குன்றிப்போவார்கள் என்பது குறளின் கருத்து. இங்கு குன்று என்னும் சொல் பல முறை வந்து பல பொருளைக் குறிக்கின்றமையால் இதனைச் சொற்பின்வருநிலை என்கிறார் பரிமேலழகர்.

பொருட்பின்வருநிலையணி

பொருட்பின்வருநிலை என்பது ஒரு பொருள் தரும் வேறு வேறு சொற்கள் வருவதாகும். திருக்குறளில் இவ்வகை அமைப்புமுறை காணப்படவில்லை எனலாம். சுருங்கிய ஏழு சீர்களில் பல்வேறு சொற்கள் ஒரு பொருளில் வருதல் என்பது இயலாத ஒன்றாகும். ஆகவே பரிமேலழகர் இவ்வணி பற்றி தம் உரையில் எங்கும் குறிப்பிடவில்லை.

சொற்பொருட்பின்வருநிலையணி

வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை உணர்தினால் அது சொற்பொருட் பின்வருநிலை அணியாகும். பரிமேலழகர் இவ்வணியைத் தம்முடைய உரையில் நான்கு இடங்களில் சுட்டுகிறார்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்" (கு.எண்:200)

இப்பாடலில் சொல் என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து சொல் என்னும் பொருளையே உணர்த்துகின்றமையால் இதனைச்

சொற்பொருள் பின்வரு நிலையணி என்கிறார் பரிமேலழகர்.

"நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்

நோயின்மை வேண்டு பவர்" (கு.எண்:320)

இங்கு நோய் என்ற சொல் பலமுறை வந்து துன்பம் என்ற ஒரே பொருளை உணர்த்தினமையால் இது சொற்பொருள் பின்வருநிலை அணியாயிற்று.

"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு

இடும்பை படாஅ தவர்" (கு.எண்:623)

இங்கு இடும்பை என்ற சொல் பலமுறை வந்து துன்பம் என்ற ஒரே பொருளை உணர்த்தினமையால் இது சொற்பொருள் பின்வரு நிலை அணியாயிற்று.

பின்வருநிலை அணி பயின்று வருகின்ற பாடல்களில் எல்லாம் ஒரே சொல் ஒரே பொருளில் மீண்டும் மீண்டும் வருதலும், வேறு வேறு பொருளில் வருதலும், சொல்லோசை அடுக்கி வருதலும் சிறப்பிற்குரியதாகும். இதனை வள்ளுவனின் கவிப்பண்பு என்னும் கட்டுரையில் டாக்டர் மு.வரதராசனார், "இவற்றில் சொல் விளையாட்டு மட்டுமல்லாமல் சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையிலும் அமைந்திருத்தலால் இவை தரத்தால் மேம்பட்டவை எனலாம்"(44) என்று கூறியுள்ளார்கள்.

திருக்குறளில் பல இடங்களில் இவ்வணி இடம் பெறுகிறது. பெரும்பாலான இடங்களில் பரிமேலழகர் இவற்றைக்

குறிப்பிடவில்லை. காரணமென்னவெனில் யாவருக்கும் தெரிந்த ஒன்றை அவர் கூற விரும்பவில்லை போலும் எனத் தெரிய வருகிறது.

நிரல்நிறையணி

நிரல் நிறையாவது வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தொடர்பானவற்றைத் தொடர்ந்து அம்முறையிலேயே அழகுபடக் கூறுவதாம். இவற்றை நேர்நேராகவும் நேர்எதிராகவும் கூறலாம். முன்னதை நேர்நிரல் நிறையணி என்றும் பின்னதை எதிர் நிரல் நிறை அணி என்றும் கூறுவர். தொல்காப்பியர் இதனை,

"நிரனிறுத் தமைத்தல் நிரனிறை"(45)

என்கிறார். மேலும் இவற்றைத் தொல்காப்பியர் பொருள்கோள் என்பதனுள் அடக்கி,

"அவற்றுள்
நிரனிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள் வேறு நிலையல்"(46)

என்ற நூற்பாமூலம் உவமையும் பலவும் சேர நிறுத்தி அவற்றால் உவமிக்கப்படும் பொருள் பலவும் வேறே முறைப்படி சேர நிறுத்துதல் நிரல் நிறை எனக் குறிப்பிடுகிறார்.

தண்டியலங்காரம் இதனை,

"நிரல் நிறுத் தியற்றுதல் நிரல் நிறை யணியே"(47)

என்றும், வீரசோழியம்,

"நிரனிறையாவது சொல்லும் பொருளும் நிரனிறுத்துதல்"[48] என்றும் குறிப்பிடுகிறது.

இவ்வாறு சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வதும், சொல்லினை மாற்றிப் பொருள் கொள்வதும் ஆகிய இரு முறைகளையும் வள்ளுவர் தம் குறட்பாக்களில் அழகுபடக் கூறியுள்ளார்.

நேர்நிரல் நிறையணி

முன்னர் வரிசையாகச் சொல்லப்பட்ட சொற்களுக்குத் தொடர்பான பொருளை அம்முறையிலேயே பின்னர் கூறுவது நேர்நிரல் நிறையணி ஆகும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (கு.எண்:45)

இப்பாடலில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, அதற்குத் தொடர்பான பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறினமையால் இதனை நேர்நிரல் நிறையணி என்கிறார் பரிமேலாகர்.

திருக்குறளில் இவ்வணி பல இடங்களில்[49] பயின்று வந்தாலும் பரிமேலழகர் ஓர் இடத்தில் மட்டுமே சுட்டுகிறார்.

எதிர்நிரல் நிறையணி

முன்வைத்த சொற்களின் முறைக்கு நேர் எதிராக அதனோடு

தொடர்புடைய சொற்களைப் பின்னர் கூறும் முறையினை எதிர் நிரல் நிரையணி (அல்லது) மயக்க நிரல் நிரையணி எனலாம்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்" (கு.எண்:410)

நல்ல நூல்களைக் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் உள்ள வேறுபாடு விலங்குகளுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாட்டினைப் போன்றதாகும் என்பது குறளின் கருத்து. இப்பாடலில் விலங்கு-கல்லாதவர், மக்கள்-கற்றார் என முறையே கூறாமல் விலங்கு-கற்றார், மக்கள்-ஏனையர் என முறை மாற்றி வருவதால் இப்பாடலினைப் பரிமேலழகர் மயக்க நிரல் நிறையணி என்கிறார்.

"சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து" (கு.எண்:1183)

இப்பாடலில் சாயலும் நாணும் என்தற்கேற்ப அடுத்து வருகின்ற அடியில் பசலையும் நோயும் என்று இல்லாது நோயும் பசலையும் என மாறி அமைந்துள்ளமையால் இதனை எதிர் நிரல் நிறையணி என்கிறார் பரிமேலழகர்.

பிரிது மொழிதலணி

புலவன், தான் கருதிய பொருளைக் கூறாது மறைத்து அதனை விளக்குவதற்கு அதனோடு ஒத்த பிறிதொன்றைக் கூறுவதனைச் சான்றோர்கள் பிரிதுமொழிதல் அணி என்கின்றனர்.

"பொருளையும் உவமையையும் வேறு வேறாகத் தொடர்பு இல்லாதது போல், உவம உருபு இல்லாது கூறும் எடுத்துக்காட்டு உவமையைவிட, உவமையை மட்டும் கூறிப்பொருளை உய்த்துணர வைக்கும் இவ்வணி ஒருபுடை ஒப்புமை உடையது ஆகும்"(50) என்கிறார் இ.சுந்தரமூர்த்தி.

"இப்பிரிதுமொழிதல் அணியினை நுவலா நுவற்சி என்றும் ஒட்டு என்றும் கூறுவாருமுளர்"(51) என்கிறார் பரிமேலழகர். தண்டியலங்காரம் இதனை ஒட்டணி என்றே குறிப்பிடுகின்றது.

"கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுத்தற்கு
ஒத்ததொன் றுரைப்பின் அஃது ஒட்டென மொழிப"(52)

ஆனால் வீரசோழியம் இதனைச் சுருக்கணி என்று குறிப்பிடுகின்றது.

"......... கவிதான் கருது பொருளை வெளிப்படுத்தற்கு
ஓவிய தேசுருக் காமறை சொல்லி உரைத்திடினே"(53)

மேற்கண்ட நூற்பாக்கள் வாயிலாகக் கவிஞன் தான் சொல்ல வந்ததை மறைத்து பிறிதொன்றைச் சொல்லுதல் பிரிது மொழிதல் என்பது புலனாகிறது.

"இவ்வணிக்குச் சுருங்கச் சொல்லல், தொகைமொழி என்ற வேறு பெயர்களும் இருப்பதாக"(54) வீரசோழியம் குறிப்பிடுகின்றது. பரிமேலழகர் எட்டு(55) இடங்களில் இவ்வணியைச் சுட்டுகிறார். ஒரு சிலவற்றை மட்டுமே இங்கு ஆய்வாளர் விளக்கத்திற்கு எடுத்துள்ளார்.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்" (கு.எண்:475)

வண்டியானது வலிமையான அச்சினைப் பெற்றருந்தாலும் மென்மையான மயிலிறகை அளவுக்கு அதிகமாகப் பாரம் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்து போகும் என்பது குறளின் கருத்து. இக்குறட்பாவின் வாயிலாகக் கவிஞன், அரசன் எவ்வளவுதான் வலிமையுடையவனாக இருந்தாலும் வலிமையில்லாத பலர் ஒன்று சேர்ந்தால் அவனை வென்று விடலாம் என்ற கருத்தினைப் பெற வைப்பதால் இதனை பிரிது மொழிதலணி என்கிறார் பரிமேலழகர்.

"காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா

வேலாள் முகத்த களிறு" (கு.எண்:500)

வேல்படையையுடைய வீரர்கள் வெற்றி கொண்ட யானை ஆனாலும் கால் பதியும் அளவு சேற்றில் மாட்டிக் கொண்டால் நரி கூட அதனை வென்றுவிடும் என்பது குறளின் கருத்து. இக்குறட்பாவின் வாயிலாக எவ்வளவுதான் வலிமையுடையவர்களாக இருந்தாலும், தம் வலிமை பயன்படாத இடத்திற்குச் சென்று விடுவார்களானால் மிக எளியவர்களாலும் வெல்லப்பட்டு அழிவர் என்ற கருத்தினை உணர முடிவதால் இது பிரிதுமொழிதல் அணியாயிற்று.

"ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை

நாகம் உயிர்ப்பக் கெடும்" (கு.எண்:763)

கடல்போல் கூச்சலிட்டு ஆரவாரம் செய்தாலும் எலிக் கூட்டத்தின் பகையினால் என்ன செய்ய முடியும்? நல்ல பாம்பு மூச்சுவிட்டால் சிதறி ஓடிப்போய்விடும் என்பது குறளின் கருத்து. இதன் மூலம் புலவன், அரசன் வீரனல்லாத பலரை வைத்திருப்பதைக் காட்டிலும்

வீரன் ஒருவன் கூட வைத்திருத்தல் நன்று என்பதை உணர்த்துகின்றமையால் இது பிரிதுமொழிதல் அணியாயிற்று.

வேற்றுமைஅணி

வேற்றுமையணி எனப்படுவது வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ ஒப்புமையுடைய இரண்டு பொருள்களை எடுத்துக்கூறி பின்னர் அவற்றுக்கிடையே உள்ள வேற்றுமையைப் புலப்படுத்துதலாம். தண்டியலங்காரம் இதனை,

"கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமை படவரின் வேற்றுமை அதுவே"(56)

என்று கூறும். மேலும்,

"அதுவே
குணம் பொருள் சாதி தொழிலோடும் புணரும்"(57)

என குணவேற்றுமை, பொருள்வேற்றுமை, சாதி வேற்றுமை, தொழில் வேற்றுமை என்றும் வகைப்படுத்தியும் கூறுகிறது. தண்டியாசிரியர் கருத்தை ஒட்டியே மாறனலங்காரம்,

"ஒப்புடை இரு பொருளுரையினுங் குறிப்பினும்
மெய்ப்பட வேற்றுமைப் படுத்துதல் வேற்றுமை"(58)

எனக் குறிப்பிடுகின்றது. பரிமேலழகர் தம்முடைய உரையில் இவ்வணியை ஓரிடத்தில் மட்டுமே குறிப்பிடுகின்றார்.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்டவடு" *(கு.எண்:129)*

தீயினால் சுட்டபுண் ஆறிவிடும். நாவினால் சுட்ட வடு என்றுமே ஆறாது என்பது குறளின் கருத்து. இக்குறட்பாவில்,

தீயினால் சுட்ட புண்

நாவினால் சுட்ட வடு - ஒப்புமையுடை இரண்டு பொருள்

தீயினால் சுட்ட புண், நாவினால் சுட்ட வடு என்ற ஒப்புமை உடைய இரண்டு பொருட்களை முதலில் எடுத்துக்கூறி, தீயினால் சுட்டபுண் ஆறிவிடும் ஆனால் நாவினால் சுட்ட வடு ஆறாது என இரண்டுக்கும் இடையே உள்ள வேற்றுமையை பின்னர் புலப்படுத்தினமையால் இது வேற்றுமை அணியாயிற்று.

தீயினைக்காட்டிலும் கடுஞ்சொல் கொடியது என்னும் வேற்றுமை ஆறாதே நாவினாற் சுட்ட வடு என்ற வள்ளுவர் கூற்றால் குறிப்பாகவும் பெறப்படுகிறது. இதனால் தான் பரிமேலழகர் இக்குறட்பாவினை 'குறிப்பான் வந்த வேற்றுமையலங்காரம்' என்கிறார்.

காட்சியணி

உவமான, உவமேயங்களை உவம உருபுகள் இன்றி இணைத்து அழகுபட உரைத்தலைக் 'காட்சியணி' எனலாம். தண்டியாசிரியர் இதனை 'நிதரிசன அணி' என்கிறார்.

"ஒருவகை நிகழ்வதற்கு ஒத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை என்றிவை புலப்பட
நிகழ் தாயினும் நிதரிசன மதுவே"(59)

காணுகின்ற காட்சியினைக் கொண்டு விளைகின்ற பயனையும் தீமையையும் பிறருக்கு அறிவுறுத்த முயல்வது இவ்வணி என்பது நூற்பா வாயிலாக அறிய முடிகிறது. வீரசோழியம் இதனை 'சுட்டென்னும் அலங்காரம்' என்கிறது.

"......சுட்டா நிகழ்பயன் கொள்பொருளில்

வேறுபட நன்மை தீமை வெளிப்படல் மெல்லணங்கே"(60)

நிகழ்பொருளிடத்தே தீமையாவது தோனறச் சொல்லுதல் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

"பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து

அஞ்சுமவன கற்ற நூல்" (கு.எண்:727)

நல்ல நூல்களைக் கற்ற ஒருவன் அவையில் பேச அஞ்சுவது போர்களத்தில் போரிட அஞ்சும் கோழையின் கையில் உள்ள வாளுககுச் சமமானது என்பது குறளின் கருத்து. இங்கு 'போரிட அஞ்சும் பேடியின் கையிலுள்ள வாள்' என்ற உவமானத்திற்கும் 'அவையில் பேச அஞ்சும் நூலறிவு உடையவன்' என்ற உவமேயத்திற்கும் இடையில் உமவ உருபு இல்லாமல் கூறப்பட்டுள்ளமையால் இது காட்சியணி ஆயிற்று.

மாறனலங்காரம் "காட்சியணிக்கும், எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் நுட்பமான வேறுபாடே உள்ளதாகக் குறிப்பிடுகிறது."(61)

ஏதுவணி

கவிஞர் தாம் கூறுகின்ற பொருள்களை வலியுறுத்தித் தெளிவுபடுத்துவதற்குரிய காரணத்தைத் தாம் எழுதிய

செய்யுளிலேயே குறிப்பாகவும் அழகாகவும் புலப்படுத்துவர். இவ்வாறு ஒரு பொருள் இன்னின்ன காரணத்தால் இவ்வாறு ஆயிற்று என சிறப்பாய் உரைக்கும் முறையினை 'ஏதுவணி' என்பர். இது காரகவேது, ஞாபகவேது என இருவகைப்படும்.

தண்டியாசிரியர்,

"யாதன் திறத்தினும் இதனின் இது விளைந்த தென்று
ஏது விதந்து உரைப்பது ஏது அதுதான்
காரகம் ஞாபகம் என இருதிறப்படும்"(62)

எனக்கூறி ஏதுவின் வகைகளையும் சுட்டுகிறார். ஆனால் வீரசோழியம்,

"ஏது உரைப்பின் இதுஇதுவின் விளைவு என்றுரைத்தல்"(63) என ஏதுவணிக்கு விளக்கம் தருகிறது.

"சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்" (கு.எண்:827)

வில்லின் வணக்கம் (வளைதல்) துன்பத்தைத் தருதல் போல பகைவருடைய பணிந்த சொல்லும் துன்பத்தைத் தரும் என்பது குறளின் கருத்து. இங்கு வில்லின் வணக்கம் போல பகைவருடைய சொல் வணக்கமும் துன்பத்தைத் தரும் ஆதலால் அதனைக் கொள்ளற்க என்று காரணங்காட்டிக் கூறுவதால் இது ஏதுவணி ஆயிற்று.

தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் கற்பனையை ஏற்றிக் கூறுவதனைத் 'தமற்குறிப்பேற்ற அணி' என்பர். வீரசோழியம்

இதனை 'நோக்கு என்னும் அலங்காரம்'(64) என்கிறது. தண்டியலங்காரம் இதனை,

"பெயர்ப்பொருள் அல்பொருள் என இரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி அயலொன்று
தான்குறித்து ஏற்றுதல் தற்குறிப்பேற்றம்"(65)

என்றும், இது உவம உருபுகளோடு பொருந்தி வரும் என்றும் குறிப்பிடுகிறது.

இயங்கு பொருளும் இயங்காப் பொருளும் என்னும் இருபொருட் கண்ணும், இயல்பாக நிகழும் தன்மை ஒழிய, கவிஞன் தான் கருதிய ஒன்றினை அதன் கண் ஏற்றிக் கூறுதல் இவ்வணியாம் என்பது நூற்பாவின் கருத்து. 'தொன்னூல் விளக்கம்' எழுதிய வீரமாமுனிவர் இதனை 'ஊகாஞ்சித அலங்காரம்'(66) எனக் குறிப்பிடுகிறார்.

மாறனலங்காரம் தண்டியாசிரியர் கருத்தை ஒப்புக் கொண்டு,

"உலகினுள் ஒருபொருட் குற்ற தன்மைத்திறம்
விலக்குபு பிறிதின் விளைந்ததென் உட்கொண்டு
ஏற்றுதலாகும் தற்குறிப்பேற்றம்"(67)

என்று நூற்பா உரைக்கிறது.

இத்தகைய சிறப்புடைய தற்குறிப்பேற அணியின் வள்ளுவர் தம் குறட்பாவில் சில இடங்களில்(68) எடுத்தாண்டுள்ளமையை அறியமுடிகிறது.

"காணின் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்

மாண்இழை கண்ஒவ்வேம் என்று" (கு.எண்:1114)

தலைவியினுடைய கண்களுக்கு நாம் ஒப்பகமாட்டோம் எனக் குவளை மலரனாது கவிழ்ந்து நிலத்தை நோக்குகிறது என்பது குறளின் கருத்து. குவளை மலர்கள் கவிழ்ந்து நிலத்தை நோக்குவது போன்று இருத்தல் இயல்பாக நிகழும் நிகழ்ச்சி. தலைவியின் கண்ணுக்கு ஒப்பாக மாட்டோம் என்று தான் கவிழ்கிறது என்ற கற்பனையைக் கவிஞர் இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது ஏற்றிக்கூறினமையால் இது தற்குறிப்பேற்ற அணியாயிற்று.

உயர்வு நவிற்சி அணி

கவிஞன் ஒரு பொருளை உள்ளவாறு கூறாமல், கேட்பவர் மனம் மகிழும்படி மிகைப்படுத்திக் கூறுவது 'உயர்வு நவிற்சி' அணியாகக் கருதப்படுகிறது தண்டியலங்காரம் இதனை 'உதாத்தவணி' என்பதனுள் அடக்கி,

"வியத்தகு செல்வமும் மேம்படு உள்ளமும்

உயர்ச்சி புனைந் துரைப்பது தூதத்தமாகும்"(69)

என்கிறது.

ஆனால் மாறனலங்கரமும், வீரசோழியமும் இதனை 'அதிசய அலங்காரம்' என்பதனுள் அடக்கிக் கீழ்க்கண்ட நூற்பாக்களை எடுத்துரைக்கிறது.

"விதந்தொரு பொருளை விழுமிதின் உரைப்புழி

உயர்ந்தோர் மதிக்குற வுரைப்பது அதிசயம்"(70)

"அருளும் அதிசயம் ஆன்றோர் வியப்ப துலகிறவாப்

பொருள் குணம் ஐயம் துணிவு திரிவெனப் போற்றுவரால்"(71)

'அதிசய வலங்காரம்' என்பது ஆன்றோர்க்கு வியப்புடையதாக வருவது எனலாம். இதனைத் "தற்குறிப்பேற்ற அணியின் விரிவாகக் கொள்ளலாம்"(72) என்கிறார் இ.சுந்தரமூர்த்தி.

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம்" (கு.எண்:85)

இக்குறட்பாவில் விருந்தோம்பலின் பெருமையைக் கூறவந்த வள்ளுவர், 'விருந்தினரைப் போற்றி உண்டு வாழ்வோருடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமா? தானே வளரும்' என உயர்வுபடக் கூறுகின்றார். தானே வளராது எனினும் இங்குத் தான் கூறவந்த கருத்தினை உயர்வுபடச் சொல்லினமையாமல் இது உயர்வு நவிற்சி அணியாயிற்று.

வஞ்சப்புகழ்ச்சி அணி

கவிஞர் வெளிப்படையாக ஒன்றை இகழாமல், குறிப்பாக இகழ்வது ஒரு நயம் ஆகும். கூறுகின்ற சொற்களை மட்டும் வைத்து நோக்கினால் புகழ்வது போலத் தோன்றும்; கருத்தை நோக்கும் போது இகழ்வதாக முடியும். தண்டியலங்காரம் கூறுகின்ற 'இலேசவணி' இதனோடு ஒப்புமை உடையது எனலாம்.

"இகழ்வது போலப் புகழ்வதலும் புகழ்வதுபோல் இகழ்வதும்

இதன்பாற் படுமென்று கூறுவாறு முளர்"(74)

என்று வீரசோழிய உரை கூறுவதும் இங்கே ஒப்பு நோக்கக் கூடியதாகும்.

"புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்

பழிப்பது போலப் புகழ்ப் புலப் படுதலும்

அவையும் அன்னதென்று அறைகுநர் உளரே"(75)

என்று புகழ்வது போலப் பழித்தலையும், பழிப்பது போல புகழ்தலையும் இவ்வணியில் அடக்கி, அதற்கு 'மாறுபடு புகழ்நிலை அணி' என்ற பெயரினையும் இடுகிறார்.

"கருதிய பொருடொகுத் தாங்கது பழித்தற்கு

வேறொன்று புகழ்வது மாடுபடு புகழ்நிலை"(76)

என்பது நூற்பா. புகழ்வது போலப் பழிக்கும் இத்தன்மையை வள்ளுவர் சில குறட்பாக்களில் குறிப்பிடுகிறார். மாறனலங்கார ஆசிரியர் இதனை, 'துதிநிந்தை'(77) என்று குறிப்பிடுகின்றார்.

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்

பீழை தருவதொன்று இல்" (கு.எண்:839)

பேதையார் நட்பு பெரிதும் இனிமையானது அவர்களைப் பிரியும் போது கலக்கமோ துன்பமோ ஏற்படாது எனப் புகழ்வது போல் குறிப்பிடுகிறார். பேதையார் நட்பு எவ்வாறு இனிமையுடையதாகும என்று சிந்தித்தால், அவர்களைப் பிரியும் போது துன்பம் தராது என்ற சொற்றொடரை பயன்படுத்துகிறார். நல்ல நண்பகர்களைப் பிரியும் போது எவ்வாறு துன்பம் இல்லாமல் இருக்கமுடியும். ஆகவே முதலில் புகழ்வது போல கூறி பின்பு பழித்துரைக்கிறார். இவ்வாறு

புகழ்வது போல கூறிப் பழித்துரைப்பதனால் இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆயிற்று.

வேற்றுப்பொருள்வைப்பணி

கவிஞர், தாம் சொல்லக்கருதிய பொருளைத் தெளிவாக விளக்குவதற்கு உலகறிந்த வேறொரு பொருளைக் கூறி முடிப்பது 'வேற்றுப்பொருள் வைப்பணி' ஆகும். அவ்வாறு கூறுகின்ற பொருள் முன்னர்க் கூறியதைக் காட்டிலும் சிறப்புடையதாக இருத்தல் வேண்டும். கவிஞன் சொல்லக் கருதிய பொருளைச் 'சிறப்பு பொருள்' என்றும் முடித்தற்குக் கூறப்படும் பொருளைப் 'பொதுப் பொருள்' என்றும் கூறுவர்.

"முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை உலகறி பெற்றி
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப் பொருள் வைப்பே"(78)

எனத் தண்டியலங்காரம் கூறுகிறது. மாறனலங்காரமும் இக்கருத்தையே கொண்டுள்ளது.(79)

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு" (கு.எண்:211)

உலகத்தார் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கின்றனர்? மழை போன்றவர்கள் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவையே என்பது குறளின் கருத்து.

கைம்மாறு வேண்டா கடப்பாடு - சிறப்புப்பொருள்

மாரிமாட்டு என்னாற்றுங் கொல்லோ உலகு - பொதுப்பொருள்

இங்குப் பயனை எதிர்பாரது உதவும் நல்லோர் கடமைக்கு உலகறிந்த பொதுப் பொருளாகிய 'பயனை எதிர்பாராது பொழியும் மழையைக்' குறிப்பிடுவதனால் இதனை வேற்றுப்பொருள் வைப்பணி எனலாம்.

தீவக அணி

ஒரு சொல் பாட்டின் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்தாலும் அச்சொல் அப்பாட்டிலுள்ள ஒவ்வொரு வாக்கியத்தோடும் பொருந்திப் பொருள் தருமாறு கவிஞர்கள் திறமுடன் அமைப்பர். அதாவது வீட்டினுள் ஓரிடத்தில் விளக்கு வைக்கப்பட்டிருந்தாலும் அது வீட்டின் பல இடங்களிலும் பரவி ஒளி தந்து விளக்குவது போல் இதுவும் அமைந்துள்ளதால், இதனைத் 'தீவக அணி' என அழைக்கின்றனர். தண்டியலங்காரம்

"குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொல்
ஒருவயின் நின்றும் பலவயின் பொருள் தரின்
தீவகம் செய்யுள் மூவிடத்தியலும்"[80]

என விளக்கம் தருகிறது. மேலும் இந்நூற்பா முதல் நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் எனத் தீவகம் மூன்று வகைப்படும என்பதையும் உணர்த்துகிறது. மாறனலங்காரமும் இக்கருத்தையே கூறுகிறது.[81]

முதனிலைத் தீவகம்

செய்யுளில் முதலில் வரும் சொல், பின்வரும் தொடரோடும் சென்று இயைந்து பொருள் தருவது முதனிலைத் தீவகமாகும்.

"யான்நோக்குங் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்" (கு.எண்:1094)

இக்குறட்பாவில் 'யான்' என்ற முதலில் வரும் சொல், 'யான் நோக்குங்காலை' என முதலிலும் 'யான் நோக்காக்கால்' எனப் பின்வரும் தொடரோடும் சென்று இயைந்து பொருள் தருவதால் இது முதனிலைத் தீவகமாயிற்று.

இடைநிலைத் தீவகம்

செய்யுளின் இடையில் நின்ற சொல் முன்னும் பின்னும் சேர்ந்து பொருள்தருவது இடைநிலைத் தீவகமாகும்.

"உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு" (கு.எண்:255)

இக்குறளில் 'ஊன்' என இடையில் நின்ற சொல், 'ஊன் உண்ணாமை' என முன்னும் 'ஊன் உண்ண' எனப் பின்னும் சேர்ந்து பொருள் தருதலால் இது இடைநிலைத் தீவகமாகும். நன்னூலார் இதனைத் தாப்பிசைப் பொருள் கோளுக்கு[82] உதாரணமாகக் குறிப்பிடுகிறார்.

கடைநிலைத் தீவகம்

செய்யுளில் இறுதியில் நிற்கும் சொல் முன்னே சென்று

பொருந்தி பொருள் தருவதற்கு 'கடை நிலைத் தீவகம்' என்று பெயர்.

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்

கள்ளுக்கில் காமத்திற் குண்டு" (கு.எண்:1281)

"காமத்திற்கு உள்ளக் களித்தலும் உண்டு; காணமகிழ்தலும் உண்டு" என இறுதியில் நிற்கும் 'உண்டு' என்னும் சொல் முன்னே சென்று பொருந்திப் பொருள் தருவதால், இது இடைநிலைத் தீவகமாயிற்று.

இவ்வியலில் பரிமேலழகராலும், ஆய்வாலும் அறியப்பட்ட அணிவகைகளையும், அவற்றை விளக்க எடுத்துக் கொண்ட குறட்பாக்களையும் கீழ்கண்ட அட்டவணையின் மூலமாகத் தெளிவுபடுத்தப்படுகிறது.

தொகுப்பு அட்டவணை

வரிசை எண்	அணிகள்	உதாரண விளக்கம் குறட்பாக்கள்
1.	உவமையணி	151
2.	தொழில் உவமம்	274, 490, 691
3.	பண்புவமம்	277, 1302
4.	ஐயநிலை உவமம்	1085
5.	எடுத்துக்காட்டு உவமையணி	1, 452, 481, 798
6.	இல்பொருள் உவமையணி	273
7.	ஏகதேச உருவகணி	8, 24, 306, 505, 1147
8.	அவயவ உருவகம்	1068
9.	குறிப்பு உருவகம்	1030
10.	சொற்பின்வருநிலையணி	965
11.	சொற்பொருட்பின்வருநிலையணி	200, 320, 623, 645
12.	நேர்நிரல் நிரையணி	45
13.	எதிர் (அல்லது) மயக்க நிரல்நிறை	410, 1183
14.	பிரிது மொழிதலணி	475, 500, 763
15.	வேற்றுமையணி	129
16.	காட்சியணி	727
17.	ஏதுவணி	827
18.	தற்குறிப்பேற்ற அணி	1114
19.	உயர்வு நவிற்சி அணி	35
20.	வஞ்சப்புகழ்ச்சி அணி	839
21.	வேற்றுப் பொருள் வைப்பணி	211
22.	முதனிலைத் தீவகம்	1095
23.	இடைநிலைத் தீவகம்	255
24.	கடை நிலைத் தீவகம்	1281

தொகுப்புரை

1.'அணி' என்னும் சொல்லைப் பரிமேலழகர் எங்கும் பயன்படுத்தவில்லை. மாறாக 'அலங்காரம்' என்ற சொல்லையே பயன்படுத்துகிறார்.

2. பரிமேலழகர் தம்முடைய உரையில் பதின்மூன்று வகையான அணிகளைச் சுட்டுகிறார்.

3. உவமையணி அனைத்து அணிக்கும் தாயாக விளங்குவதை இவ்வியல் வாயிலாக அறியமுடிகிறது.

4. காலவளர்ச்சிக்கு ஏற்ப அணிகளும் பல்கிப் பெருகி வளர்ந்துள்ளமையை உணரமுடிகிறது.

5. புலவர்கள் உவமையைக் கையாளும் தன்மைக்கேற்ப அணிகள் பெயர் பெறுகின்றன.

6. முதன் முதலில் பரிமேலழகர் தான் 'எடுத்துக்காட்டு உவமை' என்னும் சொல்லாட்சியைப் பயன்படுத்துகிறார். இவருக்கு முன் இச்சொல்லாட்சி இல்லை. பின்வந்த நூல்களில் உள்ளது.

7. எடுத்துக்காட்டுமு உவமையணி தண்டியலங்காரத்தில் 'மருபொருளுவமை' என்னும் பெயரில் இடம் பெறுகிறது.

8. பரிமேலழகரால் குறிப்பிடப்படும் 'ஏகதேச உருவகம்' என்னும் சொல்லாட்சி தண்டியலங்காரத்தில் இல்லை. மாறாக 'ஏகாங்க உருவகம்' என்னும் பெயரில் உள்ளது.

9. தண்டியலங்காரம் குறிப்பிடும் 'ஒட்டணி' என்பதைப் பரிமேலழகர் 'பிரிதுமொழிதல் அலங்காரம்' என்கிறார்.

10. பரிமேலழகர் அணிகளை விளக்க சில இடங்களில் பிற இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார்.

11. மாறனலங்காரம் குறிப்பிடும் 'காட்சியணி' எடுத்துக்காட்டு உவமை அணியோடு ஒத்த தன்மையுடையதாக காணப்படுகிறது.

12. ஆய்வில் சுட்டப்படும் 'உயர்வுநவிற்சி அணி' தண்டியலங்காரத்தில் 'உதாத்தவணி' என்னும் பெயரில் இடம் பெறுகிறது.

13. 'வஞ்சப்புகழ்ச்சி அணி' மாறனலங்காரத்தில் 'துதி நிந்தை' என்னும் பெயரில் இடம் பெறுகிறது.

14. 'தற்குறிப்பேற்ற அணி' வீரசோழியத்தில் 'நோக்கு என்னும் அலங்காரம்' என்னும் பெயரில் இடம் பெறுகிறது.

15. தண்டியலங்காரம், வீரசோழியம், மாறனலங்காரம் ஆகிய அணிநூல்களில் இடம்பெறும் அணிகள் ஒரே பொருளுடையதாக இருந்தாலும் வெவ்வேறு பெயர்களில் இடம்பெறுகின்றன.

16.யாவருக்கும் தெரியும் படியாகக் குறளில் அமைந்துள்ள அணிகளைப் பரிமேலழகர் தம்முடைய உரையில் சுட்டவில்லை.

17.தொல்காப்பியர் உவமவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் ஆகிய பகுதிகளில் கூறப்பட்டுள்ள பல செய்திகள் பிற்கால 'அணிகள்' வளர்ச்சிக்கு மூல காரணமாக அமைவதை இவ்வியல் வாயிலாக அறியமுடிகிறது.

குறிப்புகள்

1. பிங்கல நிகண்டு, 3050.

2. நாநார்த்த தீபிகை, 286.

3. நன்னூல், 45.

4. கலைக்களஞ்சியம், தொகுதி 1, பக்.212.

5. இரா.பி.சேதுப்பிள்ளை:திருவள்ளுவர் நூல்நயம், பக்.112.

6. வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி, தொல் சிறப்புப்பாயிரம்.

7. தொல். பொருள், உவமவியல் 2.

8. மேலது, 4.

9. இறையனார் அகப்பொருள், சூத்திரம் 1.

10. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், தமிழ்மொழியின் வரலாறு, பக்.43.

11. கலைக்களஞ்சியம், தொகுதி 1, பக்.54.

12. ந.சி. கந்தையா பிள்ளை: தமிழ் இலக்கிய அகராதி, பக்.94, 67, 131, 36

13. சுந்தர மூர்த்தி, திருக்குறள் அணிநலம், ப.248.

14. திருக்குறள், 7.

15. மணிமேகலை 27: 41-42.

16. தொல்.பொருள், உவமவியல் 1.

17. மேலது, 4.

18. மேலது, 5.

19. மேலது, 3.

20. தண்டியலங்காரம், 31.

21. பேரா. தமிழண்ணல், இனிய தமிழ் இலக்கணத்தின் இயல்புகள்.

22. அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, ப.175.

23. தொல்.பொருள், உவமவியல் 12.

24. திருக்குறள் எண் : 576, 650, 1105, 1107, 1076

25. தொல். பொருள், எச்சவியல் 9.

26. மாறனலங்காரம், 136.

27. தண்டியலங்காரம், 35.

28. வைத்தியநாத தேசியகர் : இலக்கண விளக்கம், நூற்பா.640 உரை.

29. தொல்.பொருள். உவமவியல் 9.

30. தண்டியலங்காரம், 35.

31. இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், பக்.157-158.

32. M.R. Ridley; poetry and the ordinary reader.

33. ந. சுப்புரெட்டியார், கவிதை அனுபவம், பக்.126.

34. அ. ச. ஞானசம்பந்தன்; இலக்கியக்கலை, பக்.193.

35. The works of Aristotle; Vol. II P.655, Great Books of the western world series. Ed.

36. இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், பக்.161.

37. முத்துவீரியம், அணியதிகாரம், பொருளணியல், நூ.எண்.32.

38. திருக்குறள்:555, 567, 615, 627, 753, 796, 983, 989, 1032, 1093, 1227.

39. தண்டியலங்காரம், பக்.69.

40. இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், பக்.162.

41. தொல்.பொருள். செய்யுள், 223.

42. தண்டியலங்காரம், 41.

43. மாறனலங்காரம், நூ.எண். 158.

44. டாக்டர். மு.வரதராசன்; இலக்கியத்திறன், பக்.229-230.

45. தொல். பொருள். உவமவியல் 37.

46. தொல். சொல். எச்சவியல் 9.

47. தண்டியலங்காரம், 66.

48. வீரசோழியம், அலங்காரம், 28.

49. திருக்குறள் : 182, 254, 856, 876, 926.

50. திருக்குறள் அணிநலம், பக்.175.

51. பரிமேலழகர் உரை, குறள் 475.

52. தண்டிலங்காரம், 51.

53. வீரசோழியம், அலங்காரம் 24.

54. மேலது, 11.

55. திருக்குறள்: 475, 476, 495, 496, 500, 599, 763, 879

56. தண்டியலங்காரம், 48.

57. மேலது, 49.

58. மாறனலங்காரம், 130.

59. தண்டியலங்காரம், 84.

60. வீரசோழியம், அலங்காரம், 32.

61. மாறனலங்காரம், 139 உரை.

62. தண்டிலங்காரம், 57.

63. வீரசோழியம், அலங்காரம், 26.

64. பெருகிய நோக்கது தற்குறிப்பேற்றம் பெயர்ப் பொருளாய் வருவதும் பேராப் பொருளதுமாக வகுத்தனரே, வீரசோழியம், அலங்காரம், 25.

65. தண்டியலங்காரம், 55.

66. வீரமாமுனிவர், தொன்னூல் விளக்கம், 346.

67. மாறனலங்காரம், 140.

68. திருக்குறள்:1114, 1116, 1232, 1233.

69. தண்டியலங்காரம், 76.

70. மாறனலங்காரம், 140.

71. வீரசோழியம், அலங்காரம், 71.

72. இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், பக்.190.

73. தண்டியலங்காரம், 64.

74. வீரசோழியம், அலங்காரம் 27 உரை, பக்.254.

75. தண்டியலங்காரம், 65.

76. மேலது, 82.

77. மதித்ததொரு பொருளினை வழாதுள் ளுறுத்துத் துதிப்பது போன்றிகழ்வது துதிநிந்தை, மாறனலங்காரம், 229.

78. தண்டியலங்காரம், 46.

79. மாறனலங்காரம், 207.

80. தண்டியலங்காரம், 39.

81. மாறனலங்காரம், 160.

82. நன்னூல், பொதுவியல் 65, ஆறுமுக நாவலர் பதிப்பு.

இயல் - 6

பிற இலக்கணக் கூறுகள்

இயல் - 6

திருக்குறள் பரிமேலழகர் உரையில் பிற இலக்கணக் கூறுகள்

முன்னுரை

பரிமேலழகர் தமிழ்ப் புலமை மட்டுமன்றி வடமொழி புலமையையும் நிரம்பப் பெற்றவர். அவருடைய உரையில பல இடங்களில் வடமொழிக் கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. திருவள்ளுவரின் உளளக்கிடக்கையை அப்படியே வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகத் திருக்குறளில் சில இடங்களில் வடநூல் இலக்கணத்தைப் பின்பற்றி உரை வகுத்துள்ளார். இதனை,

"எழுத்து முதல இலக்கண வகையும்
வழுத்தில் வேதாகம வகைய தன் பயனும்
இதுவே உரையென்று யாவரும் வியப்ப
விழுப்பொருள் தோன்ற விரித்து இனிதுரைத்தான்
வடநூல் துறையும் தென்திசைத்தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்" (பெருந்தொகை:1943)

என்ற பெருந்தொகைப் பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

பரிமேலழகர் சுட்டும் இலக்கணக் கூறுகளைப் பின்பற்றி எழுந்த நூல்களுள் குறிப்பிடத்தகுந்தவை,

1. பிரயோக விவேகம்
2. இலக்கணக் கொத்து

ஆகியவையாகும். சுப்ரமணிய தீட்சிதர் பிரயோக விவேகத்தையும்,

சுவாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்தையும் எழுதியுள்ளனர். இவர்களது காலம் கி.பி 17-ஆம் நூற்றாண்டாகும்.

இந்நூல்கள் இரண்டும் மிகுதியான வடமொழிக் கருத்துக்களைக் கொண்டுள்ளன. பரிமேலழகர் குறிப்பிடுகின்ற சில இலக்கணக் கூறுகளை இந்நூலைப் பின்பற்றி ஆய்வில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வியலில் பரிமேலழகரால் சுட்டப்பெறும் இலக்கணக் கூறுகளாவன,

1. ஒருசொல் நீர்மை

2. ஒரு பொருட்கிளவி

3. தாற்பரியம்

4. ஏதுப்பெயர்

5. உபசார வழக்கு

5.1 காரண காரிய உபசார வழக்கு

5.2 காரிய காரண உபசார வழக்கு

5.3 ஒன்றன் தன்மை மற்றொன்றுக்காய உபசார வழக்கு

6. இலக்கணை

7. அருத்தாபத்தி

8. உரையசை

9. சாதி ஒருமை

10. வடமொழித்திரிசொல்

இவ்வியலானது பிரயோகவிவேகம், இலக்கணக் கொத்து ஆகிய நூல்களின் சூத்திரங்களையொட்டியும் அவற்றிற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் கருத்தையொட்டியும் அமைகிறது. தேவைப்படும் இடங்களில் வேறு சில இலக்கண நூல்களின் கருத்துக்களும் எடுத்தாளப்படுகின்றன.

ஒரு சொல் நீர்மை

சொல்லளவில் இரண்டு சொற்களாகத் தெரிந்தாலும் பொருளளவில் ஒரு சொல்லாக இருப்பது 'ஒரு சொல் நீர்மை' எனப்படும். இவ்வொருசொல் நீர்மையாய் வரக்கூடிய சொல்லை இரண்டாககப் பிரித்தால், அவற்றுள் ஒரு சொல்லிற்கு பொருள் இருக்காது. பொருளில்லாத சொல்லை வடமொழியில் 'உபசர்க்கம்' என்பர். இவ்வுபசர்க்கமாய் வரும் சொல்லானது ஏதேனும் ஒரு வினைப் பெயரோடும் வினைச்சொல்லோடும் இணைந்து வரும் என்பர்.

பிரயோக விவேகம் உபசர்க்கத்தின் இலக்கணத்தை,

"வினைப்பெயரோடு அவ்யமாங்கை ஆதி இடைந்து
நின்ற தனைப்பெயரிட்ட உபசர்க்கஞ் சுட்டினுள்"(1)

என்ற செய்யுள் மூலம் விளக்குகிறது.

மேலும் "கை, கால், தலை, மேல், மீ, ஒல்லை, வல்லை, புறம், அகம், இலம் என்பவை உபசர்க்கம்"(2) என்றும் குறிப்பிடுகிறது.

பரிமேலழகர் ஒரு சொல் நீர்மை என்னும் இலக்கணத்தை தம்முடைய உரையில் இரண்டு இடங்களில் சுட்டுகிறார்.

"ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை

ஆஅதும் என்னும் அவர்" (கு.எண்:653)

என்பதில் 'ஓஒதல்வேண்டும்' ஒரு சொல் நீர்மைத்து, என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஓஒதல்வேண்டும்' என்பது ஓதல், வேண்டும் என இரண்டு சொற்களாகத் தோன்றினாலும், அஃது 'வேண்டும்' என்ற ஒரு பொருளையே உணர்த்துகிறது. இவ்வாறு சொல்லளவில் இரண்டாகத் தெரிந்து பொருளளவில் ஒரு சொல்லாக இருப்பதால் 'ஓஒதல்வேண்டும்' என்பதனை ஒரு சொல் நீர்மை என்கிறார் பரிமேலழகர். முதலில் நிற்கும் 'ஓதல்' என்னும் சொல்லிற்குப் பொருள் இல்லாததால் இது உபசர்க்கம் ஆகும்.

"விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையான்

கேளாது நட்டார் செயின்" (கு.எண்:804)

என்பதில் பரிமேலழகர் 'வேண்டி இருப்பார்' என்பது எழுந்திருப்பார் என்பது போல ஒரு சொல் நீர்மைத்து என்கிறார். இங்கு 'வேண்டி இருப்பார்' என்பது வேண்டுதல், இருத்தல் என இரண்டு சொற்களாகத் தோன்றினாலும் 'இருப்பார்' என்னும் ஒரு பொருளையே உணர்த்துகிறது. இதனால் 'வேண்டி இருப்பார்' என்பது ஒரு சொல் நீர்மை ஆயிற்று. முதலில் நிற்கும் 'வேண்டி' என்னும் சொல்லுக்குப் பொருள் இல்லாததால் இது உபசர்க்கம் ஆயிற்று.

ஒருபொருட்கிளவி

ஒரு பொருளைத் தரக்கூடிய பல சொற்களைத் தமிழில் 'ஒரு பொருட்கிளவி' என்பர். இங்ஙனம் ஒரு பொருளுக்குப் பல சொற்கள்

வருமாயின் அவற்றையெல்லாம் தொகுத்துக்கூறி, அவ்வாறு தொகுத்துக் கூறியவற்றுள் ஒன்றை மட்டும் வாக்கியமாக விரித்துக்கூறல் என்னும் முறை வடமொழியில் காணப்படுவதை அறியலாம்.

இவ்வாறு விரித்துக் கூறுதலைப் பிரயோக விவேகம் 'நிருவசனம்' அல்லது 'நிருத்தி' என்று கூறுகின்றது.

"ஆக்கும் பிரதி பதத்துடன்......"(3)

என்னும் செய்யுளுரையில்,

"நிருவசனம் நிருத்தியென இருவகை வசனமும்

சொல்லின் முடியும் இலக்கணத் ததுவே"(4)

என விளக்குகின்றது.

பரிமேலழகர், மூன்று இடங்களில் ஒருபொருட் கிளவியைச் சுட்டுகிறார்.

"பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்

மருளானாம் மாணப் பிறப்பு" (கு.எண்.351)

இக்குறளுரையில் மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன ஒரு பொருட்கிளவி என்கிறார் பரிமேலழகர். மேற்கூறிய நான்கு சொற்களும் 'மயங்குதல்' என்னும் ஒரு பொருளையே உணர்த்துவதால் இது ஒரு பொருட்கிளவி ஆயிற்று. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்ற நான்கனுள் 'விபரீதவுணர்வு' என்பதனை மட்டும் ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதல் என விரித்துக் கூறுவதால் இது நிருவசனம் ஆயிற்று.

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்

ஒருவந்தம் ஒல்லைக் கெடும்" (கு.எண்:563)

இக்குறளுரையில் ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒரு பொருட்கிளவி என்கிறார் பரிமேலழகர்.

இம்மூன்று சொற்களும் 'ஒருதலை' என்ற ஒரே பொருளை உணரத்துவதால் ஒருபொருட்கிளவி ஆயிற்று. இவற்றுள் 'ஒருவந்தம்' என்பதனை 'ஒரு அந்தம்' எனப் பிரித்து 'ஒரு முடிவுடைய' என ஒன்றை மட்டும் விரித்துப் பொருள் கொள்வதால் இது நிருவசனம் ஆயிற்று.

"நிறைநீர நீரவர் கேண்மைப் பிறைமதிப்

பின்னீர பேதையார் நட்பு" (கு.எண்:782)

இக்குறளுரையில் கேண்மை, நட்பு என்பன ஒரு பொருட்கிளவி என்கிறார் பரிமேலழகர். இவை இரண்டு சொற்களும் 'நட்பு' என்ற ஒரு பொருளையே உணர்த்துவதால் ஒரு பொருட்கிளவி ஆயிற்று. இவற்றுள் 'நட்பு' என்பதனை மட்டும் 'நல்லவர் நட்பு வளர்பிறை என்றும் தீயவர் நட்பு தேய்பிறை என்றும்' விரித்துக் கூறுவதால் இது நிருவசனம் ஆயிற்று.

தாற்பரியம்

செய்யுளுள் தேவையில்லாத சொல்போல் ஏதேனும் காணப்பட்டாலும் அதுவும் ஒரு தேவை கருதி வைக்கப்பட்டிருக்கும். இது நூலாசிரியரால் பின்பற்றப்படும் ஒரு உத்தியாகும். தமிழில் இதனை 'விதப்புக்கிளவி' என்று கூறுவர்.

காரிரத்தின கவிராயர் இதனை,

"வேண்டாதுகூறி வேண்டியதுமுடித்தல் என்னும் தந்திர....

உத்தி வடநூலார் தாற்பரியம் என்ப"(5)

என்று கூறுவதாக இ.சுந்தரமூர்த்தி குறிப்பிடுகிறார்.

யாப்பருங்கலக்காரிகை இதனை,

"விதப்புக் கிளவி வேண்டுது விளைக்கும்"(6)

எனக்குறிப்பிடுகிறது.

பரிமேலழகர் தம்முடைய உரையில் இரண்டு இடங்களில் தாற்பரியத்தைச் சுட்டுகிறார்.

"ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய

வழுக்கியும் வாயாற் சொலல்" *(கு.எண்:139)*

இக்குறளுரையில் 'வாயால்' என வேண்டாது கூறினார், வடநூலார் இதனைத் தாற்பரியம் என்கிறார் பரிமேலழகர். ஒழுக்கமுடையவர் மறந்து சொன்னாலும் பிறர்க்கு நன்மை தரும் சொற்களையே சொல்லுவர் என்பது குறளின் கருத்து. இங்கு 'வாயால்' என்ற சொல் தேவை இல்லாதது போல் தோன்றினாலும் 'நல்ல சொற்கள் பயின்றது' என்ற ஆசிரியனின் கருத்தை உணர்த்தப் பயன்படுகிறது. இவ்வாறு தேவையில்லாத சொல்போல் காணப்பட்டாலும் ஆசிரியனின் கருத்தை உணரத்தப் பயன்படுவதால் இது 'தாற்பரியம்' ஆயிற்று.

"தேறற்கு யாரையும் தேராது தேர்ந்தபின்

தேறுக தேறும் பொருள்" *(கு.எண்:509)*

என்னும் குறளுரையில் பரிமேலழகர் 'தேறுக' என்றது

தாற்பரியத்தால் ஐயுறவினது விலக்கின்மேல் நின்றது என்கிறார். குறளில், 'தேர்ந்தபின் தேறும் பொருள்' என்று கூறினாலே போதும். அவற்றோடு 'தேறுக' என்பதனைச் சேர்த்துக் கூறியது, 'ஆராய்ந்தபின் தெளியும் பொருள்களை ஐயுறாது ஒழிக' என அறிவிப்பதற்காகும். இங்கு 'தேறுக' என்பது 'ஐயுறாது ஒழிக' என்னும் ஆசிரியனின் கருத்தை உணரத்தப் பயன்படுவதால் இது தாற்பரியம் ஆயிற்று.

ஏதுப்பெயர்

வடமொழியில் 'ஏதுப்பெயர்' என்பதனை ஏதாவது ஒரு காரணம் பற்றி, உருப்பாற்றலால் பொருளை உணர்த்திவரும் பெயர் என்பர். அவ்வுறுப்பு எழுத்து, சொல், பொருள் முதலிய காரணங்களால் வெளிப்படுகின்றது.

இலக்கணக்கொத்து இதனை,

"எழுத்து சொற்பொரு ளாற்றல் மொழிப்பொருட்
காரண இவற்றுட் கருதுவ கருதுக"(7)

என்று குறிப்பிடுகின்றது.

பரிமேலழகர் தம்முடைய உரையில் ஏதுப்பெயரை மூன்று இடங்களில் சுட்டுகிறார்.

"அந்தணர் என்போர் அறவோர்மற் எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" (கு.எண்:30)

என்பதில் 'அந்தணர்' ஏதுப்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அந்தணர்' என்பது 'அழகிய தண்மையுடைவயர்' என்ற ஒரு காரணம் பற்றி வழங்கி வருவதாலும், அம்-அழகு; தண்-குளிர்ச்சி; அர்-விகுதி

என்று உறுப்பால் (எழுத்தால்) பொருள் உணர்த்துவதாலும் 'அந்தணர்' என்பது ஏதுப்பெயர் ஆயிற்று.

"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புணையைச் சுடும்" (கு.எண்:306)

இக்குறளுரையில் 'சேர்ந்தாரைக் கொல்லி' என்பது ஏதுப்பெயர் என்கிறார் பரிமேலழகர். சினம் என்பது அச்சினம் உள்ளவரையே கொள்ளும் தன்மையுடையது என்னும் காரணம் பற்றிச் 'சேர்ந்தாரைக்கொல்லி' என்று வழங்கி வருவதாலும் 'சேர்ந்தாரை' என்னும் உறுப்பும் 'கொல்லி' என்னும் உறுப்பும் சொல்லாற்றலால் சேர்ந்தவரையே கொள்ளும் என்னும் பொருளை உணர்த்துவதாலும் இது ஏதுப்பெயராயிற்று.

"நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்

அல்லல் படுப்பதூஉம் இல்" (கு.எண்:460)

இக்குறளுரையில் 'அல்லல்படுப்பது' என்பது ஏதுப்பெயர் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'அல்லல்படுப்பது' என்பது 'துன்பப்படுத்துவது' என்ற காரணத்தால் 'பகையைக் குறித்தலால்' இது ஏதுப் பெயர் ஆயிற்று எனலாம். மேலும் 'அல்லல்' என்னும் உறுப்பும் 'படுப்பது' என்னும் உறுப்பும் சொல்லாற்றலால் 'மிக்க பகை' என்ற பொருளை உணர்த்துவதாலும், ஏதுப்பெயர் ஆயிற்று என்றும் கூறலாம்.

உபசார வழக்கு

"காரணம் காரியமாகவும், காரியம் காரணமாகவும், குணம் குணியாகவும், குணி குணமாகவும், ஒரு பொருளின் வினை மற்றொரு

பொருளின் வினையாகவும், இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின் மேலாகவும், சினை வினை முதல் வினையாகவும், முதல்வினை சினைவினையாகவும் இவ்வாறு ஒன்றன் தன்மையை மற்றொன்றின் மீது ஏற்றிக் கூறுவது உபசார வழக்கு"[8] ஆகும்.

பிரயோக விவேகம் இதனை,

"மருளறு காரணங் காரியம் பேரோடு வந்துறமும், இரு
ளறு மொண்குணப் பேர் குணிப் பேர்வினை யோடி
யையும், பொருள்வினை மற்றொர் பொருளினுந்
தோன்றும் புலத்தொடுமாந், தெருளுறு பண்பு
புலனிவை மாறியுஞ் சேர்ந்திடுமே"[9]

என்று குறிப்பிடுகிறது.

வடநூலார் இதனை "ஔபசாரிகப்ரயோகம்"[10] என்று அழைக்கின்றனர்.

இதேபோன்று, "ஒரு பொருளை நேரே உணர்த்தும் பதம் அப்பொருளை உணர்த்தாது அதனோடு இயைபுடைய பிறிதொன்றை உணர்த்துவது இலக்கணை"[11] ஆகும். மேற்கூறிய இரண்டும் தமிழில் ஆகுபெயர்க்குப் பொருந்தி வருவதை அறிய முடிகின்றது. தமிழில் ஆகுபெயர் உண்டு, வடமொழியில் இல்லை. எனவே அம்மொழி இலக்கணத்தார் உபசார வழக்கு என்றும், இலக்கணை வழக்கு என்றும் கூறுகின்றனர். பரிமேலழகர் தமிழ் இலக்கணத்தைத் தழுவிச் சில இடங்களில் ஆகுபெரென்றும், வடமொழி இலக்கணத்தைத் தழுவிச் சில இடங்களில் உபசார வழக்கு, இலக்கணை வழக்கு என்று உரை கூறுவதை அறியமுடிகிறது.

பரிமேலழகர் தம்முடைய உரையில் பல இடங்களில் உபசார வழக்கினைச் சுட்டிச் செல்கிறார். ஆனால் ஆய்வில் அவை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி விளக்கப்படுகிறது.

1. காரணகாரிய உபசார வழக்கு
2. காரிய காரண உபசார வழக்கு
3. ஒன்றன் தன்மை மற்றொன்றுக்காய உபசார வழக்கு

காரண காரிய உபசார வழக்கு

காரணத்தின் தன்மையைச் காரியத்தின் மேல் ஏற்றிக்கூறுவது காரண காரிய உபசார வழக்கு ஆகும்.

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" (கு.எண்;62)

இக்குறளுரையில் தந்தை, தாயார் தீவினை செய்தற் பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யுந் தான தருமங்கட்டு அவர் நற்குணங் காரணமாகலின், 'பண்பு' என்னுங் காரணப் பெயர் காரியத்தின் மேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'பண்பு' என்பது பண்புடைய மக்களைச் சுட்டுகிறது. பண்புடைய மக்கள் என்னும் காரணம் அவர்களை (புதல்வர்கள்) 'நல்வினைகள்' என்ற காரியத்தின் மீது ஏற்றிக்கூறப்படுவதால் இது காரண காரிய உபசார வழக்கு ஆயிற்று.

"மக்கள்மெய் தீண்டலு டற்கின்ப மற்றவர்
சொற் கேட்ட லின்பஞ் செவிக்கு" (கு.எண்:65)

இக்குறளுரையில் 'தீண்டல், கேட்டல்' என்னும் காரணங்கள் காரியங்கள் மேல் நின்றன என்கிறார் பரிமேலழகர். ஒருவனது மெய்க்கு இன்பமாவது தன் மக்களுடைய மெய்யைத் தீண்டுதலாகும். செவிக்கு இன்பமாவது அவரது சொல்லைக் கேட்டலாகும் என்பது குறளின் கருத்து.

இங்கு 'தீண்டல், கேட்டல்' என்னும் காரணங்கள் அவற்றின் மூலம் உண்டாகும் 'இன்பம்' என்னும் காரியத்தின்மேல் ஏற்றிக் கூறுவதால் காரணம் காரியமாயிற்று எனலாம்.

"இலர்பல ராகிய காரண நோற்பார்

சிலர்பலர் நோலா தவர்" (கு.எண்:270)

உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாதெனின், அது தவஞ்செய்வார் சிலராக, அது செய்யாதார் பலராதல் ஆகும் என்பது குறளின் கருத்து. இக்குறளுரையில் 'நோற்பார் சிலர்' எனக் காரணங்கூறினமையின் காரியம் வருவித்து உரைக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'நோற்பார் சிலர்' என்ற காரணம் கூறியனமையால் அவற்றிற்காக 'செல்வர்கள் சிலர்' என்ற காரியம் வருவித்து உரைக்கப்பட்டது எனலாம்.

"தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது

வாஅய்மை வேண்ட வரும்" (கு.எண்:364)

இக்குறளுரையில் 'தூய்மையென்ப தவாவின்மை' என்பது காரணம் காரியமாக உபசாரிக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர். ஆசையற்ற தன்மையே தூய்மை ஆகும். அது உண்மைப் பொருளை நாடினால் தானே வரும் என்பது குறளின் கருத்து. இங்கு 'தூய்மை'

என்பது காரியம், அவாவின்மை என்பது காரணம். இக்குறளில் தூய்மைக்குக் காரணம் அவாவின்மை என்று சொல்லுவதைத் தவிர்த்து 'தூய்மை யென்ப அவாவின்மை' எனக் காரணத்தின் தன்மை காரியத்தின் மேல் ஏற்றிக் கூறப்பட்டதால் உபசார வழக்கு ஆயிற்று.

"இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்

துன்பத்துட் துன்பங் கெடின்" (கு.எண்:369)

இங்கு 'அவா' என்ற காரணம் 'துன்பம்' என்ற காரியமாக உபசரிக்கப்பட்டதால் 'அவாவென்னும் துன்பத்துள் துன்பம்' என்பதில் காரணம் காரியத்தின் மேல் ஏற்றப்பட்டது என்கிறார் பரிமேலழகர்.

பரிமேலழகர் தம்முடைய உரையில் மேலும் "சில இடங்களில்"(12) காரணம் காரியமாக உபசரித்தலைச் சுட்டுகிறார்.

காரிய காரண உபசார வழக்கு

காரியத்தின் தன்மையை காரணத்தின் மீது ஏற்றிக் கூறுவது காரிய காரண உபசாரவழக்கு ஆகும். பரிமேலழகர் தம்முடைய உரையில் இதனைப் "பதினெட்டு இடங்களில்"(13) சுட்டுகிறார்.

"தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்

தீவினை யென்னுஞ் செருக்கு" (கு.எண்:201)

இக்குறளுரையில் 'தீவினையென்னுஞ் செருக்கு' என, காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர். தீவினை என்று சொல்லப்படும் மயக்கத்தை தீய செயலினை உடையார்

செய்வதற்கு அஞ்சார். நல்லவர்கள் செய்வதற்கு அஞ்சுவர் என்பது குறளின் கருத்து. 'தீவினை' என்பது மனமயக்கத்தின் பயனாதலால் காரியம். 'செருக்கு' என்பது 'மனமயக்கம்' ஆகவே இது காரணம். இங்கு காரியமாகிய தீவினை காரணமாகிய செருக்காக உபசரிக்கப்பட்டதால் காரிய காரண உபசார வழக்காயிற்று.

"களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்
மாற்றல் புரிந்தார்க்கண் இல்" (கு.எண்:287)

தகுதிக்கேற்ப அளவோடும் அறிவோடும் வாழ்க்கை நடத்தும் மனவலிமை உள்ளவர்களிடத்தில் களவு என்னும் இருண்ட அறிவினை உடைய குணம் இல்லை என்பது குறளின் கருத்து. 'களவென்னுங் காரறிவாண்மை' என்பதில் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'காரறிவு' என்பது காரணம். 'களவு' என்பது காரியம். 'களவு' என்ற செயல் 'இருண்ட அறிவின்' காரணமாக உண்டாவதால் 'களவென்னுங் காரறிவாண்மை' எனக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது எனலாம்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு" (கு.எண்:358)

இக்குறளுரையில் 'பிறப்பென்னும் பேதைமை' எனவும் 'சிறப்பென்னும் செம்பொருள்' எனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'பிறப்பென்னும் பேதைமை' என்பது பிறப்பிற்குக் காரணமான பேதைமை எனவும் 'சிறப்பென்னும் செம்பொருள்' என்பது சிறப்பிற்குக் காரணமான

செம்பொருள் எனவும் விரியும். இவற்றில் பிறப்பும், சிறப்பும்; பேதைமை, செம்பொருள் ஆகியவற்றின் பயனைக்குறித்தலால் இது காரியம். பேதைமை, செம்பொருள் இரண்டும் காரணம். இவ்விடத்தில் காரியமாகிய 'பிறப்பு' காரணமாகிய பேதைமையாகவும், காரியமாகிய 'சிறப்பு' காரணமாகிய செம்பொருளாகவும் உபசரிக்கப்பட்டதால் காரியம் காரணமாயிற்று எனலாம்.

"இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்" (கு.எண்:627)

இக்குறளுரையில் 'கலக்கம்' என்னும் காரியப் பெயர் காரணத்தின் மேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'கலங்குதல்' என்னும் காரியப் பெயர் அதற்குக் காரணமான 'துன்பத்தின்' மேல் நின்றதால் காரியம் காரணமாயிற்று எனலாம்.

"கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று" (கு.எண்:1146)

இக்குறளுரையில் 'பாம்பு கொண்டற்று' என காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர். 'பாம்பு கொள்ளுதல்' என்பது காரணம். அதனால் தோன்றிய 'அலர்பரத்தல்' என்பது காரியம். இங்கு 'பாம்பு கொண்டற்று' என்பது திங்களைப் பாம்பு விழுங்குவதைப் போல அலரானது உலகெங்கும் பரந்தது என்ற காரியத்தைத் தெரிவித்தலால் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது எனலாம்.

"ஊடல் உணங்க விடுவாரோ என் நெஞ்சம்

கூடுவேம் என்ப தவா"

இக்குறளுரையில் 'கூடுவேமென்பதவா' என்பதில் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது என்கிறார் பரிமேலழகர். கூடுதலில் ஆசையுற்றவர் செயலாகிய (காரியம்) 'கூடுவேம்' என்பதனை அதற்குக் காரணமான 'அவர்' என்பதனோடு கொண்டு, 'கூடுவேமென்ப அவா' என்று கூறினமையால் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது எனலாம்.

"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்

புன்கண் உடைத்தாற் புணர்வு"

இக்குறளுரையில் 'புண்கண்' என்னும் காரியப்பெயர் காரணத்தின் மேல் நின்றது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'புண்கண்' என்னும் காரியப் பெயர் புல்லியவாய்க் கண்கள் தோன்றக் காரணமான அச்சத்தைக் காட்டுவதால் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது எனலாம்.

ஒன்றன் தன்மை மற்றொன்றுக்காய உபசார வழக்கு

ஒன்றனது தன்மை மற்றொன்றுக்கு ஆகிவருவது இவ்வுபசார வழக்கு ஆகும்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா

பிற்பகல் தாமே வரும்" (கு.எண்:319)

இக்குறளுரையில் 'தாமே வரும்' என்பது உபசார வழக்கு என்கிறார் பரிமேலழகர். பிறர்க்கு இன்னாதவற்றை செய்தால், அவை தமக்கு

இன்னாதவற்றிற்குக் காரணமாக அமையும் என்று சொல்ல வேண்டியதை அங்ஙனம் சொல்லாமல் பிறருக்கு இன்னா செய்தால் அவை தாமாகவே தமக்கு இன்னாதனவாய் வரும் எனக் காரணத்திடத்தில் காரியத்தின் தன்மையை ஏற்றிக் கூறியதால் இது ஒன்றன் தன்மை மற்றொன்றுக்காய உபசார வழக்கு என்கிறார் பரிமேலழகர்.

இலக்கணை

ஒரு பெயர்ச்சொல்லோ வினைச்சொல்லோ தத்தம் பொருளை உணர்த்தாது அப்பொருளுடன் தொடர்புடைய பொருளை உணர்த்துவது 'இலகைக்கணை' எனப்படும். வடமொழியில் 'லக்ஷணாப்ரயோகம்' என்பர்.

பிரயோக விவேகம் இலக்கணையின் விரிவான விளக்கத்தை,

"சின்மயஞ் சார்ந்தத் தம்பொருளின்றிச் சிலபதங்கள்
அன்வயஞ் சம்பந்தந் தாற்பறியத்தோட் அநுபபத்திச்,
சொன்மயந் தோன்றப் பொருள்வே றுணர்த்திற் றுடி
இடையாய், தன்மயஞ் சார்ந்த இலக்கணை யாமென்
பர் தார்க்கிகரே"(14)

என்கிறது.

நன்னூல் விருத்தியுரை இலக்கணையின் இலக்கணத்தையும் வகையையும் கீழ்க்கண்டவாறு விளக்குகிறது.

"இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருளுக்கு எடுத்துரைப்பது. அது விட்ட இலக்கணை,

விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும்."(15)

பரிமேலழகர் தம்முடைய உரையில் ஐந்து இடங்களில் இலக்கணை பற்றிச்சுட்டுகிறார்.

"வானுயிர் தோற்ற எவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்" (கு.எண்:272)

இக்குறளுரையில் 'வானுயர் தோற்றம்' என்பது இலக்கணை வழக்கு என்கிறார் பரிமேலழகர். இங்கு 'வானுயர் தோற்றம்' என்பது புகழினால் தேவலோகம் மட்டும் உயர்ந்த துறவற வடிவம் என்னும் பொருளை உணர்த்துவதால் 'வானுயர் தோற்றம்' என்பது இலக்கணை ஆயிற்று.

"நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்" (கு.எண்:802)

இக்குறளுரையில் 'உறுப்பு' என்பது ஈண்டு, இலக்கணடியாக வந்த குறிப்புச் சொல் என்கிறார் பரிமேலழகர். இங்கு பொருளுக்குக் கூறும் 'உறுப்பு' என்ற சொல்லைப் பண்பிற்குக் கூறியதால் இலகைக்கணையடியாக வந்த குறிப்புச் சொல் ஆயிற்று. குறிப்புச்சொல் என்பது குறிப்பால் பொருளுணர்த்தும் சொல் ஆகும். ஆகுபெயர் குறிப்புச் சொல்லில் ஒன்றாவதை,

"ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே
முதல் தொகை குறிப்போடு இன்ன பிறவும்
குறிப்பின் தருமொழி; அல்லன வெளிப்படை"(16)

என்ற நன்னூல் நூற்பா வாயிலாக அறியலாகிறது.

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா நுசுப்பிற்கு

நல்ல படாஅ பறை" (கு.எண்:1115)

இக்குறளுரையில் மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணைக் குறிப்பால் 'நுசுப்பின்' மேல் ஏற்றப்பட்டது என்கிறார் பரிமேலழகர். மரணம், சாப்பறை கொட்டல் இவையிரண்டும் மானுடர்க்கு உரியன. இவற்றை மானிடரின் உறுப்பாகிய மதநுசுப்பிற்கு ஏற்றி, 'நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை' என்றதனால் இலக்கணை ஆயிற்று எனலாம்.

"விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கண்

முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" (கு.எண்:1186)

இக்குறளுரையில் 'பார்க்கும்' என்பது இலக்கணைச் சொல் என்கிறார் பரிமேலழகர். இருளையும், பசப்பையும் அது வருதலை அறிய முடியாது. இருந்தபோதிலும் 'பார்க்கும்' என்பது 'உணர்தல்' என்பதற்கு ஆகிவந்தமையால் இலக்கணை ஆயிற்று.

"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவை என்னைத்

தின்னும் அவர்க்காண லுற்று" (கு.எண்:1244)

இக்குறளுரையில் 'தின்னுமென்பது' இலக்கணைக் குறிப்பு என்கிறார் பரிமேலழகர். கண்ணுக்குத் தின்ப தென்ற தொழிலில்லாமையால், 'தின்னுமென்பது' அத்தின்னுதலைச் செய்யுமென்ற பொருளைக் காட்டாமல், தின்பது போன்ற நலிவு செய்யும் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துவதால் இலக்கணை ஆயிற்று.

அருத்தா பத்தி

ஒரு சொல்லுக்கு இனமாகப்பிற சொல் இருக்கும் போது அவற்றுள் ஒரு சொல்லைக் குறிப்பிட்டுக் கூறிய வழிப் பொருளாற்றலால் அச்சொல் தனக்கு இனமான பிற சொல்லைக் குறிப்பால் உணர்த்துவது 'அருத்தாபத்தி' எனப்படும். இதனைத் தொல்காப்பியம்,

"எடுத்தமொழி இனம் செப்பலும் உரித்தே"(17)

என்னும் நூற்பாவால் குறிப்பிடுகிறது. "இந்நூற்பாவை 'அருத்தாபத்தி' என இளம்பூரணரும் தெய்வச் சிலையாரும் கருதுகின்றனர்"(18) பரிமேலழகர் தம்முடைய உரையில் அருத்தாபத்தியை "எட்டு இடங்களில்"(19) குறிப்பிடுகிறார்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (கு.எண்:236)

இக்குறளுரையில் 'மக்களாய்ப் பிறவாமை' என்பது அருத்தாபத்தியால் 'விலங்காய் பிறத்தல்' என வந்தது என்கிறார் பரிமேலழகர். இங்கு 'மக்களாய்ப் பிறவாமை' என்பது மக்களின் வேறான 'விலங்காய்ப் பிறத்தல்' என்பதைக் குறிப்பால் உணர்த்துவதால் இது அருத்தாபத்தி ஆயிற்று.

"பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது" (கு.எண்:811)

இக்குறளுரையில் தீக்குணமுடையார் என்பது அருத்தாபத்தியான் வந்தது என்கிறார் பரிமேலழகர். இங்கு

‘பண்பில்லாதவர்’ என்பது ‘நற்குணமில்லாதவர்’ என்பதைக் குறிக்கிறது. ‘நற்குணமில்லாதவர்’ என்பது அதற்கு இனமான ‘தீக்குணமுடையார்’ என்பதைச் செப்புவதால் அருத்தாபத்தி ஆயிற்று.

“வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்

வீழப் படாஅர் எனின்” (கு.எண்:1194)

இங்கு ‘கெழீஇயின்மை’ என்பது நல்வினை இன்மையைக் குறிக்கும். அது அருத்தாபத்தியால் அதற்கு இனமான ‘தீவினையுடைமையை’ச் செப்பிற்று என்கிறார் பரிமேலழகர்.

“உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்

புல்லாள் புலத்தக் கனள்” (கு.எண்:1316)

இக்குறளுரையில் ‘மறத்தல்’ என்பது அருத்தாபத்தியான் வந்தது என்கிறார் பரிமேலழகர். இங்கு ‘உள்ளினேன்’ என்பதற்கு நினைத்தேன் என்று பொருள் கொள்ளுமிடத்து மறந்ததையே நினைக்க வேண்டுமாதலால், ‘மறத்தல்’ என்பது அருத்தாபத்தியால் வந்தது எனலாம்.

உரையசை

“சிறிது பொருளுணர்த்தி வாக்கியத்தை அலங்கரித்து நிற்பது ‘உரையசை’ ஆகும். வடநூலார் இதனை ‘வாக்கியாலங்காரம்’ என்பர்”(20)

பரிமேலழகர் தம்முடைய உரையில் மூன்று இடங்களில் உரையசையைச் சுட்டுகிறார்.

"நத்தம் கேடும் உளதாகுஞ் சாக்காடும்

வித்தகர்க் கல்லா லரிது"

இக்குறளுரையில் 'போல்' உரையசை என்கிறார் பரிமேலழகர். செல்வம் தீர்ந்த பிறகு உண்டாகும் சிறப்பும் இறந்த பிறகு உண்டாகும் புகழும் அறிஞர்களுக்கு மட்டும் கிடைக்கும். மற்றவர்களுக்கு அரிது என்பது குறளின் கருத்து. இங்கு 'போல்' என்பது எவ்விதப் பொருளையும் உணர்த்தாமல் வாக்கியத்தைச் சிறிது அலங்கரிப்பதற்கு மட்டுமே பயன்படுகிறது. இவ்வாறு ஒரு வாக்கியத்தில் உவமைப் பொருள் உணர்த்தாமல் வரும் 'போல்' என்பதை தொல்காப்பியர் 'ஒப்பில்போலி' என்கிறார். இதனை,

"ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்"(21)

என்ற நூற்பா வாயிலாக அறியமுடிகிறது.

"அழல்போல் மாலைக்குத் தூதாகி ஆயன்

குழல்போலுங் கொல்லும் படை"

இக்குறளுரையில் பின்னின்ற 'போலும்' என்பது உரையசை என்கிறார் பரிமேலழகர். நெருப்புபோல சுடுவதாய மாலைப்பொழுது வரப்போகிறது என்பதற்குத் தூதாகவும் என்னைக் கொல்ல வரும் படையாகவும் வருகிறது ஆயனின் புல்லாங்குழல் என்பது குறளின் கருத்து. இங்கு முதலடியில் வந்த 'போல்' என்பது ஒப்புமைப் பொருளை உணர்த்துகிறது. ஆனால் இரண்டாம் அடியில் வரும் 'போல்' அவ்வாறு உணர்த்தாமல் வாக்கியத்தைச் சிறிது அலங்கரிக்க வருவதால் இது உரையசை ஆயிற்று.

"இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே

துனிசெய்து துவ்வாய்காண் மற்று" (கு.எண்:1294)

நெஞ்சே! நீ உடலைச் செய்து அதன் இன்பத்தைத் துய்க்கமாட்டாய் இனி அது பற்றி உன்னோடு கலந்து ஆலோசனை செய்யப்போவது யார்? என்பது குறளின் கருத்து. இங்கு 'காண்' என்பது எப்பொருளையும் உணர்த்தாமல் வாக்கியத்தை அலங்கரிக்க மட்டுமே வருவதால் 'காண்' என்பது உரையசை என்கிறார் பரிமேலழகர்.

சாதி ஒருமை

"ஒரு சொல் ஒருமை ஈறு தோன்ற நின்றும் தோன்றாது நின்றும் பின் ஒருமை வினை ஈறாக மேல்வந்து முடிக்கும் சொல்லைப் பெற்றும் பெறாதும் தானே பன்மைப் பொருளை உணர்த்துவது சாதி ஒருமை ஆகும். இதனை வடநூலார் 'ஜாத்யேக வசநம்' என்பர்"[22] இவற்றை

"ஆக்கும் பிரதி பத த்துடனே......"[23]

என்ற பிரயோக விவேககச் செய்யுளுரை வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் இச்செய்யுளுரை வாயிலாக ஈறுதோன்றிய சாதி ஒருமை, ஈறுதோன்றாத சாதி ஒருமை எனச் சாதி ஒருமை இருவகைப்படும் என்பதை அறியமுடிகிறது.

ஆனால் இலக்கணக்கொத்து இதனை, "உணர்திணைப் பொருளில் சாதி ஒருமை, அஃறிணைப் பொருளில் சாதி ஒருமை"[24] என வகைப்படுத்துகிறது.

சாதி ஒருமை என்னும் இலக்கணத்தைப் பரிமேலழகர் தம்முடைய உரையில் "இருபத்தி இரண்டு"[(25)] இடங்களில் சுட்டுகிறார். இவற்றில் சிலவை குறட்பாக்கள் மட்டுமே ஆய்வில் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்க
அதனினூங் இல்லை உயிர்க்கு" (கு.எண்:139)

இக்குறளுரையில் 'உயிர்' - சாதி ஒருமை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'உயிர்' என்பது மனித உயிரினைக் குறிப்பதால் இது மனித சாதியைச் சார்ந்தது. மேலும் 'உயிர்கள்' எனப் பன்மைப் பொருளில் வந்துள்ளமையால் ஈறு தோன்றாத சாதி ஒருமை ஆயிற்று.

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்" (கு.எண்:321)

இங்கு 'அறம்' என்பது 'அறங்கள்' எனப் பன்மைப் பொருளில் வந்துள்ளமையால் ஈறு தோன்றாத சாதி ஒருமை ஆயிற்று.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்" (கு.எண்:360)

இக்குறளுரையில் 'நோய்' என்பது சாதி ஒருமை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'நோய்' என்பது 'நோய்கள்' எனப் பன்மைப் பொருளில் வந்தமையால் ஈறு தோன்றாத சாதி ஒருமை ஆயிற்று.

"உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு" (கு.எண்:600)

இக்குறளுரையில் 'மரம்' சாதி ஒருமை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'மரம்' என்பது மரச்சாதியைக் குறித்தாலும், மேலும் 'மரங்கள்'

என பன்மைப் பொருளில் வருவதாலும் ஈறுதோன்றாத சாதி ஒருமை ஆயிற்று.

"ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்

போற்றலுள் எல்லாம் தலை" (கு.எண்:891)

ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சி என்னும் மூன்றலின் மேல் நிற்றலின் சாதி ஒருமை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஆற்றல்' என்பது 'ஆற்றல்கள்' என்னும் பன்மைப் பொருளில் வந்துள்ளமையால் ஈறு தோன்றாத சாதி ஒருமை ஆயிற்று.

"குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடும்

நாணின்மை நின்ற கடை" (கு.எண்:1019)

இங்கு 'நலம்' என்பது பிறப்பு, கல்வி, குணம், செயல், இனம் என்ற இவற்றின் வந்தன வெல்லாம் கொள்ளப்படும் என்கிறார் பரிமேலழகர். 'நலம்' என்பது 'நலத்தையெல்லாம்' எனப் பன்மைப் பொருளில் வந்துள்ளமையாமல் ஈறு தோன்றாத சாதி ஒருமை ஆயிற்று எனலாம்.

"இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை

துன்பம் உறாஅ வரின்" (கு.எண்:1052)

இக்குறளுரையில் 'துன்பம்' சாதி ஒருமை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'துன்பம்' என்பது பன்மை ஈறு தோன்றாமல் பலவகையான துன்பங்களைச் சுட்டுவதால் ஈறுதோன்றாத சாதி ஒருமை ஆயிற்று எனலாம்.

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்

நெஞ்சத்து அவலம் இலர்" (கு.எண்:1072)

இக்குறளுரையில் 'நன்று' என்பது சாதி ஒருமை என்கிறார் பரிமேலழகர். இங்கு 'நன்று' என்பது உறுதியான புகழ், அறம், ஞானங்கள் என்ற பன்மைப் பொருளைச் சுட்டுவதால் ஈறு தோன்றாத சாதி ஒருமை ஆயிற்று.

வடமொழித் திரி சொல்

ஆரிய மொழி தமிழில் வந்து வழங்கும் போது சில எழுத்துக்கள் திரிந்தும், திரியாமல் அப்படியே வந்து வழங்குதலும் உண்டு. அவ்வாறு தமிழில் வந்து வழங்குதலை தமிழ் இலக்கண நூலார்,

1. தற்சமம்
2. தற்பவம்

என இரண்டாகப் பகுக்கின்றனர்.

"ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொதுவெழுத்தால் ஆகி தமிழில் இயல்பாக வந்து வழங்கும் வடமொழியைத் 'தற்சமம்' என்பர்"(26)

"ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், ஆரியத்திற்கே உரிய பொதுவும் சிறப்பும் ஆகிய ஈரெழுத்தாலும் ஆகித்திரிதல் முதிலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் வடமொழியைத் 'தற்பவம்' என்பர்."(27) இதனை,

"இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்
அல்லா அச்சு ஐவருக்கம் முதல் ஈறு....."(28)

என்ற நன்னூல் நூற்பா வாயிலாக அறியலாம்.

"உருளாயம் ஒவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்" (கு.எண்:933)

இக்குறளுரையில் 'ஆயம்' வடமொழித்திரிசொல் என்கிறார் பரிமேலழகர். இங்கு 'ஆயம்' என்பது வடமொழிச்சொல். இது எவ்விதத்திரிபும் இன்றித் தமிழில் வழங்கி வருவதால் 'தற்சமம்' ஆகும். ஆனால் வடமொழி திரிசொல் என்றது ஒரு மொழியில் இருந்து மற்றொரு மொழியில் வழங்கி வருதலை திரிபெனப் பரிமேலழகர் கூறி இருக்கலாம். இவையன்றி 'ஆயம்' என்ற சொல்லில் எழுத்து மாறுபாடு எதுவும் இல்லை எனலாம்.

பரிமேலழகரால் தம்முடைய உரையில் சுட்டப்பட்ட பிற இலக்கணக் கூறுகளும் அவை இடம் பெற்ற குறட்பாக்களும் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தப்படுகின்றன.

வ.எண்	இலக்கணக்கூறுகள்	இடம் பெற்றுள்ள குறட்பாக்கள்
1.	ஒருசொல் நீர்மை	*653, 804*
2.	ஒரு பொருட்கிளவி	*351, 563, 782*
3.	தாற்பரியம்	*139, 509*
4.	ஏதுப்பெயர்	*30, 306, 460*
5.	உபசாரவழக்கு	
	(i) காரண காரிய உபசாரவழக்கு	*62, 65, 228, 254, 270, 364, 369, 487, 582, 652, 928, 1231*
	(ii) காரிய காரண உபசாரவழக்கு	*201, 254, 287, 349, 352, 358, 383, 425, 456, 474, 627, 689, 708, 844, 860, 1146, 1152, 1310*
	(iii) ஒன்றன் தன்மை மற்றொன்றுக்காய உபசார வழக்கு	*319, 384*
6.	இலக்கணை	*272, 802, 1115, 1186, 1244*
7.	அருத்தாபத்தி	*236, 242, 256, 811, 851, 853, 1194, 1316*
8.	உரையசை	*235, 1228, 1294*
9.	சாதி ஒருமை	*29, 43, 122, 139, 321, 334, 360, 367, 600, 648, 735, 891, 1013, 1019, 1052, 1072*

தொகுப்புரை

1. வடமொழி, தமிழ் இரண்டிலும் புலமை உடையவர் பரிமேலழகர் என்பதை அறியமுடிகிறது.

2. பரிமேலழகர் குறிப்பிடும் இலக்கணக் கூறுகளைப் பிற்கால இலக்கண நூலார் பின்பற்றுவதை அறியமுடிகிறது.

3. ஆகுபெயருக்கு மாற்றாக வடமொழியில் உபசாரவழக்கு, இலக்கணை வழக்கு ஆகியவை பயன்படுவதை அறியமுடிகிறது.

4. சாதி ஒருமை என்னும் இலக்கணக் கூறினைப் பரிமேலழகர் அதிகபட்சமாக இருபத்தி இரண்டு இடங்களில் சுட்டுவதை அறியமுடிகிறது.

5. தமிழ் இலக்கணக் கூறுகளுக்கும் வடமொழிப் பெயரிட்டு அழைக்கும் மரபு பரிமேலழகர் இடத்தில் இருப்பதை அறியமுடிகிறது.

6. தொல்காப்பியர் சுட்டும் 'ஒப்பில் போலி' என்பதைப் பரிமேலழகர் 'உரையசை' எனச் சுட்டுகிறார்.

சான்றெண் விளக்கம்

1. பிரயோக விவேகம், திங்ஙப்படலம், செய்.45.

2. மேலது, செய்.45உரை, ப.83.

3. பிரயோக விவேகம், திங்ஙப்படலம், செய்.50.

4. மேலது, செய்.50 உரை.

5. இ. சுந்தரமூர்த்தி, நுண்பொருள் மாலை, ப.34.

6. யாப்பருங்கலக் காரிகை, சூத்திரம்.4 மேற்கோள்.

7. இலக்கணக் கொத்து, ஒழிபியல், செய்.16.

8. தமிழ்ச் சொல்லகராதி, மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு, ப.646.

9. பிரபோக விவேகம், திங்ஙப்படலம், செய்.48.

10. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார், ப.137.

11. தமிழ்ச்சொல்லகராதி, மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு, ப.546.

12. குறள்: 223, 254, 487, 582, 625, 928, 1231.

13. குறள்:201, 254, 287, 349, 352, 358, 383, 425, 456, 474, 627, 689, 708, 844, 860, 992, 1146, 1152, 1310

14. பியோக விவேகம், திங்ஙப்படலம், செய்.47.

15. நன்னூல், விருத்தியுரை, ப.215.

16. நன்னூல், பெயரியல், நூ.12.

17. தொல்காப்பியம், கிளவியாக்கம், நூ.60.

18. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணர் உரை, ப.35. தெய்வச்சிலையார் உரை, ப.34.

19. குறள்: 236, 242, 256, 811, 851, 853, 1194, 1316.

20. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்,

வை.மு.கோபாலகிருஷ்ண மாச்சாரியார் உரை, ப.165.

21. தொல்காப்பியம், இடையியல், நூ.30.

22. பிரயோக விவேகம், திங்ஙப்படலம், ப.92.

23. மேலது, செய்.50.

24. இலக்கணக்கொத்து, ஒழிபியல், செய்.44.

25. குறள்: 29, 43, 122, 139, 321, 334, 360, 367, 410, 433, 573, 600, 627, 648, 663, 664, 735, 891, 1013, 1019, 1052, 1072.

26. நன்னூல், காண்டிகை உரை, ப.82.

27. மேலது, ப.83.

28. நன்னூல், பதவியல், நூ.19.

முடிவுரை

முடிவுரை

ஆய்வில் கண்டறியப்பெற்ற ஆறு இயல்களின் ஆய்வு முடிவுகள் இத்தொகுப்புரையில் இடம் பெற்றுள்ளன.

1. பரிமேலழகர் பெரும்பாலும் தொல்காப்பியத்தின் வழியே தம் இலக்கணக் கூறுகளைச் சுட்டுகிறார். சில இடங்களில் தொல்காப்பிய நூற்பா அப்படியே எடுத்தாளப்படுகிறது.

2. புறத்திணைக் கூறுகளைச் சுட்டும்போது மட்டும் புறப்பொருள் வெண்பாமாலையைக் கையாளப்படுகிறது.

3. சேனாவரையரும், பரிமேலழகரும் கருத்தாலும், காட்டுகின்ற உவமையாலும் ஒன்றுபடுவதை அறியமுடிகிறது.

4. ஒன்பது வகை செய்யுள் விகாரங்களுள் வலித்தல், மெலித்தல், இடைக்குறை, கடைக்குறை ஆகியவற்றை மட்டுமே பரிமேலழகர் குறிப்பிடுகிறார். அதிகபட்சமாகத் தொகுத்தல் விகாரம் பதினேழு இடங்களில் சுட்டப்படுகின்றன.

5. பரிமேலழகர் சுட்டிய இலக்கணக் கூறுகளுக்கு வலிமை சேர்க்கும் பொருட்டு இலக்கிய மேற்கோள்களும் பிற தொடர்களும் எடுத்தாளப்படுகின்றன.

6. குற்றியலுகரத்தை அடுத்தும் ‘உடம்படுமெய்’ வரும் என்பதைப் பரிமேலழகர் ஓரிடத்தில் நிறுவுகிறார்.

7. பல்வகையான சாரியைகளுள் பரிமேலழகர் தொல்காப்பியம் சுட்டிய சாரியைகளை மட்டுமே குறிப்பிகிறார்.

8. பரிமேலழகர் சுட்டும் இலக்கணக் கூறுகளில் ஆகுபெயர்களே மிகுதியாக இடம்பெறுகிறது. ஆனால் அவற்றை வகைப்படுத்தி சுட்டவில்லை.

9. உம்மைகளும், எச்சங்களும் ஆகுபெயருக்கு அடுத்தபடியாக பரிமேலழகரால் சுட்டப்படுகிறது.

10. பரிமேலழகர் குறிப்பிடும் 'கொல்' என்னும் அசைச்சொல், 'ஒருபொருட் பன்மொழி' ஆகியவை நன்னூலில் காணப்படுகின்றன. இதன் மூலம் பரிமேலழகர் நன்னூலாருக்குப் பிற்பட்டவர் என்பதை விளக்கி நிற்கிறது.

11. வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக வந்தால் அவ்வுருபுகள் தரும் பொருளைச் சுட்டலும், தொக்கி வந்தால் அவற்றை செய்யுள் விகாரமாக்கலும் ஆகிய தன்மைகள் இவரது உரையின் மூலம் விளங்குகின்றன.

12. 'ஏகாரம்' என்னும் இடைச்சொல்லை தேற்ற ஏகாரம், ஈற்றசை ஏகாரம் என வகைப்படுத்தியுள்ளமையைக் காண முடிகிறது.

13. ஓகார இடைச்சொல், மற்று - என்னும் இடைச்சொல் பற்றியும், பல்வேறு அசைநிலைகள் பற்றியும் பல இடங்களில் குறிப்பிடுவதையும் காண முடிகிறது.

14. தொகை நிலைத் தொடர் மொழிகளை உரையாசிரியர்களின் பகுப்பின் அடிப்படையில் பல இடங்களில் பரிமேலழகர் குறிப்பிடுவதைக் காண முடிகிறது.

15. வேற்றுமை உருபுகள் தொக்கி வருதலையும், தம்முள் தாம் மயங்கி வருதலையும் சுட்டுவதோடு வேற்றுமை மயக்கம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

16. வழுவமைதியாகக் கொள்ளப்படுவனவற்றுள், பரிமேலழகர் இடவழுவமைதியை மட்டுமே குறிப்பிடுகிறார்.

17. பொருள் இலக்கணக் கூறுகளில் புறத்திணைக் கூறுகளை அதிகமான இடங்களில் சுட்டுகிறார்.

18. புறத்திணைக் கூறுகளைப் பெரும்பாலும் புறப்பொருள் வெண்பா மாலையில் இருந்து சுட்டுவதை அறியமுடிகிறது.

19. தொல்காப்பியப் புறத்திணை இயலின் வளர்ந்த நிலையாகப் புறப்பொருள் வெண்பாமாலை இருப்பதால், இந்நூலைப் பின்பற்றிப் புறத்திணைப் கூறுகளைப் பரிமேலழகர் பயன்படுத்தியுள்ளார்.

20. பொருள் இலக்கணக் கூறுகளைப் பெரும்பாலான இடங்களில் உரைவிளக்கத்திற்கு மட்டுமே பரிமேலழகர் பயன்படுத்தியுள்ளார்.

21. குறிப்பிட்ட சொல்லின் பொருளை விளக்க மட்டுமே அகத்திணை இயல், செய்யுளியல், களவியல் நூற்பாக்களை பரிமேலழகர் கையாளுவதை அறியமுடிகிறது.

22. திருக்குறளில் 'அணி' என்ற சொல்லாட்சி இல்லை. மாறாகப் பரிமேலழகரால் 'அலங்காரம்' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.

23. பரிமேலழகர் சுட்டும் எடுத்துக்காட்டு உவமை, பிரிது மொழிதல், ஏகதேச உருவகம் ஆகியவை தண்டியலங்காரத்தில் வெவ்வேறு பெயர்களில் இடம்பெற்றுள்ளன.

24. திருக்குறளில் பரிமேலழகர் பதிமூன்று வகையான அணிகளைச் சுட்டுகிறார். அவற்றுள் எடுத்துக்காட்டு உவமையணி, ஏகதேச உருவக அணி, பிரிது மொழிதல் அணி ஆகியவை மிகுதியான இடங்களில் பயின்று வருவதைக் காணமுடிகிறது.

25. பரிமேலழகர் மட்டுமே 'எடுத்துக்காட்டு உவமை' என்னும் சொல்லாட்சியைக் கையாளுகிறார். தண்டியலங்காரத்தில் இது 'மருபொருளுவமை' எனப் பெயர் பெறுகிறது.

26. பரிமேலழகர் சுட்டும் 'பிரிது மொழிதல் அலங்காரம்' தண்டியில் 'ஒட்டணி' என வழங்கப்படுவதைக் காணமுடிகிறது.

27. அணிகளை விளக்கிப் பரிமேலழகர் சில இடங்களில் பிறஇலக்கியங்களில் இருந்து மேற்கோள் காட்டுவதைக் காணமுடிகிறது.

28. திருக்குறளில் யாவருக்கும் தெரியும் படியாக அமைந்துள்ள அணிகளைப் பரிமேலழகர் தம்முடைய உரையில் குறிப்பிடவில்லை எனக் கூறலாம்.

29. உபசார வழக்கு, இலக்கணை வழக்கு, தாற்பரியம் ஆகியவற்றைப் பரிமேலழகர் சுட்டுவதிலிருந்து, அவர் வடமொழிப் புலமை மிக்கவர் என்பது புலனாகிறது.

30. ஆகுபெயருக்கு மாற்றாக வடமொழியில் உபசார வழக்கு, இலக்கணை வழக்கு ஆகியவை பயன்படுவதை பரிமேலழகர் உரை வழி அறியமுடிகிறது.

31. பரிமேலழகர் சுட்டும் இலக்கணக் கூறுகளைப் பின்பற்றி பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, மாறனலங்காரம் போன்ற நூல்கள் எழுதப்பட்டுள்ளமையையும் அறியமுடிகிறது.

32. தமிழ் இலக்கணக் கூறுகளுக்கு வடமொழி பெயரிட்டு அழைக்கும் மரபு பரிமேலழகரிடத்தில் உள்ளதை இவ்வாய்வு விளக்குகிறது.

33. தொல்காப்பியம் சுட்டும் ‘ஒப்பில் போலி’ என்பதைப் பரிமேலழகர் ‘உரையசை’ எனக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

34. பரிமேலழகர் யாப்பிலக்கணக் கூறுகளை ஓரிடத்தில் கூட குறிப்பிடவில்லை.

35. குறளில் ஒரே சொல் இரண்டுமுறை வந்த இடத்தில் ஒன்றனுக்கு இலக்கணம் கூறும் போது, அச்சொல்லிற்கு முன்னுள்ள, பின்னுள்ள சொல்லையும் இணைத்துச் சுட்டி விளக்கியுள்ளமை சிறப்பாகும்.

36. திருக்குறள் பரிமேலழகர் உரையில் சொல் இலக்கணக் கூறுகள் மிகுதியாகப் பயின்று வருவதை இவ்வாய்வு விளக்கி நிற்கிறது.

37. பிறர் உரையை மறுக்கும் போதும், உடம்படும் போதும் பரிமேலழகர் தம் இலக்கணப்புலமை வெளிப்பட்டு நிற்கிறது.

38. எல்லாவற்றுக்கும் மேலாகப் பரிமேலழகர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி மற்றும் வடமொழிப்புலமை நிறைந்தவர் என்பதையும் இவ்வாய்வு விளக்கி நிற்கக் காணலாம்.

துணைநூற்பட்டியல்

துணைநூற்பட்டியல்

முதன்மைச் சான்றாதாரங்கள்

1. அமிர்தசாகரர், யாப்பருங்கலம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1972.

2. இளம்பூரணர் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு,1963.

3. மேலது, தொல்காப்பியம் சொல்லதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு,1974.

4. மேலது, தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு,1972.

5. இளங்குமரன், இரா., இலக்கண வரலாறு,
மணிவாசகர் பதிப்பகம்,
பாரிமுனை, சென்னை,
முதற்பதிப்பு, 1988.

6. மேலது, தொல்காப்பியம்
பொருளதிகாரம்,
சாரதா பதிப்பகம்,
6/16, தோப்பு வேங்கடாசலம்
தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை,
ஆறாம் பதிப்பு, 2008.

7. இளவரசு, சோம., புலவர் நன்னூல் எழுத்ததிகாரம்,
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை,
இரண்டாம் பதிப்பு, 2005.

8. மேலது, நன்னூல் பொருளதிகாரம்,
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை,
இரண்டாம் பதிப்பு, 2005.

9. ஐயானாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை, மறுபதிப்பு, 1972.

10. கல்யாண சுந்தரனார், திரு.வி. திருக்குறள் விரிவுரை,
சாது அச்சுக் கூடம்,
சென்னை, 1939,
(பதிப்பு எண் இல்லை).

11. குணவீர பண்டிதர்	நேமிநாதம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1964.
12. குமாரசுவாமிப்பிள்ளை, அ.,	யாப்பருங்கலக் காரிகையும், குணசாகரர் இயற்றிய உரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1973.
13. சங்கர வள்ளி நாயகம், அ.,	திருக்குறள் விரிவுரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு, 1997.
14.சங்கர நமச்சிவாய புலவர்,	நன்னூல் மூலமும் விருத்தியுரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, மறுபதிப்பு, 1971.
15. சடகோப ராமானுஜார்ய சுவாமிகள், வை.மு.,	திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், ஆர்.ஜி அச்சுக் கூடம், (ஊர்ப்பெயர் இல்லை),1973.

16. சுப்பிரமணியாச்சாரியார், வெ.சு., திருக்குறளும் காலமும்,
ஸ்ரீதேவி அச்சகம்,
பிராட்வே,
சென்னை,
முதற்பதிப்பு, 1956.

17. சுப்பிரமணிய சாரஸ்திரி, பி.எல்., தொல்காப்பிய
சொல்லதிகாரக் குறிப்பு,
எம்.எஸ் அச்சகம்,
(ஆண்டு, பதிப்பு எண் இல்லை).

18. சுப்ரமணிய தீட்சிதர், பிரயோக விவேகம் மூலமும்
உரையும்,
ஆறுமுக நாவலர் (ப.ஆ),
வித்தியாநுபாலன எந்திரசாலை,
இரண்டாம் பதிப்பு,
(ஆண்டு இல்லை).

19. சுவாமி நாத தேசிகர், இலக்கணக் கொத்து மூலமும்
உரையும்,
ஆறுமுக நாவலர் (ப.ஆ),
வித்தியாதுபாலன எந்திரசாலை,
இரண்டாம் பதிப்பு,
(ஆண்டு இல்லை).

20. சேனாவரையர், தொல்காப்பியம்
சொல்லதிகாரம்,
சாரதா பதிப்பகம்,
இராயப்பேட்டை,
சென்னை,
முதற்பதிப்பு, 2005.

21. தண்டியாசிரியர், தண்டியலங்காரம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1971.

22. திருக்குருகைப் பெருமாள் கவிராயர் மாறனலங்காரம் மூலமும்
உரையும்,
தமிழ்சங்க முத்திராசாலை,
(மதுரைத் தமிழ்சங்க பதிப்பு)
இரண்டாம் பதிப்பு, 1929.

23. திருநாவுக்கரசு, கு.மா., தொல்காப்பிய வழிகாட்டி,
(சொல்லதிகாரம்-
சேனாவரையர் உரைவிளக்கம்)
கணேஷ் பிரிண்டிங் ஒர்க்ஸ்,
மதுரை,
முதற்பதிப்பு, 1963.

24. தெய்வச்சிலையார், தொல்காப்பியம்
சொல்லதிகாரம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
ஆறாம்பதிப்பு, 2008.

25. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம்
எழுத்ததிகாரம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1974.

26. மேலது, தொல்காப்பியம்
சொல்லதிகாரம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
முதல்பதிப்பு, 1962.

27. நாராயண வேலுப்பிள்ளை வித்துவான் நம்பியகப்பொருள்
தெளிவுரை,
முல்லை நிலையம்,
தி.நகர்,
சென்னை,
மறுபதிப்பு, 2005.

28. பவணந்த முனிவர் நன்னூல்மூலம்(விருத்தியுரை)
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1971.

29. புத்த மித்திரனார், வீரசோழியம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1970.

30. புலியூர்க்கேசிகன், (ப.ஆ) திருக்குறள் பரிமேலழகர் உரை,
பூம்புகார் பதிப்பகம்,
63, பிராட்வே,
சென்னை,
ஏழாம்பதிப்பு, 1998.

31. மேலது — புறப்பொருள் வெண்பாமாலை
தெளிவுரை,
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை,
மறுபதிப்பு, 2005.

32. பேராசிரியர், — தொல்காப்பியம்
பொருளதிகாரம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1975.

33. மாணிக்கம், அ., புலவர் — திருக்குறள் தெளிவுரை,
மணிவாசகர் பதிப்பகம்,
8,7, சிங்காரத் தெரு,
பாரிமுனை, சென்னை,
முதற்பதிப்பு, 1983.

34. முத்துவீர உபாத்தியாயர், — முத்துவீரியம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1972.

35. இராமலிங்க தம்பிரான், — தண்டியலங்கார உரை,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
18-ஆம் பதிப்பு, 1992.

36. வடிவேலு செட்டியார், கோ., திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,சென்னை, ஒன்பதாம் பதிப்பு, 1953.

37. வித்துவான் நாராயண வேலுப் பிள்ளை நன்னூல் தெளிவுரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு, 1996.

38. வெள்ளைவாரணன். க., தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம், பாண்டியன் அச்சகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1970.

39. வேங்கடசாமி நாட்டார்,ந.மு., யாப்பருங்கலக்காரிகை மூலமும் குணசாகரர் இயற்றிய உரையும், முல்லை நிலையம், தி.நகர், சென்னை, முதற்பதிப்பு, 2004.

40. வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கம் (எழுத்து, சொல்), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு, 1973.

துணைமைச் சான்றாதாரங்கள்

1. அடைக்கலசாமி, எம்.ஆர்., தமிழ் இலக்கிய வரலாறு,
பார்நிலா பதிப்பகம்,
லொயோலா நகர்,
சென்னை,
பதினைந்தாம் பதிப்பு, 1974.

2. அரவிந்தன், மு.வை., உரையாசிரியர்கள்,
மணிவாசகர் நூலகம்,
சென்னை,
முதற்பதிப்பு 1968.

3. அருணாச்சலம், ப., குறளின் செய்தி,
இந்தியப்பகுதி மலாயா
பல்கலைக்கழகம்,
முதற்பதிப்பு, 1968.

4. இச்ரேயேல், மோ., இலக்கண ஆய்வு வினைச்செயல்,
மதுரை பப்ளிஷிங் ஹவுஸ்,
மதுரை,
முதற்பதிப்பு 1976.

5. காசிப் பாண்டியன், திருவள்ளுவர் எழுதியது
முப்பாலா,
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை,
முதற்பதிப்பு 2001.

6. கோவிந்தசாமி, மு., திருக்குறள் பொருளகராதி,
திருக்குறள் ஆராய்ச்சித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

7. மேலது — பரிமேலழகர்,
அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்,
சிதம்பரம்,
முதற்பதிப்பு 1978.

8. கோதண்டபாணிப்பிள்ளை, கு. — முதற்குறள் உவமை,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழக லிமிடெட்,
இரண்டாம் பதிப்பு 1965.

9. சச்சிதானந்தம், வை., — ஒப்பிலக்கியம்,
ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ்,
சென்னை,
1973.

10. சண்முகம்பிள்ளை, மு., — திருக்குறள் அமைப்பும் முறையும்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

11. சாரதாம்பாள், செ., — செவ்வியல்,
ஐந்திணைப் பதிப்பகம்,
சென்னை,
1988.

12. சிவஞானசுவாமிகள், — தொல்காப்பியச் சூத்திரவிருத்தி,
ஆறுமுக நாவலர் (ப.ஆ),
வித்தியாநுபாலன எந்திரசாலை,
சென்னை,
இரண்டாம் பதிப்பு.
(வருடம் இல்லை)

13. சிவசூரியன், அ. — திருக்குறள் உரை வரலாறு,
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை,
முதற் பதிப்பு 2001.

14. சுந்தரமூர்த்தி, கு., — திருக்குறள் அணிநலம்,
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை,
முதற்பதிப்பு 1971.

15. மேலது, — நடையியல் ஓர் அறிமுகம்,
அன்பு நூலகம்,
சென்னை,
1978.

16. மேலது — திருக்குறள் பரிமேலழகர் உரைத்திறன்,
ஐந்திணைப் பதிப்பகம்,
சென்னை,
முதற்பதிப்பு, 1980.

17. மேலது — நுண்பொருள் மாலை,
திரிமேணி காரிரத்தின கவிராயர்,
தேன்மொழி நூலகம்,
சென்னை,
முதற்பதிப்பு, 1980.

18. சுந்தர ஆவுடையப்பன், — திருக்குறள் எளிய உரை,
தென்றல் நிலையம்,
12பி, மேலச் சன்னதி,
சிதம்பரம்,
இரண்டாம் பதிப்பு 2005.

19. செல்லப்பா, சி.சு., தமிழ் இலக்கிய விமர்சனம்,
எழுத்து பிரசுரம்,
சென்னை,
1974.

20. ஞானசம்பந்தன், அ.ச., இலக்கியக்கலை,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
மறுபதிப்பு, 1956.

21. தண்டபாணி தேசிகர், ச., திருக்குறள் அழகும் அமைப்பும்,
தொல்காப்பியர் நூலகம்,
சென்னை.

22. தமிழண்ணல் புதிய நோக்கில் தமிழ் இலக்கிய
வரலாறு,
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை,
16-ஆம் பதிப்பு 2000.

23. திருநாவுக்கரசு, க.த., சான்றோர் கண்ட வள்ளுவர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை,
முதற்பதிப்பு 1977.

24. நடராஜன், தி.சு., திறனாய்வுக்கலை,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
அம்பத்தூர், சென்னை,
முதற்பதிப்பு 1996.

25. பரந்தாமனார், அ.கி., — நல்ல தமிழ் எழுத வேண்டுமா?
பாரி நிலையம்,
184. பிரகாசம் சாலை,
சென்னை,
14ஆம் பதிப்பு 2002.

26. பரிமேலழகர் (உ.ஆ), — திருக்குறள் மூலமும் உரையும்,
திருமகள் நிலையம்,
55, வெங்கட் நாராயணன் சாலை, தி.நகர்,
சென்னை,
1998.

27. பாலசுப்பிரமணியன், சி., — தமிழ் இலக்கிய வரலாறு,
நறுமலர்ப் பதிப்பகம்,
சென்னை,
1983.

28. பிச்சமூர்த்தி, ந., — திறனாய்வும் தமிழ் இலக்கிய கொள்கைகளும்,
சக்தி வெளியீடு,
சென்னை,
1983.

29. மோகன், இரா.,
நெல்லை சொக்கலிங்கம்,ந., — உரை மரபுகள்,
மெய்யப்பன் பதிப்பகம்,
53, புதுத் தெரு,
சிதம்பரம்,
முதற்பதிப்பு 2003.

30. இரமா, தி., — திருவள்ளுவர் களவியல் கோட்பாடு,
தியாகராசா பதிப்பகம்,
1411, வள்ளுவர் நகர்,
காரைக்குடி,
முதற்பதிப்பு 2001.

31. இராமசாமி, ஆ.வே., திருக்குறள் தரும் உவமை இன்பம், செல்வி பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு 1967.

32. இராமலிங்கம், மா., இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம், தமிழ் புத்தகாலயம், சென்னை, 1973.

33. வரதராசன், மு., இலக்கியத்திறன், பாரி நிலையம், சென்னை, 1965.

34. மேலது, இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 1997.

35. மேலது, தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புது தில்லி, 18ஆம் பதிப்பு, 2003.

36. விமலானந்தம், மது.ச., தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1979.

மடத்துப் பதிப்புகள்

1. குன்றக்குடி அடிகளார் தவத்திரு., வள்ளுவர் நெறி, குன்றக்குடி மடம், குன்றக்குடி.

2. முத்துக்குமாரசுவாமி தம்பிரான், திருக்குறள் மூலமும் உரையும், திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடு, காசி மடம், திருப்பனந்தாள், 1968.

3. மேலது, திருக்குறள் உரைக்கொத்து காசி மடம், திருப்பனந்தாள், இரண்டாம் பதிப்பு 1957.

ஆய்வுக்கோவைகள்

மோகன், இரா., மணிவேல், மு., நாச்சிமுத்து, கி., சேது பாண்டியன், து., (ப.ஆ.) ஆய்வுக்கோவை - 2006, முதல் தொகுதி, இந்தியப் பல்கலைக் கழக தமிழாசிரியர் மன்றம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 2006.

அகராதிகள், கலைக்களஞ்சியங்கள்

1. அனவரத விநாயகம் பிள்ளை, எஸ்., தமிழகராதி, ரிப்பன் பிரஸ், சென்னை, 1972.

2. கதிரைவேற்பிள்ளை, நா., தமிழ் மொழியகராதி,
ஏசியன் எச்சுக்கேசனல்
சர்வீஸ்,
சி 2/15, எஸ்.டி.ஏ.,
புதுதில்லி,
ஆறாம் பதிப்பு 1984.

3. சச்சிதானந்தம், வை, (தொ.ஆ), மேலை இலக்கியச்
சொல்லகராதி,
மாக்மில்லன் கம்பெனி,
சென்னை,
1983.

4. .... தமிழ்ச்சொல்லகராதி,
முதல் பகுதி,
மதுரைத் தமிழ்ச் சங்க
வெளியீடு,
மதுரை.

5. .... கழகத் தமிழ் அகராதி,
தென்னிந்திய சைவ
சித்தாந்தநூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை,
1969.

6. .... கலைக்களஞ்சியம் (தொ.1)
சென்னைப் பல்கலைக்
கழகம், சென்னை,
1953.

7. .... கலைக்களஞ்சியம் (தொ.4)
தமிழ் வளர்ச்சிக்கழகம்,
சென்னைப் பல்கலைக்
கழகம், சென்னை,
1960.

8. .... கலைக்களஞ்சியம் (தொ.7) தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1953.

9. .... கலைக்களஞ்சியம் (தொ.8) தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1953.

10. பக்தவச்சலு, சி., வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி 8), தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1998.

11. .... Encyclopaedia Brittanica (Vol.6), The University of Chicaco, Printed in U.S.A., London, 1768.

12. .... Encyclopaedia Brittanica (Vol.6), The University of Chicaco, Printed in U.S.A., London, 1768.

இதழ்கள், மலர்கள்

1. தமிழ்ச்சங்க வெளியீடு செந்தமிழ், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

2. மெய்யப்பன், சா., (பொ.ஆ), வள்ளுவம், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

3. முத்துச்சண்முகம் (ப.ஆ), வையை, வியாழ வட்டக் கருத்தரங்கம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1974-75.

4. நெடுஞ்செழியன், இரா., (மலர்க்குழுத் தலைவர்) ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு, மதுரை, 1981.

ஆங்கில நூல்கள்

1. Meenakshi Sundaram, T.P., Tolkappoiyam Literary Theory, Iynthinai pathippagam, Chennai, 1966.

2. Dr. Kodumudi Sundaram, Tolkappiyam Reviewed, Mullai Nilayam, T. Nagar, Chennai, 2003.

3. Dr. Loganathan, K., Tolkappiyam Studies Campus, Pari Nilayam, Chennai.

4. Dr. Murugan. V., — Tolkappiyam in English at Tamil Nool, Saratha pathippagam, Triplicane, Chennai.

5. Thamodaram pillai, C.W., — Tolkappiyam in English, lynthinai Pathippagam, Chennai, 1967.

6. Dr.Karunanithi. M., — Tolkappiya Poonka, Anna Arivalayam, Chennai, 2003.

7. Ridley, M.R., — Poetry and the Ordinary Reader, The Works of Aristottle,(Vol.II), Oxford University, London, 1970.

8. .... — Great book of the Western World, Series Edition 1963.

9. Chidambaranathan Chettiar. A., — English - Tamil Dictionary, University of Chennai, Chennai, 1965.

10. Cuddon, J.A., — A Dictionary of Literary Terms, Andrew Duestech, London, 1977.

11. Hudson, W.H., — An Introduction to the study of Literature, Kalyani publications, Ludhiyana, 1971.